874
16.x.07

வெளியீடு : 31-7-2007

Issued : 31-7-2007

சென்னை-600 009

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 11, 2007—தொகுதி 27—எண் 1

Wednesday the 11th April, 2007 —Volume 27—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

227567

11-4-20[illegible]

தமிழ்நாடு ... சென்னை-600 008 எழும்பூர்

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ...நரும் அமைச்சரவையும் | iii-viii |
| ...vernor and Council of Ministers | ix-xiii |
| ...பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| ...பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-33 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் வீடு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக | 33-37 |
| (ஆ) கடலூர் சிப்காட் வளாகம், மருந்துத் தொழிற்சாலைகளின் கழிவு நீரினால் சுற்றுச்சூழல் பாதிப்பு | 37-45 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையைப் பாசனத்திற்காகத் திறத்தல் | 45-46 |
| (ஆ) புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் | 46-48 |
| (இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 48 |
| **4. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| கொப்பரைத் தேங்காய்க்குக் கொள்முதல் விலை நிர்ணயம்-மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை | 49 |
| **5. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பொது நிறுவனங்கள் குழு | 50 |

பக்கங்கள்

**6. மானியக் கோரிக்கைகள், 2007–2008,**
**விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ... 50-102, 103-180

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் ... 50,78,102, 114-115, 117,165-166

*திரு. ஆர். சாமி ... 103-117

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ... 117-133

திரு. இ.ஏ.பி. சிவாஜி ... 134-143

திரு. கி. ஆறுமுகம் ... 143-156

*திரு. சி. கோவிந்தசாமி ... 156-166

திரு. வை. சிவபுண்ணியம் ... 167-178

*திரு. ஆர். ஞானதாஸ் ... 178-179

**7. அறிவிப்புகள்**—

(அ) உறுப்பினர்களுக்கு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய புத்தகங்கள் வழங்குதல் ... 103

(ஆ) உறுப்பினர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு ... 180

**8. அரசினர் தீர்மானம்**—

விதி 32-ஐத் தளர்த்துதல் ... 180-181

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** ... 181-182



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

227567
சென்னை 600 0?8
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

13. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

**16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** - **The Hon. Kalaignar M. Karunanidhi:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** - **The Hon. Prof. K. Anbazhagan:**

   Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** - **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

   Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** - **The Hon. Thiru M.K. Stalin:**

   Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Statistics and Ex-Servicemen** - **The Hon. Thiru Ko.Si. Mani:**

   Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** – **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** – **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** – **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** – **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** – **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** – **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Prisons** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

# 26-3-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம். | - குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. இ. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி அ. லெற்றிஸால், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. பிரேமா, பி.காம்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்
## (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி–1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடனை |

21. இராமசாமி, திரு. இ. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. .. விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தர், திரு. சு. .. உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்றாம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்
105. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். .. முசிறி
107. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆவா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி-2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ப.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்–I
193. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. .. கடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியப்

| | | |
|---|---|---|
| 200. | ராஜன், திரு. அ. | - நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கேகேபி. | - ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | - திருப்பத்தூர் |
| 203. | லட்சுமணன், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | - குடியாத்தம் |
| 205. | லீமா ரோஸ், திருமதி ரா. | - திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | - நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | - விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | - காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | - விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கேஎஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெ.க. | - பொன்னேரி |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்-2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |
| 222. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |



| | | |
|---|---|---|
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | - கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | - விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | - அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 234. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | - நியமனம் |
| 235. | (வெற்றிடம்) | - மதுரை மேற்கு |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. இரா. விடுதலை | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பங்குனி 28, விய-திருவள்ளுவர் ஆண்டு 2038

### 2007 ஏப்ரல் 11, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு"

காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**41—**

#### மின்சார வசதி

***476—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் தொகுதி, போத மலைப் பகுதிக்கு மின்சார வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

போத மலையில் ஏற்கெனவே தொலைக்காட்சிப் பெட்டிகள் 2, தெரு விளக்குகள் 6 மற்றும் மேல்நிலைத் தொட்டி ஆகியவை சூரிய ஒளி சக்தி மின்சாரம் —Solar Light— மூலமாக இயங்கி வருகின்றன. மேலும் தொலை தூர மலைக் கிராமங்களுக்கு, அண்ணா பல்கலைக்கழகம் வாயிலாக, சூரிய ஒளி சக்திமூலம் மின்வசதி அளிக்கும், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் பட்டியலில், போத மலையில் உள்ள 140 வீடுகள் மற்றும் 7 தெரு விளக்குகள் சேர்க்கப்பட்டுள்ளன. எனினும், மின் வசதி வேண்டி விண்ணப்பங்கள் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. நிலுவையில் இதுவரை எந்த விண்ணப்பமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் தலைவர், தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, வரியில்லா நிதிநிலை அறிக்கை வழங்கிய மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும், மின்சாரத் துறையிலே பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்த மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், இன்று உள்ளாட்சித் துறையிலே பல்வேறு திட்டங்களை அறிவிக்க இருக்கின்ற அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் மனமார்ந்த, (மேசையைத் தட்டும் ஒலி) நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது ராசிபுரம் தொகுதி, கெடமலை ஊராட்சியில் போத மலை, மேலூர், கீழூர் ஆகிய 3 கிராமங்களிலும், கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் 3,000-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுடைய அடிப்படைத் தொழில் விவசாயம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள், கேள்வி கேட்கிறபோது, எந்தக் கேள்வி மூலக்கேள்வியோ அதனுடைய தொடர்புடைய கேள்வி மட்டும்தான் கேட்கலாமே தவிர, வேறு மற்றவற்றையெல்லாம் தங்களுடைய மனதிலே இருக்கிற





எண்ணங்களையெல்லாம் வெளிப்படுத்துகிற முறையில் பேசுவதைத் தாங்கள் அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பல குறிப்புகள் வருமானால், அது கேள்விக்கு ஒத்துவராத குறிப்பு என்ற அடிப்படையில் நீக்கப்படலாம் என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** 700 ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களுக்குக் குடிநீர் வசதிக்காக, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு, மின்சார மோட்டார் பொருத்துவதற்கு, அதேபோல, இரவு நேரங்களில் பள்ளிக் குழந்தைகள் படிப்பதற்கு, கல்வி கற்பதற்கு, தமிழக முதல்வர் அவர்கள் இலவசமாக வழங்கக்கூடிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு மின்சாரத் தேவையைக் கருத்திற்கொண்டு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற நீண்டநாள் கோரிக்கையான மின்சாரம் வழங்குவதற்கு, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளிமூலம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தின் மூலமாக, 140 வீடுகளுக்கு இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், புதிதாக 7 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு இருக்கின்றன என்றும், ஏற்கெனவே நான் பதிலில் தெரிவித்திருக்கிறேன். இதுவரையிலே, அந்தப் பகுதியில் மின்சாரம் இன்னும் தேவைப்படுகிறது என்று, போத மலையிலிருந்தோ, கெடமலையிலிருந்தோ, மேலூரிலிருந்தோ, கீழூரிலிருந்தோ எந்த விண்ணப்பமும் மின்சார வாரியத்திற்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அக்கறை எடுத்துக்கொண்டு, அந்தக் கிராமங்களுக்குச் சென்று, யார் யாருக்கு மின்சாரம் வேண்டும் என்று ஒரு பட்டியல் தயாரித்து விண்ணப்பங்களைச் சேகரித்துக் கொடுப்பாரேயானால் அவர்களுக்கெல்லாம் நிச்சயமாகக் கலைஞருடைய ஆட்சியிலே மின் வசதி செய்து தரப்படும்.

[2007 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

முற்பகல் 9-35

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று, நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் வழங்க, அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் எங்கெங்கெல்லாம் மின் தடை ஏற்படுகின்றதோ அல்லது மின்சாரக் கோளாறு என்று சொன்னால் உடனடியாக அதை நிவர்த்தி செய்யக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இப்பொழுது கடுமையான வறட்சி நேரம். இரவு நேரங்களிலும், பகல் நேரங்களிலும்கூட, அடிக்கடி பல இடங்களிலே மின் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. அதேநேரத்தில் விவசாயத்திற்குச் செல்லக்கூடிய மின்சாரம் சில இடங்களிலே பற்றாக்குறையாகச் செல்லக்கூடிய நிலை எல்லாம் இருந்து வருகிறது. என்னுடைய தொகுதியான மேட்டூர் தொகுதியிலேகூட கொளத்தூர் போன்ற பகுதிகளிலே அப்படி இருந்து வருகிறது. ஆகவே, இந்த வறட்சி நேரத்தில் வெயில் காலங்களில், பொதுமக்கள் தூங்குவதற்கு வசதியாக மின் விசிறி இயங்குவதற்கு வசதியாக முழுநேரமும் மின் இணைப்பு கிடைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, மின்சாரத் துறையிலே தன்னிறைவு பெற்ற மாநிலமாக இருந்தாலும்கூட, காற்றாலை விசிறிகள்மூலமாக ஆண்டொன்றுக்குச் சராசரியாக 3,200 மெகா வாட் மின்சாரம் நாம் பெற்று வருகிறோம். ஆனால் ஒவ்வோராண்டும் மார்ச் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து மே மாதம் 15 ஆம் தேதி வரையிலே காற்றினுடைய வேகம் குறைவாக வீசுகின்ற காரணத்தினாலே, காற்றின்மூலம் உற்பத்தி



2007 ஏப்ரல் 11]

செய்கின்ற மின்சாரம் இந்த 2 மாதங்களிலே குறைந்து விடுகிறது. அதனால் சில இடங்களிலே, அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கலாம். இருந்தாலும், அவற்றைப் போக்குவதற்காக வேறு சில ஏற்பாடுகளை, அதாவது தொழிலதிபர்களை அழைத்து அவர்களிடத்திலே இருக்கக்கூடிய ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி, அவர்களுக்குத் தேவையான மின்சாரத்தை அவர்கள் உற்பத்தி செய்துகொள்ள வேண்டுமென்றும், அதற்காக அவர்களுக்கு விதிக்கப்படுகின்ற வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்றும் மின்சார வாரியத்தாலே எடுத்துச் சொல்லப்பட்டு, 300 மெகா வாட் மின்சாரம் என்ற அளவிற்கு, அவர்களே தங்களுடைய ஜெனரேட்டர்கள்மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, எங்கேயாவது குறைகள் இருக்குமானால், நிச்சயமாக இலாகா உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதியில் பாலிடெக்னிக், அதாவது தொழில்நுட்பக் கல்லூரி, தனியார் தொழில்நுட்பக் கல்லூரி அன்னை வேளாங்கண்ணி பாலிடெக்னிக் என்ற பெயரில் இயங்கி வருகிறது. தனியார் நிறுவனமான அந்தக் கல்லூரியில், தொழில்சார்ந்த படிப்புகள் படிப்பதற்கும், அதேபோல் practical தேர்வுக்கும் செய்முறைப் பயிற்சி செய்வதற்கான மின்சாரம் இல்லாமல் அந்த மாணவர்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றார்கள். அந்தப் பகுதியில், தெரு விளக்குகளுக்காகப் போகின்ற இரண்டு line-கள் என்று சொல்லக்கூடிய மின்சாரம் மட்டுமே சென்றுகொண்டிருக்கிறது. இதுபோன்ற தொழில் கல்விக் கூடங்களுக்கு, அல்லது கல்லூரிகளுக்கு அந்த மாணவர்களுடைய எதிர்கால நலன் கருதி அந்தத் தொழில்நுட்பக் கல்லூரிகள் நம்முடைய மின்சார வாரியத்திற்கு மூன்று line-கள், அதாவது three phase line வேண்டுமென்று மனு செய்தால், முன்னுரிமை அடிப்படையில் ஆயிரக்கணக்கான மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு, உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கல்விக் கூடத்திலிருந்து ஒரு விண்ணப்பத்தை வாங்கி three phase line வேண்டுமென்ற அந்த விண்ணப்பத்தைக் கொடுத்து, அதற்குரிய கட்டணத்தையும் செலுத்துவாரேயானால், ஒருவார காலத்திற்குள்ளாக அந்தக் கல்விக் கூடத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**42—**

**பயோ-டீசல்**

***15151—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டாமணக்கு விதைகள்மூலம் பயோ-டீசல் தயாரிக்கும் தொழிற்சாலைகளை மாவட்டந்தோறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தனியார் நிறுவனங்களான மோகன் புருவரீஸ் மற்றும் டிஸ்டில்லரீஸ் லிமிடெட், காஞ்சிபுரம் மாவட்டத்திலும், சிவா டிஸ்டில்லரீஸ் லிமிடெட் நிறுவனம், கோயம்புத்தூர் மாவட்டத்திலும், காட்டாமணக்குமூலம் பயோ-டீசல் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவ ஏற்பாடு செய்து வருகின்றன. தமிழகத்தில் காட்டாமணக்குப் பயிரிடும் பரப்பு விரிவாக்கம் ஆரம்பக் கட்டத்தில் உள்ளது. விவசாயிகள் வேளாண்மைத் துறை விரிவாக்கப் பணியாளர்கள்மூலம் பல்வேறு தொழில்நுட்பக் கூட்டங்கள் வாயிலாகக் காட்டாமணக்குப் பயிரிடும் பரப்பு விரிவாக்கம் செய்ய ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். எனவே, காட்டாமணக்குப் பயிரிட



2007 ஏப்ரல் 11]

பரப்பு விரிவாக்கம் செய்யப்படும் நிலையில், போதிய மாவட்டந்தோறும் பயோ-டீசல் தொழிற்சாலை நிறுவ அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

முற்பகல் 9-40

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யப்படும் என்று பதில் சொன்னதற்கு, முதலாவதாக நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு இப்போது காட்டாமணக்கு விதையிலிருந்து பயோ-டீசல் தயாரிப்பது என்பது நமக்குக் கிடைத்த பெரும் வரப் பிரசாதம் ஆகும். பெருகிவரும் எரிபொருள் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், விலை மலிவாக இருப்பதாலும், அன்னியச் செலாவணியைச் சேமிக்கவும், விவசாயிகளுக்கு ஆதரவு விலை கிடைக்கவும் பயோ-டீசல் வழிவகுக்கும். மேலும் 'உசலைக் காட்டிலும், கூடுதல் தூரம் வாகனங்களை இயக்கலாம்; வாகனத் தேய்மானம் இல்லை என்று கடந்த காலங்களிலே இரயில்வே துறையும், போக்குவரத்துத் துறையும் நிரூபித்திருக்கின்றன. அரியானா மாநிலத்தில டிராக்டர், டீசல் என்ஜின் போன்றவற்றுக்கு எல்லாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால், விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, காட்டாமணக்கு உற்பத்தியை மேலும் அதிகரிக்க, மாவட்டந்தோறும் அரசே எல்லா மாவட்டங்களிலும் பயோ-டீசல் தொழிற்சாலையை உருவாக்குமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினால் தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனங்களான, மோகன் புருவரீஸ் மற்றும் டிஸ்டில்லரீஸ் லிமிடெட், சென்னை, நாளொன்றுக்கு 33 ஆயிரம் லிட்டர் பிழிதிறன் கொண்ட ஆலையினை காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூபாய் 25 கோடி செலவில் நிறுவி வருகிறது. இந்நிறுவனம் 23 மாவட்டங்களில் காட்டாமணக்கு ஒப்பந்த சாகுபடி முறையைப் பரவலாக மேற்கொண்டு வருகிறது. சிவா டிஸ்டில்லரீஸ் லிமிடெட, கோயம்புத்தூர் மாவட்டத்தில், நாளொன்றுக்கு மூவாயிரம் லிட்டர் பிழிதிறன் கொண்ட ஆலையினை

ரூபாய் 5 கோடி செலவில் அமைத்துள்ளது. இந்நிறுவனம் 4 மாவட்டங்களில் காட்டாமணக்கு சாகுபடி மேற்கொள்கிறது. இந்த ஆலைகள், இந்நிதியாண்டில் வணிக ரீதியாகச் செயல்படத் தொடங்கும். இதுமட்டுமின்றி, வேறு சில தனியார் நிறுவனங்களும் ஆலைகள் அமைப்பதில் ஆர்வம்காட்டி வருகின்றன. அப்படி வரக்கூடியவர்களை, இந்த அரசு ஊக்கப்படுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முத்தான முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், இரண்டு ஏக்கர் இலவச நிலம் ஏழைகளுக்கு வழங்குகிற திட்டத்திலே, அந்த நிலத்தை அரசு செலவில் பண்படுத்தியும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதிலே இந்தக் காட்டாமணக்கைப் பயிரிடுவதற்கு, விவசாயிகள் பயிரிடுவதை ஊக்குவிப்பதற்கு, மானியமாக ஏதாவது விவசாயத் துறையின்வழியாக வழங்குவார்களா என்று தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டு முதல், கழக அரசால் காட்டாமணக்கை வருடத்திற்கு 20 ஆயிரம் எக்டேர் வீதம் சாகுபடி செய்யவும், 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் எக்டேர் அளவில் சாகுபடி செய்யவும் திட்டமிடப்பட்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் நாற்றுகள் தயார் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் வழங்க, ரூபாய் 2.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இதிலே தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவதில், நிலங்களைக் கண்டறிந்து அவர்களுக்கு வழங்குகிறபோது, நிலத்தைச் சமப்படுத்தி, மண் வளத்தை ஆய்வு செய்து, அந்த மண் வளத்திற்கு ஏற்றவகையில், தோட்டக்கலைப் பயிர்களை, அந்த விவசாய நிலம் பெறக்கூடியவர்கள் என்ன விரும்புகிறார்களோ, அந்த மண்ணுக்கு ஏற்றவகையில் ஆலோசனை வழங்கப்பட்டு, மானிய விலையிலே செடிகள் எல்லாம் வழங்கப்பட்டு, அவற்றை நடுவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகிறது. அங்கே காட்டாமணக்கைப் பயிரிடலாம் என



நிலம் பெறக்கூடியவர்கள் முன்வந்தாலும், அந்த மண் வளம், நீர் வளம் போதுமானதாக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்துதான் ஆலோசனை வழங்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**43—**

**கணினிமயம்**

***5625—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் கணினிமயமாக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியில் இயங்கும் சார்பதிவாளர் அலுவலகத்தினைக் கணினிமயமாக்கும் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டி பகுதியில், சார்பதிவாளர் அலுவலகம், கடந்த 1-11-1975 அன்று சட்டமன்ற வரலாற்றின் பொன்விழா நாயகர் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சார்பதிவாளர் அலுவலகமானது, தனியார் கட்டடங்களுக்கு நான்கு முறை மாற்றப்பட்டுள்ளது. அதன் அலுவலகப் பணிகள் அனைத்தும்— குறுகிய இடத்தில், அதாவது 10 x 15 அடியுள்ள இடத்தில் ஆவணக் காப்பகம் செயல்படுகிறது; 15 x 15 அகலம் உள்ள குறுகிய இடத்தில் அலுவலகம் செயல்படுகிறது. ஒரு வருடத்தில், கிட்டத்தட்ட 1,700 பத்திரங்கள் பதிவாகின்றன. இந்த அலுவலகம் கட்டுவதற்காக

இப்பகுதி மக்களால் 10 சென்ட் நிலம் தானமாக அரசுக்கு வழங்கப்பட்டு, கிட்டத்தட்ட 11 வருடங்கள் ஆகின்றன. அந்த நிலத்தின் தற்போதைய மதிப்பு, ரூபாய் 1.50 இலட்சம் ஆகும். இந்த அலுவலகத்தினால் மொத்தம் 26 வருவாய்க் கிராமங்கள் பயன்பெறுகின்றன. அரசுக்கு நிலம் வழங்கப்பெற்றும் . . .

(முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Supplementary question-ஐ மாத்திரம் கேளுங்கள்.

**திரு. பெ. காமராஜ்:** அதைத்தான் கேட்கிறேன். அரசுக்கு நிலம் வழங்கப்பெற்றும், இதுநாள்வரை அரசு சார்பில் கட்டடம் கட்டப்படவில்லை. எனவே, மக்களால் அரசுக்கு வழங்கப்பெற்ற இடத்தில், அரசு சார்பதிவாளர் அலுவலகம் கட்டப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன். இதேநிலைதான், தொகுதியின் தலைமையிடமான கிருஷ்ணாராயபுரத்திலும் உள்ளது. அங்கும் 25 வருடங்களாக, வாடகைக் கட்டடத்தில்தான் அலுவலகம் இயங்கி வருகின்றது. எனவே, இந்த இடங்களுக்கு அரசு சார்பில் கட்டடம் கட்டித்தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பத்திர நகல் எழுதும் தாள், சுத்தமாகக் கிடைக்கவில்லை. வெளி மார்க்கெட்டில் ரூபாய் 40, 50-க்கு விற்கிறார்கள். எனவே, இதைப் போக்கும்பொருட்டு, தரங்கம்பட்டியில் சார்பதிவாளர் அலுவலகம் கணினிமயமாக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தமிழகத்தில் எத்தனை சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன என்ற விவரத்தை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. காமராஜ், சொற்பொழிவாக இல்லாமல், சுருக்கமாகக் கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கணினியைப்பற்றிக் கேட்டுவிட்டு, இப்போது கட்டடம் வேண்டுமென்று கோருகிறார். அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு, மாண்புமிகு வருவாய் மற்றும சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**44—**

## கணினி முறை

**•5013—திரு. வி.எஸ். பாபு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்டாட்சியர் அலுவலகங்களில் சாதிச் சான்று, வருமானச் சான்று விரைவில் வழங்கிட ஏதுவாக கணினிமுறை அமல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இங்கே தருகின்றேன். வகுப்புச் சான்று மற்றும் வருமானச் சான்று போன்றவற்றைக் கணினிமுலம் வழங்குவதற்கான செயற்குறிப்பு, அரசின் ஆய்வில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு.

**திரு. வி.எஸ். பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதால், குழந்தைகளைக் கல்வி நிலையங்களில் சேர்ப்பதற்குப் பெற்றோர்களுக்கும் சிரமம் இருப்பதால், கணினிமூலம் அவற்றை வழங்கிடும் முறையை நடப்பாண்டிலேயே செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா? மேலும், பள்ளி, கல்லூரி துவக்க நாட்களில் சாதிச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ்களை வழங்கிட, நடப்பாண்டில் சிறப்பு முகாம்கள் அமைத்திட, அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, வகுப்புச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் இரண்டும், ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் 1999-2000 ஆம் ஆண்டிலே பள்ளிகளிலே வழங்கப்படுகின்ற முறை, இன்றும் நீடித்து வருகின்றது. அது சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது நம்முடைய வருவாய்த் துறை அலுவலகங்களிலே பல்வேறு சான்றுகள் வழங்கப்படுவதால், வகுப்புச் சான்றும், வருமானச் சான்றும் கணினிமூலம் வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை விரைவிலேயே, 2000 ஆம் ஆண்டிலே எப்படி நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், பட்டா வழங்குவதற்கு எல்லா வருவாய்த் துறை அலுவலகங்களுக்கும் கணினி வழங்கி, தமிழகத்திலே செயல்படுத்தினார்களோ, அதேபோல, எதிர்காலத்திலே, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து, இதற்கான செலவினங்கள், மற்றவற்றை இறுதி செய்து, இந்த வகுப்புச் சான்றும், வருமானச் சான்றும் கணினிமூலம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிச் சான்று, வருமானச் சான்று கணினிமுறையிலே வழங்கப்படுவது வரவேற்கக்கூடிய ஒன்று. ஆனால், அதேநேரத்திலே, சாதிச் சான்றுகள் என்று கேட்கிறபொழுது (குறுக்கீடு) சரி, வகுப்புச் சான்று; அவை பிரச்சினை இல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டுவிடுகின்றன. குறிப்பாக, மலைவாழ் மக்களாக இருக்கக்கூடியவர்களுக்கு அந்த வகுப்புச் சான்றுகள் வழங்கப்படுவதில்லை. அதிலே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, அமைதியாக இருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதிலே, குரும்பர் இனத்தைப் பொறுத்தவரையிலே, குரும்பர், குரும்பன்ஸ், குரும்பான்ஸ் என்று பல்வேறு வகையிலே பெயர்களைப் பல இடங்களிலே பிரித்துக் கூறப்படுகிற காரணத்தினால், அவர்களெல்லாம் பிற்படுத்தப்பட்டோர் என்று சான்று வழங்கப்படுகிறது. அதேபோல, பூம்பூம் மாட்டுக்காரர்களுக்கும் அப்படிச் சான்று வழங்கப்படுகிறது. இவர்களுடைய குழந்தைகள், கல்வி பெறுவதற்கும், வேலைவாய்ப்புப் பெறுவதற்குமுரிய வாய்ப்புகள் இல்லை. ஒரு தொடக்க நிலைக் கல்வியைமட்டும் பெற முடிகிறது. உயர் கல்வியைப் பெறுவதற்காக, அவர்கள் இந்த வகுப்புச் சான்று பெறுவதற்கு முயற்சிக்கிறபொழுது, அவர்களுக்கு அது கிடைக்காமல் போகிறது. மத்திய அரசாங்கத்தினுடைய பட்டியலிலேயே பல்வேறு குளறுபடிகள் இருக்கின்றன என்று கூறப்படுகிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Question-ஐ மாத்திரம் கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இது முக்கியமான விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, question-ஐ மாத்திரம் கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இதில் சாதிச் சான்றிதழ்பற்றி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரிய விளக்கம் வேண்டாம், question-ஐ மாத்திரம் கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆகவே, இந்தச் சாதிச் சான்றுகளை முறைப்படுத்தி வழங்குவதற்கான முயற்சியை மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தி, நம்முடைய மாநிலத்திலே இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய முயற்சியைத் தனித்த நேர்வாகக் கருதி, அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா எனத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்குச் சான்றிதழ் வழங்குவதிலே இருக்கின்ற பிரச்சினைகள் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் தெரிவித்தார்கள். தலைவர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி, ஏற்கெனவே மலைவாழ் மக்களுக்காக அந்தச் சான்றிதழ் வழங்குகின்ற பணியைக் கோட்டாட்சித் தலைவர் மட்டத்திலே வழங்கப்பட்டு வந்தது. அதிலே பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும், மேலும், அவர்களுடைய மேல்முறையீடுகளை மாவட்ட

ஆட்சித் தலைவரிடம் தெரிவிக்கலாம் என இருந்தாலும்கூட, அதுவும்
சரியில்லை என்று கருதி மாண்புமிகு முதலவர் அவர்கள், கடந்த
முறை, 1999 ஆம் ஆண்டு மாவட்ட ஆதி திராவிட நல அலுவலரும்
அதனை வழங்கலாம் என்று அதற்கு ஏதுவாக ஒரு ஆணையைப்
பிறப்பித்தார்கள். ஏனென்றால், கோட்டாட்சித் தலைவர் மட்டத்திலே
கிடைக்கவில்லை என்ற புகார் வந்த காரணத்தினால், மாவட்ட ஆதி
திராவிட நல அலுவலரே, இந்த மலைவாழ் மக்களுக்கு, Scheduled
Tribes சான்றிதழ் வழங்கும் பணியை மேற்கொள்ளலாம் என்ற
ஆணையையும் பிறப்பித்து, எளிதாக்கியிருக்கிறார்கள் தலைவர்
கலைஞர் அவர்கள். அதற்கு மேலும், அவர்களுக்குக் கிடைக்கவில்லை
என்றால், ஒரு கமிட்டி மாநில அளவிலும் அமைக்கப்பட்டிருக்கிறது;
அதன்மூலம் சான்றிதழ்களை அவர்கள் பெறுவதற்கு, உரிய
நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கரூர் தாலுகா அலுவலகத்திலே இயங்கிவரும் கணினி
கடந்த டிசம்பர் மாதம் முதல் பழுதடைந்துள்ளது. இதுகுறித்து,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு ஆய்வுப்
பயணத்திற்கு வந்தபோது எடுத்துக் கூறப்பட்டது. ஆனால், இதுவரை
அந்தக் கணினி பழுதுபார்க்கப்படவில்லை. பட்டா, சிட்டா அடங்கல்
வாங்குவதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, சாதிச் சான்று
வழங்குவதைப்பற்றி. நீங்கள் கணினியைப்பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்!

**திரு வே. செந்தில் பாலாஜி:** கேள்விதான் தலைவர் அவர்களே, அது
கணினி முறைதான். வட்டாட்சியர் அலுவலகத்தில் கணினி
repair-ஆகி இருக்கிறது; அதைத்தான் சொல்கிறேன் நான். நான்கு
மாதங்களாக, கணினி repair பார்க்கப்படவில்லை. பட்டா,
சிட்டா அடங்கல் வாங்குவதற்கு பொதுமக்கள் மிகவும்
அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அந்தக் கணினி பழுது பார்க்கப்படுமா
எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல,



கணினி பழுதடைந்திருப்பதை. ஆங்காங்கே இருக்கக்கூடிய
அலுவலர்கள் உடனடியாகப் பழுதுபார்ப்பதற்கு அரசால்
ஆணையிடப்பட்டிருக்கின்றது; அதற்கான நிதியையும்
ஒதுக்கியிருக்கின்றது. அப்படிப் பழுதுபட்டிருப்பதை, இன்னமும்
சரிபார்க்கவில்லை என்று இப்போது எனக்குத் தெரிவித்ததால்,
நிச்சயமாக அது பழுதுபார்க்கப்படும். பழுதுபார்க்கப்படவில்லை
என்றாலும், அவ்வாறு எங்காவது பழுதுபட்டிருந்தால் கையால் எழுதி
அவர்களுக்குச் சிட்டா அடங்கல் வழங்குவதையும், மற்றப்
பணிகளையும் மேற்கொள்ளலாம் என்று நம்முடைய முதல்வர்
கலைஞர் அவர்கள், ஏற்கெனவே உத்தரவு வழங்கியிருக்கிறார்கள்.
அந்தவகையில் பெறலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, மாண்புமிகு
உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்
துறை அமைச்சர் அவர்கள்.

**45—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***2752—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும்
வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, குனியமுத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம்
அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள்
நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, மதுக்கரை ஊராட்சி
ஒன்றியம், குனியமுத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம்
அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
பேரூர் தொகுதி, குனியமுத்தூர், குறிச்சி பகுதியில் ஓர் ஆரம்ப
சுகாதார நிலையம் அமைக்க, இந்த அரசு முன்வருமா? அதுபோல,

முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், தரம் உயர்த்துவதாக ஆய்வு செய்யப்பட்டு, மதுக்கரை, அரிசிபாளையம் மற்றும் சுண்டக்காமுத்தூர் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 30 படுக்கை வசதிகளுடனும் மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அந்தச் சுகாதார நிலையங்களுக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தினமும் வருகின்றனர். அவர்களின் நலன் கருதி, இந்த அரசு அந்த மருத்துவமனைகளையும் தரம் உயர்த்துமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன ஆண்டிற்கும், இந்த ஆண்டிற்கும், தரம் உயர்த்துவதற்காகத் தனியாக அரசின் பரிசீலனையில் பட்டியல் உள்ளது. அதிலே தூரங்களைக் கணக்குப் பார்த்து எந்தப் பகுதியில் O.P. அதிகமாக வருகிறார்களோ, அந்தப் பகுதிக்கு முன்னுரிமை வழங்கச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கும். புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் 178-ம், துணை சுகாதார நிலையங்கள் 900-ம் அமைப்பதற்காக மத்திய அரசாங்கத்திற்கு நாம் கருத்துரு அனுப்பியிருக்கிறோம். 2001 census-ன்படி. அது வந்தவுடனேயே எந்தெந்தப் பகுதிகள் தகுதியான பகுதிகளாக இருக்கின்றனவோ அந்தந்தப் பகுதிகளுக்கு சுகாதார நிலையங்கள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சு.ப. வேலுமணி.

(முற்பகல் 9-55

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, கடந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு பேரூர் தொகுதியில், குனியமுத்தூர், சுண்டக்காமுத்தூர், சுகுணாபுரம், டி.கே.புதூர், குளத்துப்பாளையம், வேடப்பட்டி, பேரூர், சுந்தராபுரம், கோணநாய்க்கன்பாளையம், குறிச்சி, கணேசபுரம், ஈச்சநாரி மற்றும் மதுக்கரை ஒன்றியத்தில் 12 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, தயார் நிலையில் உள்ளன. அந்தப் பகுதிகளுக்கு நிதி ஒதுக்கி, கட்டடங்கள் கட்டித் தர, இந்த அரசு முன்வருமா? அதேபோல, கோவை அரசு





மருத்துவமனை, சுமார் 25 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் உள்ளது. ஆனால், போதிய கட்டட வசதி இல்லாததால், இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு இல்லை. கிட்னி மாற்றும் பிரிவு இல்லை. அவற்றிற்குச் சென்னைக்குத்தான் வர வேண்டியுள்ளது. அதேபோல, அவசர சிகிச்சைப் பிரிவில் போதுமான வசதி கிடையாது. அதனால், பல உயிர்கள் போகின்றன. முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த கால ஆட்சியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி, ஆரம்ப சுகாதார நிலையம்பற்றிக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சு.ப. வேலுமணி:** பெரிய தனியார் மருத்துவமனைகளைவிட, சிறந்த தரமானவையாக ஊராட்சிப் பகுதிகளிலே, 30 படுக்கை வசதிகளுடன் அம்மா அவர்கள் அமைத்தார்கள். அதேபோல, கட்டட வசதியுடன் தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று போற்றப்படுகின்ற கோவை அரசு மருத்துவமனைக் கட்டடங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூராவும் அவர்களுடைய அம்மா ஆட்சியிலே, ஆராய்ச்சிப் பண்ணி வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். நாங்கள்தான் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. நிதிநிலைக்கு ஏற்றாற்போல, அதற்குத் தகுந்த பணிகளைச் செய்வோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடுகள்) ஆரம்ப சுகாதார நிலையத்தைப்பற்றிக் கேளுங்கள் என்றால், மற்றதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறீர்களே?

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய விதிமுறைகளில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு, 30,000 மக்கள்தொகை இருந்தால், ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்றும், அதேநேரத்தில், ஒரு சுகாதார நிலையத்திற்கும் இன்னொரு நிலையத்திற்கும் 7 கிலோ மீட்டர் தூரம் இடைவெளி இருக்க வேண்டும் என்றும் நிபந்தனைகள் ஏற்கெனவே விதிக்கப்பட்டிருக்கின்றன. திருப்பூர் மாதிரி இருக்கிற இடங்களிலே, ஒவ்வோர் ஊராட்சியிலும் 20,000, 30,000 என்று ஜனத்தொகை

இப்போது கூடிக்கொண்டே இருக்கிறது. ஆகவே, 7 கிலோ மீட்டர் இடைவெளி இருந்தால்தான், ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்பதைத் தளர்த்தி, 30,000 மக்கட்தொகை இருந்தாலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்பதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக சுகாதார நிலையங்களை அமைப்பதற்கு, மத்திய அரசாங்கத்திலேயிருந்து நாம் அனுமதி கேட்டிருக்கிறோம். 178 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், 400 துணை சுகாதார நிலையங்களுக்கும் அனுமதி கேட்டிருக்கிறோம். இது 2001 census-ன்படி. முதலிலே இருந்த census-ன்படி, P.H.C.-யும், H.S.C.-யும் இப்பொழுது இருக்கின்றன. புதியதாக ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கத்திலே நாம் அனுமதி கேட்டிருக்கிறோம். அதற்கு இரண்டு நிதிகளும் மத்திய அரசாங்கத்தினுடைய நிதியும், மாநில அரசாங்கத்தினுடைய நிதியும் சேர்த்துதான், இந்தத் திட்டத்தைச் செயலாக்கிக் கொண்டிருக்கிறோம். அவர்களுடைய நிதி வந்தவுடனேயே, அதற்கு வேண்டிய பணிகளை ஆரம்பிப்போம். census-படி பார்க்கும்போது, automatic-ஆக இடைவெளி குறைந்துவிடும். ஏனென்றால், 8 கிலோ மீட்டர் தூரத்தில் அது இருக்கிறது. அப்படி census-படி வந்தாலே, மக்கட்தொகை, ஜனத்தொகை அதிகமாக இருக்கும் பகுதிகளிலே தானாக வந்துவிடும். ஆகவே, உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, கவனத்தில் வைத்துக்கொண்டு, சரியான முறையில் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்பட்டு, பயன்படாத நிலையில், முள்புதராக இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை முதலிலே கையகப்படுத்தி, அங்கு ஆரம்ப சுகாதார நிலையங்களைத் துவக்குவதற்கு அரசு முன்வருமா? அதேபோல, படப்பை பகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆரம்ப சுகாதார நிலையம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். காரணம், ஏற்கெனவே எழிச்சூரிலே 13 கிலோ மீட்டர் தூரத்திலேதான் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. படப்பை என்று



சொன்னால், அது கிட்டத்தட்ட 30,000 மக்கட்தொகை [illegible] கிராமங்கள் இருக்கின்ற பகுதி. அதற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு, அரசாங்கம் இந்த பட்ஜெட் தொடரிலேயே ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் பழுதடைந்துள்ள இடங்களையெல்லாம் கணக்கிட்டு, நிறைய பழுதடைந்திருக்கிற அந்தப் பகுதிகளைப் பிரித்து, அவற்றைச் சரியான முறையிலே பராமரிப்பதற்கு வேண்டிய பணிகளை அரசாங்கம் ஆய்வு செய்து, இந்த ஆண்டிலே அதற்கு வேண்டிய நிதி ஆதாரங்களைச் சேகரிக்கும் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல, அந்தப் பணிகளை விரைவிலே அரசாங்கத்தின்மூலமாக, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் நடத்திக் காட்டுவார்கள். இரண்டாவது, அந்தப் பகுதிகளையெல்லாம் பார்ப்போமென்று சொன்னால், அங்கே பொதுமக்களும் involvement ஆக இருக்க வேண்டும். நிறைய முட்புதர்கள் வந்து கொண்டே இருக்கின்றன. பொதுமக்கள் தங்களுடைய இடத்தில் எவ்வளவு அக்கறை எடுக்கிறார்களோ, அதே அக்கறையை அந்த மருத்துவமனைகளும், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் போன்றவர்கள் எல்லாம் எடுக்கிற நேரத்திலே, தொடர்ந்து அந்தப் பகுதியைச் சுத்தமாக வைத்துக்கொள்ள முடியும். புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், பட்ஜெட் தொடரிலே, என்னுடைய demand நேரத்திலே அவை அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**46—**

## தொழிற்சாலைகள்

***13221—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 11

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை பகுதியில் பனியன் தொழிற்சாலைகள் துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காங்கேயம் தொகுதிக்குட்பட்ட சென்னிமலை பகுதியில் பனியன் தொழிற்சாலைகள் துவங்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணிக்குப் புகழ்பெற்ற இடம் சென்னிமலை. பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறியை வளர்க்க பாடுபட்டார்கள். அப்படிப்பட்ட கைத்தறிக்கு இலவச மின்சாரத்தை வழங்கி, பெருமை சேர்த்து இருக்கிறார் இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்த நல்ல வேளையிலே, நூல் விலை ஏறியதன் காரணமாகவும், கைத்தறி ரகங்கள் விசைத்தறியிலே முறைகேடாகத் தயார் செய்கின்ற காரணத்தாலும், வேலைவாய்ப்பு இப்போது சற்றுக் குறைந்திருக்கிறது. எனவே, அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு அளிக்கிற வகையிலே, ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதியில் இருந்துமட்டும் 20 ஆயிரம் பேர் திருப்பூர் பனியன் தொழிற்சாலைகளுக்கு வேலைக்கு தினமும் சென்று வருகிறார்கள்; எனவே, அவர்களுடைய நலன் கருதி, அரசு உதவியோடு பனியன் தொழிற்சாலை அங்கே துவக்குவதற்கு அல்லது துவக்க வரும் நண்பர்களுக்கு முன்னுரிமை அளித்து, ஏதாவது சிறப்புத் திட்டங்களை அரசு செயல்படுத்தினால், தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே நெசவாளர்கள் இலவச மின்சாரத்தைப் பெற்றுப் பயன் அடைவதைப்போல, அந்த நெசவாளர்களுக்குக் கிடைக்கிற வாய்ப்புகளும் அங்கே கிடைக்கும். எனவே, அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி சார்ந்த துணிகள் எல்லாம் விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பட்டு, கைத்தறி பாதிக்கப்படுகிறது என்ற ஒரு தகவலை உறுப்பினர் இங்கே சொன்னார். ஆனால், இப்போது இலவச வேட்டி சேலை திட்டத்திலேகூட நூறு சதவீதம் - உற்பத்தி கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டு, அதற்கு மேலும் இருப்பதைத்தான் விசைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதனால், இந்த ஆண்டைப் பொறுத்தவரை மட்டுமல்ல; வருகிற ஆண்டிலேயும், கைத்தறி நெசவாளர்களுக்கு உரிய வேலைவாய்ப்பை, இந்த அரசாங்கம் கண்டிப்பாக உருவாக்கிக் கொடுக்கும்.

அதேபோல, பனியன் தொழிற்சாலை என்பது, இந்தத் துறையின்மூலமாகத் தனியாகத் துவங்கப்படுவது அல்ல. மத்திய அரசுடன் இணைந்து துவங்கப்படுகிற ஜவுளிப் பூங்காக்களிலே, ஜவுளித் துறையின் ஓர் அங்கமாகத்தான் இது பணி செய்கிறது. ஆனால், ஈரோட்டிலே செங்கப்பள்ளியிலும், பெருந்துறைப் பகுதியிலும், இப்போது இரண்டு ஜவுளிப் பூங்காக்கள் தொடங்குகிற நிலை, மத்திய அரசின் மூலமாகவும், மாநில அரசின் மூலமாகவும் உருவாக்கப்பட்டு வருகிறது. சென்னிமலை என்பது பெருந்துறையிலிருந்து 15 கிலோ மீட்டர்; உங்களுடைய தொகுதியிலிருந்து திருப்பூரே 20 கிலோ மீட்டர் தொலைவுதான் வருகிறது. அதனால், தற்சமயம் சென்னிமலைப் பகுதியிலே இது தேவையில்லை என்ற கருத்து அரசிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிப் பூங்கா துவங்கப்படுகிற செய்தியை அறிவித்த அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்து, நெசவாளர்களுக்கு ஓய்வூதியத்தை ரூபாய் 200/-லிருந்து ரூபாய் 400/- ஆக உயர்த்திக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். Subject மாறிப் போகிறீர்கள்! உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Subject மாறிப் போய்க் கொண்டிருக்கிறது. உட்காருங்கள். திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே பல்வேறு முறை கைதூக்கியும்

துணைக் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுவதில்லை. நான் ஏற்கெனவே 200 கேள்விகள் கொடுத்திருக்கிறேன். இதுவரையிலும் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். விஜயகுமார், கேள்வியைமட்டும் கேளுங்கள்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** கையைப் பலமுறை தூக்கியும், எங்களுக்கு வாய்ப்புத் தரமாட்டேன் என்கிறீர்கள்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**47—**

## விளையாட்டுத் திடல்

***[illegible]—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை ஒன்றியம், ஜமீன் எளம்பள்ளி ஊராட்சி, மாரப்பம்பாளையத்தில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**(அ)** கபிலர்மலை ஒன்றியம், ஜமீன் எளம்பள்ளி ஊராட்சி, மாரப்பம்பாளையத்தில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு, அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலை நாடுகளைவிட, இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில்தான் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் நீரிழிவு நோயால்



பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த நீரிழிவு நோய்க்கான முதல் காரணமே உடற்பயிற்சி மற்றும் உடல் உழைப்பு இல்லாததுதான் என்று பல ஆய்வுகளில் தெரிவிக்கப்படுகிறது. அந்தவகையிலே, கிராமத்திலே இருக்கின்ற இளைஞர்கள் இந்த அதிநவீனமான அவசரகதியான வாழ்வியல் கொண்ட உலகிலே, உடற்பயிற்சியை மேற்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலேதான், ஊர்தோறும் அல்லது ஊராட்சிதோறும் இதுபோன்ற விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி, அந்த வகையிலே, ஜமீன் எளம்பள்ளி ஊராட்சியிலே இருக்கின்ற மாரப்பம்பாளையத்திலே ஒரு விளையாட்டுத் திடல் அமைத்துத் தர, அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் விளையாட்டு மைதானம் வேண்டும் என்ற அடிப்படையிலே கேட்டிருக்கிறார். இந்த அரசினுடைய நோக்கம், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட அளவில் விளையாட்டு அரங்கத்தை ஏற்படுத்திவிட்டு, அதற்குப் பின்னால், ஒவ்வொரு இடத்திலும் அமைப்பதுதான். தேவையிருந்தால், 5 ஏக்கர் இடம் விளையாட்டுத் துறைக்கு அவர்கள் ஒப்படைப்பார்களேயானால், அதனை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன். (குறுக்கீடு). Supplementary question என்றால் கேளுங்கள், Sir.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் நிலம் அளித்தால் ஊராட்சி ஒன்றிய அளவிலோ அல்லது ஊராட்சி அளவிலோ இதுபோன்று விளையாட்டுத் தளம் அமைக்க அரசு முன்வந்துள்ளதற்கு நன்றி கூறி, என்னுடைய பகுதியிலே அதுபோன்று அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** 5 ஏக்கர் இடமும், அரசுக்குச் செலுத்த வேண்டிய அதற்கான தொகையையும் செலுத்தினால், அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உடற்பயிற்சி மிக அவசியமான ஒன்று. அதனாலே, அரசு அதிக நிதியொதுக்கி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அல்லது ஒவ்வொரு நகராட்சிக்கும் நிச்சயமாக ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய, சட்டமன்றக் கட்சியினுடைய தலைவரது கோரிக்கைக்கு, தன்னுடைய இளம் வயதிலும் இந்த எண்ணத்தினை அவர் கொண்டிருப்பதற்காக நான் பாராட்டைத் தெரிவித்துக்கொண்டு, (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய அந்த எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில், அவருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**48—**

### பாதுகாப்பு வேலி

***20897—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 11]

(அ) திருவட்டாறு தொகுதி, மலைப் பகுதி விவசாயிகளின் பயிர்களை, வன விலங்குகள் நாசப்படுத்துவதைத் தவிர்க்க, பாதுகாப்பு வேலி அமைக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மலைப் பகுதி மற்றும் வனங்கள் அருகில் உள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, விவசாயிகள்மீது அதிக அக்கறை காட்டுகின்ற தமிழக முதல்வர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், இந்த ஆண்டு அதிக தொலைவிற்கு சூரிய மின் வேலி அமைத்துத் தருவதற்கு நிதியொதுக்கித் தந்திருக்கிறார்கள். அதைப் பயன்படுத்தி திருவட்டாறு தொகுதியிலே, கடம்பக்காடு முதல் குலசேகரம் வரை 10 கிலோ மீட்டர் தொலைவும், அதைப்போல, கொம்புமுறிஞ்சானிலிருந்து செக்குமோடு வரை 5 கிலோ மீட்டர் தொலைவும், ஆலம்பாறையிலிருந்து மணலோடை வரை 5 கிலோ மீட்டர் தொலைவுமாக, 20 கிலோ மீட்டர் தொலைவிற்கு இந்த ஆண்டு, சூரிய மின் வேலி அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு தொகுதியில் 20 கிலோ மீட்டர் பகுதியில் சூரிய மின் வேலி அமைத்துத் தரப்படும் என மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். முதலில் அவருக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன். இருந்தாலும், திருவட்டாறு தொகுதி என்பது, மூன்றில் ஒரு பங்கு மலைப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதி. இன்னும் சிரிப்பாறை முதல் காளிகேசம், பாளியாறு, மாறாமலை, அண்டூர், கூருள்கோடு, வீரப்புலி எனப் பல பகுதிகளிலே, தென்னை, இரப்பர், வாழை, நெல் போன்ற பயிர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். குரங்கு போன்ற வன விலங்குகள் வெளியே வந்து, பல வீடுகளிலே, கூரைகளில் புகுந்து வீட்டிலுள்ள உணவுப் பொருட்கள், துணிமணிகள் போன்றவற்றை எடுத்துச்செல்கின்றன. ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்குமா? மேற்குறிப்பிட்ட

[2007 ஏப்ரல் 11

மலைப் பகுதிகளில், இன்னும் பல பகுதிகளிலே சூரிய மின் வேலி
அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த ஆண்டு, சென்ற ஆண்டுகளைவிட—
2005-2006-லே 62½ கிலோ மீட்டரும், 2006-2007-லே 137½ கிலோ
மீட்டரும், இந்த ஆண்டு 181.2 கிலோ மீட்டரும் சூரிய மின் வேலி
அமைக்கின்ற அந்தப் பணி மேற்கொள்ளப்பட இருக்கிறது. சென்ற
ஆண்டே கன்னியாகுமரி மாவட்டத்திலே, கன்னியாகுமரி
தொகுதியிலே 10 கிலோ மீட்டர் தொலைவும், விளவங்கோடு
தொகுதியிலே 10 கிலோ மீட்டர் தொலைவும் அமைத்துத்
தரப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 181 கிலோ மீட்டரில் கிட்டத்தட்ட
15 மாவட்டங்களிலே இந்தப் பணி மேற்கொள்ளப்பட
வேண்டுமென்றாலும்கூட, அங்குள்ள சூழ்நிலையைக் கருதி, 20 கிலோ
மீட்டர் தூரம் அமைப்பதற்கு அங்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.
எனவே, படிப்படியாக அந்தப் பகுதியிலேயும், தேவையான
அனைத்துப் பகுதிகளிலும், சூரிய மின் வேலி அமைத்துத் தரப்படும்
என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் அங்கே
இழப்பைப்பற்றிக் கேட்டார்கள். இதுவரை, பயிர்கள் வன
விலங்குகளாலே சேதப்படுத்தப்பட்டால் அதற்கு ஈட்டுத் தொகை,
இழப்புத் தொகை, தருகிற அந்தத் திட்டமே இல்லை. ஆனால், சென்ற
ஆண்டுதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர்
அவர்கள், அந்த விவசாயிகளுடைய நலன் கருதி, பயிர் சேதமுற்றால்
அவர்களுக்கு இழப்புத் தொகை தர வேண்டுமென்பதற்காக, 50
இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்தார்கள். மத்திய அரசினுடைய நிதியும்,
ரூ.44½ இலட்சம் பெற்று, இந்த ஆண்டு மட்டும் இதைப்போன்று
பயிர் இழப்பு ஏற்பட்டவர்களுக்கும், சில இடங்களிலே உயிர்ச் சேதம்
ஏற்பட்டவர்களுக்குமாக ரூ.94½ இலட்சம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது
என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
திருமதி ரா. லீமா றோஸ்.



2007 ஏப்ரல் 11]

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை
நன்றிகூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்
தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மலைப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு, அதிலும்
குறிப்பாக, அதன் அருகிலே இருக்கின்ற கிராமங்களில், நீண்ட
நெடுங்காலமாக அந்தப் பகுதியிலே பயிர் செய்துகொண்டிருக்கின்ற
விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சமீப காலமாக, வன
விலங்குகள்மூலமாக மிகவும் அச்சுறுத்துகிற வகையில், அவர்கள்
உயிர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
குறிப்பாக, பெரியகுளம் தொகுதியில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும்
ஒருவர் மாடு முட்டி, காட்டெருமை முட்டி இறந்திருக்கிறார்;
ஒருவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையிலே
அனுமதிக்கப்பட்டிருக்கிறார். பெரியகுளம் தொகுதியை உள்ளடக்கிய
கொடைக்கானல் மலைப் பகுதியிலே, கிராமங்களைச் சுற்றிலும்
வனப் பகுதிகள் இருக்கின்றன. ஒருபுறம் அவர்கள் பயிர்
செய்துகொண்டிருக்கிற பயிர்களுக்குச் சேதமும், இன்னொருபுறம்
அவர்களுடைய உயிர்களுக்கும் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை
தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அரசு இதில் தீவிர
கவனம் செலுத்தி, ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் இருக்கின்ற
அனைத்து மலைப் பிரதேச கிராமங்களைப் பாதுகாப்பதற்கும்,
பயிர்களைப் பாதுகாப்பதற்கும், மனித உயிர்களைப் பாதுகாப்பதற்கும்,
எவ்வளவு solar fencing போடப்பட வேண்டுமென்று கணக்கெடுத்து,
அதை phased manner-லேகூட இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக அல்லது
மூன்று ஆண்டுகளுக்குள்ளாக போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட
வேண்டும். மேலும், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி
மேம்பாட்டு நிதியிலிருந்து, solar fencing போடுவதற்கு அரசு அதிலேயும்
வழிவகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதனை
உங்கள்மூலம் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர்
அவர்கள், ஓர் அரிய யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு

அவரே முன்னுதாரணமாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு, அரசு நிதியிலே, 137½ கிலோ மீட்டர் தொலைவும், அதைப்போல, 12-வது நிதிக் குழுவின்மூலம், 100 கிலோ மீட்டர் தொலைவும், 'யானைகள் பாதுகாப்பு' என்பதன்மூலம், 15 கிலோ மீட்டர் தொலைவும், 'வன விலங்கு சரணாலயப் பாதுகாப்பு' என்கிற வகையிலே, 10 கிலோ மீட்டர் தொலைவும், ஆக 202½ கிலோ மீட்டர் தொலைவு, அதாவது நம்முடைய கிருஷ்ணகிரி மாவட்டத்திலே 25 கிலோ மீட்டரும், அதைப்போல தருமபுரி மாவட்டத்திலே 10 கிலோ மீட்டரும், ஈரோடு மாவட்டத்திலே 62 கிலோ மீட்டரும், கோயம்புத்தூர் மாவட்டத்திலே 37 கிலோ மீட்டரும், திண்டுக்கல் மாவட்டத்திலே 10½ கிலோ மீட்டரும், அவர் குறிப்பிட்ட அவருடைய தேனி மாவட்டத்திலே 15 கிலோ மீட்டரும், அதைப்போல, விருதுநகர் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியிலே 10 கிலோ மீட்டரும், திருநெல்வேலி மாவட்டத்திலே 31 கிலோ மீட்டரும், கன்னியாகுமரி மாவட்டத்திலே 20 கிலோ மீட்டரும், திருச்சி மாவட்டத்திலே 10 கிலோ மீட்டரும், ஆக 262½ கிலோ மீட்டர் சூரிய மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அரசு நிதியின் சார்பாக 181 கிலோ மீட்டர் என்றாலும், மத்திய அரசிடம் இன்னும் இந்த வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு, அதிக நிதி பெற்று, அதிக தொலைவு அமைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**49**—

## புதிய பாலம்

***11—திரு. துரை சந்திரசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருக்காட்டுப்பள்ளியில் காவிரி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருக்காட்டுப்பள்ளியில் காவிரி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

முற்பகல் 10-15

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய இந்த 10 மாத ஆட்சிக் காலத்தில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, பூண்டி செங்கரையூர் இடையே ரூ.36 கோடியில் புதிய பாலம் அமைக்க டெண்டர் விடப்பட்டு, பணி தொடங்கப்பட உள்ளது. அப்படி அமைகின்ற பாலத்தில், இரண்டு ஆண்டுகளில் முடியவிருக்கின்ற அந்தப் பாலத்தின் வழியாகக் கன ரக வாகனங்கள் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதுபோல, திருக்காட்டுப்பள்ளியில் இப்போது இருக்கின்ற, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான Irrigation-cum-bridge, மதகுடன்கூடிய போக்குவரத்துப் பாலம் மிக வலுவிழந்துள்ளது. 1870 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே, முன்னுரிமை கொடுத்து, அந்தப் பாலத்தை, திருக்காட்டுப்பள்ளியில் காவிரி ஆற்றின் குறுக்கே, புதிய பாலமாக அமைக்க அரசு பரிசீலிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்காட்டுப்பள்ளி, செங்கிப்பட்டி, பட்டுக்கோட்டை, இப்பகுதிகளை இணைக்கக்கூடிய சாலை மாநில நெடுஞ்சாலையாகும். இதனுடைய நீளம் சுமார் 71 கிலோ மீட்டர் இந்தச் சாலையின் தொடக்கத்தில், திருக்காட்டுப்பள்ளி அருகிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, பாலம் அமையவேண்டும் என்கிற இடம், அடுத்து வரக்கூடிய ஆண்டுகளில் பரிசீலிக்கப்படவுள்ளது இப்போது அவ்விடத்தில் பொதுப் பணித் துறையினுடைய

கட்டுப்பாட்டிலுள்ள Regulator பாலம் ஒன்று, பழைய பாலம் ஒன்று, உள்ளது. அதற்கு அருகிலேதான், நம்முடைய மாண்புமிகு முதல்வருடைய அரசு ஏற்பட்ட பிறகு, கொள்ளிடத்தின் அருகிலே, நம்முடைய லால்குடி தொகுதியையும், திருவையாறு தொகுதியையும் இணைக்கக்கூடிய வகையிலே, அதாவது, திருச்சி மாவட்டத்தையும், தஞ்சை மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய அளவிலே, ஏறத்தாழ சுமார் 36 கோடி ரூபாய் மதிப்பிலே, ஒரு பாலம் அமையவிருக்கின்றது. அந்த அடிப்படையில், சுமார் 29½ கோடி ரூபாய் மதிப்பிலே, இப்போது ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு, ஆணையத்திற்கு ஒப்புதலுக்காக இந்த வாரம் அனுப்பப்படவிருக்கின்றது. நில எடுப்பிற்காக சுமார் 6½ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றார்கள். அந்தப் பாலப் பணிகள் விரைவில் தொடங்கி, சுமார் 2 ஆண்டுக் காலத்திலே முடிவதற்கு, அதற்குரிய ஒப்பந்ததாரருக்குரிய அனுமதி, கால அவகாசம் இருக்கின்றது. எனவே, அந்தப் பாலம் அமைக்கப்படுகின்றபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திருக்காட்டுப்பள்ளியில், குடமுருட்டி ஆறும், காவிரியும் பிரியக்கூடிய இடத்தில், புதிய பாலம் அமைப்பதைப்பற்றி எதிர்காலத்திலே அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரி தாலுகாவில், மோயாறு ஆற்றில், குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், அங்கு தெங்குமாரஹாடா என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதி, மழைக் காலங்களில் தீவாகத்தான் காட்சியளிக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள குழந்தைகள், பள்ளி, கல்லூரிக்குச் செல்வதற்கும், பரிசல் என்கிற படகில்தான் சென்று வருகிறார்கள். இவர்களின் அடிப்படை வசதியைக் கருதி, அப்பகுதியில் பாலம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு, முதல் மாவட்டமாக நீலகிரி மாவட்டத்திற்கு ஆய்வுப் பணிக்காகச் செல்லவிருக்கின்றோம். அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடத்தை நேரிலும் பார்வையிட்டு, தேவைப்படுமானால் அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**50—**

## மேல்நிலைப் பள்ளி

***3405—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் ஒரு மேல்நிலைப் பள்ளி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மானாமதுரையில் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத் துறையின்மூலம் மேல்நிலைப் பள்ளி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை ஒன்றியம், மானாமதுரை நகர்ப் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், மானாமதுரை நகர்ப் பகுதியில் உள்ள மக்கள், ஏழையெளிய மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பகுதியிலே அரசு சம்பந்தமான எந்தவொரு மேல்நிலைப் பள்ளியும் இல்லை. எனவே, ஒரு மானாமதுரையில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக, ஒரு மேல்நிலைப் பள்ளி கட்டித் தரப்படுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 6 பள்ளிகள்

செயல்பட்டு வருகின்றன. ஒரு மேல்நிலைப் பள்ளி, இரண்டு உயர்நிலைப் பள்ளிகள், 3 தொடக்கப் பள்ளிகள். சிவகங்கை ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, மல்லல் என்ற இடத்தில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் ப்ளஸ் 1, ப்ளஸ் 2 மாணவர்கள் 126; மாணவிகள் 98; ஆக மொத்தம் 224 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். குறிப்பாக, மானாமதுரையில் பள்ளிக் கல்வித் துறையின்மூலமாக அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், அரசு மானியம் பெறும் பள்ளி, ஒக்கூர் வெள்ளையன்பட்டி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு பள்ளிகளிலும், 2,223 மாணவிகளும், 1,594 மாணவர்களும் பயின்று வருகிறார்கள். எனவே, மானாமதுரையில் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் துறையின்மூலம் புதிதாகத் தனியாக மேல்நிலைப் பள்ளி அமைக்க வாய்ப்பில்லை.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரையில் அரசு மேல்நிலைப் பள்ளி கிடையாது. அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மட்டும்தான் இருக்கின்றது. மேலும், மானாமதுரை ஒன்றியத்திலேயே, வேம்பத்தூரில் மட்டும் அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கின்றது. மற்ற எந்த இடத்திலும், மேல்நிலைப் பள்ளி இல்லை. அந்தப் பகுதியிலே இருக்கின்ற 39 பஞ்சாயத்துக்களிலும் அதிகமான ஏழையெளிய மக்கள், தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்கு மானாமதுரைக்குத்தான் வரவேண்டும். அப்படி இருக்கின்ற நேரத்தில், அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், ஓ.வி.சி. ஆண்கள் மேல்நிலைப் பள்ளி என்ற ஒன்றும்தான் இருக்கின்றன. இட நெருக்கடியின் காரணமாக, பல பகுதிகளிலிருந்து வருகின்ற மாணவர்களுக்கு அந்தப் பள்ளிகளிலே படிப்பதற்கு வசதிகள் இல்லாத காரணத்தினால், அந்தப் பகுதியிலே ஓர் ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளி துவங்கினால் நல்லது. அந்தப் பகுதியிலே அரசு நிலங்களும் இருக்கின்றன. நல்ல குடிநீர் வசதியும் இருக்கின்றது. போக்குவரத்து வசதியும் இருக்கின்றது. எனவே, அரசு அந்தப் பகுதியிலே ஆதி திராவிடர் நலத் துறைமூலமாக, ஓர் அரசு மேல்நிலைப் பள்ளியைக் கட்டித் தருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக புதிதாகப் பள்ளிகள் தொடங்குவதற்குத் தற்சமயம் ஏதும் செயற்குறிப்பு இல்லை. அப்பகுதியில் ஆய்வு செய்து, ஆதி திராவிட மாணவர்கள் மற்றும் மாணவிகள் அதிகமாக இருக்கும்பட்சத்தில் அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** வினாவின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வினா உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் வீடு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 56-ன்கீழ், (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரையும் கேட்பேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரையும் கேட்பேன், உட்காருங்கள். 5-4-2007 வியாழக்கிழமை நள்ளிரவில் ஒரத்தநாடு பேரூராட்சியிலுள்ள, தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்களுடைய வீடு, சில நபர்களால் அடித்து நொறுக்கப்பட்ட சம்பவம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஓ. பன்னீர்செல்வம், கே.ஏ. செங்கோட்டையன், டி. ஜெயக்குமார், ஆர். வைத்திலிங்கம், செ.ம. வேலுசாமி, எம்.வி.ஆர். வீரகபிலன், ஆர்.கே. பாரதி மோகன், இரா. துரைக்கண்ணு, அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அ.தி.மு.க. சார்பாகவும், ம.தி.மு.க. சார்பாக திரு. மு. கண்ணப்பன், திரு. நா. இராமகிருஷ்ணன் ஆகிய இரண்டு பேரும், விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாகப் பேசலாம். அ.தி.மு.க. சார்பாக திரு. ஆர். வைத்திலிங்கம்.

***திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-4-2007 வியாழக்கிழமை நடு இரவு ஒரு மணியளவில், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்களுடைய வீடு, சில சமூக விரோதிகளால், ரௌடிகளால், கேடிகளால் தாக்கப்பட்டுள்ளது. ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கே இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லையென்றால், சாதாரண குடிமக்களுக்கு எப்படிப் பாதுகாப்பு கிடைக்கும்? மேலும், இந்த நிகழ்வு நடந்தும், தஞ்சை மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர், அந்த இடத்தை வந்து பார்வையிடவில்லை. நான் தொலைபேசியில் பேசியபொழுது, 'எனக்கு வேலை இருக்கிறது; D.S.P-ஐ அனுப்பியிருக்கிறேன்' என்று சொல்லுகிறார். மேலும்,** காவல் துறை இதுவரைக்கும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவில்லை.** (குறுக்கீடுகள்). சத்தம் போடுவதெல்லாம் அங்கே வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. வைத்திலிங்கம், குற்றச்சாட்டு இல்லாமல் சொல்லுங்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்**: காவல் துறை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் யாரும் உட்கார்ந்துகொண்டுப் பேசாதீர்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள். அமைச்சருடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று மாத்திரம் சொல்லுங்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** 6 நாட்கள் ஆகியும், அந்தக் குற்றவாளிகள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஆர். வைத்திலிங்கம்:** தமிழ்நாடு காவல் துறை இன்றைக்குச் செயலிழந்து விட்டதா? இல்லை, ரௌடிகளுக்குத் துணை போகின்றதா? இந்த நிலைமை, நாளைக்கு எந்தச் சட்டமன்ற உறுப்பினருக்கும் ஏற்படலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாதுகாப்புப் படையுடன் செல்வதில்லை. இதை உணர்ந்து, அரசு, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, கடுமையான தண்டனை கொடுக்க வேண்டுமெனத் தங்கள்வாயிலாக கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ம.தி.மு.க. சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

*முற்பகல் 10-25*

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் கம்மாளத் தெருவில், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்களுடைய வீடு உள்ளது. அந்த வீட்டில், அவருடைய தந்தையார் பட்டுவும், மைத்துனர் குமாரவேலுவும் குடியிருந்து வருகின்றார்கள். 5-4-2007 அதிகாலை 2-00 மணியளவில், அந்தப் பகுதியிலே உள்ள transformer இயக்கத்தை நிறுத்திவிட்டு, ஒரு இருள்படர்ந்த சூழ்நிலையை ஏற்படுத்தி, சட்டமன்ற உறுப்பினருடைய வீட்டில், முப்பதுக்கும் மேற்பட்ட வன்முறையாளர்கள் நுழைந்து, வீட்டின் கூரையில் வேய்ந்திருந்த ஓடுகளை அடித்து நொறுக்கியும், அந்தச் சத்தத்தைக் கேட்டு அவருடைய தந்தையும், மைத்துனரும் வெளியே வந்தபொழுது அவர்களைத் தாக்கியும், அங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிளை முழுமையாக அடித்து நொறுக்கியும், கட்டப்பட்ட மாடுகளை ஆயுதங்களால் குத்தியும், இப்படிப் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது, கண்டிப்பாக வன்முறைச் செயலாகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலை என்று சொன்னால், எதிர்காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கின்றது என்பதனையும் நீங்கள் உணர வேண்டும். அவருடைய தந்தை அவர்கள், பத்திரிகையிலே பேட்டி தரும்போது, ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். 'உன் உயிரைக் கொண்டால்தான், உன் மகன் சட்டமன்றத்திலே அதிகமாகப் பேசமாட்டான்' என்ற அளவிலே

கருத்தை ... (குறுக்கீடுகள்) பத்திரிகையிலே வந்திருக்கிறது. (குறுக்கீடுகள்) சொல்லப்பட்டிருக்கின்றது. சம்பவம் நடந்து.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** சம்பவம் நடந்து ஆறு நாட்கள் ஆகியும், இன்றும் அந்த வன்முறை கும்பலை, காவல் துறை கைது செய்யவில்லை. ஒரு கருத்துச் சுதந்திரம், சட்டசபையிலே எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது, இதுபோல ஒரு அச்சுறுத்தலும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பிரச்சினையை மாத்திரம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராமகிருஷ்ணன், பிரச்சினையைமட்டும் சொல்லி, அமைச்சருடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** முடித்து விடுகிறேன். முடித்து விடுகிறேன். எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அச்சமின்றி தமிழ்நாட்டிலே நடமாடுவதற்கு இந்த அவை உரிய பாதுகாப்பினைத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்தை ஈர்க்க விழைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *5-4-2007* அன்று இரவு அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கலைராஜனுடைய தந்தை திரு. பட்டுசாமி அவர்கள், ஒரத்தநாட்டிலே உள்ள அவரது வீட்டுத் திண்ணையிலே தூங்கிக்கொண்டிருந்தபோது, அன்று விடியற்காலை அதாவது, *6-4-2007* அன்று *1-00* மணியளவில் அடையாளம் தெரியாத சில நபர்கள் வீட்டு வாசல் கதவை உடைத்து உள்ளே நுழைந்து, வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு சக்கர வாகனம், சைக்கிள், வீட்டின் ஓடுகள், டியூப் லைட்டுகள் ஆகியவற்றைச் சேதப்படுத்தியுள்ளார்கள். ஒலி கேட்டு வெளியேவந்த பட்டுசாமி அவர்களின் மருமகன் குமாரவேலு, பட்டுசாமியை வீட்டிற்குள் அழைத்துச் செல்லும்போது, குமாரவேலுவினுடைய தலையிலே அடித்திருக்கிறார்கள். பட்டுசாமிக்கு, சேதம் அடைந்த ஓடு விழுந்து, தலையிலே சிறு காயம் ஏற்பட்டுள்ளது. சப்தம் கேட்டு பக்கத்து வீடுகளிலே இருந்தவர்கள்



ஓடி வருவதற்குள், அந்த நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார்கள்.

இதுகுறித்து பட்டுசாமி அவர்கள், ஒரத்தநாடு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், ஒரத்தநாடு காவல் நிலைய குற்ற எண் *136/07*, பிரிவுகள் *147, 148, 452, 323* இ.த.ச. மற்றும் *3(1)* PDL Act-ன்படி, வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. காயமடைந்த பட்டுசாமி மற்றும் குமாரவேலு ஆகியோர், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று *7-4-2007* அன்று இல்லம் திரும்பினார்கள். இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட ஊரிலேயுள்ள அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிரிகளைப் பற்றிய விவரம் அறிந்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் அங்கே கூடி, அந்த வீட்டு வாசலிலே குழப்பம் விளைவிப்பதாகக் கருதி, மாவட்டக் கூடுதல் கண்காணிப்பாளர் தலைமையில் போதுமான காவலர்கள் நியமிக்கப்பட்டு, அசம்பாவிதம் எதுவும் நடைபெறாமல் தடுக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் *10-30*

காவல் துறையினர், எதிரிகளைக் கைது செய்ய, தங்களால் முடிந்தவரையிலே முயற்சிக்கிறோம், எதிரிகளைப் பிடித்துத் தருவோம என்று கூறியதன்பேரில், அந்தக் கூட்டம் கலைந்திருக்கிறது. இன்றைக்கு அங்கே அமைதி நிலவுகிறது. இருந்தாலும், இதுபோன்ற நிகழ்ச்சிகள், இந்த மாமன்றத்திலே இருந்த முன்னாள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அதாவது இன்னாள் ஆளுங்கட்சி உறுப்பினர்கள்மீதும், அவர்களுடைய வீடுகளின்மீதும் இப்படிப்பட்ட தாக்குதல்கள் ஒரு காலத்தில் நடைபெற்றிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் எந்தளவிற்கு இங்கே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோ, அவைகளையெல்லாம் முன்மாதிரியாகக் கொண்டு, இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற உறுதியை இந்த அவைக்கு நான் அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) கடலூர் சிப்காட் வளாகம், மருந்துத் தொழிற்சாலைகளின் கழிவு நீரினால் சுற்றுச்சூழல் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி *56*-ன்கீழ், கடலூர் சிப்காட்டிலுள்ள சாசன் தொழிற்சாலையும், ராயல் ஃபேப்ரிக்ஸ்

தொழிற்சாலையும் கழிவு நீரைச் சுத்திகரிக்காமல் ஆற்றில் விடுவதால், அந்த நீர் கடலில் கலக்கும்போது, துர்நாற்றம் ஏற்படுவதுடன், மீன்கள் இறப்பதும், நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு, விஷ நீராக மாறி, பொதுமக்களின் உயிருக்குப் பாதிப்பும் ஏற்படும் நிலை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோ. எதிரொலி மணியன், திரு. அ. தமிழரசு, திரு. மு.க. பெரியசாமி, திரு. கே.வீ. ராமநாதன், திரு. டி. மூர்த்தி, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன், திரு. கி. ஆறுமுகம், திரு. வை. காவேரி, திரு. பெ. கண்ணன், டாக்டர் க. நெடுஞ்செழியன், திரு. த.அ. மேகநாதன், திரு. வீ.ஏ.டி. கலியவரதன், திருமதி பெ. கமலாம்பாள், திரு. தி.க. ராஜா, திரு. கே.எல். இளவழகன், திரு. இல. வேலுசாமி ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள அறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாகப் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) அனைவரும் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள். ஆகவே, யாராவது ஒருவர் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிப்காட் வளாகத்தை, இந்தியப் பேரரசும், தமிழக அரசும் கெமிக்கல் நிறுவனங்களைத் தொடங்குவதற்கான ஓர் இடமாகத் தேர்வு செய்து, இப்போது பெரும்பான்மையான கெமிக்கல் நிறுவனங்கள் அங்கே இயங்கி வருகின்றன. அப்படி இயங்கி வருகின்ற அந்த நிறுவனங்களில், சாசன் கெமிக்கல்ஸ், அதேபோல, ராயல் ஃபேப்ரிக்ஸ், இன்னும் பல்வேறு நிறுவனங்கள், உயிர்காக்கும் மருந்துகளையும், அதேபோல், மனித எலும்புருக்கி நோயைக் குணப்படுத்துவதற்கான மாத்திரை, மருந்துகளையும், இன்னும் பல்வேறுவிதமான நோய்களைக் குணப்படுத்துகின்ற மருந்துகளையும் தயாரிக்கின்ற நிறுவனங்களாக அங்கே இயங்கி வருகின்றன. அதேபோல, சிப்காட்டில் இருக்கின்ற SPIC Pharmaceuticals என்று சொல்லக்கூடிய நிறுவனம், பென்சிலின் மருந்தை உற்பத்தி செய்கிறது. இந்த நிறுவனங்களெல்லாம், அங்கே அந்த உற்பத்தியைச் செய்த பிறகு, அதிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுகள் எந்தவிதச் சுத்திகரிப்பும் செய்யாமல், நேரடியாக அங்கே இருக்கின்ற உப்பனாற்றில் நீராகக் கலந்துவிடுகின்றன. மிகவும் மாசடைந்த நீராகவும், கழிவு நீராகவும் நேரடியாகக் கடலில் கலக்கின்ற காரணத்தினால், அங்கு கடல்வாழ்



உயிரினங்கள் பேராபத்திற்கு உள்ளாகின்றன. மீன்கள் இறந்து மிதக்கின்றன. உயிருள்ள மீன்களைக்கூட மீனவர்கள் பிடித்து விற்பனை செய்கின்றபோது, அவற்றை வாங்கி உண்கின்ற பொதுமக்களுக்கு, உடல்ரீதியாக, பல்வேறுவிதமான மர்ம நோய்கள் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10-35

குறிப்பாக, இந்த சிப்காட் வளாகத்தை, உயர் நீதிமன்றத்தினுடைய நீதியரசர் திரு. கனகராஜ் அவர்கள் தலைமையிலான ஒரு குழு, 1993 ஆம் ஆண்டு, ஆய்வு செய்தது. அப்படி ஆய்வு செய்தபோது, அந்தக் குழு, தன்னுடைய பரிந்துரையில், "மனித இனம் வாழ்வதற்குச் சாத்தியம் இல்லாத ஓர் இடமாக இந்தக் கடலூர் சிப்காட் பகுதியை, இந்தக் குழு கணிக்கிறது" என்கிற விவரத்தைத் தந்திருக்கிறது. அதற்குப் பிறகு, அங்கிருக்கக்கூடிய மக்கள், மிகப் பெரிய போராட்டத்தின்மூலமாக, எழுச்சியின்மூலமாக, அங்கு மிகப் பெரிய போராட்டங்களைத் தொடர்ந்து, இந்த மாசுக் கட்டுப்பாட்டைத் தமிழக அரசு கைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற ஒரு நிலை வந்தபொழுது, இரண்டாவது முறையாக, நீதிபதி திரு. நயினார் சுந்தரம் அவர்கள் தலைமையிலான ஒரு குழுவும் அதைப் பார்வையிட்டது. அவர், மனித உரிமைக் கழகத்தினுடைய தலைவராகவும் இருந்து அதைப் பார்வையிடுகிறபோது, அந்த மக்கள் படும் நேரடியான பாதிப்புகளை உள்வாங்கிக் கொண்டார்கள். அந்தப் பாதிப்புகள் என்னவென்று சொன்னால், அங்கு இருக்கின்ற அந்த மக்களுக்கு மலட்டுத் தன்மை என்று சொல்லக்கூடிய அளவில், கர்ப்பப் பை கோளாறுகளும், அதேபோல, அவர்களுக்கு நரம்புத் தளர்ச்சி, கண் பார்வை பாதிக்கப்படுவது, குழந்தைகள் பிறப்பில் விகிதாச்சாரம் குறைவு ஏற்படுதல், அதேபோல பல்வேறு விதமான மர்ம நோய்களும் அவர்களுக்கு இருக்கின்றன என்பதை அந்தக் குழு கண்டறிந்து, அதை நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. அதற்குப் பிறகு, இந்திய அளவில், உலக அளவில், இந்தச் சுற்றுச்சூழல் பிரச்சினை குறித்து—தெற்கு ஆசியாவில் நிலத்தடி நீர், அங்கு இருக்கின்ற தென்னை மரங்களுக்குச் சுத்தமாக வடி செய்யப்பட்ட விஷ நீராகக் கிடைக்கிறது என்ற செய்திகள் எல்லாம் பத்திரிகைகளிலே வந்த பிறகு அமெரிக்காவில் இருக்கின்ற கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒத்திவைப்புத் தீர்மானம்; ஆனால், சிறப்புக் கவன ஈர்ப்பாகத் தாங்கள் எடுத்திருக்கிறீர்கள்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளவில்லை. சிறப்புக் கவன ஈர்ப்பாகத்தான் எடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் சொல்கிற விவாதத்தைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** இதோ முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருடைய கவனத்தை ஈர்த்தால் போதும்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான பிரச்சினை. அமெரிக்காவில் இருக்கிற அந்தக் கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலிருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்தில் பேசுகிற அவ்வளவும் முக்கியமான விஷயங்கள்தான்.

**திரு. தி. வேல்முருகன்:** டென்னி லார்சன் தலைமையிலான குழு, அந்த சிப்காட் வளாகத்தை பதினொரு முறை ஆய்வு செய்திருக்கிறது, அமெரிக்காவினுடைய நிறுவனம். அந்தக் காற்றை அடைத்து, அமெரிக்காவிலே கொண்டுசென்று அவர்கள் ஆய்வு செய்தபோது, 17,000 மடங்குக்கு மேல் அனுமதிக்கப்பட்டதைவிட அதிகமாக மாசு கலந்திருக்கிறது என்கிற புள்ளிவிவரத்தையும் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

அதேபோல, தற்போது உச்ச நீதிமன்றம், வழக்கறிஞர் மோகன் தலைமையில் ஒரு குழுவை நியமனம் செய்து, அந்தக் குழு அங்கு எந்த அளவுக்கு மாசு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் கண்டறிவதற்கான உத்தரவிடப்பட்டு, அவர்களும் மிக மோசமான ஒரு நிலைமைக்கு அங்கு சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற கருத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். ஆதலால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாக, நம்முடைய சுற்றுச்சூழல் அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களிடத்தில் நாங்கள்



வேண்டுகோள் வைப்பது, பல ஆண்டுக் காலமாக, அந்த மக்கள் அங்கு பல்வேறுவிதமான போராட்டங்களில் ஈடுபடுகின்றார்கள்; பல்வேறு விதமான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றார்கள்; மனித இனம் வாழ்வதற்குச் சாத்தியக்கூறு அற்ற இடம் என்று அங்கு அறிக்கை தந்திருக்கின்றன, பல்வேறு N.G.O.-க்கள்; இதையெல்லாம் கருத்திலேகொண்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய தலைமையின்கீழ், ஒரு நேர்மையான குழுவை அங்கு ஆய்வுக்கு அனுப்பி, இதுபோன்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் உண்மையாக நடைபெறுகின்றனவா என்பதை நீங்கள் ஆய்வு செய்யவேண்டும். காரணம், கடந்தகால ஆட்சியின்போது நான் சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொண்டுவந்து பேசியபொழுது, அதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால், நடவடிக்கை எடுப்பதற்குள்ளாக அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களே மாறிவிட்டார்கள். எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆதலால்தான், மீண்டும் தாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, உங்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த அளவிற்கு மிகப் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்துகின்ற இந்த, சாசன் கெமிக்கல்ஸ், ராயல் ஃபேப்ரிக்ஸ் போன்ற நிறுவனங்கள், இன்னும் இருக்கின்ற தொழிற்சாலைகள் மாசுகளை ஏற்படுத்தாத அளவிற்குக் கட்டுப்படுத்தி, இந்த அரசு பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத அளவிற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள், இங்கே சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொண்டு வந்திருக்கிற பிரச்சினை, கடலூரில் உள்ள சிப்காட் வளாகத்திலேயுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் சுற்றுப்புறச்சூழல் பாதிப்பு பற்றியது.

கடலூரில் உள்ள இரசாயனத் தொழிற்சாலைகளுக்கென சிப்காட் தொழிற்சாலை வளாகம் பகுதி-I, 1984 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த சிப்காட்டில் இயங்கிவரும் மொத்த தொழிற்சாலைகள் 21. கழிவு

நீரை உற்பத்தி செய்யும் 13 தொழிற்சாலைகள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து இயக்கி வருகின்றன. ஜனவரி 2000-க்கு முன்பு இந்தத் தொழிற்சாலைகளில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் சிப்காட் வடிகால் வழியாகவும், உப்பனாற்றிலும், ஆவியாக்குதல்மூலமாகவும் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள தோட்டங்களிலும் வெளியேற்றப்பட்டு வந்தது. இதனால் நிலத்தடி நீர் மற்றும் உப்பனாறு மாசுபடுவதாகப் புகார் வந்ததன்பேரில், சிப்காட் மற்றும் தொழிற்சாலைகள் இணைந்து கோவாவிலுள்ள தேசிய கடல் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவுறுத்தலின்படி, க்யூசக்ஸ் (CUSECS) என்ற நிறுவனம் அமைக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரைச் சேகரித்து, குழாய்மூலம் வங்கக் கடலில் ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் எடுத்துச் சென்று வெளியேற்றுகின்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

முறபகல் 10-40

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, திருவாளர்கள் சாசன் கெமிக்கல்ஸ் அண்டு டிரக்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம், 1991 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இது உயிர்காக்கும் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. 2005 ஆம் ஆண்டு வரை இத்தொழிற்சாலையிலிருந்து நாள் ஒன்றுக்கு 51 ஆயிரம் கிலோ லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர், கோவாவிலுள்ள தேசிய கடல் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவுறுத்தலின்படி, க்யூசக்ஸ் (CUSECS) என்ற நிறுவனம்மூலம் கடலில் விடப்பட்டு வந்தது. பின்பு, R.O. Plant மற்றும் Multi effect Evaporator இயந்திரங்களை அமைத்து, சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரைத் தனது வளாகத்திலேயே பயன்படுத்தி வருகிறது. எனவே, கடந்த நவம்பர் 2005 முதல் இந்நிறுவனத்தின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர், நிலத்திலோ, உப்பனாற்றிலோ, கடல் நீரிலோ வெளியேற்றப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இன்னொரு நிறுவனமான திருவாளர்கள் ராயல் சூப்பர் ஃபேப்ரிக்ஸ் என்ற தொழிற்சாலை, 1992 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இங்கே, பாலியஸ்டர், காட்டன் மற்றும் காட்டன் நூல் துணி ஆகியவற்றிற்குச் சாயமிடுதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் நாளொன்றுக்கு 70 ஆயிரம் கிலோ லிட்டர் கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்து, க்யூசக்ஸ் (CUSECS) அமைப்புமூலம், கோவாவிலுள்ள தேசிய கடல் ஆராய்ச்சி நிறுவனத்தின்



அறிவுறுத்தலின்படி கடலில் வெளியேற்றி வருகிறது. இந்நிலையில், உற்பத்தித் திறனை அதிகரித்து, அதனால் தொழிற்சாலை கழிவு நீர் அதிகம் வெளியேற்றியதாலும், சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலையின் கழிவு நீரின் தரம், பிப்ரவரி 2006 முதல் ஏப்ரல் 2006 வரை, தர நிர்ணய அளவுக்குமேல் வெளியேற்றப்பட்டதாலும், 20-7-2006 நாளிட்ட வாரிய நடப்பாணையில், மூடுதல் மற்றும் மின் இணைப்புத் துண்டிக்க ஆணை வழங்கப்பட்டது. பின்னர், 10-10-2006 முதல் இரண்டு மாதங்களுக்கு இவ்வாணை தற்காலிகமாக விலக்கப்பட்டது. 11-12-2006-ல் முக்கியமான சில நிபந்தனைகளுடன் மூடுதல் உத்தரவு முழுவதுமாக விலக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கடலூர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள், 27-3-2007 அன்று ஆய்வு செய்தபோது, சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் BOD & COD அளவுகள். தர நிர்ணய அளவைவிட அதிகமாக உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவினை, 30-6-2007-க்குள் அடையவேண்டுமென இந்நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை வாரியமும் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அவ்வாறு கட்டுப்பாட்டிற்குள் வைக்கவில்லையெனில், இந்நிறுவனத்தின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் சொன்னதுபோல, இதுபோன்ற தொழிற்சாலைகளால் மக்களுக்கும், பொதுச் சுகாதாரத்திற்கும் கேடு ஏற்படாதவாறு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் கவனித்து வருகிறது. அவர் சொல்வதுபோல, குறைபாடு இருக்குமானால், முந்தைய ஆட்சி அதை கவனிக்கவில்லை என்று அவர் சொன்ன அந்தக் குற்றச்சாட்டு இல்லாமல், சட்டமன்றம் முடிவடைந்தவுடன் நேரடியாக அதிகாரிகளோடு சென்று பார்த்து, அது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல்முருகன்:** தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? அமைச்சர் அவர்கள் தெளிவான விவரத்தைச் சொல்லிவிட்டார், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை. (குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு. 18 எம்.எல்.ஏ.-க்கள் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லியாகிவிட்டது; உங்களுக்கு விளக்கமாகச் சொல்லியாகிவிட்டது.

***திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகாவில் உள்ள மணிமுத்தாறு அணையில், 86 அடி தண்ணீர்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்துரை கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) திரு. வேல்முருகன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பல்வேறு குழுக்களினுடைய பரிந்துரைகளையெல்லாம் சொல்லி, விவரமாக எடுத்து வைத்திருக்கிறேன். நான் வேண்டுவது, கடந்த ஐந்தாண்டுக் காலமாக இரண்டு, மூன்று கவன ஈர்ப்புகள், ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால், முதலமைச்சர் அவர்கள், இதற்கு ஒரு குழுவை நியமித்து, உடனடியாக அங்கு ஆய்வு செய்ய வேண்டும். அங்குள்ள மக்கள் அந்தவழியாகச் செல்கின்றபோதுகூட, அந்தக் காற்றினை சுவாசித்தாலே, வாந்தி, மயக்கம் ஏற்படுகின்ற ஒரு மிகப் பெரிய கொடுமையான நிலை இருந்து கொண்டிருக்கிறது. இது ஒன்று. இரண்டாவது, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், நாங்களும் கடந்த மாதம் ஆய்வு செய்தபோது, 2200 T.D.S. இருக்க வேண்டிய இடத்தில், 27 ஆயிரம் T.D.S. என்ற அளவிற்கு இருந்திருக்கிறது. நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அதனைக் கண்டுபிடித்து, அந்த நிறுவனத்தை மூடுவதற்கான நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், அடுத்த ஒரு வாரத்திற்குள், அந்த T.D.S.-ஐக் குறைக்காமல், குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்காமலேயே, சில அதிகாரிகளின் உடந்தையுடன் திரும்ப அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆக, தொடர்ந்து நான் மன்றாடி வருகிறேன்; எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களும் சென்று, அங்கு போராடி இருக்கிறார். எங்கள் சின்ன அய்யா அவர்களும் இந்தியாவில் இருக்கிற பல்வேறு மருத்துவ அறிஞர்களையும் கொண்டுவந்து மருத்துவ முகாம்களை நடத்தி, நோய்களை எல்லாம் கண்டறிந்திருக்கிறார். ஆக, வாழ்க்கைப் பிரச்சினையாக நாங்கள் எடுத்து, அங்கு போராடிக் கொண்டிருக்கிறோம். ஆதலால், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், நேர்மையான அதிகாரிகளை அங்கே நியமனம் செய்து, சிப்காட் வளாகத்தினால் உண்மையாக அங்கே என்ன பாதிப்பு மக்களுக்கு ஏற்படுகிறது என்பதையெல்லாம் நாட்டு



மக்களுக்குத் தெளிவாக அறிவிக்க வேண்டும். சுற்றுச்சூழல் மாசினைத் தடுத்து நிறுத்துவதற்கு ஓர் உயர்நிலைக் குழுவை அமைப்பதற்கு, மாண்புமிகு முதலவர் அவர்கள் முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய கருத்தைப் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அந்தச் சுற்றுச்சூழல் கெட்டுப்போகாமல் இருப்பதற்காக, இந்த அரசு எல்லா முயற்சிகளிலும் ஈடுபட்டு விடை காணும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### (அ) திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையைப் பாசனத்திற்காகத் திறத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

***திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகாவில் உள்ள மணிமுத்தாறு அணையில், 86 அடி தண்ணீர் இருப்பதால், 80 அடிக்கு மேலுள்ள 6 அடி தண்ணீர்மட்டுமே, சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட மணிமுத்தாறு பிரதானக் கால்வாயில் முதல் reach குளங்களுக்கு விவசாயத்திற்கு உடனடியாகத் திறந்துவிட்டு, வாடும் பயிர்களைக் காப்பாற்றுவதற்கான அவசியம் குறித்து அரசின் கவனத்தை ஈர்ப்பதோடு, விவசாயிகளைப்பற்றி நன்கு அறிந்த நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து நல்ல பதிலை எதிர்பார்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்துரையினுடைய கோரிக்கை எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. காரணம், மணிமுத்தாறினுடைய பாசன

முறை, மாண்புமிகு உறுப்பினருக்கு நன்கு தெரியும்; தங்களுக்கும் தெரியும். 80 அடி வரையிலே பிரதானக் கால்வாயிலே தண்ணீர் போகாது; அதற்கு மேலேதான தண்ணீர் எடுக்கலாம். இப்போது 85 அடி தண்ணீர் அங்கிருக்கிறது. ஆனால், மணிமுத்தாறினுடைய பாசன முறை என்ன? நவம்பர் மாதம் 1 ஆம் தேதி திறக்க வேண்டும், dam-ஐ; மார்ச் 31 ஆம் தேதி மூட வேண்டும். ஆனால், இந்த ஆண்டு அபரிமிதமான மழை பொழிந்த காரணத்தால்—reach முறையிலே கொடுப்போம். first reach, second, third reach என்று—ஆனால், இந்த வருடம், இந்த முறை கலைஞருடைய அரசு, நிறைய தண்ணீர் இருக்கிற காரணத்தினால், கிட்டத்தட்ட 125 நாட்களுக்கு மேலாக நான்கு reach-களுக்கும் தண்ணீர் கொடுத்தது. அதிலே, first preference, முதல் இரண்டு reach-களுக்கு; அதுவும் உங்களுக்குக் கொடுத்தோம். கிட்டத்தட்ட 170, 180 குளங்களுக்கு வந்திருக்கும், 1,200 ஏக்கர் பாசனத்திற்குக் கொடுத்தோம். இதுவும் போதவில்லையென்று, 80 அடிக்கு மேலே 5 அடி தண்ணீர் இருக்கிறது அதையும் திறந்துவிடுங்கள் என்று கேட்கிறீர்களே, என்ன நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. இதைத் திறந்தாலும் என்ன நடக்கப் போகிறது உங்களுக்கு? 6,000 ஏக்கர் பாசனத்திலே, standing crops இருக்கிறது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இதுகுறித்து நான், இன்றைக்கு மாலைக்குள் கலெக்டருடைய கருத்துருவைக் கேட்கிறேன். உள்ளபடியே தேவை என்று கருதினால், கலைஞருடைய அரசு, பயிர் வாடுவதற்கு அனுமதிக்காது. கலெக்டருடைய கருத்துரு கேட்ட பிறகு, மாலைக்குள் இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## (ஆ) புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) திரு. வேல்துரை, எல்லாம் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்தில் எந்தெந்தக் குடும்பங்களுக்குக் குடும்ப அட்டை இல்லையோ, அவர்கள் எல்லாம் மனு செய்தால், குடும்ப அட்டை வழங்கப்படும் என்று இந்த அவையிலேயே அறிவித்து, குடும்பக் கார்டு இல்லாதவர்கள் எல்லாம் இப்போது அதற்கான மனுக்களையெல்லாம் செய்து, அந்தக் கார்டுகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களிலே கார்டுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.



ஆனால், இன்றைய பத்திரிகையில், இப்போது இநதத்
துறையிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒரு கடிதம்
அனுப்பப்பட்டு, புதிதாக மனு செய்தவர்கள் யாருக்கும் ரேஷன் கார்டு
கொடுக்கத் தேவையில்லை என்றும், குடும்பத் தலைவர், பொதுவாக,
ஒரு அப்பா இருக்கிறார்; மகனுக்குத் திருமணம் ஆகியிருக்கிறது; அவன்
தனியாகப் போகிறான் என்று சொன்னால், அந்தப் பழைய குடும்ப
அட்டையிலிருந்து அவனுடைய பெயரை நீக்கி, புதிய
குடும்ப அட்டை அவனுக்கு மட்டுமே வழங்க வேண்டும்;
மற்றவர்களுக்கு வழங்கத் தேவையில்லை என்றும் ஓர் ஆணை
பிறப்பிக்கப்பட்டு, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும்
அனுப்பப்பட்டிருப்பதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது. அது
உண்மையா? புதிதாகக் கார்டு கேட்டு மனு செய்தவர்களுக்கு
வழங்கப்படுமா, இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் அவைக்கு
விளக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, துரும்பைத் தூணாக்குவதும், இல்லாததையும்
பொல்லாததையும் எழுதுவதையுமே பல பத்திரிகைகள் வாடிக்கையாக
வைத்துக்கொண்டிருக்கின்றன. நான்கூட படித்தேன், 'புதிய ரேஷன்
கார்டு விநியோகத்தில், அரசு திடீர் அதிரடி உத்தரவு' என்பதை.
அப்படியெல்லாம் ஓர் உத்தரவை இந்த அரசாங்கம் வழங்கவில்லை.
இந்த விநியோகக் கார்டு வழங்குவது என்பது, ஒரு தொடர்
நடவடிக்கை. திருமணம் ஆகிறது; வேறொரு குடும்பத்திற்குப்
போகிறார்கள்; மனு செய்கிறார்கள்; இப்படி ஒரு தொடர் நடவடிக்கை.
எனவே, தொடர்ந்து இந்த விநியோகக் கார்டு கொடுக்கப்படுகிறது.
ஆனால், களத் தணிக்கைக்குச் செல்கிறபோது—ஏனென்று
சொன்னால், அவசரக் கோலத்திலே அள்ளித் தெளித்ததைப்போல,
ஏற்கெனவே கிட்டத்தட்ட 39 இலட்சம் கார்டுகள், தவறான கார்டுகள்
உலவிக் கொண்டிருக்கின்றன; ஏற்கெனவே தொடர்ந்து அதைச்
சொல்லிக்கொண்டிருக்கிறேன்: அதற்கு வேண்டிய முயற்சிகளையும்,
நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம்; களத் தணிக்கை
செய்ய அதிகாரிகள் போகின்றபோது—கூட்டுக் குடும்பத்திலிருந்து
ஒருவர் பிரிந்து போகின்றார் என்று சொன்னால், அந்தக் கூட்டுக
குடும்பத்தைத் தணிக்கை செய்கிறபோது, அதிகாரிகள் deletion
certificate-ஐப் போடவேண்டும். அவ்வாறு deletion certificate

கொடுப்பதன் மூலமாக, புதிய கார்டு கொடுக்கப்படும். ஏற்கெனவே இருக்கின்ற கார்டுகள் பறிக்கப்படாது; அது தொடர்ந்து இருக்கும். இது அதிகாரிகளுக்கு வாய்மொழியாகச் சொல்லப்படுகின்ற ஒன்று. ஏதோ அரசாணை பிறப்பிப்பதாக அல்ல. அரசாங்கம் தொடர்ந்து இந்த நடவடிக்கையை எடுக்கும்; தொடர்ந்து கார்டுகளை வழங்கும். (குறுக்கீடு)

(முற்பகல் 10-50)

## (இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** Speaker Sir, ஒரு முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், ஜவ்வாது மலைப் பகுதி அடிவாரத்தில் அமைந்துள்ள கலசப்பாக்கம், போளூர், செங்கம் போன்ற பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக யானைகளுடைய அட்டகாசம் அதிகமாகி, அதன் காரணமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற வீரளூர் கிராமத்திலே இருக்கின்ற வேடியப்பன் மற்றும் சின்னசாமி ஆகியோரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டு, அவர்களுடைய பயிர்களும் சேதமடைந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்களா?

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** நேற்றே கொடுத்திருக்கிறேன். எனவே, அவர்களுடைய உயிருக்குப் பாதுகாப்பும், வனவிலங்குகள் தொடர்ந்து அந்தப் பகுதிகளிலே செய்து வருகின்ற அட்டகாசத்தைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கையை நீங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருக்குப் பதில் வந்திருக்கிறதா என்று பார்த்துவிட்டு, பிறகு எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் கொடுத்தது ஆய்விலே இருக்கிறது. உட்காருங்கள்.



# 4. விதி 110-ன்கீழ் அறிக்கை

## கொப்பரைத் தேங்காய்க்குக் கொள்முதல் விலை நிர்ணயம்—மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிக்க மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தேங்காய் உற்பத்தி அதிகரித்து, அதன் காரணமாகத் தேங்காயின் விலை குறைந்துள்ளதால், அரசு ஆதார விலைத் திட்டத்தின்கீழ், கொள்முதல் செய்யவேண்டுமென்று, தேங்காய் உற்பத்தியாளர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. கடந்த ஆண்டுகளில் தேங்காயின் விலை குறைந்தபொழுது, தேங்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில், மத்திய அரசு நிர்ணயித்துள்ள ஆதார விலையில், NAFED நிறுவனத்திடமிருந்து, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு வெளி வியாபாரிகள், ஒரு குவிண்டால் ரூ.3,000/- என்று கொப்பரையைக் கொள்முதல் செய்வதால், தென்னை விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. எனவே, தென்னை விவசாயிகளுடைய உணர்வை இந்த அரசு புரிந்துகொண்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு பருவ காலத்திற்கு, கொப்பரைக் கொள்முதல் விலையைக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3,620/- என மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. இந்த ஆண்டிலும், ஏற்கெனவே நடைமுறையிலுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி, குவிண்டால் ரூ.3,620/- விலையில் பட்டுக்கோட்டை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம் மற்றும் தாராபுரம் ஆகிய மையங்களில் கொப்பரையைக் கொள்முதல் செய்ய, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு அனுமதி வழங்க, அரசு முடிவு செய்துள்ளது. இதனால் தென்னை விவசாயிகளுக்கு, குவிண்டால் ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.620/- கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கைகள் அளித்தல், பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 2006-2007 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஒன்று முதல் முப்பத்து மூன்று வரையிலான மூன்று அறிக்கைகளை, குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

---

### (அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 34 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.151,93,50,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 87, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 168, டாக்டர் இஎஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 279, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1002, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1135, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1159, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 226, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2018, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2511, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1862, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3635, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2377, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2801, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3514, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3912, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4391, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4916, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10225, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4798, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை பேரூராட்சியில், கழிவுநீர் அகற்றும் வண்டி மிகவும் பழுதடைந்துள்ள காரணத்தால் புதியதாகக் கழிவு நீர் அகற்றும் லாரி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2079, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்தில் காவுத்தம்பாளையம் ஊராட்சியில் கூலபாளையம் குடியிருப்புப் பகுதிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2918, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிபாளையம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3000, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடிநீர் வழங்கல் துறைமூலம் ஏற்படுத்தப்பட்ட திட்டங்களைப் பராமரித்தலில் உள்ள குறைகளைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3380, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர் தொகுதியில் ஆற்காடு, ஆலந்தூர், கண்டாச்சிபுரம், மடவிளாகம், ஏலத்தூர், ஆலம்பாடி, வீரபாண்டி, அருமரை, முகையூர் ஆகிய கிராமங்களில் குடிநீர்த் தொட்டிகள் அமைத்து குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3374, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் பேரூராட்சியின் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தி வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2623, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட, இராமநாதபுரம், காட்டம்பட்டி, இம்பிடிபாளையம், வடக்குபாளையம் புதுக்காலனி, ஆச்சிபட்டி புதுக்காலனி, சுந்தாக்கவுண்டன் புதூர் காலனி ஆகிய பகுதிகளில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து அப்பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4076, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3325, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவையில் நடைபெறும் மாநகராட்சிப் பணிகள் சரிவர நடைபெறாதது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3271, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதி, இனாம் கரூர் நகராட்சியில் பழுதடைந்த குடிநீர்க் குழாய்களை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3228, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதி, கெலமங்கலம் ஒன்றியத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களின் குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3439, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி நகரம் வார்டு 1 முப்பதனூர் மற்றும் மேட்டுப்பட்டி ஆகிய இரு இடங்களில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3869, திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளாத்திகுளம் சிவலப்பேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 180 வழியோரக் கிராமங்களுக்கு வழங்கப்படும் குடிநீரைச் சீராக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4010, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகராட்சிப் பகுதிகளில் அதிகரித்துவரும் குடிநீர்க் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4114, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் இராஜாக்கமங்கலம் துறை மக்களுக்குப் புதிய குடிநீர்த் திட்டம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3991, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் நகராட்சி மக்களுக்காக ஏற்கெனவே மாநகரிலிருந்து 10,00,000 லிட்டர் குடிநீர் அளிக்க அனுமதி பெற்றுள்ளது. விரைவில் இவ்விரு நகராட்சிகளுக்குக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4200, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை பேரூராட்சிக்குக் கூடுதலாக இரண்டாம் குடிநீர்த் திட்டம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4331, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ள ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4124, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி நகராட்சிக்கு அறிவிக்கப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு செய்து, பணிகளைத் தொடங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4690, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம், சோமனூர், வாகிராயம்பாளையம், சூலூர், புளியம்பட்டி,



கணியூர் ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4410, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவிநாசி தொகுதியில் குட்டகம், புளிப்பார், மங்கரசு வலையபாளையம், தத்தனூர் ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4445, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி நகராட்சியில் செயல்பட்டுவரும் சீவலப்பேரி குடிநீர்த் திட்டத்தால் பயன்பெறும் மக்கள் தொகை அதிகமாகி வருவதைக் கணக்கில்கொண்டு மூன்றாவது பைப்லைன் திட்டத்தை ஏற்றுச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4498, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் நகராட்சியிலுள்ள பூங்காவினைப் பராமரித்துச் சீர்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4726, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பேரூராட்சி, வல்லூர் ஊராட்சி, அத்திப்பட்டு ஊராட்சி, நந்தியம்பாக்கம் ஊராட்சி, சப்பாக்கம், மவுத்தம்பேடு, அத்திப்பட்டு புதுநகர் இந்தப் பகுதிகளில் குடிநீர் உப்புத் தன்மையாகிவிட்டதால், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4758, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் ராகவன் வாய்க்காலிலிருந்து பிரிந்து செல்லும் கழிவு நீர் வாய்க்கால் இட ஆக்கிரமிப்பால் தூர்ந்து போய்விட்டது. எனவே, கழிவு நீர் வாய்க்காலைத் தூர் வாரி சரிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3475, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி நகரத்திற்கு புளியங்குடி குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தி, குடிநீர் குறைவின்றி சீராகக் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4131, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் தொகுதி, மேலத்திருச்செந்தூர் ஊராட்சி, தளவாய்புரம் ஆதி திராவிடக் காலனியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1656, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகராட்சி, பயணியர் மாளிகை இடிந்துபோய் உள்ளதால், அங்கு Shopping Complex மற்றும் கூடுதல் நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2422, திரு. வே. மாரிமுத்து. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1795, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறையாக உள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2442, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, கக்கரை ஊராட்சியில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கிட, ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2736, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலை, நம்பம்பட்டி, ராசாளிபட்டி, தேன்கனியூர், பொய்யாமணி, கசவனூர், கொடும்பாளூர், தென்னம்பாடி, அகரப்பட்டி, பாம்பூர், பூதகுடி ஊராட்சிகளுக்கு இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2688, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3127, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம்

தொகுதி, மேல்வில்வராய நல்லூர் ஊராட்சியில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 458, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், குழித்துறை நகராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்ட சுத்திகரிப்பு நிலையப் பணிகளை வேகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1337, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை உடனடியாகத் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1398, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் பேருந்து நிலையத்தை சரபங்கா ஆறு வரை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1738, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியில் உள்ள புள்ளிச்சப்பள்ளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், தேர்குளம், கொந்தமூர், தென்கோடிபாக்கம் என்ற இந்த மூன்று கிராமங்களுக்குச் சில மாதங்களாகக் குடிநீர் நிறுத்தி வைக்கப்பட்டதை மீண்டும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1645, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி தொகுதி, பொன்னம்பட்டி பேரூராட்சியில் காவிரி குடிநீர்த் திட்டத்தின்கீழ் புதிய நீர்நிலைத் தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1387. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி அல்லிநகரம் நகராட்சி, சின்னமனூர் நகராட்சிப் பகுதிகளில் உள்ள தார்ச் சாலைகளைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1423. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1503. செல்வி கே. பாலபாரதி.



**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் நகரின் குடிநீர்த் திட்டங்களை முறைப்படுத்தி, மீட்டர் அளவுக் கருவி பொருத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1772. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி நகராட்சியில் நிரந்தரமாகக் குடிநீர்ப் பிரச்சினையை நீக்கும் வகையில் திருப்பாற்கடல் குடிநீர்த் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9437. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதி, இராசபாளையம் நகராட்சி, மலையரப்பட்டி பகுதியில் தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 636, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகர எல்லையை விஸ்தரிக்க அதாவது கிழக்கே மடவாளம்-வெங்களபுரம், மேற்கே கசிநாயக்கன்பட்டி, திருப்பத்தூர் கிராம ஊராட்சி, T.N.H.B.-I.II., வடக்கே பாச்சல் ஊராட்சி, தெற்கே ஆதியூர் ஊராட்சி ஆகியவற்றைத் திருப்பத்தூர் நகராட்சியுடன் இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 564, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகர அமைப்புகளுக்கான தேர்தலுக்கு மாநிலத்தை அடிப்படை அலகாகக்கொள்ளும் (Basic Unit) முறையை மாற்றி, மாவட்டத்தை அடிப்படை அலகாகக்கொள்ள சட்டத் திருத்தம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 596, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில் ஒன்றியம், கீழவீரசிகாமணி ஊராட்சி, வல்லராமபுரம் வடக்குப் பகுதியில் 60,000



லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 743, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகராட்சி நிருவாகத்தில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 848, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சியில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 812, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, அருமனை பேருந்து நிலையம், குலசேகரம்-தும்பக்கோடு பேருந்து நிலையங்களைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 867, திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீரங்கம் தொகுதி, மணிகண்டம் ஒன்றியத்தில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 890, திரு. ஆர்.எம். பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1215, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சிப் பகுதியில், நான்கு சக்கர வண்டிகள் நிறுத்துமிடம், பூக்கடைகள், சலவைக் கூடங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1279, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4857, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4973, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவைகுண்டம் தொகுதிக்குட்பட்ட குமாரகிரி (புதுக்கோட்டை), கூட்டுடன்காடு, அல்லிக்குளம் மற்றும் சேர்வைக்காரன் மடம் ஆகிய கிராமப் பஞ்சாயத்துகளுக்கு வல்லநாடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5522, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகத்தில் நிறைய இடங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதால், நிறைய குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் கிணறுகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3147, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1924, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2198, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, 8, 9-வது வார்டுகளில் சாலை வசதி ஏற்படுத்தித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3659, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3662, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் புதிதாக ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4233, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதியில் உள்ள ஒழலூர் பழவேலி, மேலமையூர், ஆலப்பாக்கம், வல்லம், திருவடிசூலம், பெரியநத்தம், குன்னவாக்கம், அஞ்சூர், பட்ரவாக்கம் ஆகிய ஊராட்சிகளுக்குத் தனியாகக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2294, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4050, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

முற்பகல் 11-00

## (ஆ) கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42 - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 2,664,26,48,000/-, மூலதனக் கணக்கில் ரூ. 806,10,18,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 97, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 169, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 269, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1021, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1140, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1167, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1858, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3144, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3613, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1982, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2015, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2892, திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3489, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3781, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3962, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4381, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4126, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3384, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர் தொகுதியில் உள்ள வீரபாண்டி, மணலூர்பேட்டை பேரூராட்சி, அரகண்டநல்லூர் பேரூராட்சி, கண்டாச்சிபுரம், ஆற்காடு ஆய்ந்தூர், பனமலைப்பேட்டை, முகையூர், ஆலம்பாடி ஆகிய கிராமங்களுக்கு High Mast மின் விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3302, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், மேலப்பாளையம், சணப்பிரட்டி, கருப்பம்பாளையம் கோயம்பள்ளி, ஆகிய ஊராட்சிகளில் புதிய சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3368, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து ஊராட்சிகளிலும் குடிநீர் மற்றும் தெரு விளக்குகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3348, திரு. எஸ். ஜான் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜான் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள மின்சாரத் தெரு விளக்குகள் மற்றும் குடிநீர்ப் பம்புகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2919, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதியில் உள்ள வழியோரா கிராமங்களுக்கு நல்ல குடிநீர் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3102, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2744, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், குன்னத்தூர் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி பூதகுடி ஊராட்சி, சாரணக்குடி ஆகிய இடங்களிலுள்ள பழைய தொகுப்பு வீடுகளுக்குப் பதில், புதிய தொகுப்பு வீடுகள் கட்ட



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3263, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காவேரிப்பட்டணம் தொகுதி, காவேரிப்பட்டணம் ஒன்றியத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களில் உள்ள கைப் பம்புகளைச் சரிசெய்தல் மற்றும் புதிய கைப் பம்புகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3189, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றியத்தில் ஆடுதுறை-திருப்பனந்தாள் சாலை பழுதடைந்துள்ளதைச் சீர் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3194, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில், பாடியநல்லூர் ஊராட்சியில் கழிவு நீர்க் கால்வாய், பாதாளச் சாக்கடை அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3473, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் மற்றும் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4176, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் உலர்களம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3433, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப் பகுதியில் உள்ள அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளிலும் மகளிர் சுகாதார வளாகம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3567, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடிநீர் மற்றும் தெரு விளக்குக் கட்டணங்களை, பல ஊராட்சிகள், பேரூராட்சிகள் செலுத்த இயலாத நிலையில் உள்ளதால், அதனை அரசே கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3901, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் தொகுதியில் சுய உதவிக் குழுக்களுக்கு வணிக வளாகம் கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4793, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு நிதி உதவி மற்றும் கூட்டம் நடத்துவதற்குக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1581, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களைப் பராமரிக்க, போதிய அலுவலர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4808, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கவரப்பட்டு ஊராட்சி, அம்பிகாபுரம் கிராமத்தில் வசிக்கும் மக்கள் கவரப்பட்டு செல்வதற்கு வழியில்லாமல் சிரமப்படுகிறார்கள். ஆகவே, கவரப்பட்டு அம்பிகாபுரம் இணைப்புச் சாலை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4997, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4418, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் உள்ள ஊராட்சிகளில் குறிப்பாக வருவாய் அதிகமுள்ள ஊராட்சிகளில் Site Approved தடையின்மைச் சான்றுகள் வழங்கும்போது அரசு விதிகளைச் சரிவரப் பின்பற்றாமல் N.O.C. வழங்குகிறார்கள். இதனால் போதிய மைதான வசதி, குடிநீர்த் தொட்டி, சாலை அளவுகள் இல்லாததால் குடியேறுவோர் பாதிக்கப்படுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1509, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராம ஊராட்சிகளின் மின் கட்டணத்தை அரசு செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1446, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோட்டூர் ஒன்றியம், ஆதிச்சபுரம் கிராமத்திற்குச் செல்லும் மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1768, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியில் உள்ள கடம்பத்தூர், திருவாலங்காடு, திருத்தணி ஆகிய ஒன்றியங்களில் சிறு பாலங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1736, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் மற்றும் கோட்டக்குப்பம் பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 562, திரு. து. ரவிக்குமார்.



**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டத்தைச் சட்டமன்ற உறுப்பினரின் மேற்பார்வையின்கீழ் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 459, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்திலுள்ள கிராம ஊராட்சிகளின் தெரு விளக்குகளைப் பராமரிக்க, தனி ஊழியர்களை நியமனம் செய்ய ஆணை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 640, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பல இடங்களில் அடிக் குழாய்கள் வேலை செய்யாமல் உள்ளதை மராமத்துச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9552, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஒன்றியம் மினிக்கியூர் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1800, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேரூரில் பாதாளச் சாக்கடை புதிதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்சசி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 768, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சொந்தக் கட்டடம் இல்லாத பஞ்சாயத்து அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்களும், பழுதடைந்துள்ள கட்டடங்களைச் சீர் செய்யவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 816, திருமதி ரா. லீமா ரோஸ்.



**திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 849, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியிலுள்ள வத்திராயிருப்பு ஒன்றியத்திற்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுககப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 893, திரு. ஆர்.எம். பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4064, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4435, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி, குமரரெட்டியாபுரம் கிராமத்தில் நல்ல தண்ணீர் இல்லாததால் அருகில் உள்ள முத்தலாபுரம் வைப்பாற்றில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, பைப்லைன்மூலமாக குமரரெட்டியாபுரம் கிராமத்திற்குக் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4618, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வேப்பூர் மற்றும் ஆலத்தூர் ஒன்றியங்களில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4687, திரு செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுவாழ்வுத் திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவை பல்லடம், சூலூருக்கு ஒதுக்கப்பட்டவை, தற்போது குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டதால், மீண்டும் பல்லடம், சூலூர் பகுதிக்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4486, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள அனைத்துச் சுடுகாடுகளுக்கும் சாலை வசதி, தண்ணீர் வசதி, மின் விளக்கு வசதி



அமைத்துத் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3883, திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்நாட்டுக்குறிச்சி கிராமத்திலிருந்து மாசார்பட்டி கிராமம் வரை புதிய சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4008, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கான மின் கட்டணத்தை அரசே மானியமாகச் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4160, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் தொகுதியில் செம்மறிக்குளம் ஊராட்சி, சத்யா நகரில் சமுதாய நலக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2785, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கயத்தாறு ஒன்றியத்தில் உள்ள கழுகுமலை, வெங்கடாசலபுரம், கொப்பம்பட்டி, புதூர், அய்யனார் ஊத்து மற்றும் பல கிராமங்களில் கூட்டுக் குடிநீர் சரியாகக் கிடைப்பதில்லை. ஆகையால், சீரான முறையில் அப்பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1121, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை,

வெட்டுத் தீர்மானம் எண் 2632, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட வடக்குப்பாளையம், புதிய ஆதி திராவிடர் காலனி, சுந்தரகவுண்டனூர் புதிய காலனி ஆகிய பகுதிகளில் புதியதாகத் தெரு விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2363, திரு. கே.எல். இளவழகன்.



**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, திமிரி ஒன்றியம், ஆணைமல்லூர் ஆதி திராவிடர் காலனியில் ஒரு குடிநீர் மேனிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வழிவகை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1900, திரு. ஆ. அருண்மொழிதேவன். இடம் மாறி ஏன் உட்கார்ந்தீர்கள்? உங்கள் இருக்கையில் உட்காருங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பகுதியை மையமாக வைத்து புதிய ஒன்றியம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2057, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, கூனம்பட்டி பேரூராட்சி, கைக்கோளப்பாளையம் ஓடைக்காடு அரிசனக் காலனிப் பொது மக்களுக்குக் கழிப்பிட வசதிகள் அமைத்து போர்வெல் வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1919, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2090, திரு. ஏ.கே. போஸ்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதியிலுள்ள பஞ்சாயத்து ரோடுகள் மிகவும் மோசமாக உள்ளபடியால் அவற்றைச் சீர்செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2178, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியத்தில் ஒரு மகளிர் சுகாதார வளாகம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1714, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதியில் அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள சாலைகளைத் தார்ச் சாலைகளாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1672, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதியில் செங்காநத்தம் மலையிலிருந்து பாலமதிக்கு இணைப்புச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 219, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கணினி வழங்கும் நிலையில், கணினி இயக்குபவர் (Computer Operator) நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1283, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1209, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், மானூத்து ஊராட்சியில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தகுதியின் அடிப்படையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4230, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் உட்பட்ட குளங்கள், நன்னீர்க் குட்டைகள் தூர் வாரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4256, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாளையார்கோவில் ஒன்றிய அலுவலகக் கட்டடத்தைப் புதிதாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4321, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் காலியாக உள்ள பணி இடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4577, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் சத்துணவுக் கூடங்களுக்கு அரசு புதிதாகக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 227567 Chennai-600 008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2121. திரு. வே. மாரிமுத்து, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2461, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதியில் உள்ள கன்னுகுடி மேற்கு ஊராட்சிக்கு ஒரு சமுதாயக் கூடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,664,26,48,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,18,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக, ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை[@] நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

(@) 383 முதல் 363 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.



## 7. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர்களுக்கு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய புத்தகங்கள் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய புத்தகங்கள், பேரவைச் செயலக நூலகப் பிரிவு 2-ன்மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட உள்ளன. அவற்றை உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கும் அஞ்சாத உறுதி கொண்ட அரிமா மங்கை, துணிவின் தலைமையகம், கேடு விளைவிப்பவர்களுக்குப் புயலாக, நாடி வருகிற நல்லவர்களுக்குத் தென்றலாக, பசித்து வருபவர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் அன்னையாக, பகைவர்களுக்கெல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 நிமிடங்கள்தான் உங்களுக்கு.

**திரு. ஆர். சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் mike-ஐ மட்டும் off பண்ணாமல் இருங்கள்; 15 நிமிடங்கள் போதும். பசித்து வருபவர்களுக்கு அறுசுவை விருந்து வழங்கும் அன்னையாக, பகை கொண்டோருக்கு எரிமலையாக, நல்லாட்சி தந்த நற்செயல் நாயகி, எங்களுடைய உயிரின் மேலான எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வணங்குவதோடு மட்டுமல்லாமல், நடந்து முடிந்த 13-வது சட்டமன்றத் தேர்தலில், கடந்த தேர்தலைவிட அதிகமாக வாக்களித்து என்னை வெற்றிபெறச் செய்த மேலூர் தொகுதி வாக்காளப்

பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நான் இந்த உள்ளாட்சித் துறையினுடைய மானியக் கோரிக்கைமீது விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சியிலே இருக்கின்ற கிராமப்புறங்கள் வளர்ந்தால்தான் நாடு வளர்ச்சி அடைய முடியும் என்பதற்காக, எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதலமைச்சராக இருந்த முந்தைய ஆண்டில், உள்ளாட்சிகளுக்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து, நாட்டிலே கிராமப்புற மக்கள் வளர்ச்சி அடைவதற்காக, 2001 முதல் 2006 வரை இருந்த மாண்புமிகு அம்மா அவர்கள், அந்த மக்கள் வளர்ச்சி அடைவதற்காக, ஊரக வளர்ச்சிக்கு மட்டும் 9,279 கோடியே 31 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கிக் கொடுத்து, ஊரக வளர்ச்சித் துறையை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஊரகப் பகுதிகளில் இருக்கின்ற அனைவரும் குடிதண்ணீர், நல்ல தண்ணீர் குடிப்பதற்காக, 3,000 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்து, குடிதண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் தமிழ்நாடு முழுவதும் அம்மா அவர்கள், கடந்த ஐந்து ஆண்டுக் காலத்திலே நல்லாட்சியை நடத்தி, மக்களுக்குத் தண்ணீரை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், அம்மாவினுடைய ஐந்து ஆண்டுக் கால ஆட்சியிலே, நகர்ப்புறத்திலே வாழ்கின்றவர்கள்போல், கிராமப்புறத்திலே இருக்கிற மக்களும் வாழ வேண்டும் என்பதற்காக, பெண்கள் சுகாதாரமாக வாழ வேண்டும் என்பதற்காக, எந்தவொரு முதலமைச்சரும் செய்யாத திட்டத்தை அம்மா அவர்கள் செய்தார்கள். கிராமப்புறத்திலே இருக்கின்ற அனைத்து ஊராட்சிகளிலும், மகளிர்க்குச் சுகாதார வளாகங்களைக் கட்டிக் கொடுத்து, அவற்றிலே குளியல் வசதியோடு, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற அனைத்து ஊராட்சிகளிலும் கட்டிக் கொடுத்தார்கள்.

*முற்பகல் 11-10*

அதுமட்டுமல்லாமல், பெண்கள் வேலை பார்த்துவிட்டு, இரவு நேரங்களில் வீட்டிற்கு வந்து தண்ணீர் தேவைப்படுகின்ற வேளையில், அடிக் குழாயிலே தண்ணீர் அடிக்கின்றபோது, மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று அம்மா அவர்களுக்குத் தெரிந்த பிறகு-- பெண்கள் கூலி வேலை செய்துவிட்டு வந்து, அங்கே வேலை பார்ப்பது



மட்டுமல்லாமல், இங்கேயும் வந்து அடிக் குழாயிலே தண்ணீர் அடிக்க முடியாமல் சிரமப்படுகிறார்கள் என்று அம்மா அவர்களுக்குத் தெரிந்ததற்குப் பிறகு—அனைத்துக் கிராமங்களிலும் Mini Power Motor அமைத்துக் கொடுத்து, பெண்களைச் சிரமம் இல்லாமல் வாழ்க்கை வாழ வைத்தவர், எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கிராம நிர்வாக அலுவலர்கள், அதாவது V.A.O. என்று சொல்லக்கூடியவர்கள், கடந்த காலங்களில் இருப்பதற்கு இடம் இல்லாமல் வருவார்கள்; ஒரு கடையிலே உட்கார்ந்து இருப்பார்கள். அடுத்த சிறிது நேரத்தில் வேறு இடத்திற்குப் போய் விடுவார்கள். அந்தக் கிராம மக்கள், certificate வாங்குவதற்கு அவர்களைத் தேடித் தேடி அலைய வேண்டிய அவல நிலை இருந்தது. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே, கிராம நிர்வாக அலுவலர்களைப் பொதுமக்கள் தேடி அலையக்கூடாது; ஒரே இடத்திலே சென்று சான்றிதழ் வாங்கவேண்டும் என்பதற்காக, அனைத்துக் கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், கட்டடங்களைக் கட்டிக் கொடுத்து, அதே இடத்திலே இருக்க வைத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துக் கிராமங்களுக்கும், அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தார்கள். தமிழ்நாட்டிலே 13,928 கதிர் அறுக்கும் களங்களை விவசாயிகளுக்கு அம்மா அவர்கள் கட்டிக் கொடுத்தார்கள். 12,974 மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்களை எங்களுடைய அம்மா அவர்கள் கட்டிக் கொடுத்து, மகளிரை மேம்படுத்தினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; கடந்த எங்களது அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, ஊராட்சிகள், உள்ளாட்சிகளுக்குப் பாகுபாடு இன்றி, எந்தக் கட்சிக்காரர்கள் என்று பார்க்காமல், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கும் சமமாக நிதியைப் பிரித்துக் கொடுத்து, நல்லாட்சி நடத்தினார்கள் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து, சென்னையிலே குடிதண்ணீர்ப் பிரச்சினையை யாராலும் தீர்க்க முடியவில்லை. சிங்காரச் சென்னை என்று சொன்னீர்கள்; ஆனால், குடிதண்ணீரை

நீங்கள் கொடுத்தது கிடையாது. சென்னையில் இருக்கின்ற பெண்கள், இரவு நேரங்களில் தூங்கியது கிடையாது. தண்ணீருக்காகத்தான் குடத்தோடு அலைந்து கொண்டிருந்தார்கள். ஆனால், கடந்த ஆட்சியிலே எங்கள் அம்மா முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே, யாரும் செய்யாத திட்டத்திற்கு, புதிய வீராணம் திட்டம் என்று சொல்லி, ரூ.720 கோடி ஒதுக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தைக்கூட கிண்டல் செய்து பேசினீர்கள். தண்ணீர் வராது, வராது என்று சொன்னீர்கள். அம்மா சட்டசபையில் சொன்னார்கள்; வரும், வரும், குடிப்பீர்கள் என்று சொன்னார்கள். ஆனால், (குறுக்கீடுகள்) அநதத் தண்ணீர்... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். அமைச்சருக்கு நன்றாகப் பதில் சொல்லத் தெரியும். மற்ற உறுப்பினர்களை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இது முக்கியமான பிரச்சினை. இதை இல்லை என்று யாரும் மறுக்க முடியாது. புதிய வீராணம் திட்டம் என்பது புரட்சித் தலைவி அம்மாவினுடைய எண்ணத்தில் உதித்த திட்டம்தான்; இன்றைக்குச் சென்னை மக்கள் நிம்மதியாகத் தண்ணீர் குடித்துக்கொண்டு இருக்கின்றார்கள். நாம் குடிப்பது அனைத்துமே, அங்கிருந்து கொண்டுவருகின்ற தண்ணீர்தான்; நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் முதற்கொண்டு அதைக் குடித்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை மக்களுடைய தாகத்தைத் தீர்த்த ஒரே தலைவி, புரட்சித் தலைவி அம்மா என்பதைத் தெரிவித்துக்கெள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, எதைக் கேட்டாலும் எந்தத் திட்டங்களைக் கேட்டாலும் செய்து கொடுத்தார்கள். ஆனால், இப்போது இருக்கின்ற ** எதைக் கேட்டாலும், அதை (குறுக்கீடுகள்) அதுதான் நேராக வெளியே வா பார்ப்போம். (குறுக்கீடுகள்) மிரட்டுவது எல்லாம் வெளியே பார்த்துக்கொள்ளலாம். இங்கே எதுவும் வேண்டாம். எங்கள் அம்மாவினுடைய ஆட்சியிலே எதைக் கேட்டாலும் செய்துக் கொடுத்தோம். ஆனால், ** அரசிலே நாங்கள் கேட்டோம், போன சட்டமன்றக் கூட்டத்தொடரிலே, ரேஷன் கடைகளைப் புதியதாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கேட்டோம். உடனே இங்கு இருக்கின்ற கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எழுந்து பதில் சொன்னார்கள். "எங்கள் தலைவர், உடனே உத்தரவு போட்டு இருக்கின்றார். உடனடியாக எழுதிக் கொடுத்தால் ரேஷன் கடையைப் பிரித்துக் கொடுப்போம்" என்று போன வருடம், 10 மாதங்களுக்கு முன்பாகச் சொன்னார்கள். இதுவரை ஒரு ரேஷன் கடையைக்கூட நீங்கள் பிரித்துக் கொடுத்தது கிடையாது என்பதைக் குற்றச்சாட்டாகச் சொல்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், போக்குவரத்துத் துறை அமைச்சர்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற ஆட்சியிலே இரண்டு கிலோ மீட்டர் தூரம் வரையில், 200 கார்டுகள் என்று இருந்தன. நம்முடைய சுற்றுச்சூழல் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. மைதீன்கான் அவர்களுடைய தொகுதியிலே, 193 கார்டுகள், 2 கிலோ மீட்டர் சுற்றளவில் என்று இருந்தன. அவர் ஐந்து ஆண்டுக் காலமாக மனு கொடுத்துக் கொடுத்து, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, மனு கொடுத்துக் கொடுத்து, ஐந்தாண்டுக் காலமாக அது வரவேயில்லை. அதை நாங்கள் முதலமைச்சரிடத்திலே சொன்னோம். இப்படி ஏழு காணியிலேகூட பிரச்சினை இருக்கிறது என்று முதலமைச்சரிடத்திலே சொன்னபோதுதான், 1½ கிலோ மீட்டர் தூரம் இருந்தால் போதும்; 150 கார்டுகள் இருந்தால் போதும்; தாய்க் கடையிலே 500 கார்டுகள் இருக்க வேண்டுமென்று தலைவர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதற்கான ஆணை, அரசுத் துறையின் சார்பாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, 150 கார்டுகளும் 1½ கிலோ மீட்டர் தூரமும் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரே ஆணை பிறப்பிக்கலாம். அப்படி ஏதாவது நீங்கள் கொடுத்திருந்தும் ஆணை பிறப்பிக்கப்படவில்லை என என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், உடனே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை சொல்லி, (குறுக்கீடு) அது உடனே வழங்கப்படும்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன clarification உங்களுக்கு இருக்கிறது? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர் ஒரு கடைகூட கொடுக்கவில்லை என்று சொன்னார். நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், என்னுடைய தொகுதியில் 2 கடைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 2 கடைகள் குறித்து ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர் பேசுகின்ற timeதான் குறையும். இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது 150 கார்டுகள் இருந்தால் போதும்; 1½ கிலோ மீட்டரிலே வழங்கப்படும் என்று சொன்னார்கள். இந்தப் பகுதியிலே இருக்கிற எங்களுக்கு, சர்க்க்ரை என்று எழுதி வைத்தால்மட்டும் போதாது; நக்கினால் இனிக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருக்குத் தெரியாது. ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக அவர் இங்கே வரவில்லை. திரு. செங்கோட்டையனுக்கு seat கொடுக்கப்படவில்லை; அதனால் வரவில்லை. அதனால் அவருக்குத் தெரியாது. என்ன நடந்தது என்று அவருக்குத் தெரியாது. ஆனால், அப்படி ஒரு மனு செங்கோட்டையன் என்னிடத்திலே கொடுத்தாரா? அது சர்க்கரையா, இல்லையா என்று பார்ப்பதற்கு, நக்கிப் பார்ப்பதற்கு, அவர் என்னிடத்திலே ஏதாவது கொடுத்தாரா? அது சர்க்கரையா என்று தெரியாமல், செக்கு எது என்றும் சிவலிங்கம் எது என்றும் தெரியாமல் அப்படிப் பேசிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். சாமி, சுருக்கமாகப் பேச்சை முடியுங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு மனு கொடுக்கவில்லை என்று சொல்லி எங்களுடைய கொறடாவைக் கேட்கிறார். நாங்கள் உங்களுடைய செகரட்டரியைப் பார்த்து நேரடியாக மனு கொடுத்தோம்; போக்குவரத்துத் துறை செகரட்டரியைப் பார்த்து பஸ் வேண்டுமென்று மனு கொடுத்தோம்;



P.W.D செகரட்டரியைப் பார்த்து மனு கொடுத்தோம்; கூட்டுறவுத் துறை செகரட்டரியைப் பார்த்து மனு கொடுத்தோம்; இதுவரை அந்த லெட்டர்களுக்கு ஒரு வருடம் ஆகியும், எங்களுக்கு ஒரு பதில்கூட வந்தது கிடையாது. நீங்கள் சொல்கின்றீர்கள்; பஸ் விட்டோம், ரேஷன் கடை கொடுத்தோம் என்று சொல்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆமாம்; பஸ் விட்டோம், ரோடு போட்டோம், கடை கொடுத்தோம் என்று சொல்கிறீர்கள். நிச்சயமாக அப்படியென்றால், நாங்கள் கேட்பதெல்லாம், நீங்கள் இந்தத் திட்டங்களைச் செய்தது உண்மையாக இருந்தால், உங்களுக்குமட்டும் செய்து கொண்டு, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் செய்யாமல் இருக்கிறீர்களா என்று நான் கேட்கின்றேன். எங்கே செய்தீர்கள்? செய்து இருந்தால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, நடப்பது உள்ளாட்சித் துறை மானியம். அதுசம்பந்தமாகப் பேசுங்கள். சப்ஜெட்டுக்கு உள்ளே போகாமல், எங்கேயோ சுற்றி வளைத்துப் பேசுகிறீர்கள். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு 7,000 கோடி கடன் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதன் பலனை அதிகமாக அனுபவித்தது யார் என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டசபையில் நாங்கள் கேட்டதற்கு எல்லா அமைச்சர்களும் செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால், நாங்கள் போய் எல்லாத் துறைகளினுடைய செயலாளர்களைச் சந்தித்துக் கடிதம் கொடுத்தால்கூட, இதுவரை எங்களுடைய எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு காரியம்கூட, அது எங்களுக்குக் கிடையாது —அதாவது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எங்களுக்குக் கிடையாது—நாங்கள் கேட்கின்ற கோரிக்கையை ஏற்று, அந்தப் பொதுமக்களுக்காக ஒரு காரியம்கூட செய்து கொடுத்தது கிடையாது என்பதை ** குற்றச்சாட்டாகச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்பது எல்லாம, (குறுக்கீடு) தமிழ்நாட்டிலே இருக்கின்ற 12,618 ஊராட்சிகளும்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, உங்களுக்குப் போதிய நேரம் கொடுக்கப்பட்டுவிட்டது. மேலும் extension கிடையாது. சொல்லிவிட்டேன்.

**திரு. ஆர். சாமி:** போதிய வருவாய் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே கரண்ட் பில் கட்டுவதற்கு வசதி இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலையில், உங்களுடைய கடந்தகால நிதிநிலை அறிக்கையிலே, மேலும் 15 இலட்சம் ரூபாய், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலேயிருந்து லைட்டுக்காகக் கொடுக்கச் சொல்லி, ஒதுக்கினீர்கள். இப்போது எல்லாப் பஞ்சாயத்துகளிலும் கரண்ட் பில் கட்டுவதற்குப் பணம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திற்கு வெளியில், இந்த ஆட்சியை எப்படி வேண்டுமானாலும் விமர்சிக்கலாம். அதைப்பற்றி எங்களுக்குக் கவலையும் இல்லை. ஆனால், இந்த மன்றத்தில் இந்த ஆட்சியை ஒரு ** என்று அவர் சொல்வது எந்தவகையில் ஏற்புடையதக்கது? இது ** என்று சொன்னால் தைரியம் இருந்தால், எங்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து, இந்த ஆட்சியைத் தோற்கடிக்கப் பார்க்கட்டும்! (மேசையைத் தட்டும் ஒலி) வெளியில் ஆயிரம் இருக்கட்டும்; இந்த மன்றத்தில் நாங்கள் முழுப் பலத்தோடு இருக்கிறோம்; எங்கள் தோழமைக் கட்சியினுடைய வளத்தோடு இருக்கிறோம்; இவர்களுடைய கூற்றுக்களை எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, அருள்கூர்ந்து, அவர் ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய உரையில், மைனாரிட்டி அரசு என்று சொன்ன அனைத்தும் நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இது ஜனநாயக ரீதியாக நடக்கக்கூடிய சட்டமன்றம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மெஜாரிட்டி இருக்கிறவர்கள்தான் ஆட்சியில் இருக்கிறார்கள். கூட்டணிக் கட்சிகள் எல்லாம் சேர்ந்துதான் இருக்கிறார்கள். திரும்ப எதற்கு மைனாரிட்டி என்று சொல்கிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) செங்கோட்டையன், என்ன? சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டம் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் கருத்து சொல்கிறபோது, ** என்று சொன்னார். 96 பேர்களை வைத்துக்கொண்டிருக்கிற அரசு, தமிழகத்தில் ** என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள், முறைப்படி அழைப்பு விடுத்ததன் பிறகுதான், இந்த அமைச்சரவை பதவி ஏற்றிருக்கிறது. இந்த அடிப்படைத் தத்துவம்கூட தெரியாமல் இதைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதுமட்டுமல்ல; நீங்கள் மைனாரிட்டி என்று அழைப்பதால் எங்களுக்கு வருத்தம் இல்லை. உங்களுக்கு அரிப்பு ஏற்படுகின்றபோதெல்லாம், நீங்கள் மைனாரிட்டி என்று அழைக்கிறீர்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாண்டுரங்கன் பேசுகிறபோது, 'நீங்கள் எத்தனை வாக்குகளிலே வெற்றி பெற்று வந்தீர்கள்' என்று கிண்டல் அடித்தார் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். இன்றைக்கு 96 பேர்களை வைத்துக் கொண்டிருப்பவர்களை ** அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சொன்னால், அது நியாயம்தானா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன், மைனாரிட்டி என்று அழைப்பதால் எங்களுக்கொன்றும் வருத்தம் இல்லை. உங்களுக்கு எப்போதெல்லாம் அரிப்பு ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் மைனாரிட்டி என்று அழைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசை மைனாரிட்டி அரசு என்று திரும்பத் திரும்ப எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் ஒரு அரசை மைனாரிட்டி அரசு என்று சொல்லும்போது, அந்த அரசைத் தோற்கடிக்க முடியாதவர்களாக இருந்தால், அவர்களுக்கு என்ன பெயர் என்று நான் கேட்க விரும்புகிறேன். மைனாரிட்டி அரசைத் தோற்கடிக்க முடியாத ஒரு கட்சி, எதிர்க்கட்சி என்று சொல்கிற அந்தத் தகுதியைக்கூட பெற்றிருக்கிறதா என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; சட்டமன்றத்திற்குள் விவாதம் நடைபெறுகிறபோது, சட்டமன்ற மரபுக்கு உட்பட்டுத்தான் கண்டிக்க வேண்டும். சட்டமன்ற முறைப்படி மெஜாரிட்டியாக இருக்கிற ஒரு கட்சி ஆட்சி நடத்துகிறபோது, அந்த அவையிலே உள்ளவர்கள் அந்த மெஜாரிட்டியினுடைய ஆதரவைப் பெற்றிருக்கிற கட்சியை மைனாரிட்டி என்று சொல்வதற்கு அர்த்தம் இருக்கிறதா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் தீர்மானிக்க வேண்டும். அர்த்தம் இல்லாத வார்த்தைகளைச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைனாரிட்டி அரசு என்கிற அனைத்து வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. உறுப்பினர் ஆர். சாமி, நீங்கள் சப்ஜெக்டுக்குள் வாருங்கள். மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, உட்காருங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழையெளிய மக்களைச் சுரண்டிக் கொண்டிருக்கும் கேபிள் டி.வி. கட்டணத்தை அரசே ஏற்றுக்கொள்ளுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) நாங்கள் பேசினால் உங்களுக்கென்ன சிரமமாக இருக்கிறதா? நீங்கள் பேசும்போது சொல்லுங்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, டைம் ஆகிவிட்டது.

முற்பகல் 11-25

**திரு. ஆர். சாமி:** 2006-2007 ஆம் ஆண்டுக்கான உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்றபோது, உள்ளாட்சித் துறை அமைச்சர் புதிய அறிவிப்பை வெளியிட்டார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், அந்த அறிவிப்பிலே வந்த எந்தத் திட்டத்தையும் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை; ஆய்வுப் பணியிலும் இல்லை. உதாரணத்திற்குச் சொல்லப்போனால், எங்களுடைய மதுரை மாவட்டம், மேலூர், வல்லாளப்பட்டி, கொட்டாம்பட்டி ஒன்றியம், மேலூர் நகராட்சி, பேரூராட்சி, மேலூர் ஒன்றியம், அலங்காநல்லூர் ஒன்றியம், திருமங்கலம், திருப்பரங்குன்றத்திற்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்தார்கள். அப்படி அறிவிக்கின்றபோது, 148 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே செயல்படுத்தப்படும் என்று இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிவித்தார். அறிவித்து 10 மாத காலத்திற்கு மேலாகியும், இதுவரை அந்தத் திட்டம் இருக்கிறதா என்று கேட்டால், இல்லை என்றுதான் தெரிகின்றது. அது வெறும் அறிவிப்பாக, வெறும் பேப்பரிலே சொன்னதோடு நின்றிருக்கிறது. அதேபோல்தான், போன ஆண்டு நீங்கள் அறிவித்த அனைத்து அறிவிப்புகளிலே எந்தத் திட்டமும், எந்த நகராட்சியிலேயும் நடைபெறவில்லை என்பதைக் குற்றச்சாட்டாகச் சொல்கிறேன். வெறும் அறிவிப்புதான், போலியான அறிவிப்பாகத்தான் அறிவித்தீர்கள். இப்போது அந்தத் திட்டம் வருமா என்பது சந்தேகமாக இருக்கின்றது. ஓராண்டுக் காலமாகியும் உங்களுடைய அந்தத் திட்டம், என்னவாயிற்று என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கடந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ளாட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு 410 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதாக அறிவித்தீர்கள். அதை எந்த நகராட்சிக்குக் கொடுத்தீர்கள் என்று கேட்டால், எங்கே கேட்டாலும் பணம் வரவில்லை; அப்படிப்பட்ட அடிப்படை வசதி செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள். ** இதிலே நான் உங்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதுமட்டுமல்லாமல், சென்னை மக்கள் பூராவும் கடந்த ஒரு 10 நாட்களாக ஒரே பீதியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், 10 தினங்களாக சென்னை மக்கள் ஒரே பீதியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். காரணம், கடந்த 2-4-2007 அன்று ஒரு பத்திரிகையிலே, சென்னைக் குடிதண்ணீர் விநியோகத்தைத் தனியாரிடம் ஒப்படைக்கப் போவதாக நிதித் துறையினுடைய அதிகாரி ஒருவர் கூறியிருக்கின்றார். அதிலே சொல்லியிருக்கின்றார்; குறிப்பாக, பணக்காரர்கள் குடிப்பதுபோல, ஏழை மக்களுக்கும் குறைந்த கட்டணத்திலே தண்ணீர் விநியோகம் செய்யப்படும் என்று சொல்லியிருக்கின்றார். அப்படியானால் இனிமேல், உங்களுடைய ஆட்சியிலே, சென்னையிலே இருக்கின்ற மக்களெல்லாம் காசு கொடுத்து வாங்கித்தான் தண்ணீர் குடிக்க வேண்டுமா என்பதை உங்களிடம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதேபோலத்தான், இந்தத் திட்டத்தை, ஏற்கெனவே 2002 ஆம் ஆண்டு மெக்சிகோ நகரத்திலே அமல்படுத்த முயற்சி செய்திருக்கின்றார்கள். அப்போது அந்த மேயரைப் பொதுமக்கள் விரட்டியடித்து, அடித்ததோடு மட்டுமல்லாமல், அந்த ஆட்சியே கலையக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, கலைக்கப்பட்டிருக்கின்றது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அந்தத் திட்டத்தை நீங்கள் கைவிட வேண்டும். மக்களுக்கு அரசாங்கம்தான் தண்ணீர் வழங்கவேண்டுமே தவிர, தனியார் வசம் விட்டு நீங்கள் கட்டணத்தை வாங்கிக்கொண்டு, தண்ணீர் கொடுப்பதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். முடியுங்கள், உங்கள் டைம் முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அ.தி.மு.க.-வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. சாமி அவர்கள், ஒரு தவறான கருத்தை இங்கே பதிவுசெய்து கொண்டிருக்கிறார்கள். பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய செய்தியை இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். நானும் அதைப் படித்துப் பார்த்தேன். உடனே சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அதிகாரியிடத்திலே இதுபற்றி நாங்கள் விசாரிக்கச் சொன்னபோது, மத்திய அரசின்



மூலமாக, பல்வேறு மாநிலங்களில் இப்படியொரு திட்டத்தைச் செயலாற்றுவதற்காக ஓர் ஆய்வுப் பணியை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த ஆய்வுப் பணியைப் பொறுத்தவரையில், இது பேச்சளவிலேதான்; ஆங்காங்கே கருத்தரங்குகளை நடத்தி ஓர் ஆய்வுப் பணியை மேற்கொள்ளக்கூடிய நிலையில்தான் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும், குடிநீரைப் பொறுத்தவரையில், கட்டணம் செலுத்தி வாங்க வேண்டிய ஒரு சூழ்நிலையை நிச்சயமாக இந்த அரசு ஏற்படுத்தாது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே தெளிவோடு தெரிவித்துக்கொள்ள 'விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, உரையை முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. ஆர். சாமி:** ஒரு 5 நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 நிமிடம் எல்லாம் டைம் கிடையாது. (குறுக்கீடு) 5 நிமிடம் எல்லாம் டைம் கிடையாது. ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய குறுக்கீடுகள்; நான் 5 நிமிடம்தான் மொத்தமே பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் முதலிலேயே பேசியிருக்க வேண்டும்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், ** – (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இதே குற்றச்சாட்டைத்' திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏதாவது ஆதாரத்தோடு நிரூபிப்பார்கள் என்று சொன்னால், அதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கத் தயாராக இருக்கிறது. அல்லது நிரூபிக்கவில்லை என்று சொன்னால், அதற்குரிய பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய கோரிக்கையை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் அதற்குத் தகுந்த நேரத்தை, அவகாசத்தைத் தரத் தயாராக இருந்தால், ஆதாரபூர்வமாக நாங்கள் சொல்வதற்குத் தயாராக இருக்கின்றோம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேசுகின்ற உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டை *(குறுக்கீடுகள்)* நிரூபிக்க முடியுமா என்றால், 'முடியும், பொறுப்பேற்கிறேன்' என்று சொல்லிவிட்ட பிறகு, அதற்குத் தனியாகவெல்லாம் நாள் குறிக்க முடியாது. *(குறுக்கீடுகள்)* உடனடியாக தங்களிடத்தில் அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அப்படியிருந்தால்தான், பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொல்ல முடியும். கொடுங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. மூர்த்தி. *(குறுக்கீடுகள்)* சீக்கிரம் பேசி முடியுங்கள், திரு. ஆர். சாமி *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையிலே நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, அனைத்துக் கிராமங்களுக்கும் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தில் நான் பிறந்த திருவண்ணாமலை மாவட்டத்தில் இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது, 30 சதவீதத்திற்கும் மேற்பட்ட அ.தி.மு.க.-வைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி என்பது, பாகுபாடு பார்க்காமல், பகைவர்களுக்கும் அருளும் பண்பாளர் ஆட்சியாக இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். *(குறுக்கீடு)* சொல்லுங்கள். விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு உட்காருங்கள். 23 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.



**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்லாமல், ** ஆதாரம் இருக்கின்றன. கடந்த உள்ளாட்சித் தேர்தலில்.... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தொடக்கத்திலேயே இந்தக் கருத்தினைச் சொல்லிக்கொண்டிருந்தபோது நான் மறுக்க வேண்டாம்; என்னுடைய பதிலுரையிலே அதற்கெல்லாம் விளக்கம் தரலாம் என்று கருதியிருந்தேன். ஆனால், தொடர்ந்து அதே கருத்தை, தவறான ** செய்திகளையெல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஆதாரத்தோடு இங்கே என்று இங்கே சொல்லுகிறார். எந்த ஆதாரத்தோடு அவர் இங்கே சொல்லுகிறார்? எனவே, எதையும் ஆதாரத்தோடு அவர் இங்கே தெரிவிக்க வேண்டும். இல்லையென்றால், அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இருக்கிறதா? திரு. சாமி, ஆதாரம் இருக்கிறதா? உறுப்பினர் கூறிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. *(குறுக்கீடுகள்)* பேசுங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றபோது, மதுரை மாவட்டம், கிழக்கு ஒன்றியத்திலே, ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் தேர்தல் நடந்தது. மொத்தம் 24 ஓட்டுகள், ஒன்றிய கவுன்சிலர்களுக்குத் தேர்தல் நடந்தது. அதிலே பாண்டீஸ்வரி என்பவர் 14 ஓட்டுகளும், ராஜேஸ்வரி என்பவர் 9 ஓட்டுகளும் பெற்றார்கள். ஒரு ஓட்டு செல்லாத ஓட்டு . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். *(குறுக்கீடுகள்)* திரு. மூர்த்தி, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது நடக்கின்ற விவாதத்திலே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகப்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு, என் நெஞ்சம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாநில அரசுகளின் விருப்பம்போல், "பிடித்தால் பிள்ளையார், இடித்தால் மண்" என்கின்ற கதையாக, மங்கிக்கிடந்த ஊராட்சி அமைப்புகளுக்கு, அரசியல் சாசன வடிவம் தந்து, அவற்றிற்கு ஜனநாயக உயிரூட்டி, பாராளுமன்றம், சட்டமன்றம்போல் உள்ளாட்சி மன்றங்களும் தவிர்க்கமுடியாத, தவிர்க்கக்கூடாத மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய மன்றம் என்ற அரசியல் சாசனச் சட்டத்தை நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், இந்தியத் திருநாடு முழுவதும் உள்ள பெண்களுக்கு அரசியல் சமூக அங்கீகாரத்தைத் தந்திடும்வகையில், பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்பில் 33 விழுக்காடு இடத்தினை, அரசியல் சாசன ரீதியாக அங்கீகாரம் செய்து கொடுத்து, எல்லா அதிகாரங்களும் மக்களுக்கு என்ற ஜனநாயகத் தத்துவத்திற்கு, வாழ்கின்ற உதாரணமாக வாழ்ந்து, தன் உள்ளத்தையும், உதிரத்தையும், உயிரையும், உடலையும் இந்த நாட்டு மக்களுக்குக் காணிக்கையாக்கிய எங்கள் கனவுகளின் நாயகன், ஏழையெளிய மக்களின் நெஞ்சங்களில் கொலுவிருக்கின்ற இதய வேந்தன், எங்கள் இனிய தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, இந்த ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகள் சம்பந்தமான மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துகளை இந்த மாமன்றத்தில் பதிவுசெய்ய விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குச் சற்று அமைதியான அவையை உருவாக்கிக் கொடுக்கின்ற பொறுப்பு, உங்களுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள். உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ஏறக்குறைய ஓராண்டுக் காலமாக நல்ல பணிகளை நிறைவாகச் செய்து முடித்திருக்கின்ற நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு முதலில் என் நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சாமானிய மக்களோடு தொடர்பு இல்லாமல், யதார்த்தத்துக்குச் சம்பந்தம் இல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும் உள்ளாட்சி நிருவாக அதிகாரிகளுக்கும் தொடர்பு இல்லாமல் இருந்த உள்ளாட்சி அமைப்புகளை இன்று யதார்த்தத்தின் வெளிச்சத்திற்கு அவர் கொண்டுவந்திருக்கிறார்.



முற்பகல் 11-35

செயலிழந்து, பரண்மேல் தூக்கிப்போடப்பட்ட பல்வேறு திட்டங்களையெல்லாம், மீண்டும் தூசி தட்டி எடுத்துவந்து, செயலாக்கத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். புறக்கணிக்கப்பட்டு, தள்ளி வைக்கப்பட்டிருந்த மத்திய ஊரக வளர்ச்சித் துறை, மத்திய அரசினுடைய நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகியவற்றிற்கு, இப்பொழுது புதியதாக உறவு பாலத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்.

இந்த நாட்டிலே, புனிதமாகத் தரப்பட்ட ஆதி திராவிட மக்களுக்காக வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு, கடந்த பல ஆண்டுகளாக கேலிக் கூத்தாக்கப்பட்டு, கொச்சைப்படுத்தப்பட்டு இருந்த நேரத்திலே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல் போன்ற கிராமங்களில் அற்புதமாகத் தேர்தல் நடத்தி, அங்கே ஆதி திராவிடத் தலைவர்கள், பொறுப்பில் தொடர்ந்து நிறைவாகப் பணியாற்ற, ஒரு மிகப் பெரிய வாய்ப்பினை அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நல்ல பணிகளைச் செய்து முடித்து, தொடர்ந்து பல நல்ல பணிகளை அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிற உள்ளாட்சித் துறை அமைச்சகத்திற்குத் தலைமை ஏற்றிருக்கும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அவர்களோடு அவர்கள் தலைமையில் திறம்பட ஆர்வத்துடன், நிருவாகத் திறமையுடன் பணியாற்றுகின்ற ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் துறை அதிகாரிகளுக்கும் இந்த விவாதத்திற்குப் போவதற்கு முன்னால், எனது நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில், இந்தத் துறை என்ன நோயால் பாதிக்கப்பட்டிருந்தது என்பதனையும், எதிர்காலத்தில் என்ன செய்ய முடியும் என்பதைப்பற்றியும் ஆராய வேண்டிய கடமை, இந்த அவைக்கு உண்டு. ஓர் அரசினுடைய செயல்பாடுகள் வெற்றியா, தோல்வியா என்பதனை உரசிப் பார்க்கின்ற துறை, உள்ளாட்சித் துறைதான். நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற பெரும்பாலான கிராமங்களுக்கு, ஒரு சட்டமன்ற உறுப்பினரோ, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரோ, ஒரு அமைச்சரோ, ஏன் முதலமைச்சர் அவர்களோ, பிரதம மந்திரியோ போனால்கூட, அங்கே இருக்கின்ற பெண்களும், ஆண்களும் கூடிநின்று நம்மைப் பார்த்து முதலில் கேட்கின்ற கேள்வி, இந்தத் தெருவிலே சாக்கடை ஓடுகிறதே, அதைப் பார்த்தீர்களா,

குடிநீர் வராத குழாய் இருக்கிறதே, பார்த்தீர்களா, எரியாத தெரு விளக்கு இருக்கிறதே, அதைப் பார்த்தீர்களா, இந்த ரோடு குண்டும் குழியுமாக இருக்கிறதே, அதைப் பார்த்தீர்களா என்றுதான் கேட்கிறார்களேயொழிய, நம்மிடம் துணை நகரங்கள் எங்கே என்று கேட்கவில்லை; விமான நிலையங்கள் எங்கே இருக்கிறது என்று கேட்கவில்லை, துறைமுகத்தை எப்படி விரிவுபடுத்தப் போகிறீர்கள் என்று கேட்பதில்லை; எப்படித் தகவல் தொழில்நுட்பத் தொழிலை ஆதரித்து வளர்க்கப் போகிறீர்கள் என்று கேட்கவில்லை; நீங்கள் சட்டமன்றத்திலே எவ்வளவு நேரம் அற்புதமாகப் பேசினீர்கள் என்றெல்லாம் கேட்கப்போவதில்லை. தொகுதிக்குப் போகின்றபோது, கிராமங்களுக்குப் போகின்றபோது, இந்த நாட்டிலே இருக்கின்ற 80 விழுக்காடு மக்கள் நம்மிடம் கேட்கின்ற கேள்விகளுக்கு முறையான பதிலை நாம் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இந்த உள்ளாட்சித் துறை மிக வலுவாகச் செயல்பட வேண்டும். இந்த உள்ளாட்சித் துறையினுடைய வெற்றிதான், இந்த ஆட்சியினுடைய வெற்றியினுடைய உரைகல். எனவே, உள்ளாட்சித் துறை எவ்வளவு அதிகமாக, எவ்வளவு அழுத்தமாக, எவ்வளவு வேகமாகச் செயல்படுகிறதோ, அந்த அளவுக்கு நாட்டு மக்கள் மத்தியிலே நமக்கு நல்ல பெயர். அந்த வகையிலே, நல்ல துவக்கத்தைத் துவங்கி இருக்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, எல்லோரும் பாராட்டத்தக்க ஒரு பெரிய முயற்சியை மேற்கொண்டார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அவர்களே நேரடியாக வருகைதந்து, அந்தத் துறையினுடைய செயலாளர்கள், அந்தத் துறையினுடைய இயக்குநர்கள், அந்தத் துறையிலே இருக்கின்ற உயர்மட்ட அதிகாரிகள், மாவட்ட நிருவாகத்திலே இருக்கின்ற தலைமை அதிகாரிகள், ஒரு நகரப் பேரூராட்சி மன்றத் தலைவரிலிருந்து, நாடாளுமன்ற உறுப்பினர் வரை, ஒரே அவையிலே கூப்பிட்டு உட்கார வைத்து, இந்த உள்ளாட்சித் துறைக்கு என்ன குறை என்று கண்டுபிடிப்பதற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் 7 மணி நேரத்திலிருந்து 8 மணி நேரம் செலவிட்டார்கள் என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்யவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணமாகத்தான், இந்த உள்ளாட்சித் துறையினுடைய ஆழமான நோய், இந்தத் துறை செயலிழந்து கிடப்பதற்கு என்ன காரணம் என்பதைப்பற்றிய ஒரு கருத்துப் பரிமாற்றத்தை உணர்ந்துகொள்ள முடிந்தது. புதிதாகப்



பொறுப்பேற்றுள்ள உள்ளாட்சிமன்ற, ஊராட்சிமன்ற நிருவாகிகள், இங்கே புதியதாகப் பதவி ஏற்றிருக்கின்ற புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்கள், நிருவாகத்திற்குப் புதிதானவர்கள், அதிகாரிகளே அறிமுகம் இல்லாதவர்கள், அதிகாரிகளிடம் எதைக் கேட்பது, என்ன திட்டத்தைக் கேட்பது என்பதைப்பற்றியெல்லாம் சரியான விளக்கம் தங்களுக்கு இல்லாதவர்கள்கூட, அந்தக் கூட்டத்தின்மூலம் தங்களுடைய நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டார்கள்.

மக்கள் பிரதிநிதிகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய அதிகாரிகள் என்கிற அந்த உணர்வே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட பிறகுதான் வந்தது என்பது மிகப் பெரிய உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவரை பெரிய அதிகாரிகளைக் கேட்பதற்கு ஆள் இல்லை. பெரிய அதிகாரிகள் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் அல்ல என்பதைப் போன்ற ஓர் உணர்வு இருந்த நேரத்திலே, ஒரு ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஒரு பேரூராட்சிமன்றத் தலைவர், ஒரு நகரமன்றத் தலைவர், ஒரு சட்டமன்ற உறுப்பினர், ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு இந்த உள்ளாட்சி அரசு இயந்திரம் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைத் தன்னுடைய நடவடிக்கைகளால் ஒவ்வொரு மாவட்டத்திலும் உணர்த்தி இருக்கிறார். எனவே, இப்பொழுது இந்தத் துறை செயல்பட ஆரம்பித்திருக்கிறது. இந்தத் துறை செயல்பட ஆரம்பித்த பிறகு, நமக்குப் பல்வேறு பிரச்சினைகள் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன. வெளிச்சத்திற்கு வந்திருக்கின்ற அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய பொறுப்பு, வரக்கூடிய ஆண்டிலும் இருக்கிறது.

முற்பகல் 11-40

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரை, மத்திய, மாநில அரசுகள் போட்டிப் போட்டுக் கொண்டு திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கின்றன. பணம் இல்லை என்கிற, பற்றாக்குறையே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் மத்திய அரசின் மூலமாகவும், மாநில அரசின் மூலமாகவும் உள்ளாட்சித் துறையினுடைய கருவூலங்களை நிரப்பிக் கொண்டேயிருக்கின்றன. அதிலும் குறிப்பாகச் சொல்லப்போனால், இந்தத் தரப்பிலேயிருந்துகூட குற்றச்சாட்டு சொன்னார்கள். இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய சட்டமன்றத் தொகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு

உரைகல்லாக ஒரு சொல்தான சொல்வேன். இந்தப் புதிய அண்ணா மறுமலர்சசித் திட்டம், தமிழகத்திலே இருக்கின்ற 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலேயும் இருக்கின்ற அத்தனை ஊராட்சி மன்றங்களிலும், அதிலும் குறிப்பாக யாருக்கும் பாதகம் இல்லாமல் செயல்படுகிறது. நான்கூட, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே,—நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்—சட்டமன்ற உறுப்பினர்களுக்குகூட பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்டோம். முதலமைச்சரிடம் கேட்டோம். உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்டோம். திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக மட்டும் கேட்கவில்லை. காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக மட்டும் கேட்கவில்லை. இங்கே இருக்கிற நம்முடைய தோழமைக் கட்சியைச் சார்ந்த பா.ம.க., நம்முடைய பொதுவுடைமைக் கட்சித் தோழர்களுக்குக்கூடக் கேட்கவில்லை. எல்லாக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்தான் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்டோம். இன்றுகூட அதை மீண்டும் வலியுறுத்தப் போகிறோம். அதிலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொகுதி உறுப்பினர்கள் இருக்கின்ற சட்டமன்றத் தொகுதிகளை ஒதுக்கி வைக்கவில்லை. அதிலும் எந்தச் சட்டமன்றத் தொகுதியிலும், சட்டமன்ற உறுப்பினருக்குச் சம்பந்தம் இல்லாமலேயே ஊராட்சிமன்றங்களையும் தேர்ந்தெடுத்து இருக்கிறோம். அதிலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் இருக்கின்ற ஊராட்சிமன்றங்கள்தான் என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, நல்ல திட்டங்களைப் போடுகின்றபோது, அவற்றை அரசியல் காரணமாகக் கொச்சைப்படுத்தக் கூடாது. அந்தத் திட்டத்தினுடைய நோக்கத்தை, அதனுடைய முனைப்பை முறியடிக்கக்கூடாது என்று நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய திட்டங்களைப்பற்றி நான் சொல்லிவந்தேன். மத்திய அரசு, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, நிறைவேற்றுகிற திட்டங்கள், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம், சம்பூரண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், முழு சுகாதார இயக்கம், Nirmal Gram Puraskar, நாடாளுமன்ற உறுப்பினர் வளர்ச்சித் திட்டம், பிரதம மந்திரியினுடைய கிராமச் சாலைகள்



திட்டம், தேசிய சுரிமவாயுத் திட்டம் போன்ற திட்டங்களை ஊரக வளர்ச்சித் துறையிலே செயல்படுத்தி வருகின்றது.

அதைப்போல, நகர்ப்புற வளர்ச்சித் துறையிலே, ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டம், நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் திட்டம் என்று நகர்ப்புறங்களுக்கான திட்டங்களை, மத்திய அரசு செயல்படுத்தி வருகின்றது. இந்த மத்திய அரசினுடைய திட்டங்களைப் பொறுத்தவரை நாம் மிக கவனமாகச் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. மத்திய அரசு கொடுக்கின்ற அந்தத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் நம்முடைய மாநிலத்திற்குச் சேரவேண்டிய நிதி ஒதுக்கீடு, முறையாக வருகிறதா? இந்த ஆராய்ச்சியை நாம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏன் என்று சொன்னால், எனக்கு இருக்கின்ற சில தகவல்களை இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, நம்முடைய பிரதம மந்திரியினுடைய கிராமப்புறச் சாலைகள் திட்டம்; இந்தத் திட்டம்குறித்து ஒரு புள்ளிவிவரத்தை ஒரு பிரபலப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. மத்தியப்பிரதேச மாநிலத்திற்கு ரூபாய் 5,100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது; ரூபாய் 2,324 கோடி கொடுக்கப்பட்டுவிட்டது. அங்கே 11,300 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் போடப்பட்டுவிட்டன. மஹாராஷ்டிராவிற்கு 1,792 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 596 கோடி ரூபாய் அளிக்கப்பட்டுவிட்டது. ஆனால், தமிழகத்திற்கு 492 கோடி ரூபாய்; கேரளாவிற்கு 196 கோடி ரூபாய்; கர்நாடகாவுக்கு 506 கோடி ரூபாய். இந்தத் திட்டத்தின்கீழ், உ.பி. மற்றும் பீகார் மாநிலங்களின் நிதி ஒதுக்கீடுபற்றிய புள்ளிவிவரங்கள் வெளியிடப்படவில்லை. இந்த இரண்டு மாநிலங்களுக்கும் பெரிய அளவிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஊரக வளர்ச்சித் துறையில் இருந்து கோடிக்கணக்கான ரூபாய் பணம் வருகிறது. இந்த ஆண்டுகூட, நம்மைப் பொறுத்தவரை, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திலே, நமக்குப் புதியதாக 4 மாவட்டங்களைத் தந்திருக்கிறார்கள். அதாவது நமக்கு 5 per cent rural population; இந்த rural population-க்கு, கடந்த ஆண்டு 200 ஊராட்சிமன்றங்களை மத்திய அரசு எடுத்திருக்கிறது; இந்த தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்

திட்டத்திலே, 200 ஊராட்சிகளை எடுத்திருக்கிறது. அப்படி 200 ஊராட்சிகளை எடுத்தால், 5 விழுக்காடு கிராமப்புற ஜனத்தொகைக்கு என்று பார்த்தால், நமக்கு 10 மாவட்டங்கள் கிடைத்திருக்க வேண்டும். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை அமல்படுத்துகின்ற மாவட்டங்கள், கடந்த ஆண்டு, 10 மாவட்டங்கள் கிடைத்திருக்க வேண்டும். இந்த ஆண்டு, நமக்கு 4 மாவட்டங்கள் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய கிராமப்புறங்களிலே வாழ்கின்ற ஏழை மக்களுடைய ஜனத்தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால், இந்த ஆண்டு நமக்கு 7 மாவட்டங்கள் கிடைத்திருக்க வேண்டும். ஆகவே, கடந்த ஆண்டையும் இந்த ஆண்டையும் சேர்த்து நமக்கு 17 மாவட்டங்கள் கிடைத்திருக்க வேண்டும். ஆனால், 10 மாவட்டங்கள்தான் கிடைத்திருக்கின்றன. எனவே, இந்தப் புள்ளிவிவரங்களைச் சரிபார்த்து, நம்முடைய மாநிலத்திற்கு நியாயமான ஒதுக்கீடு, அந்த ஜனத்தொகையின் அடிப்படையிலே, எந்தப் புள்ளிகளின் அடிப்படையில் அந்தத் திட்டங்கள் மதிப்பிடப்படுகின்றனவோ, அந்தப் புள்ளிகளின் அடிப்படையிலே, நமக்கு அந்தத் திட்டங்கள் கிடைப்பதற்கான வழியைச் செய்ய வேண்டும்.

முற்பகல் 11-45

மத்திய அரசு கொடுக்கின்ற திட்டங்களிலே மிக முக்கியமான திட்டம், Indira Awaas Yojana; அன்னை இந்திரா நினைவுக் குடியிருப்பு வீடுகள் இந்த ஆண்டுகூட, ஏறக்குறைய 43,500 வீடுகள், நீங்கள் தந்திருக்கின்றீர்கள். இந்த வீடுகள் அளிப்பதற்கான தகவல்கள், அந்தத் தகவல்களின் அடிப்படையில்தான் அந்த வீடுகளை ஒதுக்கீடு செய்கிறோம். ஆனால், ஊராட்சி ஒன்றியங்களில் நம்முடைய அரசிடம் இருக்கின்ற தகவல்கள் சரியான தகவல்களா என்பதை இந்த அரசு தயவுசெய்து பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். இதில் எவ்வளவு தூரத்திற்குத் தவறான தகவல்கள் இருக்கின்றன என்பதை என்னுடைய தொகுதியில் இருந்து, ஓர் உதாரணம்மூலம் நான் உங்களுக்குச் சொல்லிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலே, பொய்கை என்கிற ஊராட்சியிலே, கள்ளமுழி என்கிற ஒரு கிராமம். இந்தக் கிராமத்திலே மாடன் குமாரன் இசக்கி, அவருடைய மனைவி பிச்சம்மாள்; இவருக்கு 1991 ஆம் ஆண்டு, அரசு ஒரு பட்டா வழங்குகிறது. ஆதி திராவிடருக்கு உள்ள பட்டா. அந்தப் பட்டாவினுடைய ஒரு நகல்,



ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே இருக்கிறது. இன்னொரு நகல் அவரிடம் கொடுக்கப்படுகிறது. அவரிடம் கொடுக்கப்பட்ட நகலில், இந்தப் பட்டா மட்டுந்தான் இருக்கிறது. ஆனால், ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற அந்த நகலில் இவருக்குத் தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது தொகுப்பு வீடு கட்டிக்கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலே இருக்கின்ற ஆவணங்களிலே, அவருக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) எப்படி? அதைத்தான் நான் உங்களுக்குக் காண்பிக்கிறேன், இரண்டையும் காண்பிக்கிறேன். (குறுக்கீடு) இதோ இருக்கிறதே. அண்ணே! (குறுக்கீடு) இல்லை அண்ணே! எதையும் ஆதாரம் இல்லாமல் பேசுவதில்லை. (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன். தொகுப்பு வீடு கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதாகப் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் உள்ள பட்டா நகலில், ஒரு endorsement செய்திருக்கிறார்கள். இந்தப் பிச்சம்மாள், இனிமேல் ஜென்மத்திற்கும் வீடு வாங்க முடியாது. கலெக்டரைப் பார்த்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்தாலும் சரி, அமைச்சரைப் பார்த்தாலும் சரி, இந்தப் பிச்சம்மாளுக்கு இனிமேல் வீடு ஒருநாளும் கிடைக்காது. ஏனென்று சொன்னால், அலுவலகத்திலே இருக்கின்ற குறிப்பிலே அவருக்கு வீடு வழங்கப்பட்டதாக இருக்கிறது. அவர் கையிலே இருக்கின்ற குறிப்பிலே, அந்த வீடு வழங்கப்பட்டதாக இல்லை. அவர் இந்தப் பட்டாவை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு அலுவலகமாக அலைகிறார். 'ஐயா, நான் ஒரு விதவை, வழியற்றவள், யாருக்கெல்லாமோ வீடு கொடுக்கிறார்களே, எனக்கு வீடு கொடுக்கச் சொல்லுங்கள்' என்று நம்மைக் கேட்டால், நாம் போய்க் கலெக்டரிடம் சொன்னால், கலெக்டர் 'பார்ப்போம்' என்று சொல்கிறார். ஆனால், ஆவணங்களைப் பார்க்கின்றபோது அவருக்கு வீடு இருக்கிறது.

இதைப்போல ஒன்றல்ல; ஏழு பட்டாக்களை நான் எடுத்துள்ளேன். இதற்குப் பின்னாலே என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. வீடே கட்டிக்கொடுக்காமல், எந்தவிதமான நிதியொதுக்கீடும் செய்யாமல், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே இருக்கின்ற பட்டாக்களின் நகல்களிலே வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டதாக இப்படியிருந்தால், இந்தத் திட்டத்தின் பயன் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்கு எப்படிப் போய்ச் சேரும் என்பதை மனச்சாட்சியுள்ள அரசியல்வாதிகள் நினைத்துப் பார்க்க

வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். எப்படி நிருவாகம் நடந்திருக்கிறது? 43,500 வீடுகள் இந்த ஆண்டு கட்டுகிறோம். இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அன்னை இந்திரா காந்தியின் பெயரில் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கான அறிவிப்பு வந்த போது, என்ன சொன்னார்கள் என்று சொன்னால்,—the scheme is meant for the poorest of the poor —ஏழைகளுக்கெல்லாம் ஏழைக்காகச் செயல்படுத்தப்படுகின்ற திட்டம் என்று. இந்த ஆண்டு, 43,500 வீடுகளை நாம் கொடுக்கிறோம். ஆனால், அவருக்கு இந்த ஒரு வீடுதான். இந்தப் பிச்சம்மாளுக்கோ, இந்தச் சுடலைமாடனுக்கோ, இந்தக் கரடிமாடசாமிக்கோ இந்த ஒரு வீடு என்பது வானத்துக்கும் பூமிக்கும் இடையிலிருந்து பாதுகாக்கின்ற, அந்த ஏழைக்குள்ள குடிசையை, இவ்வளவு பொறுப்பற்றத்தனமாக ஒரு நிருவாகம் நிறைவேற்றியிருக்கிறது என்று சொன்னால், இந்த நிருவாகத்தை நாம் என்ன பெயர் சொல்லி அழைப்பது?

(முற்பகல் 11-50)

நான் திரும்பக் கேட்டேன். (குறுக்கீடு) Previous Government-லே, 1991. அதைத்தான் நான் சொல்கிறேன், 1991. அதைச் சரிபார்ப்பதற்கான சாதகங்கள் நம்மிடையே இல்லை. நாம் கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத்தொடரிலே இந்த ஏழை மக்களுடைய, வறுமைக் கோட்டின்கீழ், எல்லைக்குக் கீழே வாழ்கின்றவர்களுடைய தகவல்களைச் சரிபார்க்க வேண்டுமென்று சொன்ன பிறகு, இந்த ஆண்டுதான் உண்மையிலேயே ஏழைகளுக்கு வீடுகளைக் கொடுப்பதற்கான முயற்சி நடந்திருக்கிறது. இதிலே நான் யாருடனும் வாதத்திற்குத் தயாராக இருக்கிறேன். கடந்த 2003-2004, 2004-2005, 2005-லிருந்து 2006 வரை, இந்திரா ஆவாஸ் யோஜனா வீடுகள், எப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டன என்று பார்த்தால், மொத்தம் மொத்தமாக. அதற்கு எந்தவிதமான Scientific reasons, அவற்றை ஒதுக்கீடு செய்து கொடுப்பதற்கான எந்தவிதமான காரணங்களும் இல்லாமல், எங்கே தோன்றுகிறதோ, அங்கே மொத்தமாக 100 வீடுகள், 200 வீடுகள்; அதிலும் எனக்கு வந்த தகவல் உண்மையாக இருக்குமென்று சொன்னால், யார் எல்லாம் ஒரு வீட்டுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு மொத்தம் மொத்தமாக வீடுகள் அள்ளிக் கொடுக்கப்பட்டன. கதை இல்லை; எல்லாம் supported by records. தமிழ்நாடு முழுவதும் இதை ஒரு பெரிய விசாரணை செய்ய வேண்டும். ஏழைகளிலே ஏழைகளுக்காக ஒதுக்கப்பட்ட இந்த வீடுகள், எப்படிப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன; எப்படிக்



கொள்ளைபோயிருக்கின்றன என்பதைப் பொறுப்பிலே இருக்கின்ற ஒவ்வொரு அரசியல்வாதியும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சரும் ஆத்ம சோதனை செய்துகொள்ள வேண்டிய காரியம், இந்தக் காரியம். இப்போது தூசி தட்டி அதையெல்லாம் சரிப்படுத்துகின்ற முயற்சியினை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள்.

இதிலே, அதிக நாட்களாக ஒரு கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறோம், தலித் கிறிஸ்தவர்களுக்கும் தொகுப்பு வீடு வேண்டும் என்று. ஏனென்றால், மதம் மாறியிருக்கிறார்களேயொழிய, அவர்களின் சமூகச் சூழ்நிலை மாறவில்லை. அவர்களை வேறு யாரும் தங்கள் சமூகத்திலே ஏற்றுக்கொள்ளவும் இல்லை. எனவே, அப்படிப்பட்ட தலித் கிறிஸ்தவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள்மூலமாக நான் மீண்டும் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த வறுமைக்கோட்டின் எல்லைக்குக் கீழே உள்ளவர்களுடைய பட்டியலை, மிக சுத்தமாக, ஆத்ம சுத்தியோடு நாம் நிறைவேற்றினாலொழிய, நம்முடைய முதலமைச்சர் செய்கின்ற கோடிக்கணக்கான திட்டங்கள் போய்ச் சேராது. எல்லாத் திட்டங்களுக்கும் அதுதான் அடிப்படை. ஏழைப் பிரசவத் தாய்மார்களுக்குப் பணம் கொடுக்க வேண்டுமா? அல்லது திருமணமாகாத பெண்களுக்குத் திருமண உதவி கிடைக்க வேண்டுமா? பட்டா கிடைக்க வேண்டுமா? வீடு கிடைக்க வேண்டுமா? இப்படி எல்லாத் திட்டங்களுக்கும் அடிப்படை என்பது இந்த B.P.L. list. இப்போது B.P.L.-ன் survey வந்திருக்கிறது. இந்த ஆண்டு, 2005-2006-லே இந்த Below Poverty Line Survey வருகின்றபோது என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், அந்த வறுமைக்கோட்டின் எல்லைக்குக் கீழேயுள்ளவர்களுடைய எண்ணிக்கை, நம்முடைய மாநிலத்திலே அதிகமாகத்தான் இருக்கிறது. The percentage of those living below the poverty line is 15% in Assam, 12.5% in Gujarat, 9.9% in Haryana, 17.4% in Karnataka, 11.4% in Kerala, 32.4% in Madhya Pradesh, 17.5% in Rajasthan, 17.8% in Tamil Nadu. So, நூற்றுக்கு 18 பேர் வறுமைக்கோட்டின் எல்லைக்குக்கீழே உள்ளவர்கள். அந்த வறுமைக்கோட்டின் எல்லைக்குக்கீழே உள்ளவர்கள் என்று சொன்னால், அவர்களுக்கு, ஒரு வேளை உணவே கேள்விக் குறி!

அதுதான் உண்மையிலேயே வறுமைக்கோட்டின் எல்லைக்குக்கீழே உள்ளவர்களுக்குப் பொருள். அப்படிப்பட்டவர்களுடைய பட்டியலை நாம் சரியாக எடுக்கவில்லையென்று சொன்னால், நிச்சயமாக அந்தத் திட்டத்தினுடைய பயன் போய்ச் சேராது.

ஒரு நகரமன்றத்தினுடைய வளாகத்திற்குள்ளே தற்போது நடந்ததை, நம்முடைய Indian Express பத்திரிகை அருமையாக வெளியிட்டிருக்கிறது. அந்த நகராட்சியினுடைய பெயரை நான் சொல்ல விரும்பவில்லை; அதை இங்கே பதிவு செய்ய விரும்பவில்லை. ஆனால், ஒன்று மட்டும் சொல்கிறேன். அது எப்படி நடந்திருக்கிறது என்று சொன்னால், "The process of revising the BPL list had begun a month ago in the Municipality. Only those with a monthly income of Rs.500/- and less fall under the category as per the Government criterion. But, with the forms available for sale, sources said, many who belong to the higher income groups had enrolled themselves. As a result, even those working in good positions, in Companies like Ashok Leyland have been allegedly included in the survey." ஆகவே, இன்றும் அந்த Below Poverty Line List முறையாகத் தயார் செய்யப்படவில்லை. அதை எப்படிச் செய்யப் போகிறோம்? இதற்கு மத்திய அரசு ஒரு வழிமுறை கொடுத்திருக்கிறது. 52 மார்க்குகள் அடங்கிய ஒரு form கொடுத்திருக்கிறது. இதிலே கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கேள்விகள் யதார்த்தத்திற்குச் சம்பந்தமில்லாதக் கேள்விகளாக இருக்கின்றன. எனவே, இந்தப் படிவத்தினுடைய அடிப்படையிலே, நாம் அந்தக் கணக்கை எடுத்தால், ஒருநாளும் நாம் போய்ச் சேரவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேரமாட்டோம். உதாரணமாக, அதிலே ஒவ்வொன்றிற்கும் ஒரு மார்க் போடுகிறார்கள்; 1, 2, 3, 4 என்று. அதிலே எவ்வளவு அதிகமாக மார்க் வாங்குகிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாக நாம் வசதியாக, வறுமைக்கோட்டின் எல்லைக்கு மேலே போய்விடுகிறோம். நம்முடைய மாநிலத்திலே, 17 மதிப்பெண்களுக்குக் கீழே வாங்கியவர்கள்தான், வறுமைக்கோட்டின் எல்லைக்குக் கீழேயுள்ளவர்கள். இதிலே ஒரு கேள்வி இருக்கிறது; "உங்களுக்கு எவ்வளவு ரூபாய் கடன் வேண்டும்?" இப்படிக் கேட்டவுடனே, நம் ஊரில், நம் ஆள் என்ன சொல்கிறான்? கடன் கிடைத்தால், தனக்கு அதிகமாக வேண்டும் என்று கேட்கின்ற சில பேர், "எனக்கு ரூ.4 இலட்சம் வேண்டும்; ரூ.5 இலட்சம் வேண்டும்" என்று சொன்னவுடனே, 5 மதிப்பெண்கள் போட்டுவிடுகிறார்கள். அதையும் சேர்த்துக் கூட்டி, அவனை வறுமைக்கோட்டின் எல்லைக்கு மேலே தாங்குகிறோம்.



முற்பகல் 11-55

இதற்காக நான்கூட, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் சொன்னேன்; நம்முடைய ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் அவர்களிடமும் பேசினேன். அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்து, மிகவும் சரியான கருத்தாக எனக்குத் தெரிந்தது. அந்தக் கருத்தின் அடிப்படையிலே, இந்த முழு விவரப் பட்டியலைச் சரிசெய்ய வேண்டுமென்று எண்ணுகிறேன். கிராமங்களிலே எங்கெல்லாம் கூரை வீடுகள் இருக்கின்றனவோ, அவர்களை வறுமைக்கோட்டின் எல்லைக்குக்கீழே உள்ளவர்கள் என்று நாம் முடிவு செய்துவிடலாம். ஏனென்றால், இந்தக் காலத்திலே, சாதாரணமாக, ஒரு மாதம் ரூ.5 ஆயிரம், ரூ.7 ஆயிரம் சம்பளம் வாங்குகிறவர்கள்கூட, கூரை வீடுகளிலே வசிப்பதில்லை. எனவே, நான் ஏற்கெனவே, கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் நடந்த விவாதத்தின்போது சொன்னதுபோல, ஒரு ஊரிலே இருக்கின்ற 170 பட்டியல் இன ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற குடியிருப்புகளிலே, ஒருவரைக்கூட அந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை. ஆகவே, குறிப்பாக, அந்தப் பட்டியலை இப்பொழுது சரிசெய்ய வேண்டிய பணி நமக்கிருக்கிறது. அந்தப் பணியைச் செய்ய வேண்டுமென்று, நான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இந்த வீடுகளுக்கு அளிக்கப்பட்ட நிதியுதவி போதாது. இப்போது சில வீடுகளுக்கு ரூ.27,500/-; அதாவது, கடினமான தரையிலே கட்டப்பட்டிருந்தால். (குறுக்கீடு) இல்லை, அது மத்திய அரசு கொடுப்பது. பிறகு, நம்முடைய மாநில அரசு, 12 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறது. ஆக, ரூ.39,500/-. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்வேன்; கிராமங்களுக்குப் போனால்— இந்த ஆண்டு, எங்களுடைய மாவட்டத்திலே பெரிய வெள்ளம். இந்த வெள்ளம் வந்த காரணத்தினால், இந்தக் குடியிருப்புகளிலே கட்டப்பட்ட வீடுகளிலே, பாதிக்கும் மேற்பட்ட வீடுகளில் உள்ள மக்கள், இரவு முழுவதும் வெளியிலேதான் இருந்தார்கள்; எப்பொழுது இடிந்துவிடுமோ என்ற பயம். அந்த வீடுகளைச் சரிபார்க்கின்ற பணியைத் தொடங்கவேண்டும். அந்த வீடுகளுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

நான் ஒரு சின்ன ஆலோசனை என்ன சொல்கிறேன் என்றால், இதை அடுக்குமாடிக் குடியிருப்புகளாகக் கட்டினால் என்ன. ஒரு மூன்று அடுக்குமாடிக் குடியிருப்பாக. தொகுப்பு வீடுகள் கட்டுகின்றபோது, தனித் தனி வீடாகக் கட்டாமல், ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பிலே, 12 குடும்பங்கள், 20 குடும்பங்கள் இருப்பதைப்போன்று, ஒரு மூன்றடுக்குக் குடியிருப்புகளாக இதைக் கட்ட முடியுமா என்பதையும் பார்க்கவேண்டும். மத்திய அரசிடம் கேட்கும்போதுகூட, எத்தனை வீடுகள் என்று கேட்காமல், அவர்கள் நமக்கு நிதி கொடுத்துவிட வேண்டும். இந்த ஆண்டு, இத்தனை ஆயிரம் கோடி ரூபாய் என்றால் அதற்கு, ஒரு வீட்டிற்கு என்ன ஆகிறது என்பதை, நாமே நமக்குத் தகுதியான திட்டம் போட்டு, அதைச் செய்யமுடியுமா என்று பார்க்கவேண்டும்.

அதைப்போல, Backward Region Grant Fund, Rashtriya Sarva Vikhas Yojana என்று பிரதமருடைய ஒரு திட்டம் வருகிறது. இந்தத் திட்டத்திலே சொல்லப்பட்ட நடவடிக்கைகளும், நடைமுறைகளும் நம்முடைய தமிழகத்தினுடைய யதார்த்தத்திற்குச் சம்பந்தமில்லாதவை. மத்திய அரசினுடைய திட்டங்களிலே அநேகத் திட்டங்கள், வட மாநிலங்களை மனதிலே வைத்துமட்டும் அந்தத் திட்டங்கள் வடிவமைக்கப்படுவதால், தமிழகத்தினுடைய யதார்த்தத்திற்கும், அடிப்படையான நிலைகளுக்கும் சம்பந்தமில்லாமல் இருக்கின்றன. எனவே, அந்தத் திட்டங்களுடைய வடிவத்தை மாற்ற வேண்டும். அந்தத் திட்டங்களை எப்படி வடிவமைப்பது என்கிற உரிமை, மாநில அரசுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்கிற ஆணித்தரமான கோரிக்கையை நமது அரசு அனுப்பவேண்டும்.

நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், இன்றைக்குத் தமிழகத்தினுடைய தலைவராக மட்டுமல்ல; அகில இந்திய அளவிலே அங்கீகரிக்கப்பட்ட தலைவராக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பணியை அவர் நிச்சயமாகப் பெற்றுத் தரவேண்டும் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, சட்டமன்ற உறுப்பினருக்கு இல்லாத அதிகாரம், பாராளுமன்ற உறுப்பினருக்கு இல்லாத அதிகாரம், even அமைச்சருக்குக்கூட இல்லாத அதிகாரத்தை, ஊராட்சிமன்றத் தலைவருக்குக் கொடுத்திருக்கிறோம். அவர் ஒருவர்தான், மக்கள் பிரதிநிதிகளிலே, காசோலையிலே கையெழுத்துப் போடக்கூடிய அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்—Cheque drawing powers—.



ஆனால், அவருக்கு அடிப்படை வசதியில்லை. அவருக்கு ஒரு தொலைபேசியைக் கண்டிப்பாகக் கொடுக்கவேண்டும். ஒரு moped; ஒரு இரண்டு சக்கர moped வண்டியும், ஒவ்வொரு ஊராட்சி மன்றத் தலைவருக்கும் கொடுக்கவேண்டும். அது மிக நியாயமான கோரிக்கை. (குறுக்கீடு) என்ன? வேண்டாம் என்கிறீர்களா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) சில ஊராட்சிமன்றங்களிலே நியாயமாக வேலை செய்கின்ற தலைவர்கள்—நிறைய பேருக்கு car இருக்கிறது என்று அவர் சொல்கிறார்; சென்னையைச் சுற்றி அப்படியிருக்கிறார்கள் போலிருக்கிறது! (சிரிப்பு) எங்கள் கிராமத்திலே இருக்கின்ற, சில ஊராட்சிமன்றத் தலைவர்கள்—போக்குவரத்திற்கே சங்கடப்படுகின்றவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் தேவைப்படுகிறவர்களுக்குக் கொடுக்கலாம்.

நண்பகல் 12-00

அதைப்போல, நகராட்சி நிருவாகத்தைப் பொறுத்தவரை, ஒரு முக்கியமான துறையாக நாம் இந்த நகராட்சி நிருவாகத் துறையைப் பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால், நமக்கு வருகின்ற தகவல்கள் உண்மையாக இருக்குமென்று சொன்னால், 2020 ஆம் ஆண்டு, 75 விழுக்காடு தமிழ்நாட்டு மக்கள், நகரங்களில் வசிப்பார்கள் என்று சொல்லுகிறார்கள். அதாவது 75 விழுக்காடு (மணியடிக்கப்பெற்றது) Three fourths of the Tamil Nadu population will be living in the cities.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உரையைச் சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்**: மக்கள்தொகையில் நான்கில் மூன்று பகுதி, நமது நகரங்களில் வாழக்கூடிய அபாயம், இந்தியாவிலேயே தமிழ்நாட்டிற்கு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மஹாராஷ்டிராவைவிட, ஆந்திராவைவிட, மேற்குவங்கத்தைவிட, அடுத்த 2020 ஆம் ஆண்டில் 100-க்கு 75 தமிழர்கள் நகரப்புறங்களிலே வாழ்வார்கள் என்று சொல்லுகிறார்கள். நகர்ப்புற வாழ்க்கையை மேம்படுத்துகின்ற பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

ஒரே ஒரு கோரிக்கையைமட்டும் நான் பதிவுசெய்ய விரும்புகிறேன். நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். நகரங்களிலே குடிநீர் கொடுப்பதற்கான அந்த

மின்கட்டணத்தை, ஒரு unit-க்கு commercial rate 5 ரூபாய் 50 காசுகள் என வாங்குகிறார்கள். அதைக் குறைக்க வேண்டும். அதை domestic consumption ஆக, வீட்டு வசதிக்காகப் பயன்படுத்துகிற மின்சாரமாக அதை நினைக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீண்ட நெடிய தூரம் தண்ணீர்க் குழாய்களின்மூலம் கொண்டுவருகின்ற திட்டத்தை அமல்படுத்தி வருகிறார்கள். இப்போது, நம்முடைய நண்பர் திரு. சி. ஞானசேகரன்கூட, ஒகேனக்கல்லிலிருந்து தண்ணீர் கொண்டுவரச் சொல்லுகிறார். என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குத் தாமிரபரணியிலிருந்து தண்ணீர் வருகிறது. ஆனால், வருகின்ற வழியிலே என்ன நடக்கிறதென்று சொன்னால், அந்த 5 pumping station-ஐக் கடந்து வரவேண்டியிருக்கிறது. இந்த 5 pumping station-லே எப்பொழுதும், ஏதாவது ஒரு Power station-லே power failure இருக்கிறது. ஆகவே, 8 மணி நேரம், 10 மணி நேரம் ஒட்டுமொத்தமாகக் கணக்குப் பார்த்தால், என்னிடம் இருக்கின்ற புள்ளிவிவரங்களின்படி ஒரு மாதத்திற்கு 100, 500 மணி நேரம் அங்கே குடிநீர் விநியோகம் நடப்பதில்லை. எனவே, இந்த pumping செய்யப்படுகின்ற இடங்களிலெல்லாம் ஜெனரேட்டர் வசதி வேண்டும். ஏனென்று சொன்னால், ஒரு இடத்திலே pumping failure என்று சொன்னாலும்கூட, வழிநெடுக இருக்கின்ற அத்தனை இடங்களிலும் மின்சாரம் இல்லாத காரணத்தினால், அந்தக் குடிநீர் விநியோகம் சுணக்கமாகிறது.

இறுதியாக ஒரு கோரிக்கையைமட்டும் நான் வைத்து விடைபெற எண்ணுகிறேன். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இந்த ஊராட்சி ஒன்றியம், நகராட்சி நிருவாகம், இதற்காகப் பணியாற்றுகின்ற அதிகாரிகளுடைய வடிவத்தை, தயவுசெய்து அரசு மாற்றியமைக்க வேண்டும். ஏனென்று சொன்னால், பல்வேறு ஊராட்சிமன்றங்களுக்கும், நகரமன்றங்களுக்கும் பணிக்கு வந்திருக்கின்ற அந்த மக்கள் பிரதிநிதிகள், ஒரு புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு நிருவாக அனுபவம் இல்லை. அவர்களை வழி நடத்தவேண்டிய பொறுப்புகூட, இந்த Commissioners—Panchayat Union Commissioner, Municipal Commissioner, பேரூராட்சியினுடைய நிருவாக அதிகாரிகளுக்கு இருக்கிறது. இந்தப் பேரூராட்சி மன்ற நிருவாக அதிகாரிகளுக்கெல்லாம் என்ன தகுதிகள் என்றே எங்களுக்கு விளங்கவில்லை. 6 வருடம், 7 வருடங்களுக்கு முன்னால் Bill Collector ஆக இருந்தவர்கள், இப்பொழுது மிகப் பெரிய பேரூராட்சிக்கு நிருவாக



அதிகாரிகளாக இருக்கிறார்கள். வரக்கூடாது என்பது என்னுடைய வாதம் அல்ல. ஆனால், வளர்ந்து வருகின்ற சூழ்நிலையிலே, ஒவ்வொரு நகரத்தில் இருக்கின்ற பிரச்சினைகள், மிகச் சிக்கலான பிரச்சினைகளாக இருக்கின்றன. கணினிமயமாக வேண்டுமென்று சொல்லுகிறோம். அதையெல்லாம் இவர்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள்? நேரடியாக அவர்களைப் பணியமர்த்தக்கூடிய ஒரு Service—Tamil Nadu Panchayat Service, Tamil Nadu Municipal Service, இதைப்போன்ற இரண்டு வேலை அமைப்புகளை உருவாக்கி, இங்கேயும், நம்முடைய காவல் துறைக்கு, வருவாய்த் துறைக்கு நேரடியாக ஆள் எடுப்பதுபோல, நகராட்சி நிருவாகத்திற்கும் நேரடியாக ஆள் எடுக்க வேண்டும். ஏறக்குறைய பாதி இடங்களுக்கு மேலே, Municipality-களிலே ஆணையாளர்கள் இல்லை. எங்கள் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், 3, 4 நகராட்சிகளுக்கு ஆணையாளர்கள் இல்லை. நகரப் பஞ்சாயத்துகளுக்கு நிருவாக அதிகாரிகள் இல்லை. இதையெல்லாம் எப்பொழுது நிறைவேற்றப் போகிறோம்? ஆள் எடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆள் எடுப்பதற்கு இன்னும் ஓராண்டு ஆகும். அதுவரை அந்த நிருவாகம் தூங்க வேண்டுமா? நம்முடைய நகரமன்ற நிருவாக ஆணையத்திடமிருந்து, நம்முடைய தலைமைச் செயலகத்திலிருந்து பெற்றுக்கொடுக்க வேண்டிய நபர்களை நீங்கள் உடனடியாகப் பெற்றுக்கொடுத்து, அந்தக் காலியிடங்கள் இல்லாமல் பார்த்துக்கொள்ளக்கூடிய தற்காலிக முறைகளையாவது நீங்கள் உடனடியாகச் செய்யவேண்டும். எனவே, பல சுமைகளுக்கிடையிலே, பல தேவைகளுக்கிடையிலே இந்த உள்ளாட்சித் துறையை வழிநடத்திச் செல்லுகின்ற நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், அவரோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற நம்முடைய நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகளையும் நெஞ்சாரப் பாராட்டி பணி தொடரவேண்டுமென்று வாழ்த்தி அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி. (குறுக்கீடுகள்) Time ஆகிக்கொண்டிருக்கிறது. என்ன இப்போது? (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-05

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, கடந்த கால ஆட்சியாளர்களால் சீதனமாக விட்டுச் சென்றது 58,000 கோடி ரூபாய் கடன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இ.ஏ.பி. சிவாஜி, கொஞ்சம் இருங்கள். சொல்லுங்கள் என்ன சார், (குறுக்கீடுகள்) முனைவர் தம்பிதுரை. (குறுக்கீடு) மைக் கொடுப்பார்கள், நான் உங்கள் பெயரைச் சொல்லியாகி விட்டதல்லவா?

***முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, சில குற்றச்சாட்டைச் சொன்னார்கள். குறிப்பாக, 2001-லிருந்து 2006-க்குட்பட்ட ஆண்டுகளில், இந்திரா காந்தி நினைவு குடியிருப்பு வீடுகளை ஒதுக்கும்போது 10,000 ரூபாய் பெற்றதாகக் குற்றச்சாட்டு சொல்லியிருக்கின்றார்கள். இது ஒரு மாபெரும் குற்றச்சாட்டாகும். ஆதாரம் இல்லாமல் இப்படிப் பொத்தாம் பொதுவாகச் சொல்வது, இதை அவைக் குறிப்பில் ஏற்ற விரும்புகிறீர்களா? அதை நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பருக்கு நான் ஒரு தெளிவினை ஏற்படுத்த விரும்புகிறேன். நான் என்ன சொன்னேன் என்று சொன்னால், அந்த வீடுகள் எப்படி விநியோகிக்கப்பட்டன என்று பாருங்கள். இப்போது ஒரு ஊருக்கு 4 வீடுகள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில ஊர்களுக்கு... (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள். திரு. தம்பிதுரை, நீங்கள் உட்காருங்கள். அனுமதியில்லை, உட்காருங்கள். என்னைப் பார்த்துப் பேச வேண்டும்; அவரிடம் பேசக்கூடாது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அதாவது, என்னுடைய குற்றச்சாட்டை நீங்கள் தயவுசெய்து படிக்க வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் ஐம்பது வீடுகள், நூறு வீடுகள் என்று கூட்டம்



கொடுத்திருக்கின்றார்கள். சில இடங்களில் 10,000 ரூபாய் கூட்டமாகக் கொடுத்திருக்கின்றார்கள். சில இடங்களில் 10,000 ரூபாய் வாங்கிக்கொண்டு கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருக்குமா என்றுதான் சொன்னேனேயொழிய, நான் கொடுத்ததாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருக்குக் கிடைத்திருக்கிற தகவலை அவர் சொல்லியிருக்கிறார். அதிலே specific-ஆக யார்மீதும் குற்றச்சாட்டு இல்லை. அவருக்குக் கிடைத்த தகவலை அவர் சொல்லியிருக்கிறார், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோது கூறியது, நிருவாகத்திலே ஏற்பட்ட மிகப் பெரிய குறைபாடு என்ற வகையிலே வரும். குற்றச்சாட்டுச் சொல்லக் கூடாது என்பது, ஒரு அமைச்சர் செய்தார், ஒரு சட்டமன்ற உறுப்பினர் செய்தார், இன்னார் இலஞ்சம் வாங்கினார்கள் என்று சொன்னால்தான் அந்தக் குற்றச்சாட்டு இங்கு கூறக்கூடாதது. நிருவாகத்திலே வருகிற குறைபாடுகளை, கடந்த காலத்திலே நடைபெற்ற குறைபாடுகளை, அப்பொழுது குற்றச்சாட்டாகக் கருதப்படக்கூடிய அளவுக்கு நடைபெற்றதாக அவர் கேள்விப்பட்டதைச் சொல்வது, நிருவாகத்தை ஒழுங்குபடுத்துவதற்காகச் சொல்வதே தவிர, அது ஆளுங்கட்சியையோ, எதிர்க்கட்சியையோ அமைச்சரையோ குற்றஞ்சாட்டி நேரடியாகச் சொல்வது அல்ல. சட்டமன்ற நடைமுறையில் நேரடியாகக் குற்றஞ்சாட்டக் கூடாது என்பதுதான் விதியே தவிர, குற்றங்குறைகளைச் சொல்லக்கூடாது என்பது அல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ.ஏ.பி. சிவாஜி பேசுங்கள்.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, கடந்தகால ஆட்சியாளர்கள் சீதனமாக விட்டுச்சென்றது, 58,000 கோடி ரூபாய் கடன். அந்த 58,000 கோடி ரூபாய் கடன் சுமையைத் தன்னுடைய தோளிலே சுமந்துகொண்டு, நிதிநிலை அறிக்கையிலே தமிழகத்தின் வளர்ச்சிப் பணிகளையெல்லாம் வரிசையிட்டு, தமிழர்களின் வாழ்வாதாரத்தை எல்லாம் வலிமைப்படுத்தி, தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உருவாக்குவதற்கான முயற்சியிலே, முயற்சிக்கு முன்னுரை எழுதி, வரியில்லாத பட்ஜெட்டையும் வழங்க

முடியும் என்று வரலாற்றில் பதிவு செய்திருக்கின்ற எங்களது முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) வரியே இல்லாத பட்ஜெட் என்று சொன்னாலும்கூட, வரிக்கு வரி அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாட்டினை ஆழப் பதித்திருக்கிற நிதி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், திரண்டுவரும் இளைஞர் எழுச்சியும் பெருகிவரும் மக்கள் பேராதரவும், வளர்ந்துவரும் மக்கள் சக்தியையும் கண்டு, காணப் பொறுக்காது, ஒரு நாள், ஒரு கருப்புச் சட்டத்தின்மூலமாகச் சென்னை மாநகராட்சி மேயர் பதவியைப் பறித்தபோது, ஒரு மாநகராட்சியின் பதவியைத்தானே பறிக்க முடியும் என்று தூக்கி எறிந்துவிட்டு, இன்று ஆறு மாநகராட்சிகளை வழிநடத்துகிற (மேசையைத் தட்டும் ஒலி) 29 மாவட்ட ஊராட்சிகள், 152 நகராட்சிகள், 561 பேரூராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 12,618 கிராம ஊராட்சிகள் ஆகியவற்றை வழிநடத்துகின்ற உள்ளாட்சித் துறை அமைச்சராக உயர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி), இன்று, நாட்டில் உள்ளாட்சித் துறையில் ஒரு role model அமைச்சராக, தனித் தன்மையுடைய அமைச்சராக, ஒரு பரிமாணத்தைப் படைத்திருக்கிற தளபதி அவர்களுக்கும், என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, பேசும் வாய்ப்பினை அளித்த பேரவையின் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவீரன் நெப்போலியன், தனக்கு எதிரேயிருக்கிற ஒரு இலட்சம் போர் வீரர்களை, அணி வகுத்து நிற்கிற அந்தப் போர் வீரர்களைப் பார்த்து போர் முழக்கம் செய்தான். "இரண்டு இலட்சம் போர் வீரர்களே!" என்று சொன்னான். பக்கத்திலே இருந்த தளபதி, "அங்கே ஒரு இலட்சம் பேர்கள்தானே இருக்கிறார்கள்; நீங்கள் இரண்டு இலட்சம் பேர்கள் இருப்பதாக விளிக்கிறீர்களே?" என்று கேட்டபோது, நெப்போலியன் சொன்னான்: "போர் வீரர்கள், எனக்கு எதிரே இருப்பவர்கள், ஒரு இலட்சம் பேர்கள்தான்; நான் ஒப்புக்கொள்கிறேன்; ஆனால், அவர்களை வழிநடத்துகின்ற இந்த நெப்போலியன் ஒரு இலட்சம் போர் வீரர்களுக்குச் சமமானவன் என்பதால், இரண்டு இலட்சம்" என்று குறிப்பிட்டேன் என்றான். (மேசையைத் தட்டும் ஒலி)



அதைப்போல்தான், இந்த மன்றத்திலே நாங்கள் 95 உறுப்பினர்கள், எங்கள் முதல்வர் நீங்கலாக இருந்தாலும், இந்த 95 உறுப்பினர்களுக்கும் இணையாக, சமமாக எங்களை வழிநடத்துகிறவர்தான் எங்களுடைய முதல்வர் என்கின்ற பெருமையோடு, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெருமையே எங்களுக்கு வலிமையைத் தருகிறது என்பதை இந்த மன்றத்திலே நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், கவிதை படித்தார்கள்; மிக நன்றாக இருந்தது. "பனியில்லாத மார்கழி, படையில்லாத மன்னவன், சுவர் இல்லாத ஓவியம், கடல் இல்லாத ஓடம், காசு இல்லாத கஜானா" என்று சொன்னார்கள். அந்த வரியோடு, "வரியில்லாத பட்ஜெட்" என்ற இந்த வரியையும் நீங்கள் சேர்த்துக்கொள்ளுங்கள்; நன்றாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த நிலைமைக்கு, இந்தத் தமிழகத்தைக் கொண்டு வந்து நிறுத்தியவர்கள் யார்? 58 ஆயிரம் கோடி ரூபாய் கடன் சுமையோடு, காலியான கஜானாவை விட்டுச் சென்றவர்கள் யார்? இந்தக் காலியான கஜானாவை வைத்துக்கொண்டுதான் எங்களது முதல்வர் அவர்கள், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே, ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 58 ஆயிரம் கோடி ரூபாய் கடன் சுமையைத் தன்னுடைய தோளிலே சுமந்துகொண்டுதான், விவசாயிகள் பட்டிருந்த 7,000 கோடி ரூபாய், கூட்டுறவுத் துறையின் மூலமாகப் பெற்றிருந்த கடனையும், வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்தவர் எங்களது முதல்வர் என்பதையும், வீட்டுக்கு வீடு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இல்லத்தரசிகளுக்கெல்லாம் இலவசமாக gas stove-ம், இலவச எரிவாயு இணைப்பும் அளிப்பவர்தான் எங்களது முதல்வர் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காலியான கஜானாவை வைத்துக்கொண்டு, வரியில்லாத ஒரு பட்ஜெட்டை, இந்த நாட்டிலே தலைவர் கலைஞர்தான் வழங்க முடியும் என்கின்ற உண்மை, விந்தியத்தைத் தாண்டி, பரந்து விரிந்திருக்கின்ற இந்தியத் துணைக் கண்டத்திற்கே தெரிந்திருக்கிறது. அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும் தெரிந்திருக்கிறது. இன்று Hindu-க்கும் தெரிகிறது; Indian Express-க்கும் தெரிகிறது; எல்லாப் பத்திரிகைத் துறைக்கும் தெரிகிறது; உங்களுக்கும் புரியும். தூங்குகின்றவர்களை எழுப்பலாம்; ஆனால், தூங்கிக்

கொண்டிருப்பதைப்போல நடிப்பவர்களை எழுப்ப முடியாது என்பது எங்களுக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்று, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பாராட்டியதைப்போல, இப்போது பல்வேறு சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள், தளபதி அவர்கள். கடந்த காலங்களில் உள்ளாட்சி அமைப்புகளில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், துணைத் தலைவர்கள், பிரதிநிதிகள் எல்லாம், தங்களுடைய அதிகார வரம்பு என்ன, தங்களுடைய பணிகள், செயல்பாடுகள் குறித்து, ஒரு தெளிவின்மையோடு இருந்த நிலையை மாற்றி, அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று, உள்ளாட்சித் துறை அமைச்சராகத் தளபதி அவர்கள் பொறுப்பேற்றதும், முதல்முறையாக முழுமையான பயிற்சிகள், முறையான பயிற்சிகள், தொடர் பயிற்சிகளை அளித்து, மனிதவள மேம்பாட்டுப் பயிற்சி என்று, மிகவும் பயனுள்ளதாகவும், பலனுள்ளதாகவும் அளித்து, அதிலே பங்கேற்றவர்களெல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்திலே, உங்களிடத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-15

தளபதி அவர்கள், உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தி, அங்கே மாவட்ட ஆட்சியர், எல்லாத் துறைகளினுடைய உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், பிரதிநிதிகள் என அனைவரையும் கூட்டி, அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு, அந்த உள்ளாட்சி அமைப்புகளிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய அதிகாரம் என்ன, எங்கே தொய்வு ஏற்பட்டிருக்கிறது, அதற்கு எப்படித் தீர்வுகாண வேண்டும் என்று கண்டறியக்கூடிய வாய்ப்புகளை எல்லாம் வழங்கி, தொடர்ந்து சம்பந்தப்பட்ட அமைச்சர்களோடும், அதிகாரிகளோடும் கலந்தாய்வுகளை நடத்தினார்கள்.



உதாரணத்திற்கு, ஒரு மின் கம்பம் புதியதாக அமைப்பதற்கு, ரூபாய் 12,000 கட்டணம் கட்ட வேண்டிய நிலை இருந்தது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இந்தத் தகவலை அறிந்து, உடனே சம்பந்தப்பட்ட மின்சாரத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்தாய்வு செய்ததன் பயனாக, விவாதித்ததன் விளைவாக, மின்சாரத் துறை மானியத்தின்போது, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், ஒரு மின் கம்பம் அமைப்பதற்கு ரூபாய் 12,000 கொடுக்க வேண்டிய அந்த நிலையிலிருந்து, ஒரு கம்பத்திற்கு ரூபாய் 9,500 ஆகக் குறைத்து அறிவித்தார் என்பதையும் தெரிவித்து, இந்த உள்ளாட்சித் துறைக்கே ஒரு role model-ஆக விளங்கும் தளபதி அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் ஊராட்சிகளில் கடந்த 10 வருடங்களாகத் தேர்தல் நடத்தாமலும், அப்படியே தேர்தல் நடந்தாலும், அவர்கள் பதவியை ஏற்றுக்கொள்ள சூழல் இல்லாமலும், அந்த ஆதி திராவிடர் சமுதாயத் தலைவர்கள் பதவியேற்க முடியாமல் இருந்த நிலையை மாற்றி, அந்தச் சூழலை மாற்றி, இன்று அமைதியான முறையிலே உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, ஜனநாயகத்தைப் பாதுகாத்து, சமூக நீதியைக் காப்பாற்றிய தலைவர் கலைஞர் அவர்களுக்கு மீண்டும் வணக்கத்தையும், நன்றியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தேனி மாவட்டத்திலே, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவராக, ஒரு ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்தவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலையில், தி.மு. கழகத்திற்கு அறுதிப் பெரும்பான்மை இருந்தும், அந்தக் கழகத்திலே ஆதி திராவிடர் பிரதிநிதி இல்லாத காரணத்தினால், அந்த ஆதி திராவிடர் சமுதாயம் ஒரு பிரதிநிதித்துவத்தை இழந்துவிடக் கூடாது என்பதற்காக, அ.தி.மு.க. உறுப்பினரைத் தலைவராக்கி, 'சமூக நீதிக் காவலர்' என்பதை, மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுவாக, ஊராட்சி ஒன்றியங்களிலே நிரப்பப்பட வேண்டியதும், நியமனம் செய்யப்பட வேண்டியதுமான பணிக் காலியிடங்கள் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக, ஒன்றியங்களில் பொறியாளர் காலிப் பணியிடம் பரவலாக உள்ளது. வளர்ச்சிப் பணிகள் விரைந்து

நிறைவேற்ற முடியாமல் காலதாமதம் ஆகிறது. முதல்வர் அவர்கள், திட்டங்களைத் தீட்டுகிறார்; சட்ட வடிவும் கொடுக்கிறார்; உரிய நிதியை உடனே ஒதுக்குகிறார்; கையொப்பம் இடுகிறார்; கையொப்பமிட்ட மை காய்வதற்கு முன்பே, திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற முனைப்போடு செயல்படுபவர் நம்முடைய முதல்வர் என்பதால், முதல்வரின் வேகத்திற்கு விரைந்து திட்டங்கள் நிறைவேற்றிட, முழுமையடைய வேண்டுமென்றால், இந்த ஒன்றியப் பொறியாளர் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும் என்பதை இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று, 'இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்; இந்தத் திட்டம், மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து ஊரகப் பகுதிகளில் தொகுப்பு வீடுகளைக் கட்டுகின்ற திட்டம்தான், 'இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்'. இந்தத் திட்டத்திற்குத் தொகுப்பு வீடு ஒன்றுக்கு 37,000 ரூபாய்தான் நிதி ஒதுக்கப்படுகிறது. தற்பொழுதுள்ள சந்தை மதிப்பீட்டில், ரூபாய் 50,000-லிருந்து ரூபாய் 53,000 வரை தேவைப்படுகிறதென்று சொல்கிறார்கள். இந்த உபரியாகத் தேவைப்படுகின்ற ரூபாய் 16,000-ஐ, மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து வழங்கினால்மட்டுமே, இந்தத் திட்டம் முழுமையாக வெற்றி பெறமுடியும் என்பதை இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

அதேபோல, இந்த இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தில், ஒன்றியங்களிலுள்ள ஊராட்சியின் மக்கள் தொகை அடிப்படையில், தற்பொழுது மாவட்ட ஆட்சியர் தொகுப்பு வீடுகளை ஒதுக்கீடு செய்கின்றார். இதன் காரணமாக, ஒவ்வொரு ஊராட்சிக்கும், நான்கு அல்லது ஐந்து வீடுகளே கிடைக்கின்ற காரணத்தால், எந்த ஊராட்சியையும் முழுமையாகத் திருப்திப்படுத்த முடியவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் போல, ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட ஊராட்சிகளுக்கு மொத்தமாக ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் தொகுதியிலே மட்டுமல்ல; திருவள்ளூர் மாவட்டத்திலே மட்டுமல்ல; தமிழகம் முழுவதும் மின்சாரக் கட்டணம் கட்டுவதற்கு வேண்டிய நிதி வசதி இல்லாத ஊராட்சிகள் ஏராளமாக உள்ளன. இப்படிப்பட்ட நிதி ஆதாரம் இல்லாத ஊராட்சிகளில்



மின்சாரக் கட்டணம் இரத்து அல்லது மின்சாரக் கட்டணச் சலுகை அல்லது மின்சாரக் கட்டண மானியம் என்று எந்த வகையிலாவது சலுகை அளித்து, அந்த நலிந்த ஊராட்சிகளுக்கு நிரந்தரமாக ஒளி கிடைத்திட வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அதேபோன்று, செங்கை-அண்ணா மாவட்டம் என்ற ஒருங்கிணைந்த மாவட்டத்தைத் திருவள்ளூர் மாவட்டம் என்று தனியாகப் பிரித்த, அதன் சிருஷ்டிகர்த்தாவும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். அதுமட்டுமல்ல; திருவள்ளூர் மாவட்டத்தைப் பிரித்து, அதற்கு ஒரு மாவட்ட ஆட்சியர் திட்ட வளாகத்தை அமைத்து, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டியவரும் நீங்கள்தான். அடிக்கல் நாட்டியதோடுமட்டுமல்லாமல், 1996-2001-க்குள் அந்தக் கட்டடம் முடிக்கப்பட்டு, சோழர்காலக் கட்டடக் கலையை நினைவுப்படுத்துகின்றவகையிலே, அந்த எழிலார்ந்த மாவட்ட ஆட்சியர் மாளிகையினை அமைத்து, திறந்துவைத்தவரும் நீங்கள்தான். அதனால், அந்த மாவட்ட ஆட்சியர் திட்ட வளாகத்திற்குள்ளேயே போதுமான இடம் இருக்கிறது. கட்டமைப்பு வசதிகள் இருக்கின்றன. ஆகவே, அங்கே திருவள்ளூர் மாவட்டத்திற்கு பொது மருத்துவமனையுடன் மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைத்திட வேண்டுமென்ற இந்த வேண்டுகோளை உங்களிடத்திலே வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மாவட்டத் தலைநகரான திருவள்ளூரில், பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க, அனைத்துக் கட்டமைப்புப் பணிகளும் ஆய்வு செய்யப்பட்டு, நிருவாக ஒப்புதல், நிதி ஒதுக்கீடு என்ற இறுதி நிலையில் உள்ளது. இந்த நிதியாண்டே இந்தத் திட்டத்தைத் தொடங்கி, திருவள்ளூர் மாவட்டத்திற்கு, பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமைத்துத்தர வேண்டும் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்

அதேபோன்று, திருவள்ளூர் தொகுதிக்குட்பட்ட காக்களூர் தொழிற்பேட்டையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று அமைத்திட வேண்டும். ஏனென்றால், அது சென்னைக்கு மிக அருகில் உள்ளது. தேசிய நெடுஞ்சாலையும், அதேபோன்று மாநில நெடுஞ்சாலையும் இரயில் போக்குவரத்தும் ஒருங்கே அமைந்துள்ளதால், இந்த ஆண்டே தகவல் தொழில்நுட்பப்

பூங்காவைத் திருவள்ளூர், காக்களூரில் அமைத்திட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த அவையிலே, இதற்கு முன்னாலே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் நம்முடைய சபாநாயகர்மீது அ.தி.மு.க. உறுப்பினர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்ட பின்னாலும், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் பெரும்பான்மை பலத்தோடு நிறைவேறிய பின்னாலும், இரண்டு நிதிநிலை அறிக்கைகளைத் தலைவர் கலைஞர் அவர்கள், இங்கே அறிமுகப்படுத்திய நிலையிலும், மைனாரிட்டி அரசு என மீண்டும் மீண்டும் ஓலமிடும் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். எப்போதுமே நீங்கள் சட்டமன்றத்தையே நினைத்துக் கொண்டிருக்காதீர்கள். அ.தி.மு.க. உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தையும் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். அங்கே நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. என்று சொல்வதற்கு, அம்மா என்று சொல்வதற்கு ஒரு ஆள் இருக்கிறாரா என்று நினைத்துப் பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத்திலே அ.தி.மு.க.-விற்குப் பெயர் சொல்ல பிள்ளை இருக்கிறதா என்று நினைத்துப் பாருங்கள். (குறுக்கீடுகள்) ஓர் அரசு, ஜனநாயகத்திலே மைனாரிட்டி அரசாக இருக்கலாம். மக்கள் விரோத அரசாக இருக்கக்கூடாது.... (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவாஜி, கொஞ்சம் இருங்கள். Point of order கேட்கிறார். (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. செங்கோட்டையனுக்கு மைக் கொடுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2004 நாடாளுமன்றத் தேர்தலை ஒப்பிட்டுக் காட்டுகிறார். இதே நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபோதும், (குறுக்கீடுகள்) பேசும்போது ஏன் குறுக்கிடுகிறீர்கள்? திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு இருந்த நேரத்திலும், நீங்களும் ஜீரோதான் வாங்கினீர்கள் நாடாளுமன்றத்தில் என்பதை மறந்துவிடக் கூடாது.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மைனாரிட்டி, மைனாரிட்டி என்று நாங்கள் சொல்லவே இல்லையே? ஜனநாயகத்தில் மைனாரிட்டி என்பதும், மெஜாரிட்டி என்பதும், தவிர்க்க முடியாதது. மாறி மாறி வருவது.



ஆனால், நீங்கள் நன்றாக யோசனை செய்து பாருங்கள். நாடாளுமன்றத்தில் இப்போது உங்களுடைய நிலை என்ன? அம்மா என்று சொல்வதற்கு ஆள் இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** ஒரு மைனாரிட்டி அரசாக இருக்கலாம், ஜனநாயகத்தில். ஆனால், மக்கள் விரோத அரசாக இருக்கக்கூடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத் தொடர்ந்து நீங்கள் சொல்லக்கூடாது என்கிறார். வேறு ஒன்றும் இல்லை.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மைனாரிட்டி அரசாக இருக்கலாம்; ஒரு பினாமி அரசாகத்தான் மக்களாட்சியில் இருக்கக்கூடாது என்பதை மட்டும் சொல்லி நிறைவுசெய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது என்னைப் பேச அழைத்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Sir, எல்லோருமே குறிப்பிட்ட நேரத்திற்குள் பேசி முடிக்கிறார்கள். உங்களுக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குள் உரையை முடித்துவிடுங்கள். 20 நிமிடங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** எங்களுடைய நிறுவனத் தலைவர், தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எங்களுடைய சின்ன அய்யா அவர்களுக்கும், எங்களுடைய கட்சியினுடைய தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை என்பது தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களுடைய அடிப்படைத் தேவைகளையும், கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கியும், கண்காணித்தும் வருகிற சிறப்பான துறையாகும். இந்தத் துறைக்குச் சிறப்பாகச் செயலாற்றக்கூடிய துடிப்பாகச் செயலாற்றும் அமைச்சராக, நம்முடைய தளபதி அவர்களைத் தேர்வு செய்து, இங்கே செயலாற்ற வழிவகுக்கக் காரணமாக இருந்த முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக, ஏட்டாக் கனியாக இருந்துவந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதற்கு உயர்நிலைக் குழுக்களை அமைத்து, பூர்வாங்கப் பணிகள் தொடங்கிவிட்டதென அறிவித்தது, இன்றைக்கு மக்கள் மத்தியிலே பரபரப்போடு பேசப்படுகின்ற செய்தி என்பது நாடறிந்த ஒன்றாகும்.

அனைத்து மாவட்டங்களுக்கும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் சென்று, அங்கு உள்ளாட்சி அமைப்புகளில் இருக்கிற பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து, அங்கே அரசுத் துறை உயர் அதிகாரிகளும், மாவட்ட அளவிலான அதிகாரிகளும், எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டு, அங்கே அவர்களோடு சிறப்பாகச் செயலாற்றினார். இந்தத் துறை சிறப்பாகப் பணியாற்றுவதற்கு முத்தாய்ப்பாக ஓர் உதாரணத்தைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த ஆட்சியிலே 2001 முதல் 2006 வரையிலே நிலுவையிலிருந்த 1.54 இலட்சம் பணிகளில், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்பேற்ற 10 மாத காலத்திற்குள்ளாக, ஒரு இலட்சத்து, 49 ஆயிரம் பணிகளை முடித்து, உள்ளாட்சியிலே நல்லாட்சி செய்து வருகிறார். அதற்காக, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாது, சமத்துவத்தைக் கொண்டுவரும் நோக்கத்திலே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய இடங்களில், கடந்த ஆட்சியிலே தேர்தலை நடத்துகிறோம் என்று சொல்லி, தேர்தலை நடத்தி அது ஒரு மாய்மாலமாக இருந்த



நிலையை மாற்றி, உண்மையிலேயே அந்த ஆதி திராவிட சகோதரர்களுக்கு அங்கே... (குறுக்கீடு) கத்தினால் முடியாது; உண்மையைச் சொல்கிறோம். சென்ற முறை சட்டமன்றத்திலே இருந்தோம். நாங்கள் அதையெல்லாம் பார்த்தோம். அதனாலே இங்கே பேசுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி.

**திரு. கி. ஆறுமுகம்:** தேர்தலை நடத்த முடியாத நிலையை மாற்றி, இதனைச் சவாலாக ஏற்று, ஊராட்சிகளில் தேர்தலை நடத்தி, அதில் வெற்றி பெற்ற ஆதி திராவிடர் தலைவர்களையும் அழைத்து, அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களையும் அழைத்து, அனைத்துச் சமுதாயத் தலைவர்களையும் அழைத்து, 13-11-2006-லே சமத்துவப் பெருவிழா நடத்திய பெருமை, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைச் சாரும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து ஊராட்சிகளையும் மேம்படுத்தும் திட்டமாக அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு ஊராட்சிக்கும் 20 இலட்சம் ரூபாய் வழங்கி, அதிலே நூலகக் கட்டடங்களைக் கட்டுதல், குடிநீர் குளங்களைச் சீரமைத்தல், மயானச் சாலைகள் மேம்பாடு செய்தல், சாலை வசதி செய்தல், தெரு விளக்குகள் அமைத்தல், இளைஞர்களுக்கான விளையாட்டுத் திடலை அமைத்தல், பெண்களுக்கான பல்வேறு திட்டங்களை வழங்குதல் எனப் பல்வேறு பணிகளைத் தொடங்கி, இப்போது கிராமங்களிலே மிகப் பெரிய வரப் பிரசாதமான திட்டமாக அது விளங்குகிறது. அதனாலே, நிரந்தரமான நூல் நிலையங்கள், இன்னும் 5 ஆண்டுகளிலே அத்தனை ஊராட்சிகளுக்கும் வருகிற வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது, நம்முடைய உள்ளாட்சித் துறை என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களைப் பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. என்னுடைய தொகுதியிலே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம். திரு. அரி, point of order கேட்கிறார். திரு. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். கடந்த உள்ளாட்சிமன்றத் தேர்தலிலே நடைபெற்ற தேர்தல் கூத்து, பசசைத் துரோகம் என்று அவருடைய தலைவர் சொல்லி இருக்கிறாரே, அதைப்பற்றி அவர் என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-30*

**திரு. கி. ஆறுமுகம்:** கூட்டணி பற்றியெல்லாம் எங்களுக்கும் தெரியும். எங்கள் கட்சிக்கு உள்ள பிரச்சினையை நீங்கள் இங்கே சட்டமன்றத்திலே விமர்சிப்பதை, அரசியலாக்குவதை, நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இது 'மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிற கதையாக' இருக்கிறது உங்கள் கதை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே மாமல்லபுரத்தில், சிற்பக் கலை தழைத்தோங்குவதற்காக, சிறப்புப் பூங்கா அமைப்பதற்காக, பொதுமக்கள் சார்பிலும், சிற்பக் கலையினர் சார்பிலும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், என்னுடைய தொகுதியில், மாமல்லபுரத்தில் 2.56 கோடி ரூபாயில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு, குடிசை மாற்று வாரியத்தின்மூலம், 2.8 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு நவீன இறைச்சிக் கூடம் கட்டுவதற்கு 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், நான் வசிக்கின்ற மறைமலைநகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு 3.56 கோடி ரூபாயும், அதேபோன்று குடிநீர்த் திட்டத்திற்கு 2.56 கோடி ரூபாயும் ஒதுக்கியிருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் வழங்குவதற்காக ஆய்வுக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு, வெகுவிரைவில் அரசுக்குப் பரிந்துரைகளை அளித்து, உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படவேண்டிய 29 அதிகாரங்களையும் வழங்க வழிவகை காணவேண்டும். மேலும், மத்திய, மாநில அரசுகள், உள்ளாட்சிகளுக்கு வழங்க வேண்டிய அதிகாரங்கள் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உடனடியாக



ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆங்கிலத்திலே சொல்வார்கள், Treble 'F' என்று. Functions, Functionaries and Finance என்று சொல்வார்கள். பணிகள், பணியாளர்கள், மற்றும் நிதி அதிகாரங்கள் ஆகியவற்றை உடனடியாக வழங்குவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள். நீங்கள் பேசுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** இப்பொழுதிருக்கின்ற பல்வேறு கட்டடங்களை, உள்ளாட்சி அமைப்புகள்தான் கட்டமைப்பு வசதிகளைச் செய்துகொண்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மிகக் குறைவாக இருக்கிற நிலைமை இருக்கிறது. அதையும் மீறி, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள், 1.49 கோடி ரூபாய்க்குப் பணிகளை முடித்திருக்கிறார்கள். அவற்றை எப்படியாவது செய்து முடிக்கவேண்டுமென்று ஒப்பந்ததாரர்கள் அந்த வேலைகளைச் செய்திருக்கிறார்கள். இதனால், வருங்காலங்களில் கட்டடங்கள் கட்டுவதிலே, சாலைகள் போடுவதிலே, மதிப்பீடுகள் செய்யும் பணிகளிலே குந்தகம் ஏற்படுகின்ற நிலை இருக்கிறது. ஏனென்று சொன்னால், ஜல்லி விலை ஏறிவிட்டது; மணல் விலை ஏறிவிட்டது; செங்கல் விலை ஏறிவிட்டது; கூலியும் உயர்ந்துவிட்டது. எனவே, அவர்களுக்குப் பணிகள் வழங்குகின்றபோது மதிப்பீடுகளை, நம்முடைய அரசாங்கம் உயர்த்தித் தரவேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்திற்கு, 37 ஆயிரம் ரூபாயை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அது போதாது. அதைக் குறைந்தது, 60 ஆயிரம் ரூபாயாகவாவது உயர்த்தித் தரவேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கச்சா வீடுகள் கட்டும் திட்டத்திற்கு, நமது அரசாங்கம் 12 ஆயிரம் ரூபாயை வழங்குகிறது. அந்தத் தொகையையும், 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொகுப்பு வீடுகள் திட்டம், ஊராட்சிகளில் மட்டும் இருக்கிறது. பேரூராட்சிகளிலும் வசிக்கின்ற ஏழை எளிய மக்கள், குடிசை வீடுகளில் இருக்கின்றவர்கள் 'எங்களுக்கும் தொகுப்பு வீடுகளைக் கட்டிக் கொடுக்கமாட்டீர்களா?' என்ற ஏக்கத்தோடு எங்களிடம் மனு கொடுத்துக்

கொண்டிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாம் நிலை ஊராட்சி உதவியாளர்களுக்கு, அடிப்படைச் சம்பளம் ரூ.625/-ம், முதல்நிலை ஊராட்சி உதவியாளர்களுக்கு ரூ.1,200/-ம் சம்பளம் வழங்கப்படுகின்றது. இந்தத் தொகை போதாது என்று அவர்கள் கோரி வருகின்றார்கள். அவர்கள் ரூ.3,200/- அடிப்படைச் சம்பளம் வழங்கவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதனை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அனைத்து நிலைகளிலும் சிறப்பாக இருந்தாலும், அது உள்ளாட்சியாக இருந்தாலும், ஊராட்சியாக இருந்தாலும், மாநகராட்சி வரையிலும் இருக்கின்ற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மதிப்பூதியம் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. வெறும் அமர்வுப் படி என்றுமட்டுமே கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்காக, எங்கள் கோரிக்கையாக, ஊராட்சிமன்றத் தலைவருக்கு 2,000 ரூபாயும், ஊராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு 500 ரூபாயும், ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கு 1,000 ரூபாயும், ஒன்றியக் குழுத் தலைவருக்கு 2,000 ரூபாயும், மாவட்ட ஊராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு 2,000 ரூபாயும், மாவட்ட ஊராட்சித் தலைவருக்கு 5,000 ரூபாயும், பேரூராட்சி மன்ற வார்டு உறுப்பினர்களுக்கு 1,000 ரூபாயும், பேரூராட்சி மன்றத் தலைவருக்கு 2,000 ரூபாயும், நகரமன்றத் தலைவருக்கு 5,000 ரூபாயும், நகரமன்ற உறுப்பினர்களுக்கு 2,000 ரூபாயும் வழங்க வேண்டுமென்றும், மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு 3,000 ரூபாயும், மாநகராட்சி மேயர்களுக்கு, மேலே மாடத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கின்ற மேயர் அவர்களுக்கும் சேர்த்து, 10,000 ரூபாயும் மதிப்பூதியம் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்குக் கூட்ட அமர்வுப் படி, இப்பொழுது 25 ரூபாய் கொடுக்கின்றார்கள். அதைக் குறைந்தது 100 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல்: 12-35

அதேபோன்று, இப்போது ஊராட்சிகளுக்கு மிகப் பெரிய சுமையாக இருப்பது, மின் கட்டணம் செலுத்துவது. அந்த மின் கட்டணம் செலுத்துவதிலே, நிதியை அனுப்பும்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே மின் கட்டணத்தை அதிலேயே பிடித்து அனுப்புகிறார்கள்.



அதிலும் குறிப்பாக, சிறிய சிறிய ஊராட்சிகள், ஐந்து இலட்சம் ரூபாய்க்குக் கீழாக வருவாய் இருக்கிற ஊராட்சிகளால் எந்தப் பணிகளும் செய்யமுடியவில்லை. நம்முடைய அரசாங்கம் கொடுத்த புள்ளிவிவரப்படி, இப்போது ஐந்து இலட்சம் ரூபாய்க்குக் கீழாக வருவாய் இருக்கிற அந்த ஊராட்சிகள் எண்ணிக்கை 8,610 என இருக்கிறது. அந்த ஊராட்சிகளுடைய மின் கட்டணத்தை ஒட்டுமொத்தமாக, நம்முடைய தமிழக அரசாங்கமே கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இதுபோன்ற வருவாய் இல்லாத ஊராட்சிகளுக்கு, வருவாய் ஏற்படுத்துகின்ற புதிய திட்டங்களை நம்முடைய அரசாங்கம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ள மக்கள் பட்டியல் எடுப்பது என்பது, இப்போது ஒரு கேள்விக் குறியாக இருந்துகொண்டிருக்கிறது. உண்மையான அந்த வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள் பட்டியலை எடுப்பதற்கான முயற்சியை எடுத்தாலும்கூட, இப்போதுகூட நம்முடைய அரசு அறிவித்திருக்கிற அறிவிப்பிலே, தொகுதியிலே இருக்கிற ஒட்டுமொத்த வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள் பட்டியலின் ஒரு நகலைச் சட்டமன்ற உறுப்பினருக்கும், நாடாளுமன்ற உறுப்பினருக்கும் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது; அது எங்களுக்கெல்லாம் வழங்கப்படவில்லை. அதை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, வறுமைக்கோட்டிற்குக்கீழே இருப்பவர்கள் பட்டியலின் நகலை எங்களுக்கும் அனுப்பினால்--நாங்களும் சுற்றி வருகிறோம் எல்லாப் பகுதிகளிலும்—அதில் உண்மையானவர்கள் யார் என்று கண்டுபிடிக்க எங்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்கும். எனவே, அதையும் வழங்கவேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, வறுமைக்கோட்டினை ஒழிப்பதற்குத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது என்னவென்று சொன்னால், தனியாக அதற்கென்று ஒரு துறையை ஏற்படுத்த வேண்டும். வேலைவாய்ப்பு மற்றும் வறுமை ஒழிப்புத் துறையைத் தனியாக ஏற்படுத்தி, அதற்கு தாராளமான நிதியைக் கொடுத்து, வறுமைக்கோட்டினை ஒழிப்பதற்காகத் தனியாக ஒரு துறையை அமைத்தால்தான், இந்த நாட்டிலே வெகுவிரைவிலே வறுமைக்கோடு ஒழிவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அதேபோன்று,

தமிழகத்தில் ஏழைகள் வாழ்வதுதான் கூரை வீடு, குடிசை வீடு; இதற்கு ஒரு விளக்கு அவசியம் என்று இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. எனவே, கூரை வீடுகள், குடிசை வீடுகளுக்கு வீட்டு வரி இரத்து செய்யப்பட வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நலப் பணியாளர்கள், இப்போது 1,618 பேர்கள், நம்முடைய தமிழக அரசாலே மூன்றாவது முறையாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு முறை இவர்களுடைய நியமனம், கடந்த 1991-லும், 2001-லும் அவர்களுடைய பணிகள் நீக்கப்பட்டுவிட்டன. மூன்றாவது முறையாக நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்று, மூன்று முறை அவர்களுக்குப் பணி வழங்கப்பட்டிருக்கிறது. இனியும் அவர்களுடைய பணி, எந்த அரசு வந்தாலும் நீக்கப்படக்கூடாது என்பதற்காக, அவர்களைப் பணி நிரந்தரம் செய்யவேண்டுமென்று இந்த சமயத்தில் சொல்லி, அவர்களுக்கும் காலமுறை ஊதியம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நீரேற்று நிலையங்களில் பணியாற்றுகின்ற, Over Head Tank-களில் பணியாற்றுகின்ற, அந்த இயக்குபவர்கள், பணி நிரந்தரம் கேட்கிறார்கள், சம்பள உயர்வு கேட்கிறார்கள். அதேபோன்று, பம்பு ரிப்பேர் செய்கின்ற தொழிலாளர்களும் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களும், ' பணி நிரந்தரம், பணி உயர்வு கேட்கிறார்கள். எனவே, அவர்களுக்கும் அவற்றினைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முழு சுகாதார இயக்கம், இப்போது தனி நபர் கழிவறை கட்டுவதற்கு எடுத்துள்ள முயற்சிகள் வரவேற்கத்தக்கது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், அது 10 முதல் 15 விழுக்காடு மட்டுமே இருக்கிறது. ஆனால், அண்டை மாநிலமான கேரளா, இப்போது 90 சதவீதத்தை எட்டியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களைப் போன்று நாமும் எட்டவேண்டுமென்று சொன்னால், இப்போது தனி நபர் கழிப்பிடம் கட்டுவதற்கு ஊக்கத் தொகை ரூபாய் 1,200 தான் நாம் வழங்குகிறோம். அதை ரூபாய் 2,500 ஆக வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கிராம சபைக் கூட்டம்; ஊராட்சிகள் சிறப்பாகச் செயல்பட, பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பது மற்றும் புதிய திட்டங்களை அறிவிப்பது, கிராம சபைக் கூட்டமாகும். இதில்



பொதுமக்கள் பங்களிப்பு என்பது, மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. எனவே, இதுகுறித்து விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி, இந்த உள்ளாட்சிகளினுடைய நடவடிக்கைகளை அவர்கள் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பாக ஊராட்சிகளைப்பற்றித் தகவல் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பாக, அவர்கள் அதிக அளவு பங்கேற்பதற்கான முயற்சிகளை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதேபோன்று, இப்போது மூன்றாம் நிலை நகராட்சிப் பணிகளை உடனுக்குடன் முடிப்பதற்கு, கட்டுமானத் தொழில் குழு ஒன்றைத் தனியாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளிலே காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கான வழிவகை காணவேண்டுமென்று கேட்டு, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் துப்புரவுப் பணியாளர் மற்றும் வாகன ஓட்டுனர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அவற்றையெல்லாம் உடனடியாக நிரப்பவேண்டுமென்று கேட்டு, அனைத்து ஊராட்சிகளிலும் 18 ஆண்டுகளாகப் பணிபுரிந்துவரும் தொழில்நுட்ப உதவியாளர்கள் சுமார் 325 நபர்களை, ஒன்றியப் பணி மேற்பார்வையாளர்களாக நியமனம் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும், இப்போது பருவ மழை பொய்த்திருக்கிறது. இதனாலே வறட்சி ஏற்படுகிற நிலைமை இருக்கிறது. குடிதண்ணீர்ப் பிரச்சினை இருக்கக்கூடாது என்று கவனமாகச் செயலாற்றி வரும் நம்முடைய அரசு, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பெருமுயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்படுகின்ற பணிகள் நன்றாக இருந்தாலும்கூட, அந்த ஊராட்சிகளுடைய பிரதிநிதிகள் இப்போது ஒரு தாக்கத்தோடு இருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், "நாங்கள் தேர்வு செய்கிறோம் அந்தப் பணிகளை; எங்களுக்கும் ஒப்பந்தம் கோருவதற்கு அதிகாரம்

உள்ளாட்சியில் இருக்கிறது; ஊராட்சியில் இருக்கிறது; அந்த அதிகாரத்தை இப்போது ஒன்றிய அளவிலே செய்வதாலே, எங்களுக்கு அந்தப் பணிகளைச் செய்வதில் சற்றுக் குந்தகம் இருக்கிறது; நாங்களே அதைச் செய்ய வேண்டும்" என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிவோடு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பணிகளைத் தேர்வு செய்யும்போது, அந்தந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்து ஆலோசிக்க நம்முடைய தளபதியார் அவர்கள் சிபாரிசு செய்ய வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இப்போது மதுரை, சென்னை, கோவை போன்ற பெருநகரங்களிலே போக்குவரத்து மிக இடைஞ்சலாக இருக்கிறது. அதற்கு மிகப் பெரிய சிறப்பான திட்டத்தை, பெரும் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளை அகலப்படுத்தும் பணியோடு, சாலைகளையும், மேம்பாலங்களையும் அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, சென்னை நகரிலே போக்குவரத்தைச் சமாளிக்க, அடையாற்றிலும், கூவமாற்றிலும் படகுப் போக்குவரத்தை ஏற்படுத்தி, அதிலே பயணிகளும், இரு சக்கர வாகனங்களில் செல்பவர்கள்கூட, உதாரணமாக, சைதாப்பேட்டையில் இறங்கி அடையாறிலே அவர்கள் வாகனத்தோடு வந்து, எப்படி அந்தமானிலே ஒரு கரையிலிருந்து மறு கரைக்குச் செல்லும்போது, வாகனத்தோடு நாம் செல்கிறோமோ, அதேபோன்று செல்கின்ற வாய்ப்பை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்துவதற்கு, போக்குவரத்திலே அந்த முறையைக் கடைப்பிடிப்பதற்கு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தமிழகத்திலே, ஊராட்சி ஒன்றியங்களிலே 1960-லே தோற்றுவிக்கப்பட்டு, இதுவரை 25 ஆண்டுக் காலமாக தொடர்ந்து ஒன்றியப் பணி மேற்பார்வையாளர்களாகப் பணி செய்பவர்களுக்குப் பதவி உயர்வு இன்னும் வழங்கப்படவில்லை. அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று நம்முடைய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே --D.D.O. Office--கோட்ட வளர்ச்சி அலுவலகம் இருந்துவந்தது. அது இப்போது இல்லாமல் இருக்கிறது. அதை



உடனடியாக நம்முடைய அரசாங்கம் மீண்டும் துவங்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சென்னை மாநகரத்திலே, 140-வது வட்டத்திலே ராஜா கிராமணித் தோட்டப் பகுதியிலே பூங்கா அமைப்பதாகச் சொல்லி, நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களைக் காலி செய்வதாக அறிவிப்பு வந்துள்ளது. அவர்களுக்கு இப்போது வேறு இடம் தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்த இடத்திலேயே, அவர்கள் குடியிருப்பதற்கான வாய்ப்பை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அங்கே பூங்கா அமைப்பதைத் தவிர்ப்பதற்கான முயற்சியை, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சென்னை மாநகரிலே குடிநீர்க் கட்டணத்திற்கு வட்டிக்கு வட்டி போட்டு, இப்போது குடிநீர்க் கட்டணம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இப்போது எப்படி நாம் வரிக்குக் கூடுதல் கட்டணம் கேட்பதில்லையோ, அதேபோன்று தண்ணீர் வரிக்கும் வட்டி போடாமல் நிரந்தரமாக அந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே சுய உதவிக் குழுக்கள், 3 இலட்சத்து 37 ஆயிரத்து 749 மகளிர் குழுக்கள் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய சேமிப்பு நிதி, இப்போது ரூபாய் 1,382 கோடி. அவர்கள் பெற்றிருக்கிற கடன் ரூபாய் 2,337.79 கோடி. இவ்வளவு பெரிய தொகையை அவர்கள் சேமித்தும், இவ்வளவு பெரிய தொகையை அவர்கள் இப்போது கடனாகப் பெற்றும், சிறப்பாகச் செயலாற்றுகிறார்கள் என்று சொன்னால், நம்முடைய மிகப் பெரிய இந்தப் பணி, அந்தக் கிராமப் பொருளாதாரத்தையும், மகளிருடைய மேம்பாட்டையும் ஊக்குவிப்பதாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, எங்களுடைய மாவட்டத்திலேதான், 19,492 மகளிர் குழுக்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. எங்களுடைய மாவட்டத்தின்மீது, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய பேரூராட்சியிலே, 14 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வரும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்குப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே, ஏராளமான பிரச்சினைகள். நான் தொடர்ந்து கடந்த ஐந்தாண்டுகளாகக் கேட்டும், அவற்றைச் செவிமடுக்காமல் இருந்தார்கள். மாமல்லபுரம் சிற்பக் கலைக் கல்லூரியிலே மீண்டும் பட்டயப் படிப்பு கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கை. எப்படியும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதை அறிவிப்பார் எனக் கருதி, இதை இங்கே கோரிக்கையாக வைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று, கடந்த ஆட்சியிலே, செங்கற்பட்டுக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் வரும் என்று 22.85 கோடி ரூபாய் ஒதுக்கி, அது இன்றளவிலே கிடப்பிலே கிடக்கிறது. அதை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பழமையான செங்கற்பட்டு நகரிலே, காய்கறி அங்காடியும், நவீன இறைச்சிக் கூடமும் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றைப் புதிய பொலிவோடு கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

செங்கற்பட்டு நகரில் அதிநவீன தகன எரிமேடை அமைக்க வேண்டுமென்றும், அதேபோன்று, திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய பேரூராட்சிகளால் கொட்டப்படும் குப்பைகள் ஆங்காங்கே மிக அதிக அளவு பறந்து காற்றிலே அடித்துச் செல்லப்படுவதால் அதற்கு உடனடியாக ஓர் இடத்தைத் தேர்வு செய்து, அந்தக் குப்பைகளைக் கொட்டுவதற்கான முயற்சி எடுக்க வேண்டும் என்றும், திடக் கழிவு மேலாண்மையைச் செயல்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டுக்கும், மாமல்லபுரத்திற்கும் இடையே நகரப் பேருந்தினை, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய செங்கற்பட்டு நகரிலே இரவு நேரங்களிலே விரைவுப் பேருந்துகள் உள்ளே வருவதில்லை. பொதுமக்கள் அவதியுறுகிறார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை, அனைத்துப் பேருந்துகளும் எங்களுடைய நகரத்திற்குள் வந்து செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள எங்களுடைய தொகுதியிலே இருக்கிற எடையூர் ஊராட்சியிலே, கொக்கிலமேடு



மீனவ கிராமத்திற்கு, இதுவரையிலே வீடுகள் கட்டிக் கொடுக்கவில்லை. இடம் இடப் பிரச்சினை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது தேர்வு செய்திருக்கிறார்கள். உடனடியாகக் கட்டிக் கொடுப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாமல்லபுரத்தில் உள்ள காட்டுநாயக்கர் மக்களுக்கு, மலைவாழ் மக்கள் சான்றிதழ் கிடைக்கப்பெறவில்லை. அதை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், எடையூர் கிராமத்தில் வசிக்கும் குடுகுடுப்பைக்காரர்களுக்கு, கணிக்கர் சான்றிதழ் கிடைக்கப்பெறவில்லை. அதுவும் கிடைக்கப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள், இதுவரையிலே மனைப் பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, செங்கற்பட்டு நகரிலேமட்டும் ஐந்தாயிரம் பேர் இதுவரையிலே வீட்டுமனைப் பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன் தலைவர் அவர்களே. உடனடியாக அவர்களுக்கு மனைப் பட்டா வழங்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள், திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** அதேபோன்று, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே, ஓசூர் பகுதியிலே, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சிப் பொறுப்பாளர்கள், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஓசூர் நகரத்திலே அவர்களுடைய வரிகள் எல்லாம் உயர்ந்திருக்கின்றன. அவற்றைக் குறைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிலே மண்டலம் வாரியாகக் கேட்டிருக்கிறார்கள். மண்டலம் ஒன்றிலே 80 காசாகவும், மண்டலம் இரண்டில் சதுர அடிக்கு 65 காசாகவும், மண்டலம் 'சி'-க்கு, 50 காசாகவும் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் தேவை என்கிற உணர்வை மீண்டும் புலப்படுத்தி, இந்த உள்ளாட்சிகளுக்கான அதிக அதிகாரம் என்பது, இந்த நாட்டிலே எப்படி மத்திய அரசாங்கத்திற்குத் தனியாக

அதிகாரம் இருக்கிறதோ, எப்படி மாநிலத்திற்குத் தனியாக அதிகாரம் இருக்கிறதோ, அதேபோன்று, உள்ளாட்சிகளுக்கும் தனியாக அதிகாரம் வேண்டும். இந்த உள்ளாட்சியிலே நல்லாட்சி செய்துவருகிற நம்முடைய தளபதியார் அவர்கள், இதை உடனடியாக ஏற்று, இந்த உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்களைத் தருவார் என்று நம்பி எனக்குப் பேச வாய்ப்பளித்த உங்கள் அத்தனை பேருக்கும் நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நகராட்சிகள் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கைள்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கை விவாதத்திற்குச் செல்வதற்கு முன்னால், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், உண்மையிலேயே மற்ற அமைச்சர்களுக்கும் மற்ற துறைகளுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக இருக்கிறார்கள். கடந்த ஆண்டு இதே மானியக் கோரிக்கையின்மீது நடந்த விவாதத்திற்கு, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களாலே பதில் அளிக்கப்படுகிறபோது அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள், அந்தத் திட்டங்கள்மீது இன்றுவரையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன; அவற்றிலே செயல்படுத்தப்பட்டிருக்கிற பணிகள் என்ன; தொடக்க நிலையிலுள்ள பணிகள் என்ன என்பதையெல்லாம் மிக விரிவான முறையிலே ஆய்வு செய்து, எழுத்துபூர்வமான ஓர் அறிக்கையை, நம்முடைய மன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் வழங்கியிருப்பது, உண்மையிலேயே பெரும் பாராட்டுக்கும், வரவேற்புக்கும் உரியது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோல, எல்லா அமைச்சர்களும், கடந்த ஆண்டிலே அந்தந்தத் துறைவாரியாக அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்கள்மீது, இந்த ஓராண்டுக் காலத்தில் எந்த அளவு நடவடிக்கை எடுக்கப்பட்டு அமலாகி இருக்கின்றன என்பதை, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிவிப்பைப்போல, மற்றத் துறை அமைச்சர்களும் இதைப் பின்பற்றுவது மிகச் சிறப்பாக இருக்கும் என்கிற வேண்டுகோளையும் இந்த நேரத்திலே தெரிவித்து, இந்தச்



சிறந்த ஏற்பாட்டைச் செய்த உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டையும் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அதோடுமட்டுமல்லாமல், நான் கடந்த வாரம் அவருடைய அறையிலே பேசிக்கொண்டிருக்கிறபோது, ஒரு மிகப் பெரிய புத்தகத்தை எடுத்துக் காட்டினார்கள். 'அந்தப் புத்தகத்திலே, தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா நகர்ப்புற மற்றும் கிராம ஊராட்சிகளைச் சார்ந்து இருக்கிற அனைத்துத் தலைவர்களுடைய முழு முகவரியும், அவர்களுடைய தொலைபேசி எண்கள் உள்பட, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார்களே "யார்-எவர்" என்கிற விவரம், அதைப்போல, இந்த மாநிலம் முழுவதும் இருக்கிற உள்ளாட்சித் தலைவர்களுடைய புகைப்படத்தோடு, அவர்களுடைய முகவரியை அச்சிட்டு ஒரு மிகப் பெரிய புத்தகமாக வழங்கி இருப்பது, உண்மையிலேயே இதுவரையில் நடக்காத ஒரு சிறந்த பணி. அதற்காகவும், நான் அவருக்கும், துறை அதிகாரிகளுக்கும், இந்த நேரத்திலே பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அநேகமாக, இந்தப் புத்தகம் எல்லோருக்கும் இங்கே வழங்கப்பட்டு இருக்கிறது என்று கருதுகிறேன்.

உள்ளாட்சித் துறை அமைப்புகள், சிறப்பாகச் செயலாற்றுவதற்காக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை இந்த அவையிலே முன்வைக்க விரும்புகிறேன். கடந்த 1992 ஆம் ஆண்டு, பஞ்சாயத்து ராஜ் சட்டம், நகர்பாலிகா சட்டம் நாடாளுமன்றத்திலே உருவாக்கப்பட்டு, உரிய அரசியல் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை உள்ளாட்சி அமைப்புகளுக்கு, ஜனநாயகபூர்வமான தேர்தலை உத்தரவாதப்படுத்துகிற ஒரு வாய்ப்பு உருவாக்கப்பட்டது சட்ட ரீதியாக. அதன் தொடர்ச்சியாக, 1996-லே உள்ளாட்சிமன்றத் தேர்தல் நடைபெற்றது. மத்திய சட்டத்தையொட்டி நம்முடைய தமிழ்நாட்டிலே, கிராம ஊராட்சிகளுக்கான ஒரு சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால், அதே மத்திய நகர்பாலிகா சட்டத்தைப்போல், தமிழகத்திலே அதற்குரிய ஓர் ஒருங்கிணைந்த சட்டம் இயற்றப்படவில்லை. ஆகவே, அதுவும் இயற்றப்படுமானால், இன்னும் இந்த நிருவாகச்

செயல்பாடுகள் புரிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும். அந்தவகையிலே அது உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மூன்றடுக்கு ஊராட்சி முறை சம்பந்தமாக, இப்போது அது பயன் இல்லை என்கிற ஒரு கருத்து, வலுவாக ஆங்காங்கே எழுப்பப்பட்டு வருகிறது. குறிப்பாக, அந்த அமைப்பில் எந்த அதிகாரமும் இல்லை; கூடிக் கலைகிற ஓர் அமைப்பாக அது இருக்கிறது; ஆகவே, இப்படிப்பட்ட இந்த மூன்றடுக்கு முறை தேவையா, என்கிற ஒரு கருத்து இப்போது வந்து இருக்கிறது. சமீபத்திலே உள்ளாட்சித் தலைவர்களுடைய மாநாட்டிலே உரையாற்றிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, இந்த மூன்றடுக்கு முறையை மாற்றி இரண்டடுக்கு முறையைக் கொண்டு வரவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புவது, இந்தப் புதிய பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி, மாவட்ட திட்டக் குழு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அப்படி உருவாக்கப்படுகிற மாவட்ட திட்டக் குழுவிற்கு, மாவட்ட ஊராட்சிமன்றத் தலைவராக யார் தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ, அவர், அந்தத் திட்டக் குழுவினுடைய தலைவராக இருந்து செயலாற்ற வேண்டும். அந்த மாவட்டப் பணிகளுக்கு, விரிவான ஒரு திட்டமிடுகிற அமைப்பாக அந்த மாவட்ட ஊராட்சியை அதன்மூலம் நாம் மாற்ற முடியும்; அதற்கான வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையிலே, Collector உள்பட அதற்குள்ளே உள்ளடங்கி இருக்க வேண்டும். ஆகவே, மாவட்ட ஊராட்சிமன்றத் தலைவர் தலைவராகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அதனுடைய செயலாளராகவும் இருந்து, மாவட்ட திட்டப் பணிகளுக்குத் திட்டமிடுகிற அதிகாரம் படைத்த ஒரு குழுவாக அது மாற்றப்படுமானால், நிச்சயமாக இந்த மூன்றடுக்கு முறை செயல்பாடு, சிறப்பாக இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, அதற்கான நிதியைக் கொடுத்து, அதிகாரத்தையும் வழங்கி, அதனுடைய செயல்பாடுகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பரிசீலித்து, சோதித்துப் பார்த்து, அதன் பிறகு பயன் இல்லை என்றால், நாம் முடிவுக்கு வருவதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். ஆகவே, அதற்குரிய அதிகாரமும், நிதியும் வழங்கி செயல்படுத்திப் பார்த்த பிறகு, அந்த முடிவுக்கு வருவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அடுத்ததாக, இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான கூடுதல் நிதி வழங்குவது சம்பந்தமாக, நம்முடைய நிதி நிலை அறிக்கையிலே, மாநில அரசினுடைய வருவாயில், 8 சதவிகிதத்தில் இருந்து 9 சதவிகிதமாக உயர்த்தப்படும் வருகிற நிதியாண்டிலே என்றும், அது 2006-2007 ஆம் ஆண்டைவிட, 2007-2008 ஆம் ஆண்டில் சற்றேறக்குறைய ரூ.622 கோடி இதற்காகக் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், அதேநேரத்தில் நான் இங்கே கவனப்படுத்த விரும்புவது, ஏற்கெனவே மாநில நிதிக் குழு, முதல் குழு 1996 என்று கருதுகிறேன். அதிலும், இரண்டாவது நிதிக் குழுவிலும், மூன்றாவது நிதிக் குழுவிலும் இதைப்பற்றிச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். பஞ்சாயத்து ராஜ் சட்டம் எல்லாம் உருவாக்கப்பட்ட பிறகு, உருவாக்கப்பட்ட மாநில நிதிக் குழு, ஆண்டுக்கு ஒரு சதவிகிதம்—அன்றைக்கு 8 சதவிகிதமாக இருந்தது; ஒவ்வோர் ஆண்டும், ஆண்டுக்கு ஒரு சதவிகிதமாக— உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதனுடைய நிதியை உயர்த்த வேண்டும் என்று, ஏற்கெனவே அந்த நிதிக் குழு பரிந்துரை செய்து இருக்கிறது. ஆகவே, அப்படிப் பார்த்தால், சற்றேறக்குறைய 9, 10 ஆண்டுகள் நெருங்கி விட்டது. ஒவ்வொரு சதவிகிதம் என்று வந்திருந்தாலும்கூட, 17 அல்லது 18 சதவிகிதம் என்கிற நிலைக்கு இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதி என்பது, வழங்கப்பட்டு இருக்க வேண்டும். ஆகவே, தற்போது 8-லிருந்து 9 ஆக மட்டும் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதை மேலும் உயர்த்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-55

அதேபோல, கிராமப்புற ஊராட்சிகள் இப்போது கடுமையாக பாதித்துக் கொண்டிருக்கின்றன. நிதி நெருக்கடி பெரிய சுமையாக இருக்கிறது. குறிப்பாக, நான் மின் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, அவருடைய மானியக் கோரிக்கையின்போதே கொண்டு வந்தேன். உள்ளாட்சி அமைப்புகளுக்கு, குறிப்பாக, கிராமப்புற ஊராட்சிகளுக்கு, ஒரு யூனிட்டுக்கு, ரூ.1.20-லிருந்து ரூ.3.60 ஆகக் கடந்த ஆட்சியிலே மிகக் கடுமையான ஒரு கட்டண உயர்வு என்பது ஏற்படுத்தப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், அந்த உள்ளாட்சி அமைப்புகளை, வணிகர்களின் பட்டியலிலே இப்போது சேர்க்கப்பட்டு இருப்பது மிகக் கொடுமையானது. கட்டாயம அது நீக்கப்பட வேண்டும். இது, முழுக்க முழுக்க மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய ஒரு சேவைப் பிரிவு என்பதை மனதிலே நிறுத்தி, வணிகர்கள்

பட்டியலிலே சேர்க்கப்பட்டு இருப்பதை நீக்கி, இந்த மின் கட்டணச் சலுகையைக் கட்டாயம் வழங்க வேண்டும். சேவைப் பிரிவு என்பதை மனதிலே வைத்து, அதற்கான உதவியை அரசு செய்ய முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அல்லது, அந்தக் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், நீங்கள் இப்போது கொடுக்கிற 8 சதவிகித தொகை, பல ஊராட்சிகளுக்குப் போய்ச் சேர்வதே இல்லை. மாவட்ட நிருவாகத்தின்மூலம் கணக்குப் பார்த்து, கையெழுத்து வாங்கி, பணம் வந்துவிட்டது; மின் கட்டணத்திற்கு வரவு வைக்கப்பட்டுவிட்டது என்று வெறும் ரசீதைக் கொடுக்கிற நிலைமைதான் பெரும்பாலான ஊராட்சிகளிலே இருக்கிறது. ஆகவே, கட்டணத்தைக் குறைக்க வேண்டும்; அல்லது, அரசே அந்தக் கட்டணத்தை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பெரிய ஊராட்சிகளாக 20,000, 25,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகள் இப்போது இருக்கின்றன. நகரங்களைப் போலவே, பெரிய அளவுக்கு மலைபோல் குப்பைகள் அங்கே குவிகின்றன. அந்தக் குப்பைகளை எடுப்பதற்கான லாரிகள் இல்லை. எந்த வாகன வசதிகளும் இல்லை; ஆட்கள் கிடையாது. இதனால் மிகப் பெரும் பிரச்சினை அந்த உள்ளாட்சிமன்றத் தலைவர்களுக்கு வருகிறது. ஆகவே, அந்தப் பெரிய ஊராட்சிகளுக்குத் தகுதி அடிப்படையிலே, அந்த வாகனங்கள் வாங்கித் தருவதற்கும், அதற்குத் தேவையான ஊழியர்களை நியமிப்பதற்கும், அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது, வாய்ப்புள்ள ஊராட்சிகள் வாங்கிக் கொள்வதற்கு, அனுமதியாவது வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தொகுப்பு வீடுகள் கட்டுவதற்காக ஏற்கெனவே அரசால் வழங்கப்படுகிற இந்த 37,500 ரூபாய் என்பது, இப்போது கட்டுமானப் பொருட்கள் மிகக் கடுமையாக உயர்ந்து இருக்கிற இந்த நிலையில, நிச்சயமாக அது காணாது. ஆகவே, அதற்கான தொகையை, அரசு வழங்குகின்ற தொகையை, ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆதி திராவிட மக்களோடு, ஆதி திராவிட கிறித்தவ மக்களையும் இந்தத் தொகுப்பு வீடுகள் கட்டித் தருவதற்கான பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, வறுமைக்கோட்டுக்கான வருமான வரம்பு சம்பந்தமாக, இங்கே நம்முடைய அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்கூட இங்கே உரையாற்றுகிறபோது குறிப்பிட்டார்கள். அநேகமாக நான் அறிந்தவரை, மத்திய அரசுதான் அந்த வருமான வரம்பைத் தீர்மானிக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே, நம்முடைய மாநில அரசு, இந்த மாநிலத்தின் தன்மைகளை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுசென்று, வருமான வரம்பு ரூ.12,000 என்கிற அந்த இலக்கை, ரூ.24,000 ஆக உயர்த்த, மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு ஊராட்சிமன்றத் தலைவரை ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் நினைத்தால், பதவிநீக்கம் செய்யலாம் என்று சட்டத்திலே அந்த வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், அந்த ஷரத்து நீக்கப்பட வேண்டும்; அந்த அதிகாரம் ஆட்சித் தலைவருக்கு வழங்குவதை ரத்து செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நகர்ப்புறங்களிலே மனைப் பிரிவுகளை முறைப்படுத்துவது குறித்து, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கடந்த பல முறைகளாக வலியுறுத்திக் கேட்டுக் கொண்டேன். அவரும், அதைப்பற்றியெல்லாம் விரிவாக ஆய்வு செய்து, அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளில், அடிப்படை வசதியில்லாமல் அதிலே வாழ்ந்த அந்த மக்களுக்கு, சாக்கடை மத்தியிலே வாழ்ந்த அவர்களுக்கு, ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தருகிற வகையிலே, ஒரு எளிய முறையில் அதை அங்கீகரிக்கக்கூடிய வகையிலே, முறைப்படுத்துகிற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அதற்காகக் கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரையில் அவகாசம் வழங்கப்பட்டது. உண்மையிலேயே, அதை மக்கள் ஆர்வத்தோடு பயன்படுத்தியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இன்னும் சில பகுதிகள், அந்தப் பணம் கட்டாமல் இருக்கிற பகுதிகள் இருக்கின்றன. ஆகவே, மேலும் மூன்று மாதம் அந்தக் காலத்தை நீட்டித்து, எல்லோரும் இந்த நல்ல திட்டத்தில் பயன்பெறுவதற்குக் கால அவகாசம் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நகராட்சிகளில் அல்லது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், ஏற்கெனவே அரசாங்கம் ஒரு வழிகாட்டு நெறிமுறையைக் கொடுத்திருக்கிறது. எவ்வளவு மக்கட்தொகை இருந்தால், துப்புரவுப் பணியாளர்கள் இவ்வளவு பேரை நியமிக்கலாம் என்று. அந்த மக்கள்தொகையினுடைய எண்ணிக்கைக்கேற்ப, அரசு நார்ம்ஸ்படி இப்போது துப்புரவுப் பணியாளர்கள், அநேகமாக எந்த உள்ளாட்சி அமைப்புகளிலும் இல்லை என்கிற நிலைதான் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. அதனுடைய விளைவு, துப்புரவுப் பணியாளர்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தினால், குப்பைகள் எடுக்கப்படுவது காலத்திலே நடப்பது இல்லை. அதேபோல, சாக்கடைகளைச் சுத்தப்படுத்துகிற பணி, காலத்திலே நடப்பது இல்லை. இது வெறும் நகராட்சிப் பிரச்சினையாக மட்டுமல்லாமல், *(மணியடிக்கப்பெற்றது)* மக்களுடைய பொதுச் சுகாதாரம் சம்பந்தப்பட்டிருக்கிற ஒரு பெரும் பிரச்சினையாக மாறுகிற காரணத்தினால், அதற்கான ஊழியர்களை நியமிக்க வேண்டும். அங்கே, ஏற்கெனவே தொகுப்பூதியத்திலே அல்லது கான்ட்ராக்டிலே வேலை செய்யக்கூடிய ஊழியர்களை எல்லாம் நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கையையும் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

அதேபோல, நகரத்தைச் சுத்தம் செய்யக்கூடிய அந்தத் துப்புரவுப் பணியாளர்கள் வசிக்கிற இடம், மிக மோசமான நிலையிலேதான் பெரும்பகுதியான இடங்கள் தமிழகத்திலே இருக்கின்றன. ஆகவே, நகரத்தையே சுத்தப்படுத்தி, மக்களைப் பாதுகாக்கிற அந்தத் துப்புரவுப் பணியாளர்கள் கொஞ்சம் சுகாதாரமாக வாழ்வதற்கு, அவர்களுக்கு வீட்டு வசதியும், குடியிருக்கிற பகுதிக்கு அடிப்படையான சுகாதார வசதிகளையும் உருவாக்கித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கவர்னர் உரையில் குறிப்பிட்டதைப்போல, மனித மலத்தை மனிதன் அள்ளுகிற நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க நல்ல அம்சம். இன்னும், தமிழகத்திலே ஆங்காங்கே சில இடங்களில் அது இருக்கிறது. ஆகவே, அது எங்கே இருக்கிறது என்பதைச் சரியாகக் கண்டறிந்து, ஆய்வு செய்து, அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்து, மனித மலத்தை மனிதன் அள்ளுவதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய



நடவடிக்கையை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** அதற்குத் தேவையான, போதுமான கழிப்பிட வசதிகள், பொதுக் கழிப்பிட வசதிகள் தேவைப்படுகின்றன. சொந்தமாகக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசின் உதவிகளைக் கூடுதலாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, அத்தியாவசியப் பணிகளாக இருக்கக்கூடிய, முக்கியமான பிரச்சினைகளை, குடிநீர் வழங்குவது, குப்பை அள்ளுவது போன்ற காரியங்களைத் தனியாருக்கு விடுவதை அரசு எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது. இந்தக் கொள்கைக் குறிப்பிலேகூட சென்னையிலே 4 மண்டலங்களில் அதுபோன்று தனியாருக்கு ஒப்படைப்பதாக அரசாணை வெளியிடப்பட்டிருப்பதாக வந்திருக்கிறது. அதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதேபோல, குடிநீர் விநியோகம் குறித்தும் இப்போது அரசாங்கம் அறிவித்திருக்கிறது. நம்முடைய தலைமைப் பொறியாளர் அவர்களும் அரசின் கடிதமாகக் கீழே உள்ளவர்களுக்கு அனுப்பியிருக்கிறார். "குடிநீர் விநியோகம், கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றைத் தனியாருக்கு விடுவதற்கான திட்டம் இருக்கிறது; எவ்வெவற்றை அதில் இணைக்கலாம்" என்ற கருத்துகளைக் கேட்டு, கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதமும் என்னிடத்திலே இருக்கிறது. அதையெல்லாம் தனியாருக்கு விடுவது என்பது, மிகப் பெரிய ஆபத்தை உருவாக்கக்கூடிய நிலைக்கு அது இட்டுச் செல்லும். ஆகவே, தயவுசெய்து, அத்தியாவசியப் பணிகளை எக்காரணம் கொண்டும் தனியாருக்கு விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், இப்போது தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. இராமநாதபுரம், விருதுநகர் போன்ற சில மாவட்டங்கள் மேலும் சேர்க்கப்பட வேண்டும். இந்தத் திட்டம் முறையாகச் செயல்படுவதற்கு, கீழ்மட்டத்திலே கண்காணிப்பு ஏற்பாடு ஒன்று தேவைப்படுகிறது. அதற்கு வழங்கப்படுகிற கூலியை அரிசியின் விலையாக 5 ரூபாய் 20 பைசா என்று கணக்கிட்டு மத்திய அரசு இப்போது நிர்ணயித்திருக்கிறது. தமிழ்நாட்டிலே, ரேஷன் கடைகளிலே ஒரு கிலோ இரண்டு ரூபாய்க்கு அரிசி கிடைக்கிறது. ஆகவே, அதை மாற்ற வேண்டும்; அல்லது, பணமாக வழங்க வேண்டும். அதேபோல, அந்தப் பகுதியிலே, அந்தச் சட்டத்திலே குறிப்பிட்டிருப்பதைப்போல,

வேலைக்கு வரக்கூடியவர்களின் குழந்தைகளைப் பாதுகாக்க, குடிநீர், முதலுதவிப் பெட்டி வசதி போன்றவை இருக்க வேண்டும்: அதற்கான கருவிகள் வழங்கப்பட வேண்டும்; மண்ணின் தன்மைக்கு ஏற்ப வேலைகள் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாகிறது. இன்னும் இரண்டு பேர் பேச வேண்டியிருக்கிறது. உரையை முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** அதேபோல, ஒன்றிரண்டு செய்திகளைச் சொல்லி உரையை முடிக்க விரும்புகிறேன். நம்முடைய ஊராட்சி உதவியாளர்கள்; கடந்தமுறை தொகுப்பு ஊதியத்திலே இருந்த அவர்களைக் காலமுறை ஊதியத்திற்கு மாற்றி, மிகப் பெரிய மகிழ்ச்சியை அவர்களுக்கெல்லாம் ஏற்படுத்தித் தந்தீர்கள். ஆனால், 1-9-2006-லே போடப்பட்ட அரசாணையில், அவர்களுக்கு ஊதிய உயர்வும், அவர்கள் காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்படுகிற உத்தரவும் வந்தது. அவர்கள் அரசு ஊழியர்கள் பெறுகிற எந்தச் சலுகையையும் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் எனகிற ஒரு வரியும் அதோடு சேர்த்து, அரசாணை வெளியிடப்பட்டிருப்பது, அவர்களுக்கெல்லாம் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, அதையும் அரசு பரிசீலித்து, அந்த வசதிகள் அவர்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களை ஊராட்சியினுடைய செயலாளர்களாகப் பதவி உயர்த்த வேண்டும். மக்கள் நலப் பணியாளர்களை நிரந்தரப்படுத்துவது, ஊதியத்தை உயர்த்துவது போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஊராட்சிப் பகுதிகளிலே, குடிநீர் ஆப்பரேட்டர்களுக்கு 600 ரூபாய்தான் தொகுப்பூதியம். அதை அரசு பரிசீலித்து, அவர்களுக்கு வேலைப் பாதுகாப்பும், ஊதிய உயர்வும் வழங்கப்பட வேண்டும். நிறைய இருக்கிறது. நான் முடித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி சம்பந்தமான செய்தியைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

திருப்பூர் தொகுதியைப் பொறுத்தவரையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மற்ற எல்லா அமைச்சர் பெருமக்களும் அந்த ஊரினுடைய தேவையையொட்டி பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறார்கள். அதற்கு நான் ஒவ்வொரு முறையும் நன்றி சொல்லி வருகிறேன். இப்போதும் சொல்ல விரும்புகிறேன். கடந்த 3, 4 தினங்களுக்கு முன்னாலே, திருப்பூர் பகுதியிலே நிலவும் கடுமையான குடிநீர்ப் பிரச்சினையையொட்டி, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றேன். அதோடு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற உள்ளாட்சிமன்றத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், அண்ணா தி.மு.க. உட்பட எல்லாக் கட்சித் தலைவர்களும் உங்களைச் சந்திக்க வேண்டுமென்று கேட்டேன். எந்த மறுப்பும் சொல்லாமல் அனைவரையும் அழைத்துவரச் சொன்னார்கள். ஆகவே, அ.தி.மு.க., தே.மு.தி.க. உட்பட தோழமைக் கட்சிகளுடைய எல்லாத் தலைவர்களும் அங்கே கலந்து கொண்டார்கள். அந்தத் தேவையை எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கவலையோடும், கருணையோடும் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதற்கான ஒரு நல்ல செய்தியை அவர் இங்கே தெரிவிப்பார் என்று நான் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அவர் 15 ஆம் தேதி திருப்பூர் வருவதற்கு முன்னால், இந்த நல்ல செய்தி அந்த ஊருக்கு எட்டுவதற்குரிய முறையிலே உங்களிடத்திலிருந்து ஒரு அறிவிப்பை நான் எதிர்பார்க்கிறேன். (குறுக்கீடு)



பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. கோவிந்தசாமி அவர்கள் இங்கே உரையாற்றிக் கொண்டிருக்கிற நேரத்திலே, திருப்பூர் நகராட்சியை ஒட்டியிருக்கக்கூடிய பல பேருராட்சிகள், பல ஊராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர்ப் பிரச்சினை மிகத் தட்டுப்பாடான நிலையில் இருக்கிறது என்பதை என்னுடைய கவனத்திற்கு எடுத்து வந்தார். அதைத் தொடர்ந்து, அது சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய பேரூராட்சி, ஊராட்சியினுடைய தலைவர்களையெல்லாம் இரண்டு நாட்களுக்கு முன்பே சென்னைக்கு அழைத்துவந்து, நானும் அவர்களோடு கலந்துபேசி, அதிகாரிகளோடு இதுகுறித்து விவாதித்தேன். ஆக, அந்தக் குடிநீர்ப் பிரச்சினையை அவர்களுக்கு உடனடியாகப் போக்க வேண்டும்; மிகத் தட்டுப்பாடான நிலையிலே அவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற வேதனையான அந்தச் செய்தியை எங்களிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். எனவே, அந்த அடிப்படையிலே மூன்றாவது

திருப்பூர் குடிநீர்த் திட்டத்திலிருந்து, நல்லூர் மற்றும் வேலம்பாளையம் நகராட்சிகளுக்கு மொத்தம் 16 இலட்சம் லிட்டர் குடிநீரும், செட்டிப்பாளையம், தொட்டிப்பாளையம், நெருப்பெரிச்சல், தொட்டி மன்னரை, முதலிப்பாளையம், வீரபாண்டி, முருகம்பாளையம், ஆண்டிப்பாளையம், மங்களம், இடுவாய், முத்தனம்பாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கு மொத்தம் 61 இலட்சம் லிட்டர் குடிநீரும் வழங்க வேண்டுமென்று முடிவெடுத்து, 80 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க அரசு உத்தரவிட்டிருக்கிறது. இந்தக் கூடுதல் குடிநீர், நகராட்சி மற்றும் ஊராட்சி அமைப்புகளுக்கு, வருகிற 20-4-2007-க்கு முன்பாக வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள் சார், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** சரி, முடித்துவிட்டேன். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மிக விரைவாக இதன்மீது ஒரு முடிவுக்கு வந்து, தாகத்தால் தவிக்கிற அந்த மக்களுக்குத் தண்ணீர் கொடுக்கிற ஒரு நல்ல செய்தியை அறிவித்தமைக்காக திருப்பூர் தொகுதி மக்களின் சார்பிலே எங்கள் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, கோவில்பட்டி நகராட்சியிலே இதேபோன்றதொரு குடிநீர்த் திட்டம், 30 ஆண்டுகளுக்கு முன்னாலே நிறைவேற்றப்பட்டது. அந்தக் குழாய்கள் மிகவும் பழுதடைந்திருப்பதாகவும், தாமிரபரணி ஆற்றிலே தண்ணீர் வருகிறபோது, அங்கிருந்து அந்தத் தண்ணீரை எடுக்க முடியாத நிலை இருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் பரிசீலித்து, அதைப் புனரமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூரினுடைய மற்ற பல கோரிக்கைகள் இருக்கின்றன. நான் அவற்றை அமைச்சருக்கு நேரடியாகத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொல்லி, பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு)



**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நேரம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) No question of point of order. உட்காருங்கள், நேரமாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளின் சார்பில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சார், நேரம் இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள். என்னவென்று சொல்லுங்கள்? திரு. வை. சிவபுண்ணியம், கொஞ்சம் பொறுங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா உறுப்பினர்களும் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக, வேகமாக, விரைவாக இந்தத் துறையை நடத்தி சாதனை படைத்துக்கொண்டிருக்கிறார் என்று பாராட்டிக் கொண்டிருக்கிறபோது, ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை, அதனுடைய செயல்பாடுகள் குறித்து இங்கே உறுப்பினர்களெல்லாம் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்திலேயுள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் என அனைத்துப் பகுதி மக்களும் பயன்பெறத்தக்க வகையிலே, பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மிகச் சிறப்பாக, வெற்றிகரமாக நிறைவேற்றி, முத்திரை பதிக்கக்கூடிய வகையிலே அந்தத் துறையைச் சிறப்பாக நடத்தி வருகிற, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

பிற்பகல் 1-10

உள்ளாட்சித் துறை என்பது, கடந்த காலங்களிலே அது இரண்டாம் பட்சம், மூன்றாம் பட்சமாக இருந்தது என்பது யதார்த்தமான உண்மை. இதை நான் சொல்வதற்கு வருந்தமாட்டார்கள் என்று கருதுகிறேன். காரணம், இவ்வளவு பெரிய துறையாக இருந்த உள்ளாட்சித் துறை, வேறொரு துறையினுடைய இணைத் துறையாக, துணைத் துறையாகத்தான் இருந்தது. அதன் காரணத்தினாலே பல திட்டப் பணிகள் வினையாகத்தான் முடிந்தனவே தவிர, எந்தப் பலனும் மக்களுக்குக் கிடைப்பதற்குரிய வாய்ப்பு இல்லாமல் போனது என்பதுதான் யதார்த்தமான நிலை. ஆகவே, இவ்வளவு பெரிய துறையை ஒரு தனித் துறையாகக்கூட சென்ற ஆட்சிக்காலத்தில் நிருவகிக்கவில்லை. இந்த உண்மையை மறுக்க முடியாது. வேறு ஒரு துறை அமைச்சர் மூலமாகத்தான் இந்தத் துறை பராமரிக்கப்பட்டது. குறிப்பாக, இந்தத் துறையின் மூலமாக..... (குறுக்கீடுகள்) ஏன்? நான் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். திரு. சிவபுண்ணியம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், தேவையில்லாமல் குறுக்கிடக்கூடாது. உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்**: பேரவைத் தலைவர் அவர்களே, I am not yielding. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, நான் உண்மையைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, உள்ளாட்சித் துறையில் தனி அமைச்சரே அதில் இடம்பெற்றிருந்தார் என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சரி, உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்**: பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தவறான தகவலை எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள், இங்கே சொல்கிறார். சென்ற ஆட்சியிலே செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய திரு. அன்பழகன்



அவர்களுடைய துணைப் பொறுப்பாகத்தான் இந்த உள்ளாட்சித் துறை இருந்ததே தவிர—இங்கேயே இருக்கிறார் சாட்சி; அதை மறுக்க முடியுமா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்**: ஆகவே, இந்த. . . (குறுக்கீடுகள்) நான் இதிலே பிரச்சினையுள்ள விஷயங்களைச் சொல்லவில்லை. இது மிகப் பெரிய துறை. இதைச் சிறப்பாக நடத்துவதற்குரிய முயற்சி, டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சி வருகிறபோதுதான் எடுக்கப்பட்டு, இது சிறப்பாக நடைபெறுகிறது என்பதைச் சொல்வதற்காகத்தான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 1996 ஆம் ஆண்டிலே, அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த, பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு அண்ணன், திரு. கோ.சி. மணி அவர்கள் தலைமையிலே, உள்ளாட்சித் துறை மிகச் சிறப்பாக செயல்பட்டது. வெற்றிகரமான திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டன. இது மறுக்கமுடியாத உண்மை.

அடுத்து, இப்பொழுது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலே இங்கே கிட்டத்தட்ட ஏழாயிரம் கோடி ரூபாய்க்கு மேலே நிதி ஒதுக்கீடு செய்து, மிகச் சிறப்பாக, செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையின் மூலமாகத்தான்' அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய எல்லாத் திட்டங்களையும் பயன்படுத்துவதற்கு, மக்கள் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்பு வந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இதைச் சொல்வதனால் அவர்களுக்கு வருத்தம் இருக்கிறது. அதற்கு என்ன செய்ய முடியும்? ஆகவே, ஒரு வரியில் சொல்லவேண்டுமானால், சென்ற ஆட்சியில் ** (குறுக்கீடுகள்) இதைச் சொன்னால் அவர்கள் வருத்தப்படுகிறார்கள். அதற்கு என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதிக்க முடியாது, உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே மாநில நிதி ஆணையத்தின்மூலமாக, வெகு சிறப்பாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நிதி ஒதுக்கீடு பற்றி குறிப்பாகச் சொல்கிறபோது.... (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள் எல்லோரும். ** என்ற சொற்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) செங்கோட்டையன், இங்கே பார்த்துப் பேசுங்கள். அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. அங்கு ஏன் பார்த்துப் பேசுகிறீர்கள்? இங்கு என்னிடத்தில் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதற்குக் குறுக்கீடு இல்லாமல், தாங்கள்தான் பாதுகாக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இது என்ன கத்தல்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் சரியாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். குற்றம் உள்ளவர்களுக்கு அது குறுகுறு என்றிருந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல.

மாநில நிதி ஆணையம் 2006-2007 ஆம் ஆண்டு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்த தொகை ரூபாய் 1,224 கோடியே 76 இலட்சம். இந்த ஆண்டு, 2007-2008 ஆம் ஆண்டு ஒதுக்கியிருக்கிற தொகை ரூபாய் 1,585 கோடியே 72 இலட்சம். கிட்டத்தட்ட 30 சதவீத உயர்வோடு மாநில நிதி ஆணையம் இதற்கு நிதி வழங்கியிருப்பது என்பது, இந்தத் துறையை வெற்றிகரமாக நடத்துவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். அதேபோல, மத்திய நிதி ஆணையம், 2005-2006 முதல் 2009-2010 ஆம் ஆண்டு வரையிலும், கிட்டத்தட்ட 870 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. இது மத்திய நிதிக் குழுவின் மானியம் முழுவதையும், நம்முடைய தமிழ்நாடு அரசு எடுத்திருக்கிற முடிவின் அடிப்படையிலே, அனைத்தையுமே மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, ஊராட்சிகளுக்கே வழங்கப்படும் என்று முடிவெடுத்திருப்பதை, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



குறிப்பாக, ஊராட்சிகளுடைய வருமானம் பெரும் வித்தியாசத்தில் இருக்கிறது என்பது இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த ஊராட்சிகள், சாலை அமைப்பது, பொது இடங்கள் மற்றும் சாலைகளிலே தெரு விளக்குகள் அமைப்பது, வடிகால் கட்டுவது, பொதுக் கழிப்பிடங்கள் கட்டுவது, கிணறு, குளம், குட்டைகளை வெட்டுவது, குடிநீர் வழங்குவது, நீர்நிலைகளைப் பாதுகாப்பது, சுடுகாடு, இடுகாடு பராமரிப்பது, பூங்கா, படிப்பகம் போன்றவற்றையெல்லாம் பராமரிப்பதற்குரிய அந்தப் பொறுப்பு, அந்த உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், வரவினத்திற்கேற்ப கிராம ஊராட்சிகளுடைய வகைப்பாடு குறித்துச் சொல்கிறபோது, மிகப் பெரிய இடைவெளி இருக்கிறது. நிதியாதாரம் என்பது குறைவாக இருக்கிறது என்பதைப் புள்ளிவிவரத்தோடு நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்த நிதியாதாரத்தை அதிகப்படுத்துவதற்கான முயற்சி என்கிற வகையிலேதான், 8 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாக உயர்த்தப்படும் என்று அறிவிப்பதை நான் வரவேற்கிறேன்.

அதேநேரத்திலே, மாநில நிதி ஆணையம் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற அடிப்படையிலே, அது படிப்படியாக, உடனடியாக, 10 சதவிகிதமாக உயர்த்தப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். விரைவாக, அதைச் செய்து, உள்ளாட்சி நிருவாகத்தைச் சிறப்பிற்குரிய வகையிலே நடத்துவதற்கு உதவிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளுடைய எல்லைகளை மறு வரையறை செய்வதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். இது பல கிராம ஊராட்சிகளுடைய வேண்டுகோளாக இருக்கிறது. நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளினுடைய வரையறை முடிந்ததற்குப் பின்னாலே, இது எடுக்கப்பட இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். சிறபபிற்குரிய வகையிலே மக்கள் பிரதிநிதிகளையும் கலந்துபேசி, இதை எடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, சிறப்பான ஊராட்சிகளுக்கு விருதுகள் வழங்குகின்ற அந்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. உத்தமர் காந்தியடிகளுடைய நினைவாக விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக, தேசிய அளவிலே பல கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், கிட்டத்தட்ட 124 ஊராட்சிகள் அதற்குப் பரிந்துரைக்கப்பட்டு, 45 ஊராட்சிகளுடைய கருத்துருக்களை அனுப்பி, மத்திய அரசாங்கத்தினுடைய நிருவாகத்தினுடைய ஒப்புதலைப் பெற முயற்சி எடுத்து, 15 ஊராட்சிகளுக்கு வழங்கப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதிலே என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஆலங்கோட்டை ஊராட்சியும், அந்தப் பரிசீலனையிலே வந்திருக்கிறது. அதை இணைத்து அந்த ஊராட்சிக்கு விருது வழங்குவதற்கான முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையிலும், அந்த ஊராட்சி ஒன்றியங்களும் பல்வேறு வகையான திட்டப் பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றவேண்டிய அவசியத்திலே இருக்கின்றன. அதற்குரிய எல்லாவிதமான நிதியாதாரத்தையும் சிறப்பாக அதற்கு வழங்குவதற்கான முயற்சி எடுக்கப்பட இருக்கிறது. மேலும், நிதியாதாரத்தை வழங்குவதற்கும் அந்த ஊராட்சி ஒன்றியங்கள் எல்லா வகையிலும் சிறப்பாகச் செயல்படுவதற்குமுரிய முயற்சிகளும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சிகளுக்கான மின் கட்டணம், குடிநீருக்கான மின் கட்டணம் என்பதைப்பற்றி, இங்கே எல்லோருமே பரவலாகக் கருத்து சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டும் அதைப்பற்றிப் பேசியிருக்கிறோம். அது வர்த்தகப் பிரிவுக் கட்டணமாக இருப்பது என்பது, மிகப் பெரிய சுமையாக இருக்கிறது. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு. அதைக் குறைப்பதற்குரிய முயற்சியை நீங்கள் எடுக்கவிருக்கிறீர்கள். நல்ல அறிவிப்பு வரும் என்று நாளையதினம் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதைச் செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும் இசைவு தெரிவித்து, அதற்கு உதவிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கிட்டத்தட்ட அவர்களுடைய எதிர்பார்ப்பு, ஊராட்சிகளின் மின் கட்டணமான, குடிநீருக்கான மின் கட்டணத்தையும், தெரு விளக்குகளுக்கான மின் கட்டணத்தையும் அரசே ஏற்று, அதைக் கட்டிவிட்டால், அது சிறப்பாகச் செயல்பட



முடியும் என்று கருதுகிறார்கள். அது இயலாது என்று எனக்குத் தெரிந்தாலும்கூட, ஒரு பாதி அளவாவது ஏற்றுக்கொண்டு, நம்முடைய அரசு அதை ஈடு செய்வதற்குரிய முயற்சி எடுக்க முடியுமா என்பதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோரிக்கைகள் என்ற அடிப்படையிலே, ஏராளமாக வந்திருக்கின்றன. ஆனால், அவற்றையெல்லாம் நிறைவேற்றவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அவற்றிலே, ஊராட்சி எழுத்தர்களைப் பணி நிரந்தரம் செய்வது என அறிவித்து, மிகப் பெரிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அதோடு, இந்தக் குடிநீர் மேல்நிலைத் தொட்டி இயக்குநர்கள், அதேபோல, கிராமப்புறத் துப்புரவு சுகாதாரப் பணியாளர்கள் மிகக் குறைந்த, வெறும் 600 ரூபாய் சம்பளத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பணி நிரந்தரம் செய்வதோடு, அவர்களுக்குச் சம்பள உயர்வினையும் அதிகப்படுத்துவதற்கான அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மக்கள்நலப் பணியாளர்களை, மீண்டும் பணியில் அமர்த்தியிருக்கிறீர்கள். அவர்களுக்குப் பல்வேறு பணிகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தையும் நிறைவேற்றுகிற பணிகள் அவர்களுக்கு இருக்கின்றன. அவர்களுடைய எதிர்பார்ப்பு என்னவென்றால், வேலையில்லாமல் இருந்தார்கள். தி.மு.க. அரசு வந்தது; கலைஞர் வந்தவுடன், 12,774 பேர்களுக்கு வேலை வழங்கியிருக்கிறார்கள்; இது காலமுறை ஊதியமாக இருந்தால் நன்றாக இருக்குமே என்று எதிர்பார்க்கிறார்கள். வாய்ப்பைப்பற்றி நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தேசிய ஊரக உறுதியளிப்புச் சட்டம்; 2005-ல் தமிழ்நாடு ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தின்கீழ், பல மாவட்டங்கள் எடுக்கப்பட்டதைப்பற்றி, இங்கே அருமை சகோதரர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே மேற்கொள்ளப்படுகிற பணிகள் பற்றி, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றன. இதைச் சொன்னால்கூட, வருத்தம் வருகிறது. ஆனால், இதில் அதிகாரபூர்வமாக, நடைமுறை ரீதியாக இருக்கிற உண்மைகள்

சொல்லப்பட்டிருக்கின்றன. 31-3-2006 வரை மேற்கொள்ளப்பட்ட செலவு, வெறும் 3 கோடி ரூபாய் மட்டுமே என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை சென்ற ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயல்பாடுகள். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதியில், வெறும் 3 கோடி ரூபாய்மட்டும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது 10 மாத கால ஆட்சியில்—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பின்னாலே, அந்த 6 மாவட்டங்களிலேயும் கிட்டத்தட்ட 3,830 ஊராட்சிகளில், அதாவது கிட்டத்தட்ட 152 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது என்ற புள்ளிவிவரம் சொல்லப்பட்டு இருக்கிறது. சென்ற தடவை இதிலே குறைபாடும், இந்தப் பணிகளை நிறைவேற்றுவதிலே தாமதமும் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இதைச் சொல்லுகிறபொழுதுதான், அந்த நிருவாகம் சிறப்பாகச் செயல்படவில்லை என்று சுட்டிக்காட்டவேண்டிய அவசியம் இருக்கிறது. இப்பொழுது வேகமாக அந்த நிருவாகத்தைச் செயல்படுத்துவதற்குரிய வாய்ப்பை, உள்ளாட்சித் துறை அமைச்சர் எடுத்த காரணத்தினாலேயே அந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 1-20

இந்திரா நினைவுக் குடியிருப்பு: இதைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இதைப்பற்றி நாம் பல முறை சொல்லியிருக்கிறோம். இந்த வீட்டினுடைய அளவைப்பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது, 20 சதுர மீட்டர் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த வீட்டினுடைய அளவை மாற்றவேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். இதனை உள்ளாட்சித் துறைக்கான அந்த நிருவாகத்தைப் பற்றிய கண்காணிப்புக் குழுக் கூட்டத்திலே வலியுறுத்தி, இங்கே வந்திருக்கிற நம்முடைய அதிகாரிகளிடத்திலே, செயலாளர் மற்றும் துறை அலுவலர்களிடத்திலே எல்லாம் இந்தக் கோரிக்கையை நான் வலியுறுத்திச் சொல்லி இருக்கிறேன். நமது தமிழ்நாடு இதற்கு முன்னுதாரணமாக இருந்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இந்த வீடு கட்டும் திட்டத்தைத் தொடங்குவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தி முன்னுதாரணமாக இருந்திருக்கிறது. அதைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துகிறபொழுது, 37,500 ரூபாய் என்ற அளவிலே அந்த



வீடுகள் கட்டுவது என்பது, இயலாத காரியமாக இருக்கிறது. ஆகவே, அதை உயர்த்துவதற்கான முயற்சி என்ற அடிப்படையிலே ஒரு வீடு என்றால் ஒரு இலட்சம் ரூபாயிலே கட்டுவதற்கான வாய்ப்பினைப் பெற வேண்டும். அதைப்பற்றி நம்முடைய அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்களைப்பற்றிய பட்டியல் தயாரிக்கிற அந்த முயற்சியிலே இன்னும் குளறுபடிகள் நீடிக்கின்றன. அவற்றைச் சரிசெய்ய வேண்டும்.

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்; இது ஒரு மிக முக்கியமான திட்டம். இது ஊராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்குமான திட்டமாக வருகிறது. இதன்மூலம் ஊரகப் பகுதிகளில், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களின் துயர்போக்கும் முக்கிய திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கான கட்டுமான வசதிகள் தயாரிக்கப்பட்டு, பொருட்களை விற்பனை செய்ய, இத்திட்டத்தின் செலவை மத்திய, மாநில அரசுகள் 75, 25 சதவீதத்தில் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், நான் இதிலே கேட்டுக்கொள்வதெல்லாம், இதிலே படித்த பட்டதாரி இளைஞர்கள், பெண் பட்டதாரிகள் இவர்களுடைய வேலைவாய்ப்பு உறுதி செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. மத்திய அரசாங்கத் திட்டத்தை நம்முடைய மாநில அரசு சிறப்பாக நிறைவேற்றினாலும்கூட, இதனைப் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் என்ற அடிப்படையிலே செயல்படுத்தினாலும், இதை மேம்படுத்தப்பட்ட திட்டமாக, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கிற திட்டமாக, சுய வேலைவாய்ப்பை உறுதி செய்கிற திட்டமாக மாற்றுவதற்கு நம்முடைய தமிழ்நாடு அரசு முயற்சி எடுக்க வேண்டும். என்னுடைய வேண்டுகோள் என்பதும், எதிர்பார்ப்பு என்பதும், வெளியிலே இருக்கிறவர்களுடைய எதிர்பார்ப்பு என்பதும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்திலுடைய பொன்விழா ஆண்டாக இந்த ஆண்டு இருக்கிற காரணத்தினாலேயே, இந்தப் பொன்விழா சுய வேலைவாய்ப்புத் திட்டத்தை நம்முடைய கலைஞர் அவர்களுடைய பெயராலேயே, இதனை ஒரு மேம்படுத்தும் திட்டமாக, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டமாக மாறுதல் செய்வதற்கு உரிய முயற்சி எடுத்து ஒரு புதிய திட்டத்தையே உருவாக்கி அறிவிக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உரையை முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்து விடுகிறேன். முடித்துவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகள் என்ற முறையில், எங்களுடைய மன்னார்குடி நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடை திட்டத்தை, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே மன்னார்குடிக்கு வருகை தந்தபொழுது அறிவித்திருக்கிறார்கள். அதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பு செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மன்னார்குடிக்குப் புதிய பேருந்து நிலையம், வளர்ந்து வருகிற இந்தச் சூழ்நிலையில் மையப் பகுதியில் இருக்கிற காரணத்தினாலேயே, மாற்று இடத்திலே அமைத்துத்தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதி, மிக முக்கியமான பகுதி; அந்த நகராட்சியை இரண்டாகப் பிரிக்கிறது வெண்ணாறு. அதிலே பாலம் இல்லாத காரணத்தினாலே போக்குவரத்துக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, பாய்க்காரத் தெருவிற்கு அருகில் அந்தப் பாலத்தை கட்டிக்கொடுக்க வேண்டும். இதை நெடுஞ்சாலைத் துறை தங்கள் வசம் இல்லை என்று சொல்கிறது; பொதுப் பணித் துறையும், தங்கள் வசம் எடுக்க முடியாது என்று சொல்கிறது. ஆகவே, உள்ளாட்சித் துறைமூலமாக இதை நிறைவேற்றுவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நகராட்சித் தெரு விளக்குப் பராமரிப்புப் பணியாளர்கள் 89 பேர், 18 வருடங்களாகப் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்குப் பணி உயர்வும் இல்லை; உத்தரவாதமும் இல்லாத நிலை இருக்கிறது. மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், ஒரு நிகழ்ச்சியிலே பங்கேற்றபொழுதும், இந்தச் சட்டமன்றத்திலேயும், அவர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்குரிய முயற்சி எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, நகராட்சித் தெரு விளக்குப் பராமரிப்புப் பணியாளர்களை நம்முடைய மின் வாரியமே ஏற்று அவர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கி, அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கும், பதவி உயர்வு வழங்குவதற்கும் முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், time ஆகிறது. இன்னொரு உறுப்பினர் பேச வேண்டும். திரு. சிவபுண்ணியம், ஒரேயொரு வரியில் சொல்லி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஊராட்சி ஒன்றியத் தொழில்நுட்ப உதவியாளர்கள், தங்களுக்குப் பணி உயர்வு வேண்டுமெனக் கேட்கிறார்கள். அதேபோல, சாலை ஆய்வாளர்கள், பணி உயர்வு வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களுக்குப் பணி நிரந்தரம் செய்யவேண்டும்; பணி உயர்வும் வழங்க வேண்டும்.

அதேபோல, Overseer-கள் 10, 25 ஆண்டுகளாகப் பணியாளர்களாகப் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு இளநிலைப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு வழங்க வேண்டும். குடிநீர் Pump Operator-கள், துப்புரவுப் பணியாளர்கள்பற்றி, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இதைத் திரும்பவும் பரிசீலிக்க வேண்டும்.

பிற்பகல் 1-25

அதேபோல, இதிலே, ஒரு முக்கியமான விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சென்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே, தெரு நாய்களால் என்ன பாதிப்பு என்பதைக் கண்டறிந்து, Rabbies என்ற நோயின் கொடுமைத் தன்மைகளை உணர்ந்து, அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒரு புதிய மாறுதல் என்னவென்று சொன்னால், தெரு நாய்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு சிக்கலான விஷயம். உலகச் சுகாதார நிறுவனம் சொன்ன காரணத்தினாலே, அதை ஏற்றுக்கொண்டு செய்தால், இந்த Rabbies என்ற நோயின்மூலமாகப் பல ஆயிரம் பேர் நாய்க்கடிக்கு ஆளாகி இறக்க நேரிடும்; மிக மோசமான நோய் அது. ஆகவே நாய்க்குக் கருத்தடை செய்வது, அப்படிச் செய்து அதைப் பாதுகாப்பது என்கிற பெயராலே, நாய்களை வளரவிட்டால, அது தமிழ்நாட்டிற்கே கேடாகப் போய், மக்கள் சாவதைத் தவிர, வேறு வழியில்லாமல் போய்விடும். இந்தத் திட்டத்தைப்பற்றி ஆழமாகப் பரிசீலித்து, அதிலே மாறுதல் செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மூலமாக பல செய்திகளை, பல திட்டங்களை, பல அறிவிப்புகளை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பாக நிறைவேற்றுவார்கள். காரணம், "தாய் 8 அடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும்" என்று சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு, "இந்த நிருவாகத்தின்மூலமாக 32 அடியாகப் பாய்ந்து இதைச் சிறப்பாக நீங்கள் நிறைவேற்றுங்கள்" என்ற வாழ்த்துகளைத் தெரிவித்து, நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

***திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பு அளித்ததற்காக, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் மக்கள் தலைவர் அண்ணன் வை.கோ. அவர்களுக்கும் தங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நகராட்சி நிருவாகம், ஊராட்சி நிருவாகம் என்றாலே politics-தான். Politics என்ற வார்த்தை 'Polis' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. 'Polis' என்றாலே நகரம்தான், நகரம் என்ற பொருள்படும். இதிலிருந்துதான் Metropolitan, Metropolis என்ற வார்த்தைகள் உருவாயின. Metro என்றால், கிரேக்கத்தில் தாய்--mother--என்று பொருள். Metropolis என்றால் தாய் நகரம் என்ற பொருள்படுகின்றது. "What is a city, but its people", 'நகரம் என்றால் என்ன? அதில் வசிக்கும் மக்கள்தானே'! என்றார் ஷேக்ஸ்பியர். "Fields and trees teach me nothing, but the people in a city do" என்றார்; அதன் தமிழ்ப் பொருள் 'மைதானங்களும் மரங்களும் எனக்கு எதையும் கற்றுக்கொடுப்பதில்லை; ஆனால், ஒரு நகரத்தில் வசிக்கும் மக்கள்மூலம் நான் கற்றுக்கொள்கிறேன்' என்றார் சாக்ரடீஸ். ஆகையால்தான் 'ஒரு நகர நிருவாகத்தின் உண்மையான நோக்கமும் குறிக்கோளும், நகர மக்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைய, தேவையான வசதிகளை உருவாக்குவதுதான்' என்றார் அரிஸ்டாட்டில். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானதாஸ், that matter is pending in Supreme Court, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானதாஸ், அந்த matter, Supreme Court-ல் pending-லே இருக்கிறது. Don't discuss about it. (குறுக்கீடு) திரு. சுதர்சனம், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) You are not permitted.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரமன்றத் தேர்தல் நடைபெற்றது. அதற்குப் பின்னாலே, அந்தப் பிரச்சினை நீதிமன்றத்திற்குச் சென்று, சென்னை மாநகரத்திலே எல்லா உறுப்பினர்களும் இராஜினாமா செய்து, நூற்றுக்கும் மேற்பட்டவர்கள், நூறு உறுப்பினர்கள் இராஜினாமா செய்துவிட்டு மறுதேர்தல் நடைபெற்றது. அவையெல்லாம் நேர்மையாக நடைபெற்றன. அதைப்பற்றி விவாதிப்பதற்கு இங்கே எந்தவிதமான காரணமும் இல்லை. வேண்டுமென்றே வம்பு வளர்ப்பதற்காக விவாதித்துக் கொண்டிருக்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானதாஸ், அந்த subject-ஐ விட்டுவிட்டு மற்றவற்றிற்குப் போங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** **

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அவர் இப்போது பேசிய அனைத்து வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) உட்காருங்கள். அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதைத் திரும்பச் சொல்லக் கூடாது நீங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. ஆர். ஞானதாஸ்:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரை நாளைக்குத் தொடரும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பதின்மூன்றாவது சட்டப் பேரவைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் பயன்பெறும்வகையில், புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு (Refresher Course), இன்று (11-1-2007) மாலை 4-00 மணிக்கு, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் பத்தாவது தளத்தில் மாநாட்டுக் கூட்ட மண்டபத்தில் நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கில் அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 8. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை 12-1-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 12-1-2007 வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 12-4-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

இன்று பேரவையில் எடுத்துக்கொண்ட மானியக் கோரிக்கைமீதான விவாதம் நாளையும் தொடரும். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12-4-2007) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

44. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

61. மானியக் கோரிக்கை எண் 34 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

62. மானியக் கோரிக்கை எண் 34 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய செயல்திறன் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

63. மானியக் கோரிக்கை எண் 42- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

64. மானியக் கோரிக்கை எண் 42 - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம், 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

65. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

66. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2006-2007)

67. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2006-2007)

68. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2006-2007)

# இணைப்பு—I

*(102 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 34

## நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்புகள், 2007–2008

**முகவுரை**

நகராட்சி நிருவாகமும் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, இம்மாநிலத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்திற்குப் பொறுப்பாகும். மேலும் இத்துறை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதும் இத்துறையின பொறுப்பாகும்.

இம்மாநிலத்திலுள்ள நகரங்களைத் தூய்மையானவையாகவும், வாழ்வதற்கேற்ற வசதிகளைக் கொண்ட வகைகளாகவும், அங்கு வாழும் மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அளிக்கவல்ல வகைகளாகவும் மாற்றிட வேண்டிய நடவடிக்கைகளை இவ்வரசு ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுத்தி வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல், அக்டோபர் 2006-ல் நடத்தப்பட்டு, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பதவியேற்றுள்ளனர். உள்ளாட்சி அமைப்புகளின் சீரான செயல்பாட்டினை உறுதி செய்வதற்கென, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர் பதவிகளுக்கு மறைமுகத் தேர்தல் முறை பின்பற்றப்பட்டது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு, மேலும் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது தொடர்பாகவும், அவற்றின் நிருவாகத்தில் தேவையான சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது குறித்து, தக்க

[2007 ஏப்ரல் 11

பரிந்துரைகளை வழங்குவதற்காக, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவினை அரசு அமைத்துள்ளது. இந்த உயர்நிலைக் குழுவின் அறிக்கையைப் பெற்று ஆய்வு செய்து, உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான உரிய அதிகாரங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும். இதுபோன்றே, உள்ளாட்சி அமைப்புகளின் நிலைகளை உயர்த்துவது குறித்தும், அவற்றின் எல்லைகள் குறித்தும் பரிசீலித்து முடிவெடுக்க தக்க வழிமுறைகளடங்கிய அரசாணையை அரசு வெளியிட்டுள்ளது.

மூன்றாவது மாநில நிதி ஆணையம் தனது அறிக்கையினை அரசுக்கு அளித்துள்ளது. இதன் அடிப்படையில், அரசின் வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் பங்கினை 8 சதவீதத்திலிருந்து, 9 சதவீதமாக 2007-2008 முதல் உயர்த்திட அரசு முடிவெடுத்துள்ளது. ஆணையத்தின் மற்ற பரிந்துரைகள்மீதான அறிக்கை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

### நகராட்சி நிருவாகம்

இம்மாநிலத்தில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 மாநகராட்சிகள் உள்ளன. சென்னை தவிர 5 மாநகராட்சிகள், 49 மூன்றாம் நிலை நகராட்சிகள் உள்ளிட்ட 152 நகராட்சிகள், நகராட்சி நிருவாக ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

**நகராட்சிகள் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:**

| வ. எண் | நிலை | ஆண்டு வருவாய் (ரூபாய் கோடியில்) | நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சிறப்பு நிலை | 5.00–க்கு மேல் | 13 |
| 2. | தேர்வு நிலை | 2.00–5.00 | 28 |
| 3. | முதல் நிலை | 1.00–2.00 | 36 |
| 4. | இரண்டாம் நிலை | 1.00–க்கு குறைவான | 26 |
| 5. | மூன்றாம் நிலை | 30,000 மக்கட்தொகைக்கு மேல் | 49 |
| | | மொத்தம் | 152 |



2007 ஏப்ரல் 11]

நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதி எல்லைகள் சீரமைப்புப் பணிகள் நிறைவுற்றவுடன் திருப்பூர் நகராட்சியினை மாநகராட்சியாக நிலை உயர்த்துவது என அரசு மேற்கொண்டுள்ள முடிவு, செயலுக்குக் கொண்டு வரப்படும். பெரம்பலூர் மூன்றாம் நிலை நகராட்சி 15-11-2006 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

### 1. நகர்ப்புற வளர்ச்சிக்கான மனிதவள மேம்பாட்டு அறிக்கை

ஒரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் உண்மையான வளர்ச்சி அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தின் வாயிலாகவே பிரதிபலிக்கிறது. மரபுவழி பொருளாதாரக் குறியீடுகள் மக்களின் உண்மையான வாழ்க்கைத் தரத்தினை வெளிப்படுத்துவதாக இல்லை. எனவே, ஒவ்வொரு நகர்ப்புற உள்கட்டமைப்பும் மனித வள மேம்பாடு தொடர்பான திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்கு ஏதுவாக, துப்புரவு, குடிநீர் விநியோகம், சுகாதாரம், கல்வி, வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பை உருவாக்குதல், ஊட்டச் சத்து, பாலின சமத்துவம் மற்றும் அடிப்படை வசதிகளைப் பெறுதல் ஆகியவை குறித்த மனிதவள குறியீடுகளைத் தயாரித்தல் அவசியமாகிறது. எனவே ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மனிதவள மேம்பாட்டு அறிக்கையினைத் தயாரிக்கவும், இப்பணியைப் படிப்படியாக மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் அமைந்துள்ள நகராட்சிகளுக்கான மனிதவள மேம்பாட்டு அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

### 2. தமிழகத்திலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் நகர மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல்

நகர மேம்பாட்டுத் திட்டம் என்பது நகரங்கள் மற்றும் மாநகரங்களின் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான தொலைநோக்குத் திட்டங்களைக் குறிப்பிடுவதாகும். தமிழ்நாடு நகர்ப்புற மூன்றாவது வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளுக்கும் மற்றும் அவற்றின் அருகில் உள்ள நகராட்சிகளுக்கும், மேலும், கடலூர், நாமக்கல், திருச்செங்கோடு, கொடைக்கானல், நாகர்கோவில், சிவகாசி, இராஜபாளையம், கோவில்பட்டி, காரைக்குடி, ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் ஆகிய நகராட்சிகளுக்கும் நகர மேம்பாட்டுத் திட்ட இறுதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

[2007 ஏப்ரல் 11

மேலும் 31 நகராட்சிகளுக்கு இது போன்ற நகர மேம்பாட்டுத் திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி, முடிவுபெறும் நிலையில் உள்ளன. தமிழகத்திலுள்ள அனைத்து முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலை நகராட்சிகளுக்கும் நகர மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்க தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## II. உள்கட்டமைப்பு மேம்பாடு

### (அ) குடிநீர் வழங்கல்

உடனடியாக, அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளிலும் தினமும் குடிநீர் வழங்குவதை உறுதி செய்வதும், முடிவாக வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகிக்கும் நிலையை எய்துவதுமே அரசின் நோக்கமாகும்.

இவ்வாண்டில், அருப்புக்கோட்டை, சிவகாசி, விருதுநகர் மற்றும் சாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலமாகச் செயல்படுத்தப்பட்டன.

திருநெல்வேலி மாநகராட்சி, பொள்ளாச்சி, கோபிசெட்டிபாளையம், போடிநாயக்கனூர், கவுண்டம்பாளையம் மற்றும் வடவள்ளி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய நகராட்சிகளுக்கான குடிநீர்த் திட்டப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

திருத்தணி, அரக்கோணம், திருப்பத்தூர், நாமக்கல், நீலகிரி மாவட்டம் கூடலூர், பல்லடம், வால்பாறை, விக்கிரமசிங்கபுரம், திருவில்லிபுத்தூர் மற்றும் அறந்தாங்கி ஆகிய 10 நகராட்சிகளில் ரூ.81.62 கோடி மதிப்பிலான குடிநீர்த் திட்டப் பணிகள் 2006-2007 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (UIDSSMT) செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (UIDSSMT) கீழ்க்காணும் நகராட்சிகளுக்கான குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது:



2007 ஏப்ரல் 11]

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | விழுப்புரம் | 955.00 |
| 2 | மறைமலை நகர் | 254.00 |
| 3 | கரூர் | 110.38 |
| 4 | தஞ்சாவூர் | 904.00 |
| 5 | ஈரோடு | 588.16 |
| 6 | தேவகோட்டை/சிவகங்கை | 30.00 |
| | மொத்தம் | 2841.54 |

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் (JNNURM) கீழ்க்காணும் குடிநீர்த் திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தாம்பரம் (சென்னை புறநகர் பகுதி) | குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் | 32.60 |
| 2 | திருப்பரங்குன்றம் மற்றும் ஆர்.வி. பட்டி பேரூராட்சி (மதுரை மாவட்டம்) | கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 9.67 |
| 3 | மதுரை மாநகராட்சி | வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை | 4.80 |
| 4 | கோவை மாநகராட்சி | பில்லூர் இரண்டாவது குடிநீர் விநியோகத் திட்டம் | 113.74 |
| | | மொத்தம் | 160.81 |

மேற்கண்ட அனைத்துக் குடிநீர்த் திட்டங்களும் 2007-2008 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

கடந்த ஆண்டு செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம், பரமக்குடி, இராமநாதபுரம், கீழக்கரை, இராமேஸ்வரம் மற்றும் சிவகங்கை ஆகிய 5 நகராட்சிகள் பயனடையும்.

### (ஆ) சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து மண் சாலைகள் மற்றும் கற்சாலைகளைத் தார்ச் சாலைகளாகவும், சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவும் அடுத்த நான்கு வருடங்களில் மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் 87.52 கி.மீ. சாலைகள், தார்ச் சாலைகளாகவும், சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. இத்திட்டம், 2007-2008-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதன்மூலம் 500 கி.மீ. மண்/கற்சாலைகள் இந்த ஆண்டு தார்ச் சாலைகள் அல்லது சிமெண்ட் சாலைகளாக மாற்றப்படும்.

- 2006-2007-ம் ஆண்டில், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 10 நகராட்சிகளில் ரூ.81.68 கோடி மதிப்பிலான சாலை மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.
- 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் சங்கரன்கோவில், தேவகோட்டை, சிவகங்கை மற்றும் ஈரோடு நகராட்சிப் பகுதிகளில் ரூ.9.38 கோடி மதிப்பில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.
- நகரங்களில் உள்ள பெரிய சாலைகளில் நடைபாதைகள் அமைக்கப்படும்.
- முதற்கட்டமாக அனைத்துப் பேருந்து வழிச் சாலைகளிலும் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்படும். மற்ற சாலைகளிலும் இத்திட்டம் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

### (இ) தெரு விளக்குகள்

போதிய வெளிச்சம் தருவதற்கென 30 மீட்டர் இடைவெளிக்கு ஒரு தெரு விளக்கு வேண்டும் என்ற அடிப்படையில், அனைத்து





நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் தேவையான இடங்களில் கூடுதலாகத் தெரு விளக்குகள் அமைக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

தற்சமயம் 18 நகராட்சிகள் மற்றும் 3 மாநகராட்சிகளில் தெரு விளக்குகள் பராமரிப்புப் பணிகள் தனியாருடன் இணைந்து செயல்படுத்தப்படுகின்றன. இம்மாதிரியான செயல்பாட்டில் குறைந்த செலவில் தரமான சேவை கிடைப்பது கண்டறியப்பட்டுள்ளது.

- மின்சக்தி சேமிப்பு நிறுவனங்கள்மூலம் மின்சாரத்தைச் சேமிக்கும் ஒரு புதிய அணுகுமுறையினை 2007-2008 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதியுதவி நிறுவனம், மின்சக்தி சேமிப்புத் திட்டம் தொடர்பாக ஓர் ஆய்வினை மேற்கொள்ள உதவி செய்துள்ளது. மேலும், இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கென நிறுவனங்களையும் கண்டறிந்துள்ளது.
- மின்சக்தி சேமிப்பை மேற்கொள்வதற்கெனவும், தரக்குறைவு, குறைந்த வெளிச்சம் தொடர்பான புகார்களைத் தவிர்க்கும் வகையிலும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தெரு விளக்கு உபகரணங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் வாங்குவதில் தரக் கட்டுப்பாடு முறைகள் வலுப்படுத்தப்படும்.
- நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளால் புதிதாக வரன்முறை செய்யப்பட்ட மனைப் பிரிவுப் பகுதிகளில் 2007-2008 ஆம் ஆண்டில் தெரு விளக்கு வசதிகள் அமைத்துத் தரப்படும்.
- மின்சக்தியைச் சேமிக்கும் பொருட்டு, நகர்ப்புறங்களில் உள்ள, குழல் விளக்குகளும், சோடியம் ஆவி விளக்குகளும் படிப்படியாக ஒளிரும் அடர்மின் விளக்குகளாக (CFL) மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

### (ஈ) உயர்தர பேருந்து நிலையங்கள்

மாநிலத்தின் நகர்ப்புறங்களில் அமைந்துள்ள அனைத்துப் பேருந்து நிலையங்களின் தரத்தினை உயர்த்தவும், அவற்றைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு அனைத்து வசதிகளைச் செய்து கொடுக்கவும் அரசு முயலும்.

[2007 ஏப்ரல் 11

இராஜபாளையம், கிருஷ்ணகிரி மற்றும் கோவில்பட்டி ஆகிய நகரங்களில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையங்கள் 2007-2008 ஆம் ஆண்டில், பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். நெல்லிக்குப்பம் மற்றும கொடைக்கானல் நகரங்களில் நவீன வசதிகளுடன்கூடிய புதிய பேருந்து நிலையங்கள் கட்டும் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நெல்லிக்குப்பம் பேருந்து நிலையக் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டுள்ளது. நாகர்கோவிலில் உள்ள தற்போதைய பேருந்து நிலையம் ரூ.165 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. ஏப்ரல் 2007-ல் இப்பேருந்து நிலையம் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

பூவிருந்தவல்லி பேருந்து நிலையத்தை ரூ.3.70 கோடி செலவில் நவீனப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் 2008-2009 ஆம் ஆண்டு நிறைவுறும்.

மேலும், திருவண்ணாமலை, மணலி, அனகாபுத்தூர் மற்றும் உள்ளகரம், புழுதிவாக்கம் நகராட்சிகளில் தற்போதுள்ள பேருந்து நிலையங்கள் 2007-2008 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்படும்.

❖ பொள்ளாச்சி, வந்தவாசி, ஓசூர், கொடைக்கானல் மற்றும் பழனி நகராட்சிகளின் பேருந்து நிலையங்கள், 2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புற மூன்றாவது வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நவீனப்படுத்தப்படும்.

## III. பொதுச் சுகாதாரம்

பொதுச் சுகாதாரம் மற்றும் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்தித் தருவது, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியக் கடமையாகும். சுகாதாரம் மற்றும் கழிப்பிட வசதிகளை மேம்படுத்த, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றன.

### (அ) பாதாளச் சாக்கடைத் திட்டம்

❖ இந்த அரசு அனைத்து நகரங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் படிப்படியாகச் செயல்படுத்திட உறுதி கொண்டுள்ளது.

❖ 2006-2007 ஆம் ஆண்டில், 5 மாவட்டத் தலைநகரங்கள் தவிர, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் அமைந்துள்ள நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.



2007 ஏப்ரல் 11]

❖ தேனி அல்லிநகரம், திருவள்ளூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் மற்றும் நாகர்கோவில் ஆகிய எஞ்சிய 5 மாவட்டத் தலைநகரங்களுக்கும் நடப்பு ஆண்டில், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு நிருவாக அனுமதி அளிக்கப்பட்டு, திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

❖ குமாரபாளையம், இராசிபுரம், சின்னமனூர், பரமக்குடி, சங்கரன்கோவில், தென்காசி, மேட்டூர், சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம், மறைமலைநகர் ஆகிய 10 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் 2007-2008 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளன.

### (ஆ) தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டம்

தெரு நாய்கள் சட்ட விரோதமாகவும், மனிதாபிமானமற்ற முறையிலும் கொல்லப்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு, உலக சுகாதார நிறுவனம், தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டத்தை பரிந்துரை செய்துள்ளது. 1960 ஆம் ஆண்டு பிராணிகள் வதை தடுப்புச் சட்டத்தின் பிரிவு 38(1)-ன்கீழ், 2001 ஆம் ஆண்டு கருத்தடை அறுவை விதிகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த ஏதுவாக, தெரு நாய்கள் மற்றும் வீட்டு நாய்களின் எண்ணிக்கையைக் கண்டறிய, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பின் அடிப்படையில், இத்திட்டத்தை முதலில் 5 மாநகராட்சிகள் மற்றும் 50 நகராட்சிகளில் செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. அரசாணை எண் 10, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18-1-2007-ல், தெரிவு செய்யப்பட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.5,28,27,150 செலவு செய்துகொள்ளவும், இந்தியப் பிராணிகள் நலச் சங்கத்திடமிருந்து பின்னர் இத்திட்டத்தின்படி மானியத்தைப் பெற்றுக்கொள்ளவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் முறையே 10-2-2007, 12-2-2007 மற்றும் 14-2-2007 ஆகிய தேதிகளில் மண்டலக் கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டு, தெரு நாய்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யும் திட்டத்தின் செயலாக்கம்பற்றி அலுவலர்களுக்கு உணர்த்தப்பட்டது.

[2007 ஏப்ரல் 11

இந்தியப் பிராணிகள் நலச் சங்கம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டில் செயல்படுத்தி முடிக்கப்படும்.

### (இ) நவீன இறைச்சிக் கூடம் கட்டுதல்

பிராணிகளைப் பொது இடங்களில் வதை செய்வதைத் தவிர்க்கும் பொருட்டு, அனைத்து உள்ளாட்சி மன்றங்களும் இறைச்சிக் கூடங்களைப் பராமரிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம், 2000 ஆம் ஆண்டில் உத்தரவிட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளை நிறைவேற்றும்பொருட்டு, முதல்கட்டமாக 32 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில் 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.3.70 கோடி தொகையினை அரசு வழங்கியுள்ளது. இத்திட்டப் பணிகள் 2007-2008 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் மேலும் 65 நகராட்சிகளில் 13 கோடி ரூபாய் செலவில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கப்படும்.

### (ஈ) எரிவாயு தகன மேடை

நகர்ப்புற வளர்ச்சியின் நன்மைகள் சமுதாயத்தின் அனைத்து நிலைகளுக்கும் சென்று அடையவேண்டும். எனவே, முதற்கட்டமாக 2006-2007 ஆம் ஆண்டில் 5 மாநகராட்சிகள் மற்றும் 33 நகராட்சிகளில் எரிவாயு தகன மேடை அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கென அரசு மானியமாக ரூ.7.60 கோடி வழங்கியுள்ளது. இத்திட்டம் 2007-2008-க்குள் முடிக்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.5.60 கோடி திட்ட மதிப்பீட்டில் மேலும் 14 நகராட்சிகளில் எரிவாயு தகன மேடை அமைக்கப்படவுள்ளது.

### (உ) 69 நகராட்சிகளில் இடுகாடு மேம்பாட்டுத் திட்டம்

இடுகாடுகளை முறையாகப் பராமரிப்பது, உள்ளாட்சி மன்றங்களின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். இதன்படி, 69 நகராட்சிகளில் உள்ள இடுகாடுகள் ரூ. 6.28 கோடி மதிப்பீட்டில் 50 சதவீத அரசு நிதியுதவியுடன் மேம்படுத்தப்படும்.

### (ஊ) திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மை உள்ளாட்சி அமைப்புக்களின் கட்டாயப் பணிகளில் ஒன்றாகும்



2007 ஏப்ரல் 11]

- உரக் கிடங்கிற்கான நிலம் வாங்க 12 மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு 2006-2007-ம் ஆண்டில் ரூ.172.76 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. மேலும், திடக்கழிவு மேலாண்மை உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுப் பணிகளுக்கென சென்னைப் பெருநகர் பகுதியில் அமைந்துள்ள 16 நகராட்சிகளுக்கு 2006-2007 ஆம் ஆண்டில் 8.00 கோடி ரூபாயை அரசு வழங்கியுள்ளது.
- திடக்கழிவு மேலாண்மை உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுப் பணிகளுக்காக அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் 12-வது நிதிக் குழு மானியத்திலிருந்து 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.41.15 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டிலும் இதே அளவு தொகை வழங்கப்படும்.
- தற்போது அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் நாளொன்றுக்கு 11,000 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாக்கப்படுகின்றன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 90 விழுக்காடு வார்டுகளில் ஆதார நிலையிலேயே மக்கும் மற்றும் மக்கா குப்பைகளாகப் பிரித்தெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. குப்பைகளை ஆதார நிலையிலேயே 100 விழுக்காடு பிரித்தெடுத்து, திடக்கழிவினை விஞ்ஞான முறையில் அகற்றி தமிழக நகரங்களைக் குப்பையில்லா நகரங்களாகத் திகழச் செய்வதே திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் தலையாயக் குறிக்கோளாகும்.
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் மூன்று பெரிய திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | மதுரை மாநகராட்சி | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 74.29 |
| 2 | கோவை மாநகராட்சி | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 96.51 |
| 3 | நாமக்கல் நகராட்சி | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 3.58 |
| | | மொத்தம் | **174.38** |

[2007 ஏப்ரல் 11

மேற்கண்ட மூன்று திட்டங்களும் 2007-2008 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

**மண்டல அளவில் உரக் கிடங்கு அமைக்க நிலம் கண்டறிதல்**

நகர்ப்புறங்களில் நிலம் கிடைப்பது அரிதாகி வருகிறது. ஏற்கெனவே உள்ள நகராட்சி உரக் கிடங்குகள் நிரம்ப ஆரம்பித்துள்ளதால், சுற்றுப்புற சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் நிலை உள்ளது. இந்தக் குறையைக் களைய விண்வெளி வரைபடம் மற்றும் நிலவியல் தகவல் அமைப்பின் உதவியுடன் தொலைவிலிருந்து உணர்ந்தறியும் தொழில்நுட்ப முறையில் மண்டல அளவில் குப்பை கொட்டுவதற்கான நிலத்தினைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறாகத் தெரிவு செய்யப்படும் மண்டல குப்பை கொட்டும் பகுதிகள் அவ்விடத்தைச் சுற்றியுள்ள நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளால் பயன்படுத்திக் கொள்ளப்படும். தேவையான இடத்தைத் தெரிவு செய்தல் மற்றும் அதனைப் பயன்படுத்தும் நகராட்சிகளின் பட்டியலைத் தயாரிக்கும் பணி ஆகியவை நடப்பு ஆண்டில் முடிக்கப்படும்.

**வேங்கடமங்கலம் பொது உரக் கிடங்கு**

மண்டல அளவிலான பொது உரக் கிடங்கு அமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக தாம்பரம், பல்லவபுரம் மற்றும் ஆலந்தூர் ஆகிய நகராட்சிகளுக்குப் பொதுவான உரக் கிடங்கிற்காக, காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், வேங்கடமங்கலம் கிராமத்தில் 50 ஏக்கர் நிலம் ரூ.113.28 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது. அந்நிலத்தினை மேம்படுத்தவும் மற்றும் சுற்றுச்சுவர் கட்டவும் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.75.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேற்படி மூன்று நகராட்சிகளுக்கும் முதல்நிலை திடக்கழிவுகள் சேகரித்தல் மற்றும் இரண்டாம்நிலை திடக்கழிவுகளைப் பிரித்து எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றிற்குத் தேவையான வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பொது உரக் கிடங்கில் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் ரூ.18 கோடி செலவில் ஏற்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சேக்காடு பொது உரக் கிடங்கு**

இதேபோன்று, திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், சேக்காடு கிராமத்தில் 18.20 ஏக்கர் பரப்பளவில் பொது உரக் கிடங்கு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த உரக் கிடங்கு அம்பத்தூர் மற்றும் ஆவடி நகராட்சிகளால் பயன்படுத்தப்படும். சுற்றுச்சுவர், எடைமேடை,



2007 ஏப்ரல் 11]

காவலர் குடியிருப்பு, தளமேடைகள், குப்பைகளைப் பிரிப்பதற்கான மேடை, குப்பை பிரிக்கும் கிடங்கு, நீருறிஞ்சு வடிகால், உரப் பாதுகாப்புக் கிடங்கு ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. உரம் தயாரிக்கும் பணி நடப்பாண்டில் தொடங்கப்படும்.

**IV. ஆரோக்கியமான சுற்றுச்சூழல் ஏற்படுத்துதல்**

**(அ) நகராட்சிகளுக்கு அலுவலகக் கட்டடம் கட்டுதல்**

பல நகராட்சிகளில் அலுவலகக் கட்டடம், போதிய இட வசதி இல்லாமல் இருப்பினும், நிதிப் பற்றாக்குறை காரணமாக அந்நகராட்சிகள் அலுவலகக் கட்டடம் கட்ட இயலாத நிலையில் உள்ளன. இதைக் கருத்தில்கொண்டு, செங்கோட்டை, புளியங்குடி, உசிலம்பட்டி, ஆறுகாடு, நெல்லிக்குப்பம், துவாக்குடி, குமாரபாளையம், தாராபடவீடு மற்றும் சாத்தூர் ஆகிய நகராட்சிகளுக்கு அலுவலகக் கட்டடம் கட்ட 2007-2008-ம் ஆண்டில் ரூ.2,75 கோடி நிதி உதவி வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது.

**(ஆ) அனுமதியற்ற மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்துதல்**

தமிழகத்தின் நகர்ப்புறங்களில் மொத்தம் 3,400 அனுமதியற்ற மனைப் பிரிவுகளில் 180,000 மனைகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த மனைப் பிரிவுகளில் உள்ள மனைகளை வரன்முறைப்படுத்த அரசு, அரசாணை எண் 59, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25-7-2006-ல் ஆணைகளை வெளியிட்டது. இந்த மனைகளை வரன்முறை செய்ய மாநகராட்சிப் பகுதிக்கு 1 ச.அடிக்கு ரூ.5, நகராட்சிப் பகுதிக்கு 1 ச.அடிக்கு ரூ.2 மற்றும் பேரூராட்சிப் பகுதிக்கு 1 ச.அடிக்கு ரூ.1 என அரசு கட்டணம் நிர்ணயம் செய்தது. இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க கடைசி நாள் 31-12-2006 என நிர்ணயிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், வரன்முறை செய்யப்படும் பகுதிகளில், சாலை, குடிநீர், கழிவுநீர் மற்றும் தெரு விளக்கு வசதிகள் செய்திட அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளதால், இத்திட்டத்திற்குப் பொதுமக்களிடையே பேராதரவு கிடைத்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், இதுவரை மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) மொத்தம் 38,284 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டு, அதன்மூலம் ரூ.36.42 கோடியும், நகராட்சிப் பகுதிகளில் மொத்தம் 67,969 மனைகள் வரன்முறை செய்யப்பட்டு, அதன்மூலம் ரூ.25.17 கோடியும் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

53-108—8

[2007 ஏப்ரல் 11

## V. வெளிப்படையான நிருவாகம்

நகராட்சி சேவையில் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தின் பயன்பாடு:

### மின்னணு ஆளுகை

தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தின் உதவியோடு மக்களுக்குத் தேவையான சேவைகளை இல்லங்களுக்கே கொண்டு செல்வது நகராட்சிகளின் மின்னணு ஆளுகையின் நோக்கமாகும். மின்னணு சேவை வழங்குவதன்மூலம், உள்ளாட்சி ஆளுகையில் மக்கள் பங்கேற்பினை அதிகப்படுத்தவும், வெளிப்படையான நிருவாகத்தை உருவாக்கவும் முடியும்.

மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு, மின்னணு ஆளுகை தொடர்பாக ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளை அரசு வலுப்படுத்தும். மேலும் மின்னணு ஆளுகை தொடர்பான அடுத்த கட்டச் சீர்திருத்தங்களையும் அரசு மேற்கொள்ளும்.

### இந்தப் புதிய முயற்சியின்கீழ்

- புவியியல் தகவல் அமைப்பினைச் சோதனை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உருவாக்கி, நிலவியல் வரைபட மின்தகவல் அடித்தளமிடுவதுடன், இணையதளம் சார்ந்த அமைப்பையும் உருவாக்கிச் சொத்து மேலாண்மைக்குப் பயன்படுத்தப்படும். இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியில் எய்தக்கூடிய வெற்றியின் அடிப்படையில், படிப்படியாக, இத்திட்டத்தினை இதர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பிரதிபலிக்கச் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- சமீபத்தில் நிலை உயர்த்தப்பட்ட 49 மூன்றாம் நிலை நகராட்சிகளிலும் மின்னணு ஆளுகை செயல்படுத்தப்படும். இந்நகராட்சிகளுக்குத் தேவையான கணினிகள், மென்பொருள்கள், யுபிஎஸ் ஆகியவை அளிக்கப்பட்டுள்ளன.
- 49 மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கான இணையதளங்களை உருவாக்கும் நடவடிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.
- 49 மூன்றாம் நிலை நகராட்சிகளின் அகன்ற இணையதள இணைப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 11]

- பொதுமக்கள் உள்ளாட்சி அமைப்புகளின் தகவல் தொகுப்புகளிலிருந்து தகவல்களை விரைவாகப் பெறுவதற்கு ஏதுவாக இணையதள இணைப்புகளின் திறனை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## VI. நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம்

### பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

நகர்ப்புற வறுமையைக் குறைப்பது என்பது, நம்முன் உள்ள பெரிய சவால்களில் ஒன்றாகும். "பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்" என்ற வறுமை ஒழிப்புத் திட்டம், தற்போது செயல்பாட்டில் உள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ.18.91 கோடியும், மாநில அரசு ரூ.6.30 கோடியும் வழங்கின.

2006-2007 ஆம் ஆண்டில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு நிதி மானிய உதவியுடன் கூட்டுத் தொழில்கள் தொடங்க 3,555 பெண்களுக்கு உதவி அளிக்கப்பட்டது. 3,880 நகர்ப்புற ஏழை பயனாளிகளுக்கு, பயனாளி ஒருவருக்கு ரூ.2,000 வீதம் திறன் மேம்படுத்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

2007-2008 ஆம் ஆண்டில் 2,500 நகர்ப்புற ஏழைகள், மானியத்துடன்கூடிய தனிநபர் கடன் பெறுவதற்கும், சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 5,000 நபர்கள், கூட்டுத் தொழில் தொடங்குவதற்கும் 10,000 நகர்ப்புற பயனாளிகள், பயனாளி ஒருவருக்கு ரூ.2,000 வீதம் திறன் மேம்படுத்தும் பயிற்சி பெறவும் நிதியுதவி வழங்கப்படும்.

2007-2008 ஆம் ஆண்டில் நகர்ப்புறங்களைச் சார்ந்த 3,605 சுய உதவிக் குழுக்களுக்குப் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் உதவிகளை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் கணக்கெடுப்புப் பட்டியலைச் சரிபார்த்தல்

2003-2004 ஆம் ஆண்டில் நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்கள்பற்றிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பின் சரித்தன்மை குறித்து

[2007 ஏப்ரல் 11

மறுபரிசீலனை செய்ய கோரிக்கைகள் வரப்பெற்றதால், அந்தக் கணககெடுப்பின் முடிவுகளை மீண்டும் சரிபார்த்து தேவையான சேர்த்தல்/நீக்கல்/மாற்றம் செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.

அதன்படி சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. இபபணி ஏப்ரல் 2007-ல் முடிக்கப்படும். எதிர்காலத்தில் ஏழை மக்களுக்கு வழங்கப்படவுள்ள நிதி உதவிகள் திருத்தப்பட்ட பட்டியலின்படி வழங்கப்படும.

## VII. பெருந்திட்டங்கள்

### ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் 3-12-2005 அன்று மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் பின்வரும் உட்கூறுகள் உள்ளன—

(அ) நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஆளுமைத் துணைத் திட்டம்;

(ஆ) நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதிகள் வழங்கும் துணைத் திட்டம்;

### (1) நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஆளுமைத் துணைத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மூன்று நகரங்கள் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் வழங்குவதற்கென தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற, "நகர மேம்பாட்டுத் திட்டம்" தயாரிப்பது அவசியமான ஒன்றாகும். மதுரை மாநகராட்சி ரூ.2,458 கோடி மதிப்பீட்டு அளவிலும் கோயம்புத்தூர் மாநகராட்சி ரூ.3,186 கோடி மதிப்பீட்டு அளவிலும் நகர மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்துள்ளன. இத்திட்டத்தின்கீழ், குடிநீர் வழங்கல் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான 6 திட்டப் பணிகளை ரூ. 336.61 கோடி செலவில் செயல்படுத்திட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### 2. நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் (BSUP)

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டமானது, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத திட்ட (JNNURM) அம்சங்களில் ஒன்றாகும்.



2007 ஏப்ரல் 11]

2006-2007 ஆம் ஆண்டில் ரூ.829.32 கோடி மதிப்பீட்டிலான கீழ்க்காணும் 19 திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது—

| வ. எண் | செயல்படுத்தும் அமைப்பு | திட்டங்களின் எண்ணிக்கை | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் | 1 | எழில் நகர், சென்னை | 257.54 |
| 2 | தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் | 3 | 1. கோயம்புத்தூர்— அம்மன் குளம்—41.03<br>2. மதுரை—பெரியார் நகர் —39.77<br>3. கோயம்புத்தூர்— உக்கடம் —55.35 | 136.15 |
| 3 | நகராட்சி நிருவாக ஆணையரகம் | 5 | 1. திருவொற்றியூர்—1.70<br>2. ஆலந்தூர் —10.19<br>3. கத்திவாக்கம் —0.93<br>4. அம்பத்தூர் —4.75<br>5. மாதவரம் —5.43 | 23.00 |
| 4 | நகராட்சி நிருவாக ஆணையரகம் | 4 | 1. மதுரை மாநகராட்சி —26.86<br>2. மதுரை மாநகராட்சி —103.58<br>3. கோயம்புத்தூர் மாநகராட்சி —58.82<br>4. கோயம்புத்தூர் மாநகராட்சி —199.00 | 388.26 |
| 5 | பேரூராட்சிகள் இயக்குநரகம் | 6 | 1. பள்ளிக்கரணை—4.80<br>2. மாங்காடு —2.52<br>3. திருநீர்மலை —3.45<br>4. குன்றத்தூர் —7.16<br>5. செம்பாக்கம் —4.01<br>6. மீஞ்சூர் —2.43 | 24.37 |
| . | மொத்தம் | 19 | | 829.32 |

### 3. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT Scheme)

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்—**

நகரங்களில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய பொதுச் சொத்துகளை உருவாக்குதல் மற்றும் தரமான சேவைகளை வழங்குதல் ஆகியவற்றிற்கு உதவுதல்.

உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளில் பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பினை அதிகப்படுத்துதல்.

நகரங்களில் திட்டமிட்ட ஒருங்கிணைந்த மேம்பாட்டினை உருவாக்குதல்.

2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 23 நகராட்சிகளில் ரூ.143.48 கோடி மதிப்பிலான சாலை மேம்பாடு மற்றும் வடிகால்/பாலம் கட்டும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இப்பணிகளுக்கென ரூ.61.37 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் சாலை மற்றும் வடிகால் திட்டங்களை சங்கரன்கோவில், தேவகோட்டை, சிவகங்கை மற்றும் ஈரோடு நகராட்சிகளுக்கும், ரூ.28.41 கோடி மதிப்பீட்டில், குடிநீர்த் திட்டங்களை விழுப்புரம், மறைமலைநகர், கரூர், தஞ்சாவூர், ஈரோடு, தேவகோட்டை மற்றும் சிவகங்கை நகராட்சிகளுக்கும், ரூ.3.75 கோடி மதிப்பில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை மறைமலைநகர் நகராட்சிக்கும், ரூ.3.58 கோடி மதிப்பில் நாமக்கல் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்தவும் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டங்கள் 2007-2008 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

### 4. ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டம் (IHSDP)

முன்பு இருந்த தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் "வாம்பே" (Vambay) திட்டங்களை ஒன்றிணைத்து "ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டம்" (IHSDP) என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்மூலம் நகரங்களில் குடிசைப் பகுதியில் வாழும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நிதியுதவி வழங்கப்படுகிறது.



இம்மாநிலத்தில் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதியில் வாழும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை இத்திட்டத்தின் மூலமாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், ரூ.146.06 கோடி மதிப்பீட்டிலான கீழ்க்காணும் 22 திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது—

| வ. எண் | செயல்படுத்தும் அமைப்பு | திட்டங்களின் எண்ணிக்கை | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி நிருவாக ஆணையரகம் | 15 | 1. தருமபுரி –2.67<br>2. கொடைக்கானல் –1.87<br>3. மணப்பாறை –2.01<br>4. சீர்காழி –1.28<br>5. நாகப்பட்டினம் –0.78<br>6. திருப்பத்தூர் –3.45<br>7. ஈரோடு –5.03<br>8. குமாரபாளையம் –0.76<br>9. புதுக்கோட்டை –24.52<br>10. கும்பகோணம் –13.14<br>11. தஞ்சாவூர் –17.23<br>12. பட்டுக்கோட்டை –21.97<br>13. உதகமண்டலம் –12.68<br>14. மன்னார்குடி –1.49<br>15. திருவாரூர் –12.57 | 121.45 |
| 2 | பேரூராட்சிகள் இயக்குநரகம் | 7 | 1. மாமல்லபுரம் –2.56<br>2. நந்திவரம்–கூடுவாஞ்சேரி –3.69<br>3. திருக்கழுக்குன்றம் –2.89<br>4. ஸ்ரீபெரும்புதூர் –4.28<br>5. வாலாஜாபாத் –4.80<br>6. அச்சரப்பாக்கம் –2.25<br>7. கருங்குழி –4.14 | 24.61 |
| | மொத்தம் | 22 | | 146.06 |

மேற்படி 22 திட்டங்களும் 2007-2008 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

[2007 ஏப்ரல் 11

## VIII. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—III

74-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 1992-ன்படியும், முதலாவது மற்றும் இரண்டாவது மாநில நிதி ஆணையங்களின் பரிந்துரைகளின்படியும், தமிழ்நாடு நகர்ப்புறச் சீர்திருத்தங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகராட்சிகளும் இரண்டு இடக் கணக்கு முறையைக் கடைப்பிடித்து வருகின்றன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மின்னணு ஆளுகையைச் செயல்படுத்தியது மற்றும் பொறியியல் சீர்திருத்தங்களை மேற்கொண்டது ஆகியவற்றின்மூலம் நகர்ப்புற சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் தமிழ்நாடு அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக உள்ளது.

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—III-ன் நோக்கம்

இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு—

(1) அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுக்கென நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிலையான அடிப்படையில் நிதி வசதி ஏற்படுத்தித் தரும் நிதி இடையீட்டாளராகத் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தை மேம்படுத்துதல்.

(2) நகர்ப்புறச் சீர்திருத்தங்களை வலுப்படுத்துவதுடன் அமைப்புகளின் வளர்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டினை ஒருங்கிணைத்தல்.

(3) சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் சாலைகளை அகலப்படுத்துதல், இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதை போன்ற போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கென சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு மானியம் அளித்தல்.

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—III-ன் உட்கூறுகள் பின்வருமாறு—

#### நிறுவன மேம்பாடு

(1) நகராட்சிப் பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் செயல்திறனை அதிகரித்தல்.

(2) செய்தி மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்.



2007 ஏப்ரல் 11]

(3) நகராட்சிக் கடன் மேற்பார்வைப் பிரிவு.

(4) திட்டங்களை உருவாக்கும் வசதி.

(5) திட்ட மேலாண்மை மற்றும் செயல்பாட்டு உயர்வுச் செலவினங்கள்.

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம்மூலம் நகர்ப்புற முதலீடு

(1) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கடன் தருதல்.

(2) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூலதன மானியம் வழங்குதல்.

(3) திட்ட மேம்பாட்டிற்கு அறிவுரை வழங்குதல்.

(4) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குப் போக்குவரத்துத் திட்டங்களுக்கென மானியம் வழங்குதல்.

(5) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திட்ட மேலாண்மை செயல்பாட்டு உயர்வுச் செலவினங்கள்.

### புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சி:

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குப் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்றத்தின் கடமைகள், பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் வரையறைகள், உள்ளாட்சிகள் நிர்வாக மேலாண்மை, நிதி மேலாண்மையில் புதிய அணுகுமுறைகள் பற்றிய கீழ்க்காணும் பயிற்சிகள் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்மூலம் நடத்தப்படுகின்றன:—

- 5 மாநகராட்சி மேயர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சித் திட்டம்.
- 152 நகராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான புத்தறிவுப் பயிற்சித் திட்டம்.
- அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சி.

[2007 ஏப்ரல் 11

- நகர்மன்றங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களுக்குப் பெண்களுக்கான அதிகாரங்கள் குறித்த ஒருநாள் சிறப்புப் பயிற்சிகள், திருச்சி மற்றும் கோயமுத்தூரில் நடைபெற்றன. சென்னையில் இந்தப் பயிற்சி ஏற்கெனவே நடத்தப்பட்டு விட்டது. மதுரையில் நடப்பாண்டில் இப்பயிற்சி முகாம்கள் நடத்தப்பட உள்ளன.
- நகராட்சி/மாநகராட்சிப் பொறியாளர்களுக்குக் குடிநீர், கழிவுநீர்த் திட்டங்கள், நகர்ப்புற சாலைகள் மேம்பாடு மற்றும் அதன் தரக் கட்டுப்பாடு பற்றிய பயிற்சிகள், சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றின்மூலம் நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் இப்பயிற்சிகள் நடப்பாண்டில் நடத்தப்பட உள்ளன.
- தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான மனிதவள மேம்பாட்டுப் பயிற்சிகள், நடப்பாண்டிலும் நடத்தப்பட உள்ளன. மேலும் பல பயிற்சிகளும் திறன் மேம்படுத்தும் முயற்சிகளும் 2007-2008 ஆம் ஆண்டில் பல்வேறு பிரிவுகளின்கீழ் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நிதி ஆதாரம்**

உட்பிரிவு வாரியாக நிதி முதலீடு செய்தல் பின்வருமாறு:

| | | (ரூபாய் கோடிகளில்) |
|---|---|---|
| அ. | நிறுவன வளர்ச்சிக் கூறு | 110.00 |
| ஆ. | நகர்ப்புற முதலீட்டுக் கூறு | 1,150.00 |
| இ. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு மானியம் | 665.00 |
| | மொத்தம் | 1,925.00 |



2007 ஏப்ரல் 11]

**திட்டம் உருவாக்குவதற்கான வசதி**

நகராட்சிகளில் அடிப்படை உள்கட்டமைப்புத் திட்டங்களை உருவாக்குவதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் நகராட்சி நிருவாக ஆணையரகத்தில் திட்டம் உருவாக்குவதற்கான வசதியை அரசு ஏற்படுத்தியுள்ளது. தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமானதும், அதிக அளவு நிதி தேவைப்படக்கூடியதுமான திட்டங்களைத் தயாரித்திட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இந்த வசதியினைப் பயன்படுத்திக் கொள்ளும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கு, இதுவரை 25 ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**நகர்ப்புற முதலீட்டுக் கூறுகள்**

தமிழ்நாடு நகர்ப்புற மூன்றாவது வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பின்வரும் பணிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும்:—

1. சாலைகள்
2. குடிநீர் வழங்கல்
3. பாதாளச் சாக்கடைத் திட்டம்
4. திடக்கழிவு மேலாண்மை

தமிழ்நாடு நகர்ப்புற மூன்றாவது வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மாநில அளவிலான திட்ட ஒப்பளிப்புக் குழு, ஒப்புதல் வழங்கி உள்ளது:

| வரிசை எண் | திட்டம் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | பேருந்து நிலையங்கள் கட்டுதல் / நவீனப்படுத்துதல் | |
| | 1. ஒசூர் – 6.90<br>2. வந்தவாசி – 3.50<br>3. பழனி – 6.60<br>4. பூந்தமல்லி – 2.00<br>5. பொள்ளாச்சி – 1.75 | 20.75 |
| 2 | திருமணிமுத்தாறு ஆற்றினை மேம்படுத்துதல் நிலை–II (சேலம்) | 31.50 |

| வரிசை எண் | திட்டம் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 3. | பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் | |
| | 1. திருவாரூர் - 39.26 | |
| | 2. திருவண்ணாமலை -28.93 | |
| | 3. தருமபுரி 16.53 | |
| | 4. கிருஷ்ணகிரி 18.24 | |
| | 5. மாதவரம் 26.80 | |
| | 6. விழுப்புரம் 28.62 | |
| | 7. கொமாரபாளையம் 14.72 | |
| | 8. இராசிபுரம் 16.50 | |
| | 9. சின்னமனூர் 10.16 | |
| | 10. பரமக்குடி 33.03 | |
| | 11. சங்கரன்கோவில் 21.18 | |
| | 12. தென்காசி 26.54 | |
| | 13. மேட்டூர் 25.10 | |
| | 14. சத்தியமங்கலம் 12.14 | |
| | 15. கோபிசெட்டிபாளையம் 21.88 | |
| | 16. பெரம்பலூர் 22.42 | |
| | 17. திருவள்ளூர் 34.76 | 396.81 |
| 4 | குடிநீர் வழங்கும் திட்டம் கத்திவாக்கம் | 6.22 |
| | மொத்தம் | 455.28 |

## IX. சுனாமி சீரமைப்புப் பணிகள்

தமிழ்நாட்டில் கடந்த 26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமியால் திருவொற்றியூர், கத்திவாக்கம், கடலூர், நாகப்பட்டினம், வேதாரண்யம், குளச்சல் மற்றும் காயல்பட்டினம் ஆகிய நகராட்சிகள் பாதிக்கப்பட்டன.

இந்த 7 நகராட்சிகளிலும் கீழ்க்காணும் இரண்டு திட்டங்களின்கீழ் சுனாமி நிவாரணப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.



**1. சுனாமி அவசர உதவித் திட்டம்**

(அ) சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகள்

(ஆ) சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரப் பணிகள்

**2. அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டம்**

(அ) சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகள்

(ஆ) சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரப் பணிகள்

**(1) சுனாமி அவசர உதவித் திட்டம்**

**(அ) உள்கட்டமைப்புப் பணிகள்**

பாதிக்கப்பட்ட நகராட்சிகளில் குடிநீர், சுகாதாரம், கட்டடங்கள் கட்டுதல் மற்றும் சாலைகள் அமைத்தல் ஆகிய அடிப்படை வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ரூ.36.60 கோடியை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகையிலிருந்து கடந்த 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.4.00 கோடியும், 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.32.60 கோடியும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது.

6 நகராட்சிகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட 45 பணிகளில், 3 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள அனைத்து வேலைகளும் 2007-2008 ஆம் ஆண்டு இறுதிக்குள் செய்து முடிக்கப்படும்.

**(ஆ) வாழ்வாதாரப் பணிகள்**

அரசாணை (நிலை) எண் 288, வருவாய்த் துறை, நாள் 29-4-2006-ன்படி ரூ. 2.015 கோடியும், அரசாணை (நிலை) எண் 785, வருவாய்த் துறை, நாள் 5-12-2006-ன்படி ரூ.3.726 கோடியும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வதாரத் திட்டங்களை மேற்கொள்ள அரசு நிதி வழங்கி உள்ளது. இத்தொகை முழுவதும் 1,105 சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் 504 புதிய சுய உதவிக் குழுக்களை உருவாக்கிட ரூ.10.08 இலட்சமும் செலவிடப்பட்டு வருகிறது.

[2007 ஏப்ரல் 11

### வேதாரண்யம் உப்பு உற்பத்தித் திட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் உப்பளத் தொழிலாளர்கள் மற்றும் உப்பு உற்பத்தியாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக, அப்பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள் புனரமைக்கப்படும் பணி ரூ.1.60 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் சுமார் 700 குடும்பங்களுக்கு நேரடியாகவும் சுமார் 5,000 குடும்பங்களுக்கு மறைமுகமாகவும் வாழ்வாதார வாய்ப்பினைப் பெருக்கிட துணை புரியும்.

### 2. அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட நகராட்சிகளில் அவசர சீரமைப்புத் திட்டத்தின்கீழ் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான பணிகளை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 8.15, வருவாய் (என்.சி.1) துறை, நாள் 20-12-2006-ல் ரூ.11.25 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ரூ.2.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12.25 கோடி ரூபாய் சுனாமியால் பாதிக்கப்பட்ட நகரங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த 2007-2008-ம் நிதியாண்டில் விடுவிக்கப்படும். இப்பணிகள் யாவும் அவசரக்கால அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு 2007-2008 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும்.

### X. நிதி மேலாண்மை

இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்பேரில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 8 சதவீதத் தொகை, உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்வு நிதியாக வழங்கப்படுகிறது. அதன்படி 2006-2007 ஆம் ஆண்டில் 6 மாநகராட்சிகள் 102 நகராட்சிகள் மற்றும் 50 மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு ரூ.638.02 கோடி பகிர்வு நிதியாக வழங்கப்பட்டது.

### 12–வது மத்திய நிதி ஆணைய மானியங்கள்

12-வது மத்திய நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2005-2006 ஆம் ஆண்டு முதல் 2009-2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு மத்திய அரசு ரூ.572 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.8,2.30 கோடி இரு தவணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளது. இதே அளவு தொகை 2007-2008 ஆம் ஆண்டிலும் 152 நகராட்சிகள் மற்றும் 6 மாநகராட்சிகளுக்கு வழங்கப்படும்.



2007 ஏப்ரல் 11]

இத்தொகையின் 50 விழுக்காடான ரூ.41.15 கோடி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும்.

### மதுரை மாநகராட்சி

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் நகரங்களில், மதுரை மாநகராட்சியும் ஒரு நகரமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது வைகை குடிநீர் விநியோகத் திட்டம், ரூ.48.87 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் தனிநபர் குடிநீர் விநியோக அளவு தற்போதைய 65 லிட்டரிலிருந்து 110 லிட்டராக உயரும். வைகை ஆற்றின் குறுக்கே மேலக்கால், கோச்சடை மற்றும் மணலூர் ஆகிய மூன்று இடங்களில் ரூ.4.80 கோடி மதிப்பில், தடுப்பணைகள் கட்டுவதற்கான திட்டத்திற்கு 2-2-2007-ல் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் விளைவாக மதுரை மாநகராட்சி, தனிநபர் ஒருவருக்கு தினந்தோறும் 125 லிட்டர் குடிநீர் வழங்கமுடியும். திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை நவீனப்படுத்தவும், குப்பையிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கவும், ரூ.74.80 கோடி மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதி திட்டத்தின்கீழ் நகர்ப்புற குடிசைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதி ஏற்படுத்தித் தர ரூ.130.43 கோடிக்கான திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்மூலம், 12,078 குடிசைகள் மற்றும் ஓட்டு வீடுகள் கான்கிரீட் வீடுகளாக மாற்றப்படும். 79 குடிசைப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.19.32 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பாதை மற்றும் கால்வாய் ஓரங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும், 1,500 குடும்பங்களுக்குத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ரூ.39.88 கோடி செலவில், இரண்டு ஆண்டுகளில் புதிய குடியிருப்புகளில் குடியமர்த்தும் பொருட்டு, வீடுகள் கட்டித்தர உத்தேசித்துள்ளது. இந்தக் கட்டுமானப் பணிகள் 2 ஆண்டுகளில் முடிவுறும்.

மையச் சந்தையை (சென்ட்ரல் மார்க்கெட்டினை) நகருக்கு வெளியே ரூ.58 கோடி செலவில் இடமாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு அருகே ரூ.7.60 கோடி செலவில் அடுக்கு நிலை வாகன நிறுத்துமிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதைய மூலக்கரை மயானம்

ரூ.26.15 இலட்சம் செலவில் நவீன எரிவாயு மயானமாக மாற்றியமைக்கப்பட உள்ளது. மேலும், புதூர் பகுதியில், பொது மக்கள் பங்களிப்புடன், ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில், நவீன எரிவாயு மயானம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனுப்பானடி பகுதியில், ஒரு நவீன இறைச்சிக் கூடம் ரூ.75 இலட்சம் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் 5 கட்டங்களாக ரூ.165 கோடி மதிப்பீட்டில செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநகராட்சியில் உள்ள ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.2.50 கோடி செலவில் நடப்பு நிதியாண்டில் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் கான்கிரீட் சாலைகள், நடைபாதைகள் மற்றும் புல்தரைகள் அமைத்து அழகுபடுத்திட, அரசு ரூ.2.60 கோடிக்கு ஒப்பளிப்பு செய்துள்ளது. இப்பணிகள் 2007-2008-ல் செய்து முடிக்கப்படும்.

## கோயம்புத்தூர் மாநகராட்சி

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ், நகர மேம்பாட்டுப் பணிகள் ரூ.3,186 கோடி செலவில் 7 ஆண்டுகளில் மேற்கொள்ளும் வகையில் "நகர வளர்ச்சித் திட்டம்" மாநகராட்சியால் தயாரிக்கப்பட்டது. இதே திட்டத்தின்கீழ் பில்லூர் இரண்டாவது குடிநீர் விநியோகத் திட்டம் ரூ.113.74 கோடி செலவில் மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ரூ.96.51 கோடி செலவில் நிறைவேற்றப்பட உள்ளது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக, மாநகராட்சிப் பகுதியில் தற்போது 80 குடிசைப் பகுதிகளில் வசித்து வரும் 12,630 குடும்பங்களுக்கு ரூ.258.75 கோடி செலவில், தனித்தனியான மற்றும் அடுக்குமாடி வீடுகள் கட்டித் தரப்படும். இம்மாநகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் விடுபட்ட பகுதிகளுக்கும் மாநகராட்சியை ஒட்டியுள்ள இதர நகர்ப் பகுதிகளுக்கும் ரூ.200 கோடி செலவில் நிறைவேற்றப்படும். மழைநீர் வடிகால்கள் புனரமைக்கப்படுவதோடு புதிய வடிகால்களும்



ரூ.200 கோடி செலவில் கட்டப்படும். நகரில் உள்ள 8 நீர்நிலைகளின் கரைகள் இருபுறமும் உயர்த்தி, தூர் வாரும் பணி ரூ.70 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

மாநகரின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு உள்வட்ட சாலைகள் ரூ.500 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு நவீனப்படுத்தப்படும். முதல் கட்டமாக உக்கடம், சிங்காநல்லூர் மற்றும் கண்ணப்ப நகர் ஆகிய மூன்று இடங்களில் நவீன இறைச்சிக் கூடங்கள் ரூ.2.50 கோடி செலவில் கட்டப்பட உள்ளது. நவீன மாமன்றக் கூடம் ரூ.1 கோடி செலவில் கட்டப்படும். 2007-2008 நிதியாண்டில் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட மற்றும் கணினிகள் வாங்க ரூ.7 கோடி செலவிடப்படும்.

## சேலம் மாநகராட்சி

சேலம் மாநகருக்குத் தனியாக ஒரு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. சேலம மாநகராட்சியில் ரூ.149.39 கோடி செலவில் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் விரிவாக மதிப்பீடு, கலந்தாலோசகரால் தயாரிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் நிதியாண்டில் 22 கி.மீ. நீளமுள்ள மண் சாலைகள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலைகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் நிதியாண்டில் மணியனூர் பகுதியில் நவீன வசதிகளுடன்கூடிய மற்றொரு இறைச்சிக் கூடம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அம்மாபேட்டை மண்டலத்தில் அண்ணா மருத்துவமனையை ரூ.30 இலட்சம் செலவில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருமணிமுத்தாறு நதி மேம்பாட்டுத் திட்டம் பகுதி-II-ன்கீழ், 5.66 கி.மீ. நீளத்திற்கு திருமணிமுத்தாற்று வழித் தடம் கான்கிரீட் பலகைகள் பதியப்பட்டு மேம்படுத்தப்படும். போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க 3 பாலங்கள் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட உள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில் 10 மாநகராட்சிப் பள்ளிகளில் புதிய வகுப்பறை கட்டுதல், மற்றும் இதர வசதிகள் செய்தல் போன்ற பணிகள்ள் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் நிதியாண்டில் சேலம் மாநகராட்சிக்குப் புதிய அலுவலகக் கட்டடம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ்

ரூ.20 கோடி மதிப்பீட்டில் நவீன திடக்கழிவு மேலாண்மைக் களம் அமைத்து, விஞ்ஞான முறையில் திடக்கழிவுகளை அழிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிப் பகுதியில் தற்சமயம் உள்ள நான்கு திடக்கழிவு குப்பைக் கிடங்குகளை மாற்று நிலையங்களாக ரூ.10 கோடி செலவில் மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

மாநகராட்சியுடன் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு சமச்சீராகக் குடிநீர் வழங்க, ரூபாய் 86.25 கோடி மதிப்பிலான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை நடப்பு நிதியாண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருச்சி-திருவரங்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம், ரூபாய் 110.07 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகள் நடப்பாண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் முடிக்கப்படும். புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் தோராயமாக ரூ.160 கோடி செலவில் இரண்டாம் கட்ட பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. செட்டிப்பள்ளம் பாலம் கட்டும் பணி ரூ.97.30 இலட்சம் மதிப்பீட்டில் 2007-2008 ஆம் நிதி ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும். ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பதற்கான பணிகள் நடப்பாண்டில் எடுத்துக்கொள்ளப்படும். திருச்சிராப்பள்ளி மத்தியப் பேருந்து நிலையத்தினை ஒட்டியுள்ள இரயில்வே துறைக்குச் சொந்தமான 11,204 ச.மீ. பரப்பளவுள்ள நிலம் மாநகராட்சிப் பொது நிதியிலிருந்து ரூ.506.41 இலட்சம் செலவில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடத்தில் மையப் பேருந்து நிலையம் விரிவாக்கப்பட உள்ளது. 2007-2008 ஆம் நிதி ஆண்டில் மத்தியப் பேருந்து நிலைய விரிவாக்கப் பணிக்காக ரூ.124 இலட்சம், மாநகராட்சி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடை கருமண்டபம் மயானத்தில் அமைக்கப்படும். இது நடப்பாண்டில் கட்டி முடிக்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதி வழியாக செல்லும் வாய்க்கால்களில் தூர் வாரும் பணி மேற்கொள்வதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## திருநெல்வேலி மாநகராட்சி

மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 19, 26 மற்றும் 27-க்குட்பட்ட பகுதிகளுக்கு ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். இது தவிர, தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண் 8, 9 மற்றும் 10-க்குட்பட்ட பகுதிகளுக்கு ரூ.3.90 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாநகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.8.77 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். மாநகரின் பல்வேறு பகுதிகளில் 500 புதிய தெரு விளக்குகள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இந்த ஆண்டில் 30 கி.மீ. நீளத்திற்கான மண் சாலைகள் மற்றும் 45 கி.மீ. நீளத்திற்கான கருங்கல் ஜல்லி சாலைகளைத் தார்ச் சாலைகளாக 7.50 கோடி மதிப்பீட்டில் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி கட்டடங்களில் இயங்கும் அரசுப் பள்ளிகளில் கல்வி நிதிமூலம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். 5 சிறுவர் பூங்காக்கள் ரூ.50 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

மாநகராட்சிப் பராமரிப்பில் உள்ள மயானங்கள் ரூ.7 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

## பேரூராட்சிகள்

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920-ன்கீழ் பேரூராட்சிகள் நிர்வகிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 561 பேரூராட்சிகள் வருமானத்தின் அடிப்படையில் நான்கு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| நிலை | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | வருமான வரம்பு |
|---|---|---|
| சிறப்பு நிலை | 13 | ரூ.20 இலட்சத்திற்கு மேல் |
| தேர்வு நிலை | 245 | ரூ.16 இலட்சத்திற்கு மேல் |
| முதல் நிலை | 221 | ரூ.8 இலட்சத்திற்கு மேல் |
| இரண்டாம் நிலை | 82 | ரூ.4 இலட்சத்திற்கு மேல் |

நகரங்கள், பொருளாதார வளர்சசியின் உந்து சக்தியாகவும், பொதுமக்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குபவையாகவும் உள்ளன. பேரூராட்சிகளில் உள்ள மக்கள் தொகை 76,16,386 ஆகும். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 12 சதவீதமாகும். அருகிலுள்ள ஊரகப் பகுதியிலிருந்து வந்து செல்லும் பெருவாரியான மக்களுக்குச் சேவை மையங்களாக பேரூராட்சிகள் விளங்குகின்றன. பெரும்பாலான பேரூராட்சிகள் சுற்றுலாத் தலங்களாகவும், வழிபாட்டுத் தலங்களாகவும், வரலாற்றுப் பெருமை வாய்ந்த நகரங்களாகவும் உள்ளன. எனவே, குடிநீர் வழங்கல், பொதுச் சுகாதாரம், சாலைகள், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளையும், இறைச்சிக் கூடங்கள், சுடுகாடு/இடுகாடுகள், பேருந்து நிலையங்கள் மற்றும் சந்தைகள் போன்ற பிற வசதிகளையும் போதுமான அளவிற்கு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். இந்நகரங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் குடிமை வசதிகள் ஆகியவற்றை முழுமையாக வழங்கும் வகையிலான அணுகுமுறையினை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

**நிருவாக அமைப்பு:**

பேரூராட்சிகளின் நிருவாகத்தைக் கவனித்துக்கொள்வதற்காக பேரூராட்சிகளின் இயக்ககம், 1981 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பேரூராட்சிகளின் இயக்குநர் 561 பேரூராட்சிகளின் நிர்வாகத்தை கவனித்துக்கொள்வதுடன், இத்துறையின் தலைவராகவும் செயல்பட்டு வருகிறார். மாவட்ட அளவில் பேரூராட்சிகளைக் கண்காணிகும் பணியை மாவட்ட ஆட்சியர்கள் செய்து வருகின்றனர். இவ்வியக்ககத்தின்கீழ், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களைத் தலைமையாகக் கொண்டு, 16 மண்டல அலுவலகங்கள் மாநிலத்தில் உள்ளன.

**பேரூராட்சிகளின் செயல்பாடுகள்**

பின்வரும் நகர் சம்பந்தமான பணிகளை, பயன்தரும் வகையில் வழங்குவதை இலக்காக பேரூராட்சிகள் கொண்டுள்ளன:—

- பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்
- முறையான மழைநீர் மற்றும் கழிவுநீர் வடிகால்கள் அமைத்தல்.



- திடக்கழிவு மேலாண்மை
- சாலைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்
- தெரு விளக்குகள், மயானங்கள், இறைச்சிக் கூடங்கள் ஆகியவற்றை அமைத்தல்.
- பொதுமக்களுக்குப் பயன்படும் சந்தைகள், பேருந்து நிலையங்கள் மற்றும் சமுதாயக் கூடங்கள் அமைத்தல்.
- பொதுச் சுகாதார சேவைகள் போன்றவை.

**பேரூராட்சிகளின் நிதி வருவாய் ஆதாரங்கள்**

பேரூராட்சிகளின் வருவாய், பின்வரும் ஆதாரங்களின்மூலம் கிடைக்கப் பெறுகிறது:—

- சொத்து வரி
- தொழில் வரி
- கட்டணங்கள், வாடகை முதலானவை
- முத்திரைத்தாள் மீதான மேல்வரி
- கேளிக்கை வரி
- அரசின் மாநிலப் பகிர்வு நிதி மானியம்
- பிற அரசு மானியங்கள்.

**மாநகராட்சிகளுக்கு அருகில் உள்ள நகரங்களுக்கான "நகர் வளர்ச்சித் திட்டம்"**

"நகர் வளர்ச்சித் திட்டம்", நகரம் மற்றும் மாநகரங்களின் எதிர்கால வளர்ச்சியினைக் கவனத்தில்கொண்டு, வடிவமைக்கப்பட்டதாகும். சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தில், சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 20 பேரூராட்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. அதுபோல, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளைச் சுற்றியுள்ள பேரூராட்சிகளும் இந்நகரங்களுக்கான நகர வளர்ச்சித் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

**மாவட்ட திட்டக் குழு:**

மாவட்டத்தின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்திட மாவட்ட திட்டக் குழுவில் பேரூராட்சிகள் உரிய பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன.

**அடிப்படை வசதிகள் மற்றும் குடிமை சேவைகள்**

**குடிநீர் வழங்கல்**

பேரூராட்சிகளில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட அளவான நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்வதை இலக்காக அரசு கொண்டுள்ளது. இந்த நோக்கத்தை நிறைவேற்ற, ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திட்டங்களைப் பராமரிப்பதற்கும் குடிநீர் வழங்கலுக்கான புதிய ஆதாரங்களைக் கண்டறிந்து நடைமுறைப்படுத்துவதற்கும் அரசு முன்னுரிமை அளித்துள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புறங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ், ரூ.111.61 கோடி மதிப்பீட்டில் 17 குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் மேலும் 11 பேரூராட்சிகளில் ரூ. 25.55 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தபபடும்.

**சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள்**

மழைநீர் வடிகால்களுடன்கூடிய தரமான சாலை வசதிகளை வழங்குவது பேரூராட்சிகளின் முக்கிய கடமையாகும். 2006-2007 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புறங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டததின்கீழ் ரூ. 31.85 கோடி மதிப்பீட்டில் 28 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 260 கிலோ மீட்டர் நீளத்திற்கு மண் சாலைகளைச் தார் சாலைகளாகத் தரம் உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.



**தெருவிளக்குகள்**

பேரூராட்சிகளில் பின்வரும் விவரப்படி 2,99,949 மின் விளக்குள் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றன:

| | |
|---|---|
| உயர் கோபுர மின் விளக்குகள் | 208 |
| பாதரச விளக்குகள் | 2,374 |
| சோடியம் ஆவி விளக்குகள் | 45,045 |
| குழல் விளக்குகள் | 2,49,468 |
| மற்றவை | 2,854 |
| மொத்தம் | 2,99,949 |

மின்சாரத்தைச் சேமிக்கும் வகையில் குழல் விளக்குகளுக்குப் பதிலாக ஒளிரும் அடர் மின் விளக்குகளைப் (CFL) படிப்படியாக அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தூய்மையான சுற்றுப்புறத்தையும், ஆரோக்கியமான சூழலையும் வழங்குவதற்குப் பாதாளச் சாக்கடைத் திட்ட சேவை அவசியமான குடிமைப் பணியாகும். சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட 20 பேரூராட்சிகளில், ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட போரூர் பேரூராட்சி நீங்கலாக, ஏனைய 19 பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்ட வசதிகளை ஏற்படுத்திட திட்டமிடப்பட்டு, அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் செவிலிமேடு, லப்பைகுடிக்காடு மற்றும் திருப்பத்தூர் பேரூராட்சிகளில் 2007-2008 ஆம் ஆண்டில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தகன மேடைகளை நவீனப்படுத்துதல்**

இடுகாடு/சுடுகாடுகளில் குடிநீர் வசதி, மின்விளக்குகள், மயானப் பாதைகள் மற்றும் ஈமச் சடங்குகள் செய்யும் கூடங்கள் போன்ற அடிப்படை சேவைகளை அமைப்பது அரசின் முக்கியக் குறிக்கோளாகும். பேரூராட்சிகளில் 2,613 சிறிய மற்றும் நடுத்தர மயானங்கள் உள்ளன. சூலூர், துடியலூர் மற்றும் நாரவாரிக்குப்பம் ஆகிய பேரூராட்சிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் தாவர எரிபொருள்களைக் கொண்டு வெப்பமூட்டி எரியூட்டும் தகன மேடைகள் அமைக்கும் பணி 2006-2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடிந்து, நடப்பு ஆண்டிலிருந்து இந்த நவீன மயானங்கள் செயல்படத் துவங்கும்.

[2007 ஏப்ரல் 11

## திடக்கழிவு மேலாண்மை

நகர்ப்புற உள்ளாட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை என்பது முக்கியமான கடமையாகும். 2007-2008 ஆம் ஆண்டில் அனைத்துப் பேரூராட்சிகளிலும் 100 விழுக்காடு வீட்டுக்கு வீடு குப்பைகளைச் சேகரிக்கும் பணி அறிமுகப்படுத்தப்படும். பொது மக்கள் பங்கேற்புடன் முன்னோடித் திட்டமாக 100 பேரூராட்சிகளில், வீடுகளின் பின்புறத்தில் தாவரக் கழிவுகளைக் கொணடு உரம் தயாரித்திட ஊக்குவிக்கப்படும். இது தொடர்பாக விழிப்புணர்வுப் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் பொது மக்களுக்குப் பேரூராட்சிகளால் வழங்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

## தனிநபர் வீட்டுக் கழிப்பறைகள்

வீட்டிற்கொரு கழிப்பறை கட்டும் நோக்கத்துடன் ஒரு திட்டம் 2006-2007 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. தனிநபர் கழிப்பறை கட்டுவதை ஊக்கப்படுத்திட ஒரு குடும்பத்திற்கு ஒரு கழிப்பறைக்கு ஊக்கத் தொகையாக ரூ. 1,000 அரசால் வழங்கப்பட்டது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 9,000 கழிப்பறைகள் கட்டப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் 10,000 தனி நபர் வீட்டுக் கழிப்பறைகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் மேம்பாடு

பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள பொது மக்களின் நலனுக்காகவும், குறிப்பாக சிறுவர்களுக்காகவும், விளையாட்டுத் திடல்கள் மற்றும், பூங்காக்கள் ஆகியவை பேரூராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் 100 பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் உருவாக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் நகர ஊரமைப்புத் துறையின் நிதி மற்றும் இதர திட்ட நிதி உதவியுடன் 75 பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## பொருளாதாரத் தன்னிறைவு அடைதல்

### பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

முழுமையான வளர்ச்சி அடைந்த பேரூராட்சிகளை உருவாக்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத்



2007 ஏப்ரல் 11]

திட்டத்தின்மூலம் நகர்ப்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள் பொருளாதாரத் தன்னிறைவு பெறும் வகையில், அவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு சூழல்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## திட்டங்கள்

### ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சிகளுக்கு இத்திட்டம் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 30.99 கோடி மதிப்பீட்டில் மூன்று திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் இதேபோல் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்– நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை சேவைகள் அளிக்கும் திட்டம்

மாநகராட்சிப் பகுதியை ஒட்டியுள்ள பேரூராட்சிகளில் "நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை சேவைகள் அளிக்கும் திட்டம்" செயல்படுத்தப்படும். தேர்வு செய்யப்பட்ட குடிசைப் பகுதிகளில் முழுமையான வளர்ச்சிப் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும். 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.24.37 கோடி மதிப்பீட்டில் ஆறு திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிலும் இது போன்ற திட்டங்கள் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பேரூராட்சிகள் தவிர, ஏனைய பேரூராட்சிகள் அனைத்திற்கும் இத்திட்டம் பொருந்துவதாகும். குடிநீர் வழங்கல், பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலைகள், திடக்கழிவு மேலாண்மை போன்ற திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் அனைத்துப் பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்படும். 2006-2007 ஆம் ஆண்டில் 58 பேரூராட்சிகளில் ரூ.159.60 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

[2007 ஏப்ரல் 11

## ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

அகில இந்திய அளவில் செயல்பட்டு வந்த "தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்" மற்றும் "வால்மீகி அம்பேத்கார் ஆவாஸ் யோஜானா" ஆகிய திட்டங்களை ஒன்றிணைத்து, "ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்" என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை இந்திய அரசு உருவாக்கியுள்ளது. நகர்ப்புறங்களில் வாழும் ஏழை மக்கள் பயன்பெறத்தக்க வகையில் குடிசைப் பகுதி மேம்பாட்டிற்காக இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் பேரூராட்சிகளில் வசிக்கும் குடிசைப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், தேவையான அடிப்படை வசதிகளை அளித்திடவும் அரசு திட்டமிட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 24.60 கோடி மதிப்பீட்டில் 7 திட்ட வரைவுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று 2007-2008 ஆம் ஆண்டிலும் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் – III

2007-2008 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம்-III செயல்பட உள்ளது. இத்திட்டத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பேரூராட்சி அலுவலர்கள் ஆகியோருக்குத் திறனாக்கப் பயிற்சி அளித்திடவும், திட்ட உருவாக்கம், கணினிமயமாக்கலை வலுப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளை நடைமுறைப்படுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழு

பேரூராட்சிப் பணியாளர்கள் தணிக்கைத் தடைகள் காரணமாக ஓய்வுபெறும் காலத்தில் அவதிக்குள்ளாவதால், தணிக்கைத் தடைகளைத் துரிதமாக முடித்திட ஏதுவாக, மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

## கணினிமயமாக்கலுக்கான முயற்சிகள்

கணினிமயமாக்கலுக்கான ஆயத்தப் பணிகளில் ஒரு பகுதியாக ஐந்து வருவாய் மென்பொருட்கள் பேரூராட்சிகளில் உள்ள கணினிகளில் பொருத்தப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில் கணினிமயமாக்கலை வலுப்படுத்தவும், கணினிமூலம் கண்காணிப்புப் பணியை



2007 ஏப்ரல் 11]

மேற்கொள்ளவும், மேலும் 12 மென்பொருட்கள் பொருத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு பேரூராட்சிக்கும் தேவையான கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் வசதிகளை வழங்கிடவும், பேரூராட்சிகளுக்கு வலைதளம் உருவாக்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவையன்றி, கணினிமூலமாகவே தகவல் மேலாண்மை, கணக்குகளைக் கண்காணித்தல் போன்றவற்றைப் பேரூராட்சிகளில் மேற்கொள்ளவும், கண்காணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஆழிப் பேரலை (சுனாமி) தாக்குதலுக்குள்ளான பேரூராட்சிப் பகுதிகளில் நிவாரண/மறு நிர்மாணப் பணிகள்

ஐந்து கடலோர மாவட்டங்களில் உள்ள 19 பேரூராட்சிகளில் ஆழிப் பேரலை தாக்குதலினால் உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், பாலங்கள் போன்றவை பாதிக்கப்பட்டதுடன் உயிரிழப்புகளும் ஏற்பட்டன. 2006-2007 ஆம் ஆண்டில் ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் பின்வரும் ஆழிப் பேரலை நிவாரண புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

### 1. ஆழிப் பேரலை அவசர கால உதவித் திட்டம் (ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன்)

இத்திட்டம் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட 5 மாவட்டங்களில் உள்ள 19 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது.

| வ.எண் | செயல்படுத்தப்படும் திட்டங்கள் | பணிகள் எண்ணிக்கை | திட்டத் தொகுப்பு எண்ணிக்கை | பணிகளின் மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | சாலைகள் | 154 | 154 | 3050.13 |
| 2 | கட்டடங்கள் | 15 | 11 | 425.65 |
| 3 | குடிநீர் வழங்கல் | 33 | 15 | 123.25 |
| 4 | பொதுக் கழிப்பிடங்கள் | 34 | 13 | 105.10 |
| 5 | திடக்கழிவு மேலாண்மை | 38 | 38 | 666.15 |
| 6 | வாழ்வாதாரப் பணிகள் | .. | .. | 1243.50 |
| | மொத்தம் | 274 | 231 | 5613.78 |

**2. அவசர கால ஆழிப் பேரலை மறு நிர்மாணத் திட்டம் (உலக வங்கி நிதி உதவியுடன்)**

இத்திட்டம் 6 மாவட்டங்களில் 18 பேரூராட்சிகளில் உள்ள 57 குடியிருப்புப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

| வ. எண் | செயல்படுத்தப்படும் திட்டங்கள் | பணிகள் எண்ணிக்கை எண்ணிக்கை | திட்டத் தொகுப்பு | பணிகளின் மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | இணைப்புச் சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் | 72 | 37 | 903.03 |
| 2. | கட்டடங்கள் | 86 | 13 | 298.42 |
| 3. | தெரு விளக்குகள் மற்றும் வீட்டு மின் இணைப்புகள் | 56 | 15 | 133.42 |
| 4. | பூங்காக்கள், சாலையோரத்தில் மரம் நடுதல், குடிநீர் வழங்கல், மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற இதர பணிகள் | 50 | 15 | 170.22 |
| | மொத்தம் .. | 264 | 80 | 1505.09 |

மேற்கூறிய அனைத்து ஆழிப் பேரலை நிவாரணப் பணிகளும் 2007-2008 ஆம் ஆண்டில் முடிக்கப்பெறும்.

**பகுதி–2 திட்டங்கள்**

2007-2008 ஆம் ஆண்டில் பின்வரும் செயல்பாடுகள் பகுதி-2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன:

**1. மயானங்களை நவீனமயமாக்குதல்**

நடப்பாண்டில் பேரூராட்சிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் தாவர எரிபொருள்களைக் கொண்டு வெப்பமூட்டி, எரியூட்டும் நவீன



தகன மேடைகள் சிட்லப்பாக்கம், ஒட்டன்சத்திரம் மற்றும் திருச்செந்தூர் பேரூராட்சிகளில் ரூ. 100.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளன.

**2. இறைச்சிக் கூடங்கள் நவீனமயமாக்குதல்**

திருக்கழுக்குன்றம், நாரவாரிக்குப்பம், செங்கம், ஓமலூர், அவிநாசி, துடியலூர், கருமத்தம்பட்டி, லால்பேட்டை, அய்யம்பேட்டை மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய 10 பேரூராட்சிகளில் இறைச்சிக் கூடங்கள் ரூ. 100.00 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்படவுள்ளன.

**3. தெரு விளக்குகள்**

50 பேரூராட்சிகளில் ரூ.50.00 இலட்சம் செலவில் 1,000 ஒளிரும் அடாமின் விளக்குகள் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**4. குடிநீர் வழங்கல் பராமரிப்பு**

நிதிநிலையில் நலிவுற்ற 75 பேரூராட்சிகளில் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல், பராமரிப்புப் பணிகள், பழுதுபார்த்தல் மற்றும் குடிநீர் வழங்குதலை விஸ்தரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**5. பேரூராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல்**

பள்ளிப்பட்டு, அச்சரப்பாக்கம், மேல்பட்டாம்பாக்கம், செஞ்சி, மெலட்டூர், சுவாமிமலை, மல்லாங்கிணறு மற்றும் பளுகல் ஆகிய எட்டு பேரூராட்சிகளில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டவும் மொடக்குறிச்சி, கம்பைநல்லூர், நாகோஜனஹள்ளி, இரமங்கலம், எரியோடு, வேடசந்தூர், உப்பிடமங்கலம், டி.கல்லுப்பட்டி, எழுமலை, தாத்தையங்கார்பேட்டை, ஆத்தூர் மற்றும் திருவட்டாறு ஆகிய 12 பேரூராட்சிகளில் மிகவும் பழுதடைந்துள்ள அலுவலகக் கட்டடங்களைப் பழுதுநீக்கம் செய்திடவும் ரூ. 140.00 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**சென்னை மாநகராட்சி**

சென்னை மாநகரை ஒரு உலகத்தரம் வாய்ந்த நகரமாக மாற்ற அரசு உறுதிபூண்டுள்ளது. அதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது. இந்த முயற்சிகளில் சென்னை மாநகராட்சியின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

சென்னை மாநகரின் அடிப்படைத் தேவைகளான சாலை வசதி, தெரு விளக்குகள், பொதுச் சுகாதாரம், மழைநீர் வடிகால், பூங்கா பராமரிப்பு போன்ற பணிகளை சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வருகிறது. மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகர மேம்பாட்டுத் திட்டம் ரூ. 45,000 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், சென்னை மாநகராட்சியின்மூலம் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களின் மதிப்பீடு ரூ. 3,400 கோடி ஆகும். இதிலடங்கிய திட்டங்கள் யாவும் ஏழு ஆண்டுகளில் நிறைவேற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் யாவும் செயலுக்கு வரும்போது சென்னைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ், 2006-2007 ஆம் ஆண்டில், ரூ.337 கோடிக்கான திட்டங்களுக்கு சென்னை மாநகராட்சி ஒப்புதல் பெற்றுள்ளது. இதில் ரூ.255 கோடி மதிப்பீட்டிலான திடக்கழிவு மேலாண்மைத் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின்படி சென்னையில் அமைந்துள்ள இரண்டு பெரிய குப்பை கொட்டும் வளாகங்களான பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் அறிவியல் முறைப்படியான கழிவு நீக்க முறைகள் கையாளப்படுத்தப்படும். மேலும், திடக்கழிவுகளை உரிய முறையில் கொண்டு செல்வதற்கான வாகன வசதிகளும் செய்யப்படும்.

மேலும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் எட்டு இடங்களில் இரயில்வே சந்திக் கடவுகளைக் கடப்பதற்கு ஓர் உயர்மட்ட பாலம், மூன்று மேம்பாலங்கள் மற்றும் நான்கு சுரங்கப் பாதைகளையும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. வில்லிவாக்கம், மணியக்கார சத்திரம் தெரு, கொருக்குப்பேட்டை, ஜோன்ஸ் ரோடு ஆகிய இடங்களில் சுரங்கப் பாதைகளும் பெரம்பூர், ரெங்கராஜபுரம் இரயில்வே சந்திக் கடவு மற்றும் கத்திவாக்கம், காக்ரேன் பேசின் சாலை ஆகிய இடங்களில் மேம்பாலங்களும், அடையாறு ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள சாலையில் ஓர் உயர்மட்ட பாலம் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் யாவும் 2007-2008 ஆம் ஆண்டில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 18 மாதங்களில் நிறைவேற்றப்பட உள்ளன. இத்திட்டங்களுக்கான மொத்த மதிப்பீட்டில் 35 விழுக்காடுகள் மத்திய அரசின் மானியமாகவும், 15 விழுக்காடு தமிழ்நாடு அரசின் மானியமாகவும் சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்படும்.



இவை தவிர, சென்னை மாநகராட்சி தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு 2007-2008 ஆம் ஆண்டில் மூலதனப் பணிகளை ரூ.285 கோடி மதிப்பீட்டில் செய்ய முடிவெடுத்துள்ளது. இதன்படி இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள சில முக்கியப் பணிகள் பின்வருமாறு:—

- ரூபாய் 108 கோடி மதிப்பீட்டில் 750 கிலோ மீட்டர் நீளமுள்ள பேருந்து மற்றும் உட்புறச் சாலைகள் சீரமைக்கப்படும்.
- குடிசைப் பகுதிகளில் 296 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றி அமைக்கப்படும்.
- ரூபாய் 15 கோடி செலவில் மாநகராட்சிப் பள்ளிகளில் 200 புதிய வகுப்பறைகள் கட்டப்படும்.
- மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 145 உடற்பயிற்சிக் கூடங்கள் அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படும். மற்றும் 10 இடங்களில் புதிய உடற்பயிற்சிக் கூடங்களும் கட்டப்படும்.

**பாலங்கள்**

பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு மேம்பாலங்கள் அமைப்பது தேவையானதாகும். 2006-2007 ஆம் ஆண்டில்,

1. பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை (சேமியர் சாலை) மற்றும் டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பு,
2. வடக்கு உஸ்மான் சாலை மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை (கோடம்பாக்கம் நெடுஞ்சாலை),
3. கோபதி நாராயணா சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பு,
4. உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாலை சந்திப்பு

ஆகிய நான்கு இடங்களில் ரூபாய் 58.52 கோடி மதிப்பீட்டில் மேம்பாலங்கள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளைத் துவங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு பணி ஆணைகள் யாவும் வழங்கப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளன.

[2007 ஏப்ரல் 11

## திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம்

இந்தியாவிலேயே முதன்முறையாக செனனை மாநகராட்சியில்தான் உலகத் தரம் வாய்ந்த தனியார் நிறுவனத்தின்மூலம் திடக்கழிவுகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஏழு ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட குத்தகை காலம் பிப்ரவரி 2007-ல் முடிவுக்கு வந்தது. இத்திட்டம் சிறப்புடன் செயல்படுவதைக் கருத்தில்கொண்டு, தனியார் மூலம் திடக்கழிவுகளை அகற்றும் முறையைத் தொடர்ந்து பின்பற்றலாமென அரசு முடிவு செய்துள்ளது. மேலும், இத்திட்டத்தை 3, 6, 8, 10, மண்டலங்களில் தனியார்மூலம் செயல்படுத்திட அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனைச் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் ஊழியர்கள் எவருக்கும் பாதிப்பு இல்லாத வகையில் செயல்படுத்தவும் மாநகராட்சிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் உள்ள மயானங்கள், மாநகராட்சியின் பராமரிப்பில் இருந்தபோதிலும், அங்கு சேவையாற்றி வந்த வெட்டியான்கள் என அழைக்கப்பட்டவர்கள் உரிமம் பெற்றுப் பணிபுரிபவர்களாக இதுநாள்வரை இருந்து வந்துள்ளனர். இவர்களின் பணியின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, இந்த ஊழியர்கள் அனைவரும் சென்னை மாநகராட்சிப் பணியாளர்களாக நியமிக்க சென்னை மாநகராட்சி முடிவெடுத்துள்ளது. இதன்படி புதிதாக மயானங்களில் 195 உதவியாளர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, உரிமம் பெற்று பணியாற்றி வந்தவர்கள் முறையான பணியிடங்களில் பணி அமர்த்தப்படுவார்கள்.

## மெரினா அழகுபடுத்தும் திட்டம்

சென்னை மாநகரை அழகுபடுத்தும் விதமாக (1) புனித ஜார்ஜ் கோட்டை முன்புறம், (2) மெரினா கடற்கரை மற்றும் (3) எட்வர்ட் எலியட்ஸ் கடற்கரைப் பகுதியை ரூபாய் 25 கோடி செலவில் அழகுபடுத்த அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் சென்னை மாநகராட்சிமூலம் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கான செலவில் 25 விழுக்காடு, சென்னை மாநகராட்சியாலும் மற்றும் 75 விழுக்காடு மாநில அரசாலும் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் இப்பகுதிகளை அழகுபடுத்த விரிவானப் பெருந்திட்டம் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. ஏப்ரல் 2007-க்குள் இத்திட்டம் முடிக்கப்பட்டு மே 2007 முதல் பணிகள் துவங்கப்படும். அனைத்துப் பணிகளும் 2007-2008 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும்.



2007 ஏப்ரல் 11]

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம்

தமிழகத்தின் வளர்ந்துவரும் நகரமயமாக்கல், தரமான உட்கட்டமைப்பு வசதிகளின் தேவையை அதிகரிக்கிறது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி என்னும் பொறுப்பாட்சியை, பொது மற்றும் தனியார் முதலீட்டுப் பங்களிப்போடு வளர்ந்துவரும் உட்கட்டமைப்பு வசதிகளின் தேவை மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றின் இடைவெளியைக் குறைக்கும் நோக்கில் உள்ளாட்சி அமைப்புகளின் நிதித் தேவை மூலதனச் சந்தையுடன் இணைப்பதற்காக உருவாக்கியது. இது ICICI, HDFC மற்றும் IL & FS பங்களிப்போடு உருவானது. இந்த நிதியானது தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோள்கள்

நகர்ப்புற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு, நிதி அளிப்பதன்மூலம் நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்

பொது மற்றும் தனியார் கூட்டு . முயற்சிமூலமாக, உட்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்

நகர்ப்புற ஏழைகளின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் வகையில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மானிய நிதி எனும் துணைத் திட்டத்தைச் செயல்படுத்தல்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF) இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNUDP/II)

இத்திட்டத்தை 1999 முதல் 2004 வரை உலக வங்கியின் தொடர் நிதியளிப்பின்மூலம் வெற்றிகரமாக அமல்படுத்தியது. மேலும் இதன் மூலம் மட்டுமல்லாமல், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் வெளிச்சந்தையில் கடன் பத்திரங்கள் வெளியிடுதல், உபயோகிப்பாளர்கள் பங்களிப்பு ஆகியவற்றின்மூலம் கூடுதல் நிதியைத் திரட்டியது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம், .அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளான, சாலைகள், குடிநீர் வழங்கல், மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை, பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற

திட்டங்களுக்கு நிதி வசதி அளிப்பதோடு மட்டுமல்லாமல், வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையம், வணிக வளாகங்கள் ஆகியவற்றுக்கும் நிதி அளிக்கிறது.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III**

இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் சாதனைகளைத் தொடர்ந்து தமிழ்நாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதெற்கென மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:—

உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தொடர்ந்து நிதி அளிக்கும் நோக்கத்தோடு செயல்படும், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF) என்னும் அமைப்பை, நிதி இடையீட்டாளராக மேம்படுத்துதல்

நகர்ப்புற சீர்திருத்தங்களைப் பலப்படுத்துதல் மற்றும் இரண்டாவது திட்டத்தின் சாதனைகளைத் தொகுத்து, அத்திட்டத்தின் நிறுவன மற்றும் தொழில் நுட்பத் திறமைகளை மேம்படுத்துதல்

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் சாலைகளை அகலப்படுத்துதல், சாலை மேம்பாலம் சாலை கீழ்பாலம் ஆகிய போக்குவரத்துத் துணைத் திட்டங்களை எடுத்துக்கொள்ள ஒரு மானிய நிதியை ஏற்படுத்துதல்.

இத்திட்டம் 19-10-2005 முதல் ஐந்தாண்டுக் காலத்திற்கு ரூ. 1,884 கோடியில் (431 மில்லியன் அமெரிக்க டாலர்) நிறைவேற்றப்படவுள்ளது. ரூ. 1,300 கோடி (300 மில்லியன் அமெரிக்க டாலர்) உலக வங்கி நிதி உதவியுடன் தொடங்கப்படுள்ளது. இந்நிறுவனம், நிறுவன மேம்பாட்டுக் கூறு மற்றும் நகர்ப்புற முதலீட்டுக் கூறு என்ற இரண்டு பிரிவுகளைக் கொண்டது. நிறுவன மேம்பாட்டுக் கூறு என்பது தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்றுவித்தல்மூலம் இத்திட்டத்தை மேம்படுத்துதல். நகர்ப்புற முதலீட்டுக் கூறு என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதலீட்டு மானியம் மற்றும் கடன் வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. உள்ளாட்சி அமைப்புகளின் தேவைக்கேற்ப அவற்றின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான குடிநீர் வழங்குதல், கழிவுநீர் சேகரித்தல் மற்றும் சுத்திகரித்தல், திடக்கழிவு மேலாண்மை, மழை நீர் வடிகால்,





சாலைகள் மற்றும் பொது வசதிகளை மேம்படுத்துதல் இதன் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம், தனது நிதி மேலாளரான தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்மூலம் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளுக்குத் திட்ட ஆலோசனைகளும், நிதி ஆலோசனைகளும் மேலும் பல்வேறு கலந்தாய்வுப் பணிகளையும் அளிக்கிறது.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் துறைவாரியான ஒப்பளிப்பு**

கடந்த 2006-2007 ஆம் நிதியாண்டில் (31-01-2007 வரை) ரூ.130.50 கோடி அளவிற்குக் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனையும் சேர்த்து கடந்த நிதியாண்டு இறுதி வரை மொத்தமாக ரூ. 1,261.18 கோடி அளவிற்குக் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**பணிவாரியான ஒப்பளிப்புத் தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:**

| பணி விவரம் | ரூ. கோடியில் | விழுக்காடு |
|---|---|---|
| பாதாளச் சாக்கடைத் திட்டம் | 568.65 | 42.60 |
| சாலைகள் மற்றும் பாலங்கள் | 477.35 | 35.76 |
| குடிநீர் வழங்கல் | 216.80 | 16.24 |
| திடக்கழிவு மேலாண்மை | 34.52 | 2.59 |
| பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் | 27.19 | 2.04 |
| மழைநீர் வடிகால் | 5.39 | 0.40 |
| மற்றவை | 4.81 | 0.37 |
| மொத்தம் .. | 1,334.71 | 100 |

**2007–2008 ஆம் ஆண்டில் உள்கட்டமைப்புத் திட்டத்துக்காக ஒப்பளிக்கப்படவுள்ள மதிப்பீடு**

2007-2008 ஆம் நிதியாண்டில் திடக்கழிவு மேலாண்மை, வடிகால்கள் அமைத்தல், குடிநீர் வழங்கல், மின்சார சிக்கனம், சாலைப் பணிகள் போன்றவற்றிக்கு ரூ.400 கோடி மொத்த மதிப்பீடு கொண்ட உள்கட்டமைப்புத் திட்டங்களுக்குக் கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## நிதி திரட்டுதல்

நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின்மூலம் உள்கட்டமைப்பு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு சுமார் ரூ. 1,000 கோடி தேவை எனக் கண்டறியப்பட்டுள்ளது உலக வங்கியின் கடன் வரிசை நிதியான மூன்றாவது நகர்ப்புற உளகட்டமைப்பு நிதிமூலம கிடைக்கும் ரூ. 500 கோடி உபயோகப்படுத்தப்பட்ட பின்னர் தேவைப்படும் பற்றாக்குறை நிதி, ரூ.500 கோடியாகும். இந்தப் பற்றாக்குறையைச் சரி செய்வதற்காகத் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம், KfW என்னும் ஜெர்மானிய நிதி நிறுவனத்திடமும், JBIC என்னும் ஜப்பானிய நிதி நிறுவனத்திடமும் கடன் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

### (a) KfW (Kreditanstalt fur Wiederaufbau)

KfW பின்வரும் நிபந்தனைகளோடு 77 மில்லியன் யூரோ கடன் தர உறுதி அளித்துள்ளது.

- ❖ நகர்ப்புற திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக 65 மில்லியன் யூரோ வளர்ச்சிக் கடன் (குறைந்த வட்டி).
- ❖ 10 மில்லியன் யூரோ (நிலையான கடன்)—தலைமை நிதி மேலாண்மை ஒப்பந்தம் செய்வதற்காக.
- ❖ தொழில்நுட்பக் கூறுகளை மேமபடுத்த மானியமாக 2 மில்லியன் யூரோ (உதவி நிதி).

இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு, கருணைக் காலமான 3 ஆண்டுகளையும் சேர்த்து மொத்த காலம் 12 ஆண்டுகள் ஆகும். இதனுடைய வட்டி விகிதமானது இலண்டன் வங்கிகளுக்கிடையேயான வட்டி விகிதத்தை தொடர்புப்படுத்தி அமையும். தற்போது இது 7 சதவீதமாக உள்ளது. இந்தக் கடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வட்டி விகிதத்தைப் பொறுத்தவரை மிகவும் சாதகமாக அமையும். தற்போது அந்த நிறுவனம் இதற்காக நிதி ஆய்வு மேற்கொண்டுள்ளது.

### (b) JBIC

ஜப்பானிய நிறுவனத்திடமிருந்து ரூ. 284 கோடி கடன் பெற தமிழக அரசுமூலமாக இந்திய அரசுக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பப்பட்டது. ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு கடன் தர இயலாத, சுற்றுப்புற





மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இந்த ஜப்பானிய நிறுவனம்மூலம் கடன் பெற்று செயல்படுத்த முடியும், ஏனெனில் இக்கடனை நீண்ட காலக்கெடுவுடன் (அதாவது 40 ஆண்டுகள்) குறைந்த வட்டியில் திருப்பிச் செலுத்தினால் போதுமானது.

இதன்மூலமாக சுற்றுப்புற சுகாதார சீர்கேடு இல்லாத நகர்ப்புறத்தை உருவாக்கி அதில் தொழில் துறை மற்றும் தொழில்சார்ந்த துறைகளைப் பெருக்கி பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த முடியும். இதன்மூலமாக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி வசதியையும் பெருக்கி தரமான உள்கட்டமைப்பு வசதிகளை நிரந்தரமாக அளிக்க முடியும். நிதி உதவி அளிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் தற்போது ஆராயப்பட்டு வருகின்றன.

## குடிநீர் மற்றும் சுகாதாரப் பொது நிதி

சிறிய மற்றும் நடுத்தர மாநகரங்களில் குடிநீர் மற்றும் பொது சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காக அரசு குடிநீர் மற்றும் சுகாதாரப் பொது நிதி என்ற அரசு அறக்கட்டளையை ஏற்படுத்தியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் தேவைகளை ஒன்று திரட்டி வெளிச் சந்தையிலிருந்து கடன் பெறுவதன்மூலம் உள்கட்டமைப்பு வசதிகளுக்கான வட்டி மற்றும் வணிக நடவடிக்கைகள் செலவினங்கள் குறைக்கப்படுகின்றன.

## குடிநீர் மற்றும் சுகாதாரப் பொது நிதியின் குறிக்கோள்களாவன:

1. உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குதல்
2. பொது நிதி அமைப்புமூலம் உள்நாட்டு மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுதல்
3. நேரடி முதலீடு மற்றும் கூட்டு முயற்சியின்மூலம் குடிநீர் மற்றும் கழிவு நீர்த் துறைகளில், தனியார் துறை பங்கெடுக்க உதவுதல்
4. உள்ளாட்சி அமைப்புகள், வெளிச் சந்தையிலிருந்து கடன்மூலமாக நிதி திரட்ட உதவுதல் மற்றும்
5. குடிநீர், சுகாதாரம் மற்றும் பிற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு ஒரு இடை முகவராகச் செயல்படுதல்

2002-ல் 13 உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கடன் பத்திர வெளியீடுமூலமாக ரூ. 30.11 கோடி திரட்டப்பட்டுள்ளது.

**கூட்டு நிதி வளர்ச்சி நிதியம் (PFDF)**

இந்திய அரசின், நகர்ப்புற மேம்பாட்டுத் துறை 2006 ஆம் ஆண்டு கூட்டு நிதி வளர்ச்சி நிதியம் என்னும் திட்டத்தினைத் தொடங்கியது. இதன் முக்கியக் குறிக்கோள்களாவன;

1. உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து நேரடியாக நிதி திரட்டி தங்களது உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கிக்கொள்ளுதல்.

2. வருவாய் ஏற்படுத்தித் தரும் திட்டங்களை விரைந்து செயல்படுத்தல்.

3. ஏற்கெனவே இருக்கும் அதிக வட்டி விகிதத்திலான கடன்களை மறுசீரமைப்பு செய்வதன்மூலம் வட்டி செலுத்துவதைக் குறைத்து புதிய கடன்களைப் பெறுவதற்கு வழிவகை செய்தல்.

தமிழக அரசு குடிநீர் மற்றும் சுகாதாரப் பொது நிதியை மாநில அளவிலான கூட்டு நிதி அமைப்பாக மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி நிதியத்தின் வழிகாட்டுதலின்படி அறிவித்தது. குடிநீர் மற்றும் சுகாதாரப் பொது நிதி (WSPF) 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.100 கோடி அளவிற்கு வரியில்லாத கடன் பத்திரங்கள்மூலமாக மூலதனச் சந்தையிலிருந்து கடன் திரட்ட உத்தேசித்துள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO)**

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனமாகும். மத்திய அரசுத் திட்டங்களுக்கான மாநில அளவிலான முகமை நிறுவனமாகவும் (State Level Nodal Agency) டுபிட்கோ நிறுவனத்தை மாநில அரசு நியமித்துள்ளது.



**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JNNURM)**

*1. நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஆளுமைத் துணைத் திட்டம் (URBAN INFRASTRUCTURE AND GOVERNANCE)*

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்கள் இத்திட்டத்தின்கீழ், பயனடையும். இந்த நகரங்களில் மாநகராட்சி எல்லையைத் தவிர, மாநகராட்சியைச் சுற்றியுள்ள உள்ளாட்சி திட்டக் குழுமத்திற்கு உட்பட்ட உள்ளாட்சி அமைப்புகளும் பயனடையும். இத்திட்டம் சீர்திருத்தத்துடன் கூடிய திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் திட்டங்களுக்கான நிதி கூறுபாடு பின்வருமாறு ஆகும்:

(திட்ட மதிப்பீட்டில்—சதவிகிதத்தில்)

| நகரம் | மானியம் | | நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் சுய நிதி |
|---|---|---|---|
| | மத்திய அரசு | மாநில அரசு | |
| சென்னை | 35 | 15 | 50 |
| மதுரை மற்றும் கோயம்புத்தூர் | 50 | 20 | 30 |

நகர்ப்புற புனரமைப்பு, குடிநீர் வசதி, உவர்நீர் சுத்திகரிப்பு நிலையம், பாதாளச் சாக்கடை, திடக்கழிவு மேலாண்மை, வடிகால், மழை நீர் வடிகால், நகரப் போக்குவரத்து மற்றும் சாலைப் பணிகள் இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கத்தக்க திட்டங்கள் ஆகும்.

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.45,000 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கும், மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.3,37.5 கோடி மதிப்பிலான திட்டங்களுககும், கோயம்புத்தூர், மற்றும் அதைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.3,208.39 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதியளித்துள்ளது.

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டங்கள் | சென்னை | மதுரை | கோயம்புத்தூர் |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் | 6,321.00 | 403.21 | 76.36 |
| 2 | பாதாளச் சாக்கடை | 2,299.00 | 419.01 | 193.70 |
| 3 | திடக்கழிவு மேலாண்மை | 847.80 | 114.53 | 79.45 |
| 4 | மழைநீர் வடிகால் | 1,423.90 | 329.50 | 176.82 |
| 5 | நகரப் போக்குவரத்து மற்றும் சாலைப் பணிகள் | 17,254.00 | 1,286.37 | 2,231.11 |
| 6 | பெரிய அளவிலான போக்குவரத்து திட்டம் | 600.00 | | |
| 7 | நகர்ப்புற இருப்புப் பாதை (45 கி.மீ.) | 7,000.00 | | |
| 8 | வாகனங்கள் நிறுத்தும் வசதி | 43.82 | | |
| 9 | புராதனப் பொழுதுபோக்கு வசதி | 103.08 | | |
| 10 | ஏழைகளுக்கான நகர்ப்புற அடிப்படை வசதி | 3,887.22 | 668.78 | 403.37 |
| 11 | தெரு விளக்குகள் | | 36.15 | 22.29 |
| 12 | ஏனைய திட்டங்கள் | 5,000.00 | 117.31 | 25.29 |
| | மொத்தம் | 44,779.82 | 3,374.86 | 3,208.39 |

இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய சீரமைப்புகளுக்காக, உள்ளாட்சி அமைப்புகள், மாநில அரசு மற்றும் மத்திய அரசுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன்படி இத்திட்டத்தின்கீழ் 29 ஜூலை 2006 அன்று மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் மத்திய அரசுடன் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. 17 நவம்பர் 2006 அன்று சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புகளும் மத்திய அரசுடன் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளன.

*2006-2007* நிதியாண்டில் இந்த வளர்ச்சிப்பணித் திட்டத்தின்கீழ் கண்டறியப்பட்டுள்ள பணிகளில் *ரூ.1,220.00* கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு சென்னை மாநகரத்திற்கும், *ரூ.850.00* கோடி



மதிப்பிலான திட்டங்களுக்கு மதுரை நகரத்திற்கும் மற்றும் *ரூ.210.00* கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு கோயம்புத்தூர் மாநகரத்திற்கும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில் கீழ்க்கண்ட திட்டங்களும் அடங்கும்:

(அ) சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களுக்கான குடிநீர் வழங்கும் திட்டங்கள்.

(ஆ) சென்னை மாநகருக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம்.

(இ) சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களுக்கான திடக்கழிவு மேலாண்மைக்கான திட்டங்கள்.

(ஈ) சென்னை மாநகருக்கான இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதை திட்டங்கள் (ஆறு திட்டங்கள்).

*2007-2008* நிதியாண்டில் *ரூ.2,500.00* கோடிகள் மதிப்பிலான திட்டப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்ட பெரிய திட்டங்களும் உள்ளடங்கும்:

(அ) சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் திட்டக் குழுமத்திற்கு உட்பட்ட நகரங்களுக்கான போக்குவரத்துத் தொடர்புடைய திட்டங்கள்.

(ஆ) சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் திட்டக் குழுமத்திற்கு உட்பட்ட நகராட்சிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்.

(இ) சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் திட்டக் குழுமத்திற்கு உட்பட்ட நகரங்களுக்கான வடிகால் மற்றும் மழைநீர் வடிகால் திட்டங்கள்

## சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT)

இத்திட்டத்தின்கீழ் 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தில் உள்ளடங்காத மாநகரங்கள் மற்றும் நகரங்கள் பயனடையும்.

[2007 ஏப்ரல் 11

இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கத்தக்க திட்டங்கள் முறையே, குடிநீர் வசதி, உவர்நீர் சுத்திகரிப்பு நிலையம், பாதாளச் சாக்கடை, திடக்கழிவு மேலாண்மை, வடிகால், மழைநீர் வடிகால், சாலைப் பணிகள் மற்றும் நீர்நிலை ஆதாரங்களைப் பாதுகாத்தல் ஆகும்.

இத்திட்டத்திற்கான நிதி கூறுபாடு முறையே திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசு 80%, மாநில அரசு 10% மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் 10%.

2006-2007 நிதியாண்டில், மாநில அளவிலான ஒப்புதல் அளிக்கும் குழு இத்திட்டத்தின்கீழ் ரூ. 540.00 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதில குடிநீர் வசதித் திட்டங்களுக்கு ரூ.413.13 கோடி, பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு ரூ.22.04 கோடி, சாலை பணிகளுக்காக ரூ.101.25 கோடி மற்றும் இதரப் பணிகளுக்காக ரூ.3.58 கோடி மதிப்பில் ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில் 30 நகராட்சிகளும், 57 பேரூராட்சிகளும் பயன் அடைந்துள்ளன.

2007-2008 நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.550.00 கோடி மதிப்பிலான திட்டப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டம் (MIDF)

மாநகர பெருநகரத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி நிலைத்தன்மையுள்ள அடிப்படை வசதிகளை உருவாக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. இதன் அடிப்படையில் மாநகரத் திட்டத்தின்கீழ் பெறப்படும் மத்திய மற்றும் மாநில அரசின் பங்குகளில் 7.5% சுழற்சி நிதியாக உருவாக்கப்பட வேண்டும். அதன்படி இந்நிறுவனம் சுழற்சி நிதியை உருவாக்கியுள்ளது.

மத்திய அரசானது, இந்தச் சுழற்சி நிதியை, சென்னைப் பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு மாநகரத் திட்டத்தின் வழிகாட்டுதல்படி பயன்படுத்திக்கொள்ள அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கத்தக்க திட்டங்கள் முறையே, குடிநீர் வசதி, வடிகால், பாதாளச் சாக்கடை, உள் சுற்று மற்றும் மாற்றுவழி சாலைப் பணிகள், சரக்கு வண்டி நிறுத்துமிடம் உருவாக்குதல் மற்றும் விரிவுபடுத்துதல், திடக்கழிவு மேலாண்மை, குடிசைகளை மேம்படுத்துதல், சுற்றுப்புறச் சூழல் சம்பந்தப்பட்ட திட்டங்கள மற்றும் நகர அழகுபடுத்துதல் திட்டங்கள் உள்ளடங்கும்.



2007-2008 நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.400.00 கோடி மதிப்பிலான திட்டப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### டுபிட்கோ அடிப்படை வசதி நிதித் திட்டம்

மத்திய அரசின் ஆதரவு பெற்ற மேற்கூறிய திட்டங்களுக்கு முகவராக இருப்பதோடு அல்லாமல், டுபிட்கோவானது நகர்ப்புற அடிப்படை வசதியை மேம்படுத்துவதற்காக டுபிட்கோ அடிப்படை வசதி நிதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், வாரியங்கள், குழுமங்கள் மற்றும் நகர்ப்புற அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் ணைய அரசுசார் நிறுவனங்கள் பயன் பெறுகின்றன.

இத்திட்டத்தில் அனைத்து அடிப்படை வசதிகளும், அதாவது குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றுதல், சாலைப் பணிகள், வடிகால் மற்றும் வணிக வளாகங்கள் போன்ற திட்டங்கள் கடன் பெறுவதற்கு ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகும்.

2006-2007 நிதியாண்டில், இந்நிறுவனம் ரூ.47.00 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

2007-2008 நிதியாண்டில், இந்நிறுவனம் ரூ.65.00 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்க உத்தேசித்துள்ளது.

### தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் புதுப்பித்தல் நிதியம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம், மகாநகரத் திட்டம், ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டம் ஆகிய திட்டங்களின் நிதியங்களை ஒருங்கிணைந்து முறைப்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் புதுப்பித்தல் நிதியம் 2006-2007 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 11

## புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு நிறுவனம்

திருப்பூர் நகரமானது, பின்னலாடை ஏற்றுமதியில் சிறந்து விளங்கும மையமாகும். இதற்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகமானது, மாநில அரசு (State Government) கட்டமைப்பு குத்தகை நிதியாளர்கள் நிறுவனம் (IL & FS) மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (TEA) முதலிய அமைப்புகளின் முயற்சியால் சிறபபு நோக்கு நிறுவனமாக 1995-ம் வருடம் பிப்ரவரி மாதம், இந்திய கம்பெனி சட்டம் 1956-இன் கீழ் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது, திருப்பூர் பகுதி வளர்ச்சித் திட்டத்தினைச் (TADP) செயல்படுத்துவதாகும். இந்திய நாட்டிலேயே அரசு மற்றும் தனியார் இணைந்து குடிநீர் வழங்குவதற்காக நிறுவப்பட்ட முதல் திட்டம் இதுவே ஆகும்.

### திட்ட நோக்கம்

இத்திட்டத்தின்மூலம் நாளொன்றிற்கு 185 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டு வரப்பட்டு, திருப்பூரில் உள்ள சாயப்பட்டறை மற்றும் சலவைத் தொழிற்சாலைகள் மற்றும் திருப்பூர் நகராட்சியின் 15 கிராம பஞ்சாயத்துகள், 3 நகர பஞ்சாயத்துகள் ஆகியவற்றிற்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வழிப்பாதையில் அமைந்துள்ள 5 ஒன்றியங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின்மூலம் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி மேற்கொள்ளபபடுகிறது. திருப்பூர் நகராட்சியின் 60 சதவீதம் பகுதி இதனால் பயனடையும்.

### பணி முன்னேற்ற அறிக்கை

இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணியானது, நவம்பர் 2002-ல் துவங்கப்பட்டு குடிநீர் விநியோகப் பணிப் பங்கு, மே மாதம் 2005-ல் முடிக்கப்பட்டது.

நுகர்வோருக்குத் தண்ணீர் வழங்கும் பணியானது, ஜூன் 2005-ல் துவங்கப்பட்டது. இதன்மூலம் இலட்சக் கணக்கான நுகர்வோர்கள் பயனடைந்து வருகிறார்கள். இதனால் திருப்பூர் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு பெருமளவில் குறைந்துள்ளது. சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகளுக்குத் தரமான மற்றும போதுமான தண்ணீர் வழங்குவதால் தொழிற்சாலைகள் மிகுந்த பயனடைந்து உள்ளன.



2007 ஏப்ரல் 11] கட்டுமானப் பணிகள்

பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் பெருமளவில் முடிவு பெற்றுள்ளன. திருப்பூர் நகராட்சியால் வீட்டு இணைப்புகள் முடிக்கப்பட்டவுடன், இதன செயல்பாடு துவங்கும். மேலும், ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் பயனடையும் வகையில் குறைந்த செலவில் சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

### நிதி பற்றிய குறிப்பு

இத்திட்டத்திற்குத் தேவையான மொத்த செலவு ரூ.1,023 கோடியாகும். இத்திட்டத்திற்காக 31 ஜனவரி 2007 வரை ரூ.984 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசிடமிருந்து சம பங்குத் தொகையான ரூ.60 கோடி முழுவதும் பெறப்பட்டது.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

மனித சுகாதாரம், உற்பத்தித் திறன் மற்றும் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்த, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் அத்தியாவசியமாகிறது. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது அரசின் முக்கியமான குறிக்கோளாக உள்ளது. குடிநீர் திட்டங்களின் நிலைத்தன்மை மற்றும் நீராதாரங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்வது அரசின் மற்றொரு முக்கியக் குறிக்கோளாகும்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தனது நீண்டகால அனுபவத்தின்மூலம் செயலாற்றும் திறனை வளர்த்துக் கொண்டு அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் குறிக்கோளை எய்துவதில் முக்கிய நிறுவனமாகத் திகழ்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊரகம் மற்றும் நகரப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிகளுடன் நீராதாரங்களின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் நீர்வள மேலாண்மையிலும் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

### ஊரகக் குடிநீர்த் திட்டம்

ஊரகப் பகுதிகளில், மாநில அரசின் குறைந்தபட்சத் தேவை திட்டத்தின்கீழ் முழு மானியத்துடனும், மத்திய அரசின் துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மானியத்துடனும் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத்தில் ஊரகப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலுக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து, ஊரகக் குடிநீர்

வழங்குதலுக்குத் தேவையான நிதியை ஒதுக்கி வருகிறது மாநிலத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது.

ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர் வசதி நிலையை அறிய அவ்வப்போது ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசால் அறிவிக்கப்பட்டபடி, ஊரகக் குடியிருப்புகளின் தற்போதைய குடிநீர் வசதி நிலைமையைக் கண்டறியும் பொருட்டு, ஒரு மறு ஆய்வு செப்டம்பர் 2006-ல் மேற்கொள்ளப்பட்டது. இந்த 2006-ம் ஆண்டு மறு ஆய்வு முடிவுகளின்படி தமிழகத்தில் மொத்தம் 86,981 ஊரகக் குடியிருப்புகள் உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது.

**இந்தக் குடியிருப்புகளின் குடிநீர் வசதி நிலை பின்வருமாறு:**

| | |
|---|---|
| மொத்த குடியிருப்புகள் | 86,981 |
| முழு அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டரும் அதற்கு மேலும்) | 50,529 |
| பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 முதல் 39 லிட்டர் வரை) | 35,241 |
| குடிநீர் வசதியற்ற குடியிருப்புகள் (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 0 முதல் 9 லிட்டர் வரை) | 1,211 |

புதியதாக உருவான குடியிருப்புகள், குடிநீர் வசதியற்ற மற்றும் பகுதி அளவு குடிநீர் வசதி பெற்றுள்ள குடியிருப்புகள் அனைத்திற்கும் நான்காண்டுக் காலத்தில் முழுமையாக குடிநீர் வசதி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 2006–2007 ஆம் ஆண்டின் ஊரகக் குடிநீர்த் திட்டங்களின் செயல் சாதனைகள்

2006-2007 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் மாநில அரசின் குறைந்தபட்சத் தேவை திட்டத்தின்கீழ் ரூ.111.00 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும், மத்திய அரசின் துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ரூ.120.57 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும் செயல்படுத்தப்பட்டுள்ளது:



- 7,000 ஊரகக் குடியிருப்புகளுக்குத் தனி மின்விசைத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளன.
- நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகள் மற்றும் 506 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் உட்பட 712 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி அளிக்கப்பட்டது.
- ஊரகப் பகுதிகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையினரால் நடத்தப்படும் 227 பள்ளிகளையும் சேர்த்து மொத்தம் 3,274 அரசுப் பள்ளிகளுக்குத் திட்டமிட்டபடி குடிநீர் வசதி அளிக்கப்பட்டது.
- 421 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள், குடிநீர் ஆதாரங்களின் நிலைத் தன்மையை மேம்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.
- ஊரகப் பகுதிகளில் 216 ஆதி திராவிடர் விடுதிகளுக்குக் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளன.
- ஊரகப் பகுதிகளில் 351 கால்நடை மருத்துவமனைகளுக்குக் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளன.
- ஊரகப் பகுதிகளில் 2,050 தனி மின்விசைத் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

## 2007–2008 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்:

நடப்பு நிதியாண்டில், தமிழக அரசின் குறைந்தபட்சத் தேவை திட்டத்தின்கீழ் மானியமாக 411 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு மற்றும் மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் வழங்கப்பட உள்ள 120 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டின்மூலம் ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- 2007-2008 ஆம் ஆண்டில், 9,000 பகுதியளவு குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகள் மற்றும் குடிநீர் வசதியற்ற குடியிருப்புகளுக்கு, சுமார் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனி மின்விசைத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்படும்.

[2007 ஏப்ரல் 11

- ஊரகப் பகுதிகளிலுள்ள 200 பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ விடுதிகளுக்கு நடப்பு நிதியாண்டில் சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வசதி அளிக்கப்படும்.

- ஊரகப் பகுதிகளில் 300 சந்தைகள் மற்றும் வாராந்திர சந்தைகளுக்கு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வசதி அளிக்கப்படும்.

- ஊரகப் பகுதிகளில் உள்ள 750 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு மேல்நிலைத் தொட்டிகள் அமைத்து குடிநீர் வசதி மற்றும் கழிவறைகளுக்கு நீர் வசதி 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- மேல்நிலைத் தொட்டிகள் இல்லாத 2,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனியாக மேல்நிலைத் தொட்டி அமைத்து, குடிநீர் வசதி அளிக்கப்படும்.

- பல வருடங்களுக்குமுன் செயலாக்கப்பட்ட தனி மின்விசைத் திட்டங்களில் தேவைப்படும் புனரமைப்புப் பணிகள் நடப்பு நிதியாண்டில் சுமார் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**நீர்வள மேம்பாட்டிற்கான நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள்**

விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ், 2007-2008 ஆம் ஆண்டில் குடிநீர் ஆதாரங்களின் நிலைத் தன்மையை மேம்படுத்தும் வகையில் 268 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் 187 ஊருணிகளை மேம்படுத்தும் திட்டக் கருத்துரு, 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது. நடப்பு நிதியாண்டில் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் இப்பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.



2007 ஏப்ரல் 11]

தமிழகத்தில் அதிகப்படியாக நீர் எடுக்கப்படும் 10 நீர்வடி நிலங்களில் ஒருங்கிணைந்த நீர்வடி நில மேலாண்மை ஆய்வுப் பணிகள், 2.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

**நகர்ப்புற குடிநீர்த் திட்டம்**

**நகரங்களில் குடிநீர் வசதி நிலை**

மாநிலத்தில் சென்னை நீங்கலாக மொத்தம் 718 நகரங்கள் உள்ளன. இந்த நகரங்களின் தற்போதைய குடிநீர் வசதி நிலை கீழ்க்கண்டவாறு:

| உள்ளாட்சி அமைப்பு | முழு அளவு | பகுதி அளவு | குறைந்த அளவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 1 | 4 | – | 5 |
| நகராட்சிகள் | 52 | 90 | 10 | 152 |
| பேரூராட்சிகள் | 329 | 213 | 19 | 561 |
| மொத்தம் | 382 | 307 | 29 | 718 |

குடிநீர் வசதி வழங்குவதற்கான வரைமுறையின் அடிப்படையில் தற்போது நகரங்களில் வழங்கப்படும் குடிநீர் அளவு கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

| | வரைமுறை | முழுமையான அளவு | பகுதி அளவு | குறைந்த அளவு |
|---|---|---|---|---|
| மாநகராட்சி | 110 லிட்டர் | 110 லிட்டரும் அதற்கு மேலும் | 90–109 லிட்டர் | 90 லிட்டருக்கும் குறைவாக |
| நகராட்சிகள் | 90 லிட்டர் | 90 லிட்டரும் அதற்கு மேலும் | 78–89 லிட்டர் | 70 லிட்டருக்கும் குறைவாக |
| பேரூராட்சிகள் | 70 லிட்டர் | 70 லிட்டரும் அதற்கு மேலும் | 40–69 லிட்டர் | 40 லிட்டருக்கும் குறைவாக |

[2007 ஏப்ரல் 11

2006-2007-ம் ஆண்டில், நகரப் பகுதிகளில் திருச்சி மாநகராட்சி, 8 நகராட்சிகள், 16 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் 55 நகரங்களில் 161 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 15 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுப் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

## 2007–2008 ஆம் ஆண்டிற்கான திட்டம்

நடப்பு நிதியாண்டில், 60 நகரங்களுக்கு 380 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் நிறைவேற்றி, பயனுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் நடப்பு நிதியாண்டில் செயலாக்கப்பட உள்ள நகரக் குடிநீர்த் திட்டங்களில் விநியோக அமைப்பினைக் கண்காணிக்கவும், பராமரிக்கவும் தொலைதூர அளவை/தகவல் அறிதல் மற்றும் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் முறை (SCADA) அமைக்கப்படும்.

## பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமைக்க அரசு உறுதி கொண்டுள்ளது. திருநெல்வேலி, தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருச்சி-திருவரங்கம், கரூர்-இனாம் கரூர் ஆகிய 5 நகரங்களில் தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 293 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில் திருநெல்வேலி மற்றும் கரூர்-இனாம் கரூர் நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருச்சி-திருவரங்கம் நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும்.

## மாவட்டத் தலைநகரங்களுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

2006-2007 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட 13 மாவட்டத் தலைநகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் 317.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் இரண்டாண்டுகளில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.



| வ. எண். | நகரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| | | 40.40 |
| 1. | கடலூர் | 18.84 |
| 2. | நாமக்கல் | 23.25 |
| 3. | விருதுநகர் | 30.00 |
| 4. | இராமநாதபுரம் | 46.40 |
| 5. | தூத்துக்குடி | 5.72 |
| 6. | உதகமண்டலம் | 19.82 |
| 7. | சிவகங்கை | 32. 6 |
| 8. | புதுக்கோட்டை | 39.26 |
| 9. | திருவாரூர் | 28.93 |
| 10. | திருவண்ணாமலை | 16.53 |
| 11. | தருமபுரி | 18.24 |
| 12. | கிருஷ்ணகிரி | 27.63 |
| 13. | விழுப்புரம் | 347.18 |
| | மொத்தம் | |

2007-2008 ஆம் ஆண்டில் மேலும் 5 மாவட்டத் தலைநகரங்களுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் 212 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அனைத்து நகராட்சிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் படிப்படியாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் மாவட்டத் தலைநகரங்கள் அல்லாத 9 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் 181.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும், 85 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்த ஆய்வுப் பணிகள் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும்.

## பெரிய அளவிலான திட்டங்கள்

- 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த வழியோர நகரங்கள் மற்றும் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 616 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இராமநாதபுரத்தில் மாபெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 30-1-2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. திட்டத்திற்கான பணிகள் காவிரி ஆற்றில் முத்தரசநல்லூர் அருகே துவங்கப்பட்டுள்ளன. இரண்டு ஆண்டுகளில் பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் குடிநீா வழங்க நிரந்தரத் தீர்வாக ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தை நடப்பு நிதியாண்டிலேயே செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள அரசு உறுதிபூண்டுள்ளது.

## கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

நடப்பு நிதியாண்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் சிறப்பாகச் செயலாக்கி, பராமரிக்கும் வகையில் கீழ்க்கண்ட சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு அறிவுறுத்தியுள்ளது.

- தொலைதூர அளவை/தகவல் அறிதல் மற்றும் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் முறை (SCADA/Telemetry system).
- அனைத்துக் குடியிருப்புகளுக்கும நீர் அளவிடும் கருவிகள் அமைத்தல் (water meters).
- 12 மணி நேரத்திற்கும் அதிகமாக நீர் இறைப்பான்கள் பயன்படுத்தப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு தனி மின் பாதை அமைத்தல்.

2006-2007 ஆம் ஆண்டில், 4 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 1,900 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 60 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 363 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20.26 இலட்சம் மக்கள்



பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றுள் கீழ்க்காணும் பெரிய அளவிலான திட்டங்களும் அடங்கும்:

- நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினம் நகராட்சி, கீழ்வேளூர், வேளாங்கன்னி பேரூராட்சிக்கு 98.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- நாமக்கல் மாவட்டத்தில் சேந்தமங்கலம், காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சிகள் மற்றும் நாமககல், சேந்தமங்கலம், எருமைப்பட்டி, மோகனூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 318 குடியிருப்புகளுக்கு 31.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.02 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி, விளாத்திகுளம், கயத்தாறு, புதூர், ஓட்டப்பிடாரம் ஒன்றியங்களைச் சேர்நத 239 கடலோரக் குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, விருதுநகர் நகராட்சிகள் மற்றும் மல்லாங்கிணறு, காரியாப்பட்டி பேரூராட்சிகளுக்கு 68.00 கோடி ரூபாய் மதிப்பிட்டில் சுமார் 1.31 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் பொன்மனை, குலசேகரம், வேர்கிளம்பி, குமாரபுரம், கோதைநல்லூர், விளாவூர், நெய்யூர் பேரூராட்சிகள் மற்றும் தக்கலை, திருவட்டாறு ஒன்றியங்களைச் சேர்ந்த 26 வழியோரக் குடியிருப்புகளுக்கு 12.86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.19 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கீழ்க்கண்ட பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சென்றாண்டு அறிவித்தபடி, செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

- கோயம்புத்தூர் மாவட்டத்தில் குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு பேரூராட்சிக்கு 49.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

[2007 ஏப்ரல் 11

- கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் காரமடை, பெரியநாயக்கன்பாளையம், சர்க்கார்சாமகுளம், மதுக்கரை, சூலூர், சுல்தான்பேட்டை, பல்லடம், பொங்கலூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 965 குடியிருப்புகளுக்கு 122.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9.24 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- பெரம்பலூர் மாவட்டத்தில் அரியலூர், செந்துறை, வேப்பூர், திருமானூர் மற்றும் ஆலத்தூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 636 குடியிருப்புகளுக்கு 44.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் ராயகிரி, சிவகிரி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம் பேரூராட்சிகள் மற்றும் வாசுதேவநல்லூர், பாப்பாக்குடி ஒன்றியங்களைச் சேர்ந்த 78 குடியிருப்புகளுக்கு 13.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- புதுக்கோட்டை மாவட்டத்தில் அரிமளம், அறந்தாங்கி, ஆவுடையார்கோயில் மற்றும் மணல்மேல்குடி ஒன்றியங்களைச் சேர்ந்த 706 குடியிருப்புகள் மற்றும் அறந்தாங்கி நகராட்சிக்கு 42.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் வடவள்ளி பேரூராட்சிக்கான 30.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி நகராட்சி மற்றும் வேலூர் மாவட்டத்தில், அரக்கோணம் நகராட்சிக்கான 13.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 17 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சேர்ந்த 93 குடியிருப்புகளுக்கு 9.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 37 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.



2007 ஏப்ரல் 11]

- கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர், குருந்தன்கோடு, அகஸ்தீஸ்வரம், இராஜக்கமங்கலம் ஒன்றியங்களைச் சேர்ந்த 79 கடலோரக் குடியிருப்புகளுக்கு 28.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 2.99 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறையாறு, பைங்குளம், புதுக்கடை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மூஞ்சிறை குடிநீர்த் திட்டங்களில் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம்.

## 2007-2008 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

2007-2008 ஆம் ஆண்டில், 27 பேரூராட்சிகள் மற்றும் 2,325 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 626 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் கீழ்க்காணும் பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் அடங்கும்.

- கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம், கடவூர் ஒன்றியங்கள் மற்றும் திருச்சி மாவட்டத்தில் வையம்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த 541 குடியிருப்புகளுக்கு 49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.98 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- நாமக்கல் மாவட்டத்தில் நாமகிரிப்பேட்டை, பட்டணம், சீராப்பள்ளி, ஆர். புதுப்பட்டி பேரூராட்சிகள் மற்றும் மல்லசமுத்திரம், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, இலச்சிப்பாளையம், நாமக்கல், புதுசத்திரம், சேந்தமங்கலம், பரமத்தி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,081 குடியிருப்புகளுக்கு 95.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4.19 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் ஆய்க்குடி, அச்சம்புதூர், வடகரைகீழ்பிடாகை, பண்பொழில் பேரூராட்சி மற்றும் கடையம், கீழப்பாவூர், தென்காசி, செங்கோட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 151 குடியிருப்புகளுக்கு 29.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.86 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

53-108—9C

[2007 ஏப்ரல் 11

- திருவண்ணாமலை மாவட்டத்தில் தண்டராம்பட்டு, செங்கம், திருவண்ணாமலை, கலசப்பாக்கம், துரிஞ்சாபுரம் ஒன்றியங்களைச் சேர்ந்த 90 குடியிருப்புகளுக்கு 7.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 60,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**2007–2008 ஆம் நிதியாண்டில் கீழ்க்காணும் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.**

- விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூர் நகராட்சி மற்றும் விருதுநகர், இராஜபாளையம் ஒன்றியங்களைச் சேர்ந்த 11 குடியிருப்புகளுக்கு 32.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.20 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- மதுரை மாவட்டத்தில் திருப்பரங்குன்றம் நகராட்சி மற்றும் ஹார்விபட்டி பேரூராட்சிக்கு 9.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருவண்ணாமலை மாவட்டத்தில் கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி மற்றும் கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 165 குடியிருப்புகளுக்கு 13.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.0 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பெரம்பலூர் மற்றும் வேப்பந்தட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 306 குடியிருப்புகளுக்கு 51.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.25 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- விருதுநகர் மாவட்டத்தில் சாத்தூர், விருதுநகர் மற்றும் அருப்புக்கோட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 232 குடியிருப்புகளுக்கு 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2.28 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ஈரோடு மாவட்டத்தில் மொடக்குறிச்சி பேரூராட்சி மற்றும் மொடக்குறிச்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 74 குடியிருப்புகளுக்கு 1.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 29,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.



2007 ஏப்ரல் 11]

**சுனாமி நிவாரணப் பணிகள்**

சுனாமியால் பாதிக்கப்பட்ட நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் நிலையான குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றிட ஆசிய வளர்ச்சி வங்கியின் சுனாமி அவசர நிதி உதவியுடன் 41 குடிநீர்த் திட்டங்கள் 82.18 கோடி ரூபாய மதிப்பீட்டில் 2006-2007 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துககொள்ளப்பட்டு 16 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பயனுககுக் கொண்டு வரப்பட்டன. மீதமுள்ள 25 திட்டங்களில் 16 திட்டங்கள் நடப்பாண்டில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்புப் பணிகள்**

4 மாநகராட்சிகள், 50 நகராட்சிகள், 253 பேரூராட்சிகள், 15,724 குடியிருப்புகள் மற்றும் 391 நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் பயன்பெறும் வகையில் 454 கூடடுக் குடிநீர்த் திட்டங்கள், 1.78 கோடி மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்புப் பணிகளை மாவட்ட ஆட்சியரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர வேண்டும் என்று அரசு முடிவுசெய்தது. இதன்படி, பராமரிப்பில் உள்ள அனைத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் மாவட்ட ஆட்சியரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் கொண்டுவரப்பட்டன.

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் புனரமைப்புப் பணிகள்**

2006-2007 ஆம் ஆண்டில், 54 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள் 5.3 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டன. மேலும், பணிகள் முன்னேற்றத்தில் உள்ள 33 திட்டங்கள் நடப்பாண்டில் நிறைவேற்றப்படும்.

**தனி மின் பாதை அமைக்கும் பணிகள்**

கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் நீரேற்று நிலையங்களில் தடையின்றி மின் வசதி பெறுவதற்காக, 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 114 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் தனி மின் பாதைகள் அமைக்க அரசு ஆணை பிறப்பித்தது. இதன்படி, 2006-2007 ஆம் ஆண்டில் 22.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 52 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் தனி மின் பாதை

[2007 ஏப்ரல் 11

அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் தனி மின் பாதை அமைக்கும் பணிகள் 22.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2007-2008 நிதியாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**நீரின் தரப் பரிசோதனையும், கண்காணிப்பும்**

வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலமாக வழங்கப்படும் குடிநீரை மக்களுக்குக் குடிப்பதற்கு உகந்த தரத்துடன் வழங்கும் வகையில் ஒரு மாநில அளவிலான நீர்ப் பரிசோதனைக் கூடமும், 28 மாவட்ட அளவிலான நீர்ப் பரிசோதனைக் கூடங்களும் இயங்கி வருகின்றன. அனைத்து ஊராட்சிகளுக்கும் எளிதில் கையாளக்கூடிய களநீர்ப் பரிசோதனைப் பெட்டிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2006-2007 ஆம் ஆண்டில் பரிசோதனை கலன்கள் உபயோகிக்கும் முறை பற்றியும் தரமான குடிநீரின் முக்கியத்துவம் பற்றியும் மாவட்டம், ஒன்றியம் மற்றும் ஊராட்சி அளவில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, குடிநீர்ப் பரிசோதனை மேற்கொள்ள 2,748 களப் பரிசோதனை கலன்கள் 1,891 ஊராட்சிகளுக்கும், ஒன்றியத்திற்கு இரண்டு என அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்டத்திற்கு மூன்று என அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மீதமுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் களப் பரிசோதனைக் கலன்கள் வழங்கப்படும்.

**கணிப்பொறி மேலாண்மைத் திட்டம்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில், கணினி மேலாண்மைத் திட்டத்தின் நடவடிக்கைகள் மத்திய அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னைத் தலைமையகம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தலைமைப் பொறியாளர் அலுவலகம் மற்றும் 4 கோட்ட அலுவலகங்களை இணைக்கும் பணியும், மென்பொருள் தயாரிக்கும் பணியும் 2006-2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும். மாநிலத்தில் உள்ள மற்ற அலுவலகங்களை இணைக்கும் பணிகளும், மென்பொருளைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் பணியும் 2007-2008 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும்.



2007 ஏப்ரல் 11]

மேலும், பெரிய அளவிலான குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை மின் ஒப்பந்தப்புள்ளியாகக் கோரும் முறை, 2007-2008 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு ஊரகக் குடிநீர்த் திட்டம்**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊரக மக்களும் பயன்பெறும் வகையில் நிலையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்கத்துடன், அனைத்து ஊரகக் குடியிருப்புக்களை உள்ளடக்கி "தமிழ்நாடு ஊரகக் குடிநீர்த் திட்டம்" 5 ஆண்டுக் காலத்தில் ரூ.2600 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் செயல்படுத்தப்படும் பகுதி சீரமைப்புத் திட்டம் மற்றும் சுவஜல்தாரா திட்டக் கொள்கை அடிப்படையில் மக்களின் தேவைக்கேற்ற திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது.

**மாறுதல் மேலாண்மைத் திறன் வளர்த்தல்**

சமுதாய சுய மேலாண்மை மூலம் நிலையான குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்வதே மாநில அரசின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியததின் செயல் திறனைப் பயன்படுத்தி, வாரியத்தை, மக்களை மையப்படுத்திய பொறுப்பு மிகுந்த நிறுவனமாக மாற்றுவதற்குப் பொறியாளர்களுக்கு மாறுதல் மேலாண்மைத் திறன் பயிற்சி 2004-2005 ஆம் ஆண்டிலிருந்து யூனிசெஃப் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திறன் வளர்த்தல் பயிற்சியின் முதற்கட்டமாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள்மூலம் முழுமையான சமுதாய நீர் மேலாண்மைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் எதிர்காலத்திற்குத் தேவையான நீர் வளத்திற்காக 400 ஊரகக் குடியிருப்புகளில் நீர் சேமிப்பு தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு அனைவருக்கும் உறுதி செய்யப்பட்ட சம அளவிலான நிலையான குடிநீர் குறைந்த செலவில் சுய மேலாண்மைமூலம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்களுக்கு மாறுதல் மேலாண்மையில் திறன் பயிற்சி வளர்த்து, இதன்மூலம் ஊரக மற்றும்

நகரக் குடிநீர்த் திட்டங்களில் "ஜனநாயக முறைப்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை" செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. மேலும், பிற மாநிலங்களில் உள்ள துறைகளுக்கும், மாறுதல மேலாண்மைப் பயிற்சி மூலம் திறன் வளர்ப்பதற்கு 2007-2008-ல் யூனிசெஃப் நிதி உதவியுடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பிரிவு (CCDU)

மத்திய அரசின் அறிவுரையின்படி, குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் குறித்து, தகவல் தொடர்பு, கல்வி மற்றும் மனிதவள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2006-2007 ஆம் நிதியாண்டில், வட்டாரக் கருத்தரங்குகள் 29 மாவட்டங்களில் சமுதாயப் பங்கேற்புடன் கிராமக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவது குறித்து, பயிற்சி அளிப்பவர்களுக்கான பயிற்சிகள் நடத்தப்பட்டன. குடிநீர் சேமித்தல், குடிநீர் தரம் மற்றும் குடிநீரைச் சுகாதார முறையில் பயன்படுத்துதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 385 ஒன்றிய அலுவலகங்கள், 29 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் சுவர் விளம்பரங்கள் மற்றும் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டன. விரைவுப் பேருந்துகள், மாநகர/நகரப் பேருந்துகள் மற்றும் இரயில் நிலையங்களில் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டன.

ஒன்றிய அளவிலான அலுவலர்களுக்குத் திறனை மேம்படுத்தும் முகமாக சமுதாயப் பங்கேற்புடன்கூடிய கிராமக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் மற்றும் நிதி மேலாண்மை குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

2007-2008-ம் நிதியாண்டில், தகவல தொடர்பு, கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுப் பணிகள் தகுந்த யுக்திகள் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். மேலும், தேசிய ஊரகக் குடிநீர் தர நிர்வாகம் மற்றும் கண்காணிப்புத் திட்டப் பணிகள், மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கிணங்க ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும். குடிநீர்த் திட்டங்களைச் சரிவர இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்த திறன் மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படும். மேலும், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சித் தலைவர்களுக்கு, மேற்குறிப்பிட்ட கருததுருக்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.



## பகுதி-II திட்டங்கள்:

2006-2007ஆம் ஆண்டில் சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டத்தின் நிலைத் தன்மையை மேம்படுத்த ஊருணிகளைச் சீர் செய்யவும், கூடுதல் நீராதாரம் அமைக்கவும் 2.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகள் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும்.

கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் விநியோக அமைப்பினை முறையாகக் கண்காணிக்கவும், பராமரிக்கவும் தொலைதூர அளவை/தகவல் அறிதல் மற்றும் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் முறை (SCADA) அமைப்பது அவசியமாகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தொலைதூர அளவை/தகவல் அறிதல் மற்றும் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் முறை 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் நடப்பு நிதியாண்டில் நிறைவேற்றப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படும்.

## 2007–2008 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

1. நடப்பு நிதியாண்டில் தொலைதூர அளவை/தகவல் அறிதல் மற்றும் கண்காணித்து கட்டுப்படுத்தும் முறை (SCADA) வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

2. பராமரிப்பில் உள்ள 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் சுத்திகரிக்கப்பட்ட, குடிப்பதற்கு உகந்த குடிநீர் வழங்க சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு, அதன்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. இவற்றுள், 15 ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட சுத்திகரிப்பு நிலையங்களில் சில மின் மற்றும் இயந்திர உபகரணங்கள் திறன் இழந்த காரணங்களினால் சுத்திகரிப்புத் திறன் குறைந்துள்ளது. நீர் வடிகட்டும் மணல் படுகையும் மாற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

இதைக் கருத்தில்கொண்டு, நடப்பு நிதியாண்டில் 15 ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட 10 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் சுத்திகரிப்பு நிலையங்களில், வடிவமைக்கப்பட்ட அளவு சுத்திகரிப்புத் திறனை மேம்படுத்த புனரமைப்புப் பணிகள் 2.00 கோடி ரூபாய் மதிபபீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது.

3. பராமரிப்பில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் நிறுவப்பட்ட நீர் இறைப்பு இயந்திரங்களின் பயன்பாட்டுக் காலம் 15 வருடங்களாகும். இந்த இயந்திரங்களின் செயல்திறன் மிகவும் குறைந்துள்ளது. எனவே வடிவமைக்கப்பட்ட அளவு குடிநீர் இறைக்கவும், மின்சார உபயோகத்தைக் குறைக்கவும், பயன்பாட்டுக் காலம் முடிவடைந்து திறன் இழந்த இயந்திரங்களை மாற்ற வேண்டியது அவசியமாகிறது.

இதைக் கருத்தில்கொண்டு, பராமரிப்பில் உள்ள 81 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 15 வருடங்களுக்கு மேலாக பயனில் உள்ள மின் இறைப்பான்கள், 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் மாற்றியமைக்கப்படும்.

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீரைச் சேகரித்து, சுத்திகரித்து, பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவது எந்த ஒரு அரசிற்கும் தலையாய கடமையாகும். இந்த வகையில் சென்னை நகரம் மற்றும் அதன் அருகிலுள்ள நகர்ப்புறப் பகுதிகளுக்குத் தேவையான குடிநீரின் அளவைப் பெறுவதற்கும் மற்றும் கழிவுநீரைச் சேகரித்து, சுத்திகரித்து, பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

தமிழக அரசு, கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின்மூலம் 12 டி.எம்.சி. தண்ணீர் பெறுவதற்கான முயற்சிகளைத் தொடர்வதுடன், சென்னை நகர மக்களுக்குப் போதுமான குடிநீர் வழங்கலை உறுதி செய்ய கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களை விரைவில் நிறுவுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

### குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று மேலாண்மை

சென்னைப் பெருநகரப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று அமைப்புகளை நகரின் வளர்ச்சிக்கேற்ப, தேவைகளின் அடிப்படையில் திட்டமிட்டு, அபிவிருத்தி செய்து முறைப்படுத்தவும், குறிப்பாக, மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் மற்றும் அதனைச் சார்ந்த அனைத்துத் தேவைகளுக்காகவும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (சென்னைக்



குடிநீர் வாரியம்) 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஓர் அரசு உரிமையாக்கப்பட்ட நிறுவனமாக உருவாக்கப்பட்டது.

சென்னைப் பெருநகரப் பகுதியில் (CMA) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று அமைப்புகளுக்கான திட்டமிடுதல், கட்டுமானம், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை சென்னைக் குடிநீர் வாரியத்தின் பொறுப்பாகும். பொதுவாக, இவ்வாரியத்தின் பணிகள் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் மட்டும் செயல்பாட்டில் இருந்தாலும், சென்னை நகரைச் சுற்றியுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் (விரிவாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் மணலி புதுநகருடன் சுமார் 7.88 சதுர கி.மீ.) அதன் சேவையை விரிவாக்கி அனைத்துப் பெருநகரப் பகுதிகளுக்கும் பணிகளை வழங்கிட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சென்னை மாநகரின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று மேலாண்மைக்காக ஒரு பெருந்திட்டம் 1978 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, 1991 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டு, மீண்டும் 1997 ஆம் ஆண்டு மேம்படுத்தப்பட்டது. இப்பெருந்திட்டத்தின்படி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் விரிவுபடுத்தும் பணிகள் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வாரியம் உருவாக்கப்பட்டதிலிருந்து அதன் வளர்ச்சி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

### குடிநீர் வழங்கல்

| விவரம் | 1978 | மார்ச் 2007 |
|---|---|---|
| இயக்கப்படும் பகுதி | நகரப்பகுதி 170 சதுர கி.மீ. | நகரப் பகுதி + அருகிலுள்ள நகரப்பகுதி (175.18+7.88 சதுர கி.மீ.) |
| மக்கள் தொகை | 30 இலட்சம் | சுமார் 53.75 இலட்சம் |
| நாளொன்றுக்கு வழங்கப்படும் நீரின் அளவு (சாதாரண வருடங்களில்) | 240 மில்லியன் லிட்டர் | 645 மில்லியன் லிட்டர் |
| குழாய் மூலம் நீர் வழங்கும் பகுதி | 80 | 99 |

| விவரம் | 1978 | மார்ச் 2007 |
|---|---|---|
| சுத்திகரிப்புத் திறன் | நாளொன்றுக்கு 182 மில்லியன் லிட்டர் | நாளொன்றுக்கு 750+530* மில்லியன் லிட்டர். |
| குடிநீர்க் குழாய்களின் நீளம் | 1250 கி.மீ. | 2887 கி.மீ. |
| நுகர்வோர்களின் எண்ணிக்கை | 1,16,000 | 4,35,755 |
| குடிநீர் பகிர்மான நிலையங்கள் | 3 | 16 |

* செம்பரம்பாக்கத்தில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்படும்.

**கழிவு நீரகற்றும் அமைப்பு**

| விவரம் | 1978 | மார்ச் 2007 |
|---|---|---|
| கட்டமைப்பு உள்ள பகுதி | 74 | 99 |
| கழிவுநீர் இணைப்புள்ள குடியிருப்புகள் | 1,14,000 | 5,15,560 |
| கழிவு நீர்க் குழாய்களின் நீளம் | 1223 கி.மீ. | 2663 கி.மீ. |
| கழிவு நீரகற்று நிலையங்களின் எண்ணிக்கை | 58 | 180 |
| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | 3 | 5 |
| கழிவுநீர் சுத்திகரிப்புத் திறன் | நாளொன்றுக்கு 57 மில்லியன் லிட்டர் | நாளொன்றுக்கு 486 மில்லியன் லிட்டர். |

**குடிநீர் வழங்கலின் தற்போதைய நிலை**

சென்னை மாநகரம் மற்றும் அதன் அருகிலுள்ள நகர்ப்புறப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கான மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் பூண்டி, சோழவரம், செங்குன்றம், செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கங்கள், வீராணம் ஏரி, ரெட்டை ஏரி, போரூர் ஏரி மற்றும் கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின்மூலம் ஆந்திரப்பிரதேசத்திலுள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து பெறப்படும் நீர் ஆகியவை ஆகும்.



ஆரணியாறு-கொசத்தலையாறு ஆற்றுப்படுகைகளிலும் மற்றும் தெற்குக் கடற்கரை நீர்ப்படுகைகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள கிணற்றுத் தளங்களிலிருந்து பெறப்படும் நிலத்தடி நீர் மற்றும் உவர் நீரைக் குடிநீராக்கும் எதிர்மறை சவ்வூடு பரவுதல் நிலையங்களிலிருந்து பெறப்படும் நீர் ஆகியவை பிற நீர் ஆதாரங்களாகும்.

2006-2007 ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலத்திலுள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின்மூலம் இரண்டு முறை, அதாவது 19-08-2006 முதல் 06-11-2006 வரை 2.869 டி.எம்.சி., 14-12-2006 முதல் 08-02-2007 வரை 2.315 டி.எம்.சி. ஆக மொத்தம் 5.184 டி.எம்.சி. நீர் பெறப்பட்டது. வடகிழக்குப் பருவ மழையின்மூலம் கணிசமாக நீர், நீர்த்தேக்கத்திற்குக் கிடைக்காவிட்டாலும், கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின்மூலம் பெறப்பட்ட நீரினால் நகருக்குத் தொடர்ந்து நாளொன்றுக்கு 64.5 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்க முடிகிறது. முதன்முறையாக ஜனவரி 2007-ல் கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின்மூலம் பெறப்பட்ட நீர், செம்பரம்பாக்கம் ஏரிக்கு அனுப்பப்பட்டது.

சென்னை மாநகருக்குத் தற்போது குழாய்கள்மூலம் தினமும் குடிநீர் வழங்கப்பட்டு வருவது தொடரப்படும். பொதுமக்களுக்கு 575 மில்லியன் லிட்டர், தொழிற்சாலைகள் மற்றும் மொத்த உபயோகிப்பாளர்களுக்கு 65 முதல் 70 மில்லியன் லிட்டர் தினமும் வழங்கப்பட்டு வருகிறது சென்னைக் குடிநீர் வாரிய இயக்கத்தின் எல்லைக்குட்பட்ட 15,460 தெருக்களில் 15,155 தெருக்களுக்குக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. சுமார் 130 தெருக்களில் குடிநீர் வழங்குவதற்கான குடிநீர் விநியோகக் குழாய்கள் இருந்தும், போதுமான அளவு நீர் அழுத்தம் இல்லாததால் குழாய்கள்மூலம் குடிநீர் கிடைக்கப் பெறவில்லை. இந்தத் தெருக்களுக்குக் குழாய்கள்மூலம் குடிநீர் வழங்குவதற்குக் குடிநீர் விநியோக அமைப்பில் தேவைப்படும் மேம்பாட்டுப் பணிகள் நடப்பு ஆண்டில் தொடங்கப்பட்டு அடுத்த இரண்டு ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணி நிறைவடையும்போது சமமான அளவு குடிநீர் வழங்க இயலும்.

ஜூலை மாதம் 2006-ல் 336 தெருக்களில், குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாமல் இருந்தன. இதில் 161 தெருக்களுக்குக் குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 175 தெருக்களுக்குக் குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் அனைத்தும் இவ்வாண்டு ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

குடிநீர் விநியோகக் குழாய்கள் இருந்தும் குடிநீர் வராத தெருககளுக்கும், குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத தெருக்களுக்கும் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கபபடுகிறது. இதற்காக தினமும் சராசரியாக 1,300 லாரி நடைகள்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. இதைத் தவிர, கட்டணம் செலுத்தி குடிநீர் பெறும் வகையில் தேவையுள்ள நுகர்வோர்களுக்கும் தினமும் 700 லாரி நடைகள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மககளின் குடிநீர் மற்றும் சமையலுக்குத் தேவை அல்லாத பிற உபயோகத்திற்காக நகரின் பல்வேறு பகுதிகளில் 6,921 இந்தியா மார்க் II பம்புகள் செயல்பாட்டில் உள்ளன.

நீர்த்தேக்கங்களில் உள்ள தண்ணீருடன் கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டம்மூலம் பெறப்படும் தண்ணீரையும் சேர்த்து வடகிழக்குப் பருவமழை துவங்கும் வரை நகருக்குத் தற்போது வழங்கும் குடிநீர் அளவு தொடர்ந்து வழங்கப்படும்.

## கழிவுநீர் அமைப்பு

சென்னை நகரின் கழிவுநீரைச் சேகரித்து, சுத்திகரித்து, பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவது, சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மற்றுமொரு முக்கியக் கடமையாகும். சென்னை நகரின் 99 விழுக்காடு பகுதிகளில் பாதாளச் சாக்கடை அமைப்பு உள்ளது. நகரில் உள்ள 5 கழிவுநீர் மண்டல அமைப்புகளைத் தவிர அண்டைப் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட சிறிய கழிவு நீர் அமைப்புகளும் அருகிலுள்ள கழிவுநீர்க் குழாய்களில் இணைக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

தற்போது சென்னைக் குடிநீர் வாரியம், 2,663 கிலோ மீட்டர் நீளமுளள கழிவுநீர்க் குழாய்கள், 180 கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் நாளொன்றுக்கு 186 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட 5 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களைப் பராமரித்து வருகிறது. ஜூலை மாதம் 2006 வரையில் 177 தெருக்களுக்குக் கழிவுநீர்க்



குழாய்கள் பதிக்கப்படவில்லை. இதில் 70 தெருக்களுக்குக் கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 107 தெருக்களுக்குக் கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கும் பணிகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்படும்.

## செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

சென்னைக்குக் கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின்மூலம் நீர் பெறுவதை எதிர்நோக்கி 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் செம்பரம்பாக்கத்தில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.296 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவுவதற்காக அரசு நிர்வாக ஒப்புதல் அளித்தது. குடிநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சென்னை நகருக்குச் சுத்திகரிக்கப்பட்ட நீரைக் கொண்டு செல்லும் குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக நாளொன்றுக்கு 200 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்குவதற்கான பணிகள், செப்டம்பர் 2006-க்குள் முடிக்கப்படும் என முன்பு திட்டமிடப்பட்டது. குழாய் அமைக்கும் பாதையில் நில ஆர்ஜிதம் தொடர்பான வழக்குகளினால் பணி தாமதம் ஏற்பட்டது. மேலும், மழை காரணமாக கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடத்தில் தண்ணீர் தேங்கியதால் பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்த முடியவில்லை தற்பொழுது பணிகள் முடிக்கப்பட்டு, சுத்திகரிப்பு நிலைய முன்னியக்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. அனைத்துப் பணிகளும் இவ்வாண்டு ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

## கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம்—I (காட்டுப்பள்ளி/மீஞ்சூர்)

சென்னை மாநகரின் தற்போதைய நீர் வழங்கல் ஆதாரங்கள் பெரும்பாலும் பருவ மழையைச் சார்ந்துள்ளதால், பருவமழை பொய்க்கும் சமயங்களில் சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கல் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. சென்னைக் குடிநீர் வாரியம் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை, வறட்சியைத் தடுக்கும் முயற்சியாக வடிவமைத்து, சொந்தமாக நிறுவி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் (DBOOT) அடிப்படையில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதன் அடிப்படையில் திருவாளர்கள் சிடபிள்யுடிஎல். (சென்னை வாட்டர் டீசலைனேசன் லிமிடெட்) நிறுவனத்திடம் மொத்த குடிநீர் கொள்முதல் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

16-10-2006 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மீஞ்சூர் அருகேயுள்ள காட்டுப்பள்ளியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன்கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை வடிவமைத்து, சொந்தமாக நிறுவி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் (DBOOT) அடிப்படையில் செயல்படுத்த அரசு தீர்மானித்தது. இந்த நிறுவனம் அனைத்துத் தடையில்லா சான்றிதழ்களையும் பெற்று, 25-01-2007 அன்று நிதி பெறுவதை உறுதி செய்து அறிவித்துள்ளது. நிலையக் கட்டுமானத்திற்கான அடிக்கல் 25-02-2007 அன்று நாட்டப்பட்டு இந்நிறுவனம் ஆயத்தப் பணிகளை ஆரம்பித்துள்ளது. முதற்கட்டமாக இந்நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 15 மில்லியன் லிட்டர் குடிநீர் உற்பத்தி செய்து ஜூன் 2008-ல் வழங்கப்படும். இதன் பின்னர் நிலையத்தின் முழுத் திறனான நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் நீர் உற்பத்தி செய்யப்பட்டு அதற்கடுத்த மூன்று மாதங்களில் வழங்கப்படும்.

**கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம்–II (நெம்மேலி)**

சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்கும் குடிநீர் கிடைக்கும் அளவிற்கும் உள்ள இடைவெளியினைக் குறைத்து, குடிநீர் வழங்கும் அளவை அதிகரிப்பதற்காக, தமிழ்நாடு அரசு, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) முறையில் கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு நிலையத்தினை இந்திய அரசின் நிதி உதவி பெற்று தென்சென்னைப் பகுதியில் அமைத்திடத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, கிழக்குக் கடற்கரை சாலையிலுள்ள நெம்மேலி கிராமத்தில் 40.05 ஏக்கர் பரப்பளவு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையம் அமைப்பது தொடர்பான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக, கலந்தறிதற்குரியரை நியமனம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஆய்வில் உள்ளன. கலந்தறிதற்குரியரை நியமனம் செய்து, விரிவான திட்ட அறிக்கையை இறுதி செய்த பின்னர், இந்திய அரசின் நிதி உதவியுடன் இந்தப் பணி தொடங்கப்படும்.

**24 மணி நேரமும் வாரத்தின் 7 நாட்களும் தடையில்லாக் குடிநீர் வழங்கல்**

சென்னைக் குடிநீர் வாரியம், தற்போது தினமும் குழாய்கள்மூலம் குடிநீர் வழங்கினாலும், மக்கள் தங்கள் குடியிருப்பிலுள்ள கீழ்நிலைத் தொட்டிகள் அல்லது கைப் பம்புகள் மூலம் குடிநீரைப் பெறுகின்றனர். சாதாரணமாக தினமும் 4 முதல் 6 மணி நேரம் குடிநீர் வழங்கப்படுகிறது. எல்லாக் காலங்களிலும் போதிய அழுத்தத்தில் குடிநீர் வழங்குதலை உறுதி செய்வதற்காக வள்ளுவர் கோட்டம் பகிர்மான மண்டலத்தில் சோதனை அடிப்படையில் 24 மணி நேரமும், வாரத்தின் 7 நாட்களும் தடையில்லாக் குடிநீர் வழங்க சென்னைக் குடிநீர் வாரியம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இப்பணிகள் நடப்பாண்டில் தொடங்கப்பட்டு மூன்று ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவடைந்தபின், வள்ளுவர் கோட்டம் பகிர்மான மண்டலத்தில் உள்ள ஏறத்தாழ 3,50,000 மக்கள், 24 மணி நேரமும் வாரத்தின் 7 நாட்களும் தடையில்லாக் குடிநீர் பெறுவர்.



**சென்னை நகருக்கு அருகிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குடிநீர் வழங்குதல்**

சென்னை நகருக்கு அருகிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, சென்னைக் குடிநீர் வாரியம்மூலமாகத் தற்போது சராசரியாக நாளொன்றுக்கு 27 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. சென்னைக் குடிநீர் வாரியத்திடமிருந்து பெறப்படும் நீர், மக்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**கழிவுநீரகற்றல் அமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

**சென்னை மாநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்**

சென்னை நகரில் கழிவுநீர் சேகரிப்பு அமைப்புகளை மேம்படுத்துதல், இடைமறித்தல், கழிவுநீர்க் குழாய்கள் அமைத்தல், புதிய கழிவு நீரகற்று நிலையங்கள் கட்டுதல், ஏற்கெனவே உள்ள கழிவு நீரகற்று நிலையங்களின் திறனை மேம்படுத்துதல் மற்றும் 4 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்காக சென்னை மாநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் 720.15 கோடி திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசின் மானியத் தொகை ரூ.491.52 கோடி, மற்றும் வாரிய நிதி ரூ.228.63 கோடி ஆகிய நிதி ஆதாரத்தில் செயல்படுத்தப்பட்டன. இந்தப் பணிகள் 2001 ஆம் ஆண்டில் தொடக்கப்பட்டு அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

சென்னைக் குடிநீர் வாரியம், சென்னை மாநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்ட நிதியில் உள்ள சேமிப்பைப் பயன்படுத்தி, நகரின் கழிவுநீர் கட்டமைப்பை மேலும் மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக, பதினான்கு விரிவான திட்ட விவர அறிக்கைகள் ரூ.31.11 கோடி திட்ட மதிப்பீட்டில் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு, தேசிய நதிநீர்ப் பாதுகாப்பு இயக்ககத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதில் இந்திரா நகர், நேப்பியர் பூங்கா, சாலிகிராமம், பத்மநாப நகர், கலைஞர் கருணாநிதி நகர், கிரீம்ஸ் சாலை, லாங்ஸ் கார்டன், ஜவஹர் நகர், மேல்பட்டாளம், நம்மாழ்வார்பேட்டை, வியாசர்பாடி, கீழ்ப்பாக்கம், அயனாவரம், திம்மசாமி தர்க்கா, பெரம்பூர் மற்றும் சேத்துப்பட்டு ஆகிய பகுதிகளில் இடைமறித்தல் கழிவுநீர்க் குழாய்களை மேம்படுத்தும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன. மேலும் பெசன்ட் நகர், திருவான்மியூர், வடக்கு மயிலாப்பூர், பட்டினப்பாக்கம், சீத்தம்மாள் காலனி, தியாகராய நகர், சேத்துப்பட்டு மற்றும் வில்லிவாக்கம் (முதற் கட்டம்) ஆகிய கழிவு நீரேற்று நிலையங்களை மேம்படுத்தும் பணிகளும் இதில் அடங்கும். இத்திட்டப் பணிகளைச் செயல்படுத்திய பின்னர், மேற்கூறிய பகுதிகளில் கழிவுநீரகற்று அமைப்பு மேம்படும். இடைமறித்தல் குழாயின் கொள்ளளவை மேம்படுத்துதலின்மூலம் கழிவுநீர் வெளியேறும்; மற்றும் கழிவுநீர்க் குழாய் அடைப்புகள் ஏற்படுவதும் குறையும். இதனால் சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்படும்.

### தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்

சென்னைக் குடிநீர் வாரியம், மதுரை மாநகராட்சியிலும் மற்றும் கும்பகோணம் நகராட்சியிலும் கழிவுநீர் அகற்று கட்டமைப்பு செயலாக்கத் திட்டப் பணியை மேற்கொண்டுள்ளது.

### (i) மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சியில் கழிவுநீர் அகற்று கட்டமைப்புத் திட்டம், ரூ.165 கோடி மதிப்பீட்டில் 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் துவக்கப்பட்டது. முதற்கட்டமாக ஆறு வட்டாரங்களில் கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு, கழிவு நீரகற்று நிலையங்கள் கட்டுமானம் மற்றும் கழிவுநீர் கொண்டு செல்லும் குழாய்கள் பதித்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு, மதுரை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக ரூ.70.25 கோடி மதிப்பீட்டில் வைகை நதிக்கு வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில்



கழிவுநீர் சேகரிக்கும் அமைப்பு, கழிவு நீரகற்று நிலையங்கள் கட்டுமானம் மற்றும் கழிவுநீர் கொண்டு செல்லும் குழாய் பதித்தல் ஆகிய பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும், புதூர், விளாங்குடி மற்றும் பந்தல்குடி ஆகிய இடங்களில் கழிவுநீரேற்று நிலைய சோதனை ஓட்டம், தற்போது நடைபெற்று வருகிறது. அனைத்துப் பணிகளும் நடப்பு ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

மூன்றாம் கட்டமாக, அவனியாபுரம மற்றும் சக்கிமங்கலம் ஆகிய இரு இடங்களில் நாளொன்றுக்கு முறையே 67 மில்லியன் லிட்டர் மற்றும் 32 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலைய கட்டுமானப் பணிகள் ரூ.10.15 கோடி திட்ட மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும். இப்பணிகளுக்காக, தேசிய நதிநீர்ப் பாதுகாப்பு இயக்ககத்தின் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் தற்போது பெறப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### (ii) கும்பகோணம் நகராட்சி

கும்பகோணம் நகராட்சியில் கழிவுநீர் அகற்று கட்டமைப்புப் பணிகள் ரூ.50.60 கோடி மதிப்பீட்டில் 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் துவக்கப்பட்டது. முதற்கட்டமாக கழிவுநீர் அகற்று அமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் புனரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக, கழிவுநீர் அமைப்புகள் இல்லாத இடங்களில் கழிவுநீர் அகற்று கட்டமைப்பு அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டன. மூன்றாம் கட்டமாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணி டிசம்பர் 2006-ல் தொடங்கப்பட்டது. இப்பணியை மார்ச் 2008-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்

இந்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் இடையில் 17-11-2006 அன்று கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி (MOA) சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்தான நாளில் இருந்து குறுகிய

காலத்திற்குள் ரூ.483.05 கோடி மதிப்பீட்டில் சென்னைக் குடிநீர் வாரியம் கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்புதல் பெற்றுள்ளது:

(1) சென்னை மாநகரில் குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகள் — ரூ.322.00 கோடி

(2) தகவல் தொழில்நுட்பச் சாலையில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதி செய்து கொடுத்தல் — ரூ.41.77 கோடி

(3) பெருங்குடியில் மற்றுமொரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் — ரூ.31.18 கோடி

(4) மீஞ்சூரிலுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை மாதவரம் மற்றும் செங்குன்றத்திற்கு சென்னை மாநகரின் விநியோகத்திற்கு எடுத்துச் செல்லுதல் —ரூ.87.80 கோடி

**1. சென்னை மாநகரில் குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகள்**

சென்னை மாநகரில் குடிநீர் விநியோகம் 16 குடிநீர் பகிர்மான அமைப்புகள்மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. இதில் 11 குடிநீர் பகிர்மான அமைப்புகள் மற்றும் 7 குடிநீர் பகிர்மான நிலையங்களின் மேம்படுத்தும் பணி, உலக வங்கி நிதி உதவியுடன் இரண்டாம் சென்னைக் குடிநீர்த் திட்டத்தின்கீழும், 5 குடிநீர் பகிர்மான நிலையங்கள் ஹட்கோ (HUDCO) நிதி உதவியுடனும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4 குடிநீர் பகிர்மான நிலையங்கள் (கலைஞர் கருணாநிதி நகர், கீழ்ப்பாக்கம், அண்ணா பூங்கா மற்றும் தென் சென்னை நீரேற்று நிலையம்) மற்றும் 5 குடிநீர் பகிர்மான அமைப்புகள் (கலைஞா கருணாநிதி நகர், கீழ்ப்பாக்கம், அண்ணா பூங்கா, தென் சென்னை நீரேற்று நிலையம் மற்றும் திருவல்லிக்கேணி) மேம்படுத்தும் பணி மற்றும் அதைச் சார்ந்த இதர பணிகளான நீர்க்கசிவு ஆய்வு மற்றும் சரி செய்தல் செங்குன்றம் முதல் கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் வரை உள்ள சுத்திகரிக்கப்பட வேண்டிய நீரை எடுத்துவரும் மூடிய கால்வாய் I மற்றும் III ஆகியவற்றைப் புதுப்பித்தல், மூடிய கால்வாய் II-ல் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளுக்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தில் ரூ.322 கோடிக்கு மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்,





2006-2007 ஆண்டின் திருத்திய விலை விவர அட்டவணைப்படி மதிப்பீடு ரூ.337.48 கோடி ஆகும். இதில் இந்திய அரசு ரூ.112.70 கோடிக்கு மானிய ஒப்புதல் அளித்துள்ளது. மீதமுள்ள தொகை மாநில அரசு/சென்னைக் குடிநீர் வாரியத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதற்கட்டமாக கீழ்ப்பாக்கம் மற்றும் கலைஞர் கருணாநிதி நகர் மண்டலங்களில் இப்பணிகள் 2006-2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுமென சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டது. தற்போது அனைத்துப் பணிகளுக்கும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளபடியால் இந்தப் பணிகள் அனைத்திற்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தங்கள் தெரிவு செய்து, இந்த ஆண்டில் பணிகள் தொடங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மேம்பாட்டுப் பணிகள் முடிவுற்றபின் சென்னை நகரின் மக்களுக்கு சமமான அளவில் குடிநீர் வழங்க இயலும்.

**2. தகவல் தொழில்நுட்ப சாலையை ஒட்டியுள்ள நுகர்வோர்களுக்குக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வசதி செய்து கொடுத்தல்**

தமிழக அரசு, பழைய மாமல்லபுரம் சாலையை, தகவல் தொழில்நுட்பச் சாலையாக அறிவித்துள்ளது. இப்பகுதியில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று உட்கட்டமைப்புகளை ஏற்படுத்தச் சென்னைக் குடிநீர் வாரியம் திட்டமிட்டுள்ளது. சிறுசேரி வரை உள்ள பணிகளுக்கு 7 சிப்பங்களாக விரிவான திட்ட அறிக்கைகள் ரூ.41.77 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் தொடங்கப்பட்டு நடப்பு ஆண்டிலேயே முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சிறுசேரியிலிருந்து திருப்போரூர் வரை உள்ள இடங்களுக்கான பணிகள் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ளன.

**3. பெருங்குடியில் மற்றுமொரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்**

தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிற்சாலைகளாலும், புதிய குடியிருப்புத் திட்டங்களினாலும ஏற்பட்டுள்ள அதிவேக வளர்ச்சியையும் விரிவாக்கத்தையும் தென் சென்னை எதிர்கொண்டுள்ளது. தற்போதுள்ள பெருங்குடி சுத்திகரிப்பு நிலையத்தின் திறன், வளரும் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை. எனவே பெருங்குடியில் கூடுதலாக நாள் ஒன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு

இந்திய அரசு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ், ரூ.31.18 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு ஆண்டில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 18 மாதங்களில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**4. கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து குடிநீரை எடுத்துச் செல்லும் கட்டமைப்பு**

மீஞ்சூரை அடுத்த காட்டுப்பள்ளி கிராமத்தில் உள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் குடிநீர், கட்டுமான நிலையத்திலிருந்து நுகர்வோர் பகிர்மானத்திற்காக மாதவரம் மற்றும் செங்குன்றத்திற்கு எடுத்துச் சென்று, சென்னை நகருக்கு விநியோகிக்கத் தேவையான உட்கட்டமைப்புகளான குழாய்கள், கீழ்நிலைத் தொட்டி மற்றும் நீரேற்று நிலைய அமைப்புகள் ஆகியவற்றை அமைப்பதற்காக, இந்திய அரசு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.87.80 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்ட மதிப்பீடு, இரு கட்டங்களில் நீரேற்றுதல் மற்றும் 5 வருடங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் என்று ரூ.93.00 கோடிக்குத் திருத்தப்பட்டது. இத்திட்டத்திற்காக இந்திய அரசு, மானியமாக ரூ.70.21 கோடி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. மீதமுள்ள தொகை மாநில அரசு/சென்னைக் குடிநீர் வாரியத்தால் ஏற்கப்படும். இந்தப் பணிக்கான ஒப்பந்தங்கள் இரண்டு சிப்பங்களில் கோரப்பட்டுள்ளது. கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையக் கட்டுமானப் பணியுடன் இணைந்து மேற்கண்ட பணிகளும் முடிக்கப்படும்.

**கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் கழிவுநீர் அமைப்பை மேம்படுத்துதல்**

கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டை தயாரிப்பாளர்கள் சங்கத்தின் நீண்ட நாள் வேண்டுகோளான கழிவுநீர் அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் சீரமைத்தல் ஆகிய பணிகள் ஏற்றுக கொள்ளப்பட்டு, ரூபாய் 6.95 கோடி மதிப்பீட்டில் செயலாக்க, இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பணிகள் டிசம்பர் 2006-ல் தொடங்கப்பட்டன. இப்பணிகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்படும்.

**புறநகர் உள்ளாட்சி அமைப்புகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம்**

சென்னை நகரின் அருகிலுள்ள புறநகர்ப் பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு சென்னைக் குடிநீர் வாரியம் ஓர் ஒருங்கிணைப்பு நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.



ஆலந்தூர் மற்றும் வளசரவாக்கம் நகராட்சிகளுக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுள்ளன. அம்பத்தூர் (பகுதி), பல்லாவரம், திருவொற்றியூர் மற்றும் மாதவரம் (கட்டம்-I) ஆகிய நகராட்சிகளில் இந்திட்டத்திற்கான பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. உள்ளகரம்-புழுதிவாக்கத்திற்கு விரிவான திட்ட அறிக்கையை, சென்னைக் குடிநீர் வாரியம் தயாரித்துள்ளது. இதைச் செயல்படுத்த ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் நிதி பெறுவதற்காக அந்நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. மதுரவாயல, கத்திவாககம், மாதவரம் (கட்டம் II), ஆவடி, அம்பத்தூர் (விடுபட்ட பகுதி), தாம்பரம் ஆகிய நகராட்சிகள், போரூர் பேரூராட்சி, ராமாபுரம் மற்றும் மணப்பாக்கம் ஆகிய ஊராட்சிகளுக்கும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. சென்னைப் புறநகரில் கீழே குறிப்பிட்டுள்ள 5 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள், 22 ஊராட்சிகள், 1 கன்டோன்மென்ட் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு, சென்னைக் குடிநீர் வாரியம் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுள்ளது. விரிவான திட்ட அறிக்கைகளை இறுதி செய்த பின்னர், பணிகள் படிப்படியாக, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| நகராட்சிகள் | (1) பூந்தமல்லி (2) திருவேற்காடு<br>(3) பம்மல் (4) அனகாபுத்தூர்<br>(5) மணலி |
| பேரூராட்சிகள் | (1) சின்ன சேக்காடு<br>(2) மீனம்பாக்கம்<br>(3) நாராவாரிக்குப்பம்<br>(4) திருநின்றவூர்<br>(5) மீஞ்சூர்<br>(6) திருமழிசை<br>(7) மாங்காடு<br>(8) நந்தம்பாக்கம்<br>(9) புழல்<br>(10) குன்றத்தூர்<br>(11) பெருங்களத்தூர்<br>(12) பீர்க்கன்கரணை<br>(13) சிட்லபாக்கம் |

[2007 ஏப்ரல் 11

| | |
|---|---|
| பேரூராட்சிகள்—தொடர்ச்சி | (14) செம்பாக்கம்<br>(15) மாடம்பாக்கம்<br>(16) பெருங்குடி<br>(17) பள்ளிக்கரணை |
| ஊராட்சிகள் | (1) கொட்டிவாக்கம்<br>(2) முகலிவாக்கம்<br>(3) பொழிச்சலூர்<br>(4) கவுல்பஜார்<br>(5) கீழ்க்கட்டளை<br>(6) நெற்குன்றம்<br>(7) அயனம்பாக்கம்<br>(8) மடிப்பாக்கம்<br>(9) நீலாங்கரை<br>(10) ஒக்கியம்—துரைப்பாக்கம்<br>(11) ஈஞ்சம்பாக்கம்<br>(12) கோவிலம்பாக்கம்<br>(13) மேடவாக்கம்<br>(14) காரப்பாக்கம்<br>(15) அய்யப்பன்தாங்கல்<br>(16) அயப்பாக்கம்<br>(17) வானகரம்<br>(18) நொளம்பூர்<br>(19) காட்டுப்பாக்கம்<br>(20) செந்நீர்குப்பம்<br>(21) மாத்தூர்<br>(22) பாலவாக்கம் |
| கன்டோன்மெண்ட் | (1) புனித தோமையார் மலை |

**பணியாளர் திறன் மேம்படுத்துதல்**

எந்த ஒரு நிறுவனத்திற்கும், நிறுவனத்தின் பணியாளர்கள் திறன் மிக்கவர்களாகப் பணிபுரிய மனிதவள மேம்பாடு மிக முக்கியம். இந்தக் குறிக்கோளை அடைவதற்கு சென்னைக் குடிநீர் வாரியம் அதன் பயிற்சி மையத்தில் ஒருங்கிணைந்த முறையில் பணியாளர்களுக்குப் பயிற்சிகளைத் தொடர்ந்து அளித்து வருகிறது.



2007 ஏப்ரல் 11]

இயக்கம் மற்றும் பராமரிப்பு, கசிவைக் கண்டறிந்து நிவர்த்தித்தல். குடிநீர்ப் பாதுகாப்பு, குடிநீரின் தரம், குடிநீர்ப் பகிர்மானம், கழிவு நீரகற்றல் மனிதவள மேம்பாடு, திட்ட மேலாண்மை, நிதி மேலாண்மை, தகவல் தொழில்நுட்பம், பட்டியல் மற்றும் வரி வசூலிப்பு போன்ற பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சென்னைக் குடிநீர் வாரியத்தின் பணியாளர்களான பொறியாளர்கள், நிர்வாகம் மற்றும் நிதித் துறைப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் களப் பணியாளர்களைச் சேர்த்து மொத்தம் 700 பணியாளர்களுக்கு 2006-2007 ஆம் ஆண்டில் 23 தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. மற்ற நிறுவனங்களில் உள்ள சிறந்த நடைமுறைகளை வாரியப் பணியாளர்கள் அறிந்து கொள்ள 90 அதிகாரிகளைப் பல்வேறு பயிற்சிகளுக்கு. மற்ற பயிற்சி மையங்களுக்கு வாரியம் அனுப்பி உள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியம் தன்னுடைய அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள மற்ற நிறுவனங்கள் மற்றும் நகராட்சிகளில் இருந்து பணியாளர்கள் பங்குபெற, பயிற்சிகளை அளித்து வருகிறது. கீழ்க்கண்ட பயிற்சிகள் 2006-2007-ல் நடத்தப்பட்டன.

**1. மத்திய சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொழில்நுட்பக் குழு அமைப்பின் பயிற்சிகள்:**

மத்திய சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொழில்நுட்பக் குழு அமைப்பின் (CPHEEO) ஆதரவில் ஐந்து பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து 127 பொதுச் சுகாதாரப் பொறியாளர்கள் இப்பயிற்சிகளில் பங்குபெற்றனர். 2007-2008-லும் இந்தப் பயிற்சிகள் தொடர்ந்து அளிக்கப்படும்.

**2. தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்—III (TNUDP-III)-ன்கீழ் அளிக்கப்பட்ட பயிற்சிகள்:**

நகராட்சிப் பொறியாளர்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கும் தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் III-ன்கீழ் சென்னைக் குடிநீர் வாரியம் பயிற்சிகள் அளிக்கிறது. அளிக்கப்பட்டுள்ள பயிற்சிகளின் விவரம் பின்வருமாறு:

[2007 ஏப்ரல் 11

| வ. எண் | பயிற்சிகளின் தலைப்பு | பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குடிநீர்ப் பணி மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி | 88 |
| 2 | குடிநீர் வழங்கல் அமைப்பு மேலாண்மை | 64 |
| 3 | வடிகட்டி இயக்குதல், குளோரினேட்டர்கள் பராமரித்தல் மற்றும் உபயோகித்தல் | 82 |
| 4 | கழிவுநீர் அமைப்பின் பராமரிப்பு மற்றும் சுத்தம் செய்தல் | 70 |
| 5 | குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகளின் பராமரிப்பு | 81 |
| 6 | குடிநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு பகுப்பாய்வு | 76 |
| 7 | கழிவுநீர் பணிகளின் மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி | 34 |
| 8 | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பொறியியல் துறை பணியாளர்களுக்கு செயல் திறன் முன்னேற்றப் பயிற்சி | 76 |
| 9 | நகர்ப்புற பொறியியல் மற்றும் மேம்பாட்டில் விரிவான பயிற்சி | 75 |
| | மொத்தம் | 646 |

**3. எதிர்காலத் திட்டங்கள்**

மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள 4 மாநகராட்சிகளில் பணிபுரியும் 20 பொறியாளர்களுக்கு, "குடிநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரித்தல்" என்ற தலைப்பின்கீழ் பயிற்சி அளிக்க, சென்னைக் குடிநீர் வாரியம் போபாலில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித குடியேற்றத் திட்டத்தின் முதன்மைத் தொழில்நுட்ப ஆலோசகருடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளது.

**மக்கள் தொடர்பு மற்றும் குறை தீர்த்தல்**

சென்னைக் குடிநீர் வாரியம், மக்கள் தொடர்புடைய நிறுவனமாக உள்ளதால் குறை தீர்த்தல் மற்றும் தகவல் உதவி அமைப்பை நிறுவி உள்ளது.



2007 ஏப்ரல் 11]

**1. குறை தீர்த்தல்**

தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் புகார் கண்காணிக்கும் பிரிவு இயங்கி வருகிறது. பன்னிரண்டு பகுதி அலுவலகங்களிலும் 160 பணிமனை அலுவலகங்களிலும் குறைகள் பெறப்படுகின்றன. தலைமை அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகங்களில் பெறப்படும் குறைகள் உடனுக்குடன் உரிய பணிமனைப் பொறியாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, மக்கள் சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ள கால அளவுக்குள் குறைகள் தீர்க்கப்படுகின்றன.

**2. தகவல் மற்றும் உதவி மையங்கள்**

சென்னைக் குடிநீர் வாரியத்தின் பல்வேறு வகையான சேவைகள் சம்பந்தமாக நுகர்வோருக்கு உதவி செய்யவும், வழிகாட்டவும், குறைகள் தீர்த்தலுக்கும் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்துப் பகுதி அலுவலகங்களிலும், தகவல் மற்றும் உதவி மையங்கள் இயங்கி வருகின்றன.

**3. திறந்தவெளிக் கூட்டங்கள்**

நிர்வாகத்தை மக்களிடம் நெருக்கமாக எடுத்துச் செல்வதற்காக, ஒவ்வொரு மாதமும் இரண்டாம் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அனைத்துப் பகுதி அலுவலங்களிலும் திறந்தவெளிக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்பார்வைப் பொறியாளர்கள் போன்ற மூத்த அதிகாரிகள் அல்லது அதற்கும் மேலுள்ள அதிகாரிகள் இந்தக் கூட்டங்களில் பங்கு பெறுவர். பொதுமக்கள், தன்னார்வக் குழுவினர், நுகர்வோர் நடவடிக்கைக் குழுக்கள், குடியிருப்புச் சங்கங்கள் மற்றும் விருப்பமுள்ள குழுக்களின் பிரதிநிதிகள் இக்கூட்டங்களில் கலந்துகொண்டு, தங்கள் குறைகள் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்கலாம். சென்னைக் குடிநீர் வாரியம் திறந்தவெளிக் கூட்டங்களில் எழுப்பப்படும் குறைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்கிறது.

**பணியாளர் நலன்**

வாரியத்தின் பணிகளுக்கு முக்கியமான ஆதாரமாக பணியாளர்கள் இருப்பதால், சென்னைக் குடிநீர் வாரியம் பணியாளர்களின் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

களப் பணியாளர்களின் உடல் சுகாதாரத்தைப் பேணிக் காக்க பல்வேறு நலன் காக்கும் நடவடிக்கைகளாக, தையற் கட்டணத்துடன் கூடிய டெரிகாட்டன் சீருடைத் துணிகள், எண்ணெய், குளியல்

சோப்புகள், மழை அங்கிகள் மின்சாரம் தாக்காத காலணிகள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் காலமுறைதோறும் வழங்கப்படுகின்றன. இதற்காக, 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.77.99 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

அரசுப் பணியாளர்களுக்கு இணையாக வாரியப் பணியாளர்களுக்கும் தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்துகொள்ள ஒரு இலட்சம் ரூபாய் வரை வழங்கும் சிறப்பு மருத்துவ சிகிச்சைத் திட்டம், மருந்துச் செலவினம் ஈடுசெய்தல், மருத்துவமனை செலவினங்களை வழங்குதல் ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன. சென்னைக் குடிநீர் வாரியம் தொடர்ந்து தம் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடுமபத்தினர் பயன்பெறும் வகையில் சிறப்பு மருத்துவப் பரிசோதனை முகாம்கள் நடத்தி வருகிறது.

## மின்னணு ஆளுகை, பட்டியல் மற்றும் வரி வசூலித்தல்

வாரியத்திற்கு நுகர்வோர் தங்களது குடிநீர் வரியையும் கட்டணங்களையும் எளிதில் செலுத்துவதற்கு ஏதுவாக, 10 பகுதி அலுவலகங்களிலும் 60 பணிமனைகளிலும் உரிய மென்பொருட்களோடு கணினிகள் நிறுவப்பட்டுள்ளன. இக்கணினிகள் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள மையக் கணினியுடன் இணைக்கபபட்டுள்ளதால், நுகர்வோர் எப்பகுதியில் அவர்களின் சொத்து இருந்தாலும் தங்களின் நிலுவைகளை வாரியத்தின் அனைத்துப் பகுதி அலுவலகங்களிலும் மேற்குறிப்பிட்ட பணிமனைகளிலும் செலுத்தலாம். இவ்வசதி அனைத்துப் பணிமனைகளுக்கும் ஜுன் 2007-க்குள் விரிவுபடுத்தப்படவுள்ளது.

மேலும், நுகர்வோர் தங்களது குடிநீர் வரியையும், குடிநீர் கட்டணங்களையும் இணையதளம் வழியாக எந்த வங்கியின் வரவு அட்டை (Credit Card) மூலமும் சென்னைக் குடிநீர் வாரியத்திற்குச் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வசதியின்மூலம் நுகர்வோர் செலுத்த வேண்டிய நிலுவைகளை எங்கிருந்தபடியும் கணினியில் இணையதள வசதியைப் பயனபடுத்தி வாரியத்திற்குச் செலுத்தலாம்.



# இணைப்பு-II

(102 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 42

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்புகள், 2007–2008

### 1. முகவுரை

"ஒருவர் வெளிநாடுகளுக்குச் சென்று ஒரு கிராமத்தைப் பார்த்தால், அங்கே நகரத்துக்கும் கிராமத்துக்கும் வித்தியாசம் தெரியாத அளவிற்கு கிராமங்களிலே அழகான வீடுகள், தெருக்கள், கடைகள், உணவு விடுதிகள், தங்குமிடஙகள், இரயிலடிகள், பேருந்து நிலையங்கள், சாலைகள் இத்தனையும் நகரத்திற்கு நிகராக கிராமங்களில் இருக்கின்றன. அதனால் கிராமத்து மக்கள் நகரத்துக்குச் செல்ல வேண்டும், அங்கே குடியேற வேண்டும் என்ற ஆசையால் தூண்டப்படுவதில்லை. அதனால் நகரங்களில் நெருக்கடி ஏற்படுவதில்லை. கிராமங்களே நகரத்தைப் போல உருவாகும்பொழுது, கிராம மக்களுக்கு நகர வாழ்க்கை தேவையில்லாமல் போய்விடுகிறது."

***கலைஞர் மு. கருணாநிதி,***
***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்.***

இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் ஊரகப் பகுதிகளில் வசிப்பதால், இந்தியாவின் பொருளாதார மாற்றத்துக்கு ஊரக வளர்ச்சி முக்கியமான ஓர் அம்சமாகும். மற்ற மாநிலங்களை ஒப்பிடும்பொழுது தமிழக கிராமங்களில் மின்சாரம், குடிநீர் விநியோகம், கிராம இணைப்புச் சாலைகள், போக்குவரத்து, கல்வி மற்றும் சுகாதார உள்கட்டமைப்பு போன்றவற்றில் வசதிகள் மற்றும் சேவைகள் சிறப்பாக உள்ளன. இருப்பினும் இந்த வசதிகளை மேலும் மேம்படுத்தி கிராமப்புறங்களுக்கும் நகர்ப் புறங்களுக்கும் இடையேயான இடைவெளியைக் குறைப்பது, இந்த அரசின் முக்கிய கொள்கையாகும். இது மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்கோளிலிருந்து விளங்குகிறது.

அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகளை அளிப்பது மட்டுமல்லாது, வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பை உருவாக்குதல், சுகாதாரம், திறன் மேம்பாடு, மகளிரின் சமூக, பொருளாதார மேம்பாடு போன்றவற்றை நோக்கமாகக் கொண்ட மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சார்ந்ததாகும். ஊராட்சி அமைப்புகள் திறம்படச் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளாக விளங்கிட வழிவகை செய்வதும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கடமையாகும். இத்துறையின்கீழ் 12,618 கிராம ஊராட்சிகளும், 385 ஊராட்சி ஒன்றியங்களும் (வட்டாரங்களுக்கு இணையாக) மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகளும் உள்ளன.

## 2. ஊராட்சி அமைப்புகள்

தமிழகத்தின் உள்ளாட்சி அமைப்புகள் பாரம்பரியமான பழம்பெரும் வரலாறு உடையவை. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகள் இதற்குச் சான்றாகும். அந்தக் காலக்கட்டங்களில் சமுதாயக் குழுக்கள் தங்கள் பகுதிகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு செயல்திட்டங்களை மேற்கொள்ளும் கிராமக் குடியரசுகளைக் கொண்டதாக தமிழ்நாடு விளங்கியது. 10 மற்றும் 11 ஆம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் இந்தப் பாரம்பரியம் அதன் சிகரத்தை எட்டியது. இதன்படி கிராமக் குழுக்கள் தங்களின் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வரி விதித்தல், ஊரக வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் நீதி வழங்குவது போன்ற பொறுப்புகளை மேற்கொண்டிருந்தன. இந்தக் கிராமக் குழுக்கள், சோழ ஆட்சியாளர்களுடன் சிறந்த நிருவாக தொடர்பு கொண்டவைகளாக இருந்தன. கிராமக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் "குடவோலை முறை" எனப்படும் இரகசிய வாக்களிப்பு முறை பின்பற்றப்பட்டது. சோழர்கள் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழ்நாடு, கிராம சுயாட்சியின் சரிவையும், அதிகாரத்தை மையப்படுத்தும் நிலப் பிரபுத்துவ நிருவாக முறையின் மேலாண்மையையும் சந்தித்தது. இம்முறை ஆங்கிலேயப் பேரரசின் நிருவாக வசதிக்காக தலசுயாட்சி முறைகளை அறிமுகப்படுத்தும் வரையில் வழக்கில் இருந்தது.

நாடு விடுதலையான பிறகு, சனநாயக அதிகாரப் பரவலாக்கல் குறித்து முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டம், "மதராஸ் பஞ்சாயத்து சட்டம், 1950" ஆகும். 1957 ஆம் ஆண்டு "உள்ளாட்சி நிருவாகச்



சீரமைப்பு" குறித்து வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையைத் தொடர்ந்து, "மதராஸ் பஞ்சாயத்து சட்டம், 1958" மற்றும் "மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்ற சட்டம், 1958" ஆகியவை பின்வரும் சிறப்பியல்புகளுடன் இயற்றப்பட்டன:

(அ) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய இரண்டு அடுக்கு ஆட்சி முறை.

(ஆ) சமுதாய வளர்ச்சி வட்டாரங்களுக்கு இணையான ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்குதல்.

(இ) கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகித்தல். இத்துடன் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களை நேர்முகமாக / மறைமுகமாகத் தேர்ந்தெடுத்தல்.

(ஈ) மிகுந்த எண்ணிக்கையிலான வளர்ச்சி மற்றும் நலப் பணிகளை, கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைத்தல்.

(உ) மாவட்ட போர்டுகளைக் கலைத்தல்.

(ஊ) மாவட்ட வளர்ச்சிக் குழுக்களை ஆலோசனை வழங்கும் அமைப்பாக்குதல்.

இந்த இரண்டடுக்கு முறை 1975 வரை நல்லமுறையில் செயல்பட்டு, அவைகளுக்கு முறையாகத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன் பிறகு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பதவிக் காலம் முறையே 1-2-1977 மற்றும் 12-9-1979 வரை நீட்டிக்கப்பட்டது. அதன் பிறகு, 1986 முதல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடுத்த தேர்தல்கள் நடைபெறும் வரை, ஒரு வட்டாரத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் வட்டார வளர்ச்சி அலுவலரும், ஒரு கோட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கோட்ட வளர்ச்சி அலுவலரும் தனி அலுவலர்களாக இந்த அமைப்புகளை நிருவகித்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மார்ச், 1991 வரை பதவியிலிருந்தன. மீண்டும் 1996 ஆம் ஆண்டு அக்டோபர் வரை தேர்தல் நடத்தப்படாததால், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மேற்கண்ட தனி அலுவலர்களே நிருவகித்தனர்.

[2007 ஏப்ரல் 11

1992 ஆம் ஆண்டில் பஞ்சாயத்துராஜ் அமைப்பு முறையில் பல்வேறு அடிப்படை மாறுதல்களை உள்ளடக்கிய அரசமைப்பு (73-வது திருத்தச்) சட்டம் இயற்றப்பட்டது. இதன் விளைவாக, 22-04-1994 முதல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 நடைமுறைக்கு வந்தது. அரசமைப்பு (73-வது திருத்தச்) சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ஆகியவை மாநில அளவில், பஞ்சாயத்துராஜ் அமைப்பு முறையில் பின்வரும் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தன:

(அ) மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகம் - கிராமம், இடைநிலை (வட்டாரம்) மற்றும் மாவட்ட அளவில்.

(ஆ) ஐந்தாண்டுகளுக்கொரு முறை கட்டாய உள்ளாட்சித் தேர்தல்கள்.

(இ) ஒவ்வொரு ஊராட்சி அமைப்பின் மக்கள் தொகையில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப, உறுப்பினர் பதவியிடங்கள் (அதாவது வார்டு உறுப்பினர்கள்) மற்றும் தலைமைப் பதவியிடங்களில் (அதாவது தலைவர்கள்) சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியது.

(ஈ) உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவியிடங்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியது.

(உ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு சுயசார்புடைய அமைப்பாக மாநிலத் தேர்தல் ஆணையத்தை அமைத்தல்.

(ஊ) மாநில அரசின் நிதி ஆதாரங்களை, நகர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு பரிந்துரை செய்வதற்காக, ஐந்தாண்டுகளுக்கொருமுறை மாநில நிதி ஆணையத்தை அமைத்தல்.

(எ) மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற, உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டம் முழுவதற்கு -ான ஒட்டுமொத்த மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரிக்க, மாவட்ட திட்டக் குழுவை ஏற்படுத்துதல்.



2007 ஏப்ரல் 11]

(ஏ) கிராம ஊராட்சியிலுள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய "கிராம சபை" கோட்பாட்டை அறிமுகப்படுத்துதல்.

### 2.1. உள்ளாட்சித் தேர்தல்கள்

#### 2.1.1 ஊராட்சி அமைப்புகளுக்கு 2006–ல் நடைபெற்ற தேர்தல்கள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ஏப்ரல் 1994-ல் இயற்றப்பட்டாலும், 1996-ல் புதிய அரசு பதவியேற்றபின்புதான், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதல் சாதாரண் தேர்தல்கள் அக்டோபர் 1996-ல் நடத்தப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 2001-ல் நடத்தப்பட்டன.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூன்றாவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 2006-ல் நடத்தப்பட்டன. கிராம ஊராட்சி வாரியான 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்கள் மே 2006-ல் தான் பெறப்பட்டதால், மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளைப் புதிதாக வரையறை செய்ய போதிய கால அவகாசம் இல்லை. மேலும், பாராளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான எல்லை மறுவரையறை செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்வது சரி எனவும் முடிவெடுக்கப்பட்டது. எனவே, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ல் 28A எனும் புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டு ஏற்கெனவே உள்ள வார்டு அமைப்புகளின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஊரகப் பகுதிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் 76 சதவீதம் மக்கள் வாக்களித்தனர். கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான நேரடித் தேர்தல்கள் இரண்டு கட்டங்களாக 13-10-2006 மற்றும் 15-10-2006-ல் நடத்தப்பட்டன. கிராம ஊராட்சிகளின் துணைத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான மறைமுகத் தேர்தல்கள் 28-10-2006-ல் நடத்தப்பட்டன. மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பதவியிடங்களுக்கான தேர்தல்கள், கட்சி அடிப்படையிலும், கிராம ஊராட்சிகளின் பதவியிடங்களுக்கான தேர்தல்கள் கட்சி சார்பற்ற முறையிலும் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள்

ஓர் உறுப்பினர் வார்டுகளையும் கிராம ஊராட்சிகள் ஓர் உறுப்பினர் மற்றும் பல உறுப்பினர் வார்டுகளையும் கொண்டுள்ளன.

மூன்றடுக்கு ஊராட்சிகளில் தேர்தல் நடத்தப்பட்ட பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரங்கள் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1**

**ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 40,879 |
| 2 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97,458 |
| 3 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,570 |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 656 |
| 5 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,618 |
| 6 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 |
| 7 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 29 |

### 2.1.2 பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

இந்திய அரசமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243D-ல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள் மற்றும் பெண்களுக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்குத் தொடர்புடையவை, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன் பிரிவுகள் 11, 20, 32, மற்றும் 57 ஆகியவை ஆகும். இதற்கு, தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995, இணைந்து நிறைவாக்குகிறது. இந்த விதிகளில் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி விளக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களின்



வார்டுகள், இப்பிரிவினரின் மக்கள் தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசையில் அமைத்து அப்பிரிவினரின் மக்கள் தொகை விழுக்காட்டிற்கு ஈடான எண்ணிக்கையில் பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த விதிகளின்கீழ், சுழற்சி முறையின் கால அளவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995 விதி 7-ஐ அரசாணை நிலை எண் 105, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி4) துறை, நாள் 1-9-2006 மூலம் அரசு திருத்தம் செய்துள்ளது. அதன்படி, அக்டோபர், 2006 உள்ளாட்சித் தேர்தலில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய, மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கான பதவியிடங்கள் 10 ஆண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றியமைக்கப்பட்டன. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் அனைத்தும் பத்தாண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்பட்டன. ஆனால், ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் சுழற்சி செய்யப்படவில்லை. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்குச் செய்யப்பட்ட இந்த ஒதுக்கீடு, அரசு மறு உத்தரவு பிறப்பிக்கும்வரை தொடரும்.

எனினும், பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பின் காரணமாக நீண்டகாலமாகத் தேர்தல்கள் நடைபெறாதிருந்த மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டாமங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டக்காச்சியேந்தல், ஊராட்சிகளின் தலைவர் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீட்டை சுழற்சி செய்வதில்லை என அரசு தெளிவாக முடிவு செய்தது.

[2007 ஏப்ரல் 11

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விவரம் அட்டவணை-2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை-2**

**பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விவரம்**

| வ. எண் | இட ஒதுக்கீடு வகை | மொத்த பதவியிடங்கள் / தலைமைப் பதவியிடங்கள் | பெண்களுக்கான இட ஒதுக்கீடு | | ஆதி திராவிடர்களுக்கான ஒதுக்கீடு | | பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | சத வீதம் | எண்ணிக்கை | சத வீதம் | எண்ணிக்கை | சத வீதம் |
| 1 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 29 | 10 | 34% | 7 | 24% | 0 | 0% |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 | 140 | 36% | 87 | 23% | 4 | 1% |
| 3 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12618 | 4275 | 34% | 3143 | 25% | 156 | 1% |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 656 | 226 | 34% | 154 | 23% | 8 | 1% |
| 5 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6570 | 2302 | 35% | 1534 | 23% | 64 | 1% |
| 6 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97458 | 32638 | 33% | 24630 | 25% | 983 | 1% |



2007 ஏப்ரல் 11]

**2.1.3. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் கிராம ஊராட்சிகளில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட தேர்தல்:**

தமிழகத்தில் 1996 ஆம் ஆண்டு முதல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சாதாரண மற்றும் தற்செயல் தேர்தல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டிருந்தாலும் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த கொட்டக்காச்சியேந்தல் ஆகிய நான்கு ஊராட்சிகளிலும், கிராம ஊராட்சித் தலைவருக்கான பதவிகள் ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்டதற்குத் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பின் காரணமாக, தேர்தல்களை வெற்றிகரமாக நடத்த இயலவில்லை.

பாப்பாப்பட்டி கிராம ஊராட்சியில் அக்டோபர், 1996 முதல் அக்டோபர் 2001 வரை தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் பதவிகளுக்கான சாதாரண மற்றும் தற்செயல் தேர்தல்களில் எந்தவொரு வேட்பு மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல், 2002-ல் நடத்தப்பட்ட தற்செயல் தேர்தலில் தலைவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பதவியேற்றவுடனேயே தலைவர் பதவியை இராஜினாமா செய்துவிட்டார் அக்டோபர், 2002-ல் தலைவருக்கான பதவிக்கு இரண்டு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, பிறகு வேட்பு மனுக்கள் திரும்பப் பெறப்பட்டன. ஏப்ரல், 2003-ல் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அக்டோபர், 2003-ல் தலைவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், பதவியேற்றவுடனேயே, அவர் அந்தப் பதவியிலிருந்து இராஜினாமா செய்துவிட்டார். செப்டம்பர், 2004-ல் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல், 2005-ல் இரண்டு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால், வேட்பாளர் ஒருவர் இறந்த காரணத்தினால் தேர்தல் நடைபெறவில்லை. 1996 முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டுக் காலத்தில் வார்டு உறுப்பினர் யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

கீரிப்பட்டியில், அக்டோபர், 1996 முதல் அக்டோபர் 2001 வரை நடைபெற்ற தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்களுக்கான சாதாரண மற்றும் தற்செயல் தேர்தல்களில் எந்தவொரு வேட்பு மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல் 2002-ல் நடைபெற்ற தற்செயல் தேர்தலில், தலைவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், பதவியேற்றவுடனேயே, தமது பதவியிலிருந்து இராஜினாமா செய்துவிட்டார். அக்டோபர் 2002,

ஏப்ரல் 2003 மற்றும் அக்டோபர் 2003-ல் நடைபெற்ற தற்செயல் தேர்தல்களில் தலைவருக்கான பதவிக்கு மட்டும் வேட்பு மனுக்கள பெறப்பட்டன. ஆனால் மனுக்கள் பிறகு திரும்பப் பெறப்பட்டன. செப்டம்பர், 2001-ல் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல், 2005-ல், தலைவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் பதவியேற்பு நாளன்று அவர் இராஜினாமா செய்துவிட்டார். 1996 முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுக் காலங்களில் வார்டு உறுப்பினர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

நாட்டார்மங்கலத்தில் 25-12-1996 அன்று நடைபெற்ற தற்செயல் தேர்தலில், தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்டோபர் 2001 வரை 5 ஆண்டுக் காலம் பதவியில் தொடர்ந்து இருந்தனர். ஆனால் அக்டோபர், 2001-ல் நடைபெற்ற சாதாரண தேர்தலிலும் மற்றும் அதற்குப் பிறகு ஏப்ரல், 2005 வரை நடத்தப்பட்ட 6 தற்செயல் தேர்தல்களிலும் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளுக்கு வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

அக்டோபர், 1996-ல் நடைபெற்ற சாதாரண தேர்தலிலும், அதனைத் தொடர்ந்து 2001 ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட தற்செயல் தேர்தல்களிலும் கொட்டக்காச்சியேந்தல் கிராம ஊராட்சியில் தலைவர் பதவிககு மற்றும் ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இரண்டு இடங்களுக்கும் வேட்பு மனுககள எதுவும் தாக்கல் செயயப்படவில்லை. இருப்பினும், ஒதுக்கீடு செய்யப்படாத வார்டுகளுக்குத் தேர்தல்கள் நடைபெற்று துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்டோபர், 2001-ல் நடைபெற்ற சாதாரண தேர்தலின்போதும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற 6 தற்செயல் தேர்தல்களிலும் தலைவர் பதவிக்கும் மற்றும் வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும் யாரும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யவில்லை. எனவே தேர்தல்கள் நடைபெறவில்லை.

நீண்ட காலமாக, தீர்வு காண முடியாமலிருந்த பிரச்சினைகளை இந்த அரசு தீர்வு செய்து, இந்த நான்கு ஊராட்சிகளிலும் தலைவர் மற்றும் வார்டு உறுபபினர்கள் பதவிகளுக்கான சாதாரண தேர்தல்கள் அகடோபர் 2006-ல் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கான தலைவர் பதவிகள் பத்தாண்டுகளுக்குப் பிறகு சுழற்சி செய்யப்பட்டன.





ஆனால், இந்த நான்கு ஊராட்சிகளைப் பொறுத்தவரை, சுழற்சி முறையைச் செயல்படுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்க அரசு முடிவு எடுத்தது. இந்த ஊராட்சிகளைச் சார்ந்த பல்வேறு சமூகத்தினர் தங்களுக்கிடையேயான வேறுபாடுகளை மறந்து, புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை மனதார ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியது.

பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் கிராம ஊராட்சிகளைச் சார்ந்த புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களைச் சிறப்பிக்கும் விதமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில், 13-11-2006 அன்று சமத்துவப் பெருவிழா என்ற பெயரில் பாராட்டுவிழா நடைபெற்றது. இந்தக் கிராம ஊராட்சிகளுக்கு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஒவ்வோர் ஊராட்சிக்கும் ரூ.20 இலட்சம் சிறப்பு ஊக்குவிப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 2.1.4 புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான பயிற்சி

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான இரண்டு நாள் அறிமுகப் பயிற்சி மாநிலத்திலுள்ள 29 மாவட்டங்களில், 125 இடங்களில் 15-11-2006 முதல் 30-11-2006 வரையிலான இடைப்பட்ட காலத்தில் நடத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்களில் 80 சதவீதத்திற்கு மேல் முதல்முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதால், அவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புகள், கணக்குகள் பாரமரிப்பு, கூட்டங்கள் நடத்துதல் மற்றும் திட்டங்கள் செயலாக்கம் குறித்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு தேசிய கிராம வேலை உறுதித் திட்டம், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போனற பல்வேறு திட்டங்கள் குறித்து மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD) மற்றும் 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள (RIRD) மூலம் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்குத் தரமான பயிற்சி அளிக்கும் நோக்கில், ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் வகுப்பறைகள், சாதனங்கள், கூட்ட அறைகள், விடுதிகள், சமையலறைகள் போன்ற வசதிகளை

மேம்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. மூன்று அடுக்கு ஊராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளிக்க தொகுப்பு நிதி ஒன்றினை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

### 2.1.5 உள்ளாட்சி அமைப்பு தலைவர்களின் மாநாடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பங்கேற்புடன் சென்னையில் 18-3-2007 அன்று மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தலைவர்களுக்கான கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்தக் கருத்தரங்கில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் அவற்றின் சிறப்பான செயல்பாடுகள் பற்றி ஆலோசிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

### 2.2. அதிகாரப் பகிர்வு

ஊராட்சி அமைப்புகள் செயல்திறன் வாய்ந்த தன்னாட்சி நிருவாக அமைப்புகளாகச் செயல்படவேண்டும் என்பதில் இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. 1996 ஆம் ஆண்டு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்குத் தேர்தல்கள் முதன்முறையாக நடத்தி முடிக்கப்பட்ட பிறகு, மாநிலத் திட்டக் குழுவின் அப்போதைய முழு நேர உறுப்பினரான திரு. எல்.சி. ஜெயின் அவர்களைத் தலைவராகக் கொண்டு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கான குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை ஏப்ரல் மாதம், 1997-ல் அரசுக்குச் சமர்ப்பித்தது. அக்குழுவின் பெரும்பான்மையான பரிந்துரைகளுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வண்ணம் செயல்வடிவம் கொடுக்கப்பட்டது. ஊரக வளர்ச்சித் துறை மட்டுமல்லாது, அரசின் பிற துறைகளான வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, வனம், சமூக நலம், வருவாய், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற துறைகளும் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து அரசாணைகள் வெளியிட்டுள்ளன.

ஊராட்சிகளுக்கு மேலும் கூடுதலாக அதிகாரங்களை வழங்கிடும் வழிவகைகளைப் பரிந்துரைப்பதற்காக, 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அப்போதைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கோ.சி. மணி அவர்கள் தலைமையில், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள்



உள்ளிட்ட, அனுபவம் வாய்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஓர் உயர்நிலைக் குழுவினை மீண்டும் அரசு அமைத்தது. இந்த உயர்நிலைக் குழு 1,209 பரிந்துரைகளுடன் தனது அறிக்கையை 11-01-1999 அன்று அரசுக்குச் சமர்ப்பித்தது. இதில் 718 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

2001-2006 ஆம் ஆண்டுகளில் இதுபோன்ற உயர்மட்டக் குழு எதுவும் அமைக்கப்படவில்லை. உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்க வேண்டும் என்ற இந்த அரசின் உறுதியினைத் தொடர்ந்து, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரப் பகிர்வு மற்றும் பொறுப்புகள் குறித்து பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அரசாணை நிலை எண் 6, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(சி-1) துறை நாள் 22-1-2007-ன்படி ஓர் உயர் நிலைக் குழு அமைக்கப்பட்டது. சென்னையில் 7-3-2007-ல் நடைபெற்ற இந்த உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டத்தில் ஆரம்பகட்ட ஆலோசனைகள் நடத்தப்பட்டன. இக்குழு தனது பரிந்துரைகளை விரைவில் அரசுக்கு அளிக்கும்.

ஊராட்சிகளுக்கு அதிகாரப் பரவலும், அதிகாரப் பகிர்வும் உயிரோட்டமான ஒரு தொடர் நிகழ்வாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகள், குறிப்பாக, கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளைப் பகிர்ந்தளிப்பது என்ற கருத்து, இந்த அரசுக்கு ஏற்புடையதாகும். இது தொடர்பாக, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1958-ல் இருந்தவாறு வலிமையான, செயல்திறன் மிக்க கிராம ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் அடங்கிய இரண்டடுக்கு ஊராட்சி அமைப்புகள் தேவையென்பதைத் தமிழ்நாடு தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. மாவட்ட போர்டுகளைக் கலைத்ததற்கான காரணங்கள் இப்பொழுதும் பொருந்தும் என்பதே இந்த அரசின் கருத்தாகும். மூன்றாவது அடுக்கான மாவட்ட ஊராட்சிக்கும் இந்த நிலை பொருந்தும். கிராம ஊராட்சிகளை அனைத்து மாநிலங்களுக்கும் கட்டாயமாக்குவதுடன், வட்டார அளவில் அல்லது மாவட்ட அளவில் அல்லது இரண்டு அளவிலும் ஏற்புடைய ஊராட்சிகளை மாநில அரசுகள் தங்களின் விருப்பப்படி அமைத்துக் கொள்ள ஏதுவாக அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் கொண்டுவர, இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

[2007 ஏப்ரல் 11

## 2.3 உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறுவரையறை செய்தல்

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், நிலை குறைப்பு, பிரித்தல் மற்றும் இணைத்தல் குறித்து பல கோரிக்கைகள் அரசால் பெறப்பட்டுள்ளன. இதுபோன்ற கோரிக்கைகள் குறித்து இறுதிப் பரிந்துரையை அரசுக்கு அனுப்புமுன் மாவட்ட ஆட்சியர்கள்/துறைத் தலைவர்கள் பொதுமக்களின் கருத்துகளைக் கேட்பதற்குப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து, அரசாணை நிலை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி1) துறை, நாள் 16-3-2007-ல் உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது உள்ளாட்சி அமைப்புகளில் பதவியிலுள்ள எவரும் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள் என ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களின் கருத்துக் கேட்பினை மாவட்ட ஆட்சியர்கள் நடத்தி, அவர்களது வரைவுப் பரிந்துரைகளை அளித்தாலும், பாராளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான மத்திய அரசின் எல்லை மறுவரையறை ஆணையத்தின் பணி முடிந்தபின்பே, அரசு இறுதி உத்தரவு பிறப்பிக்கும் எனவும் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

## 2.4 கிராம சபை

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடித்தள சனநாயக அமைப்பாக இருப்பது கிராம சபையாகும். கிராம ஊராட்சிகள் செவ்வனே செயல்படத் தேவையான வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிருவாகத்தினை ஊக்குவிக்கவும், திட்டமிடுதல், திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் பயனாளிகளைத் தேர்வு செய்தல் ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரிக்கவும் மற்றும் சமூகத் தணிக்கைக்கு வழிவகுப்பதற்கும், செயல்திறன்மிக்க ஒரு கிராம சபை அவசியமாகிறது. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஓர் ஆண்டில் குறைந்தது நான்கு முறையாவது, அதாவது சனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டம் நடத்த அரசு ஆணையிட்டுள்ளது. கிராம சபைக் கூட்டம் நடத்தும் முறையினைச் செம்மைப்படுத்தும் நோக்கில், இந்த அரசு, தமிழ்நாடு கிராம சபை (குறைவெண் வரம்பு, கூட்டங்கள் கூட்டுதல்,



2007 ஏப்ரல் 11]

நடத்துதல் மற்றும் வழிமுறை) விதிகள் 1998-ல் அரசாணை (நிலை) எண் 130, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி4) துறை, நாள்: 25-9-2006 மூலம் தேவையான திருத்தங்கள் செய்து ஒவ்வோர் ஊராட்சியிலுள்ள வார்டுகளிலும், சுழற்சி முறையில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்திட உத்திரவிட்டுள்ளது. மேலும், பெரிய ஊராட்சிகளில் வாக்காளர்களில் 10 சதவீதத்தினர், கிராம சபையில் கலந்து கொள்ள வேண்டும் என்ற குறைவெண் வரம்பினைச் செயல்படுத்த இயலாத நிலை உள்ளதால், கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் குறைவெண் வரம்பினைத் தளர்த்தி, அட்டவணை-3-ல் குறிப்பிட்டபடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை–3**

**கிராம சபைக் கூட்டத்திற்கான திருத்திய குறைவெண் வரம்பு**

| வரிசை எண் | கிராம ஊராட்சியின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000க்கு மேல் | 300 |

கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்காவது மகளிர் இடம் பெற வேண்டும். மேலும், கிராம ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட/பழங்குடியின மக்கள் தொகை எத்தனை சதவீதம் உள்ளதோ, அத்தனை சதவீத தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமெனத் துணைக் குறைவெண் வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராம சபைக் கூட்டத்தின் வருகை மற்றும் நடவடிக்கைகளை முறையான பதிவேடுகள் மற்றும் புகைப்படம்மூலம் பதிவு செய்யவும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 11

## 2.5 கிராம ஊராட்சிகள்

மாநிலத்தின் 29 மாவட்டங்களில் உள்ள 385 வட்டாரங்களில் 12,618 கிராம ஊராட்சிகள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சராசரியாக 435 கிராம ஊராட்சிகளும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சராசரியாக 32 கிராம ஊராட்சிகளும் உள்ளன. நீலகிரி (35), கன்னியாகுமரி (99), தேனி (130), கரூர் (158) ஆகிய மாவட்டங்களில் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை குறைவாகவும், விழுப்புரம் (1,104), திருவண்ணாமலை (860), வேலூர் (753), கடலூர் (681), காஞ்சிபுரம் (648) ஆகிய மாவட்டங்களில் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் உள்ளன. தமிழகத்தில் கிராம ஊராட்சிகளின் மக்கட்தொகை மிகப் பெரிய அளவில் மாறுபடுகிறது. சில ஊராட்சிகளில் மக்கட்தொகை 500-க்கும் குறைவாகவும், சில ஊராட்சிகளில் 25,000-க்கு மிகுந்தும் உள்ளன. இதனை அட்டவணை 4-ல் காணலாம்.

### அட்டவணை–4

**மக்கட்தொகை அடிப்படையில்
கிராம ஊராட்சிகளின் வகைபாடு
(2001 மக்கட்தொகை கணக்கெடுப்பு)**

| மக்கட்தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 500–க்கு கீழ் | 66 |
| 501 முதல் 3,000 வரை | 8,418 |
| 3,001 முதல் 10,000 வரை | 3,948 |
| 10,001 முதல் 25,000 வரை | 174 |
| 25,000–க்கு மேல் | 12 |
| மொத்தம் | 12,618 |

இதேபோன்று பல்வேறு கிராம ஊராட்சிகளில் வருமான அளவுகளும் பெருமளவில் மாறுபடுகின்றன. இதன் விவரம் அட்டவணை 5-ல் காணலாம்.



2007 ஏப்ரல் 11]

### அட்டவணை–5

**வரவினத்திற்கேற்ப கிராம ஊராட்சிகளின் வகைபாடு
(2003–2004 முதல் 2005–2006 வரை
மூன்று ஆண்டுகளின் வரவினத்தின் சராசரி)**

| வ. எண். | வருவாய் அளவு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | ரூ. 50,000 வரை | 10 |
| 2 | ரூ. 50,000 முதல் ரூ. 1 இலட்சம் வரை | 178 |
| 3 | ரூ. 1 இலட்சம் முதல் ரூ. 5 இலட்சம் வரை | 7,422 |
| 4 | ரூ. 5 இலட்சம் முதல் ரூ. 10 இலட்சம் வரை | 3,181 |
| 5 | ரூ. 10 இலட்சம் முதல் ரூ. 25 இலட்சம் வரை | 1,489 |
| 6 | ரூ. 25 இலட்சம் முதல் ரூ. 50 இலட்சம் வரை | 252 |
| 7 | ரூ. 50 இலட்சம் முதல் ரூ. 1 கோடி வரை | 60 |
| 8 | ரூ. 1 கோடி முதல் ரூ. 3 கோடி வரை | 24 |
| 9 | ரூ. 3 கோடிக்கு மேல் | 2 |
| | மொத்தம் | 12,618 |

தற்போது மாநில நிதி ஆணைய மானியத்தில் 3.48 சதவீதம் (58 சதவீதத்தில் 6 சதவீதம்) நலிவுற்ற கிராம ஊராட்சிகளுக்குச் சமன்பாடு நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. சமன்பாடு நிதியைவிட மேலும் ஒரு சிறந்த நிதிப் பகிர்வு முறையை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் அதன் அளவு மற்றும் மக்கள் தொகையைக் கணக்கில் கொள்ளாமல், குறைந்த பட்சம் ரூ.3 இலட்சம் மாநில நிதிக் குழு மானியமாக ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை அந்தக் கிராம ஊராட்சியின் மக்கள் தொகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும். இதனால், நலிவுற்ற கிராம ஊராட்சிகளுக்கும் தங்களது கடமைகளைத் திருப்திகரமாக நிறைவேற்ற, போதிய வருவாய் கிடைக்கப் பெறும். மேலும், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நலிவுற்ற கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை கிடைக்கும்.

### 2.5.1. கடமைகள்

**கிராம ஊராட்சிகளின் சில முக்கிய கடமைகள்—**

(அ) ஊராட்சியிலுள்ள அனைத்து கிராமச் சாலைகளையும் அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்.

(ஆ) வீட்டு மனைப் பிரிவுகளுக்கு மற்றும் கட்டட வரைபடங்களுக்கு அனுமதி வழங்குதல்.

(இ) கட்டடம் உள்ள பகுதியில் உள்ள பொது இடங்கள் மற்றும் பொதுச் சாலைகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

(ஈ) வடிகால்கள் கட்டுதல்.

(ஊ) பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

(எ) கிணறுகள், குளங்கள் மற்றும் குட்டைகள் வெட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் மேலும் குடிநீர் வழங்கும் நீர்நிலைகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

(ஏ) சுடுகாடு மற்றும் இடுகாடுகளைப் பராமரித்தல்.

(ஐ) பூங்கா மற்றும் படிப்பகங்களைப் பராமரித்தல்.

(ஒ) மத்திய அரசின் திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டப் பணிகள், மத்திய நிதிக் குழு மானியங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள்.

(ஓ) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாக வரையறை செய்யப்படும் பிற கடமைகள்.



### 2.5.2. நிதி ஆதாரங்கள்

**கிராம ஊராட்சியின் முக்கிய வருவாய் ஆதாரங்கள்**

**(அ) வரி வருவாய்**

மூன்றடுக்கு ஊராட்சிகளில், கிராம ஊராட்சிகளுக்கு மட்டும்தான் வரி விதிக்கும் அதிகாரம் உள்ளது. வீட்டு வரி, தொழில் வரி, விளம்பர வரி ஆகியவை பொதுவாக விதிக்கப்படும் வரிகள்.

**(ஆ) வரி அல்லாத வருவாய்**

கட்டடங்கள் மற்றும் வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம், அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமம், குடிநீர்க் கட்டணம், வண்டி நிலையங்களுக்கான கட்டணம், மீன் பாசி குத்தகை, 2சி மரப் பட்டா, பொருட்காட்சிகள் மற்றும் சந்தைகளிலிருந்து பெறப்படும் வருமானம், படகுகளிலிருந்து வருமானம், அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை போன்றவை ஆகும்.

**(இ) ஒதுக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வரி வருவாய்**

தல வரி, முத்திரைத் தாள் கட்டணம் மீதான மேல் வரி, கேளிக்கை வரி (70% பங்கு), சிறு கனிமங்கள் மீதான உரிமக் கட்டணம் (100%), மற்றும் குத்தகைத் தொகை (50% பங்கு), சமூகக் காடுகள் ஏலத் தொகை மூலம் கிடைக்கும் வருவாய்கள்.

**(ஈ) மானியம்**

மத்திய நிதி ஆணைய மானியம், மாநில நிதி ஆணைய மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி.

### 2.5.3. நிருவாக அதிகாரங்கள்

கிராம ஊராட்சிக்கு கிராம ஊராட்சித் தலைவரே செயல் அலுவலர் ஆவார். தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரும் இணைந்து காசோலை வழங்குவதற்கு கையொப்பமிட வேண்டும். இவர்களுக்கு இடையே சுமுகமான உறவுகள் இல்லையென்றால், மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் கிராம ஊராட்சியிலுள்ள வேறொரு உறுப்பினரைக் காசோலையில் தலைவருடன் இணைந்து கையொப்பமிடுவதற்கு நியமிப்பார்.

கிராம ஊராட்சிகள் அவற்றின் பொது நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் வரை மேற்கொள்ளும் பணிகளுக்கு வெளி நிருவாக அனுமதி பெறத் தேவையில்லை. இருப்பினும், மத்திய மாநில அரசின் திட்டங்களை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி தேவையாகும். கிராம ஊராட்சிகளுக்கு, ரூ.2,000/- வரை மதிப்பீடு இல்லாமல் ஒரு தடவையில் அவசரப் பணிகளுக்குச் செலவிடவும், மற்றும் ஆண்டொன்றிற்கு ரூ. 5,000/- வரை தொழில்நுட்ப ஒப்புதல் இல்லாமல் பணிகள் மேற்கொள்ளவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சில்லரைச் செலவினம் மேற்கொள்ள ரூ.500/- வரை காசோலை மூலம் தனது பெயரில் ஊராட்சி நிதியிலிருந்து ஊராட்சித் தலைவர் பெற்றுச செலவிடலாம்.

கைப் பம்புகள், விசைப் பம்புகள் மற்றும் தெரு விளக்குப் பராமரிப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளத் தேவையான அதிகாரங்கள் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒரு கைப் பம்பு பராமரிப்புக்கு ஆண்டுக்கு ரூ.600/- மற்றும் பொறியாளரை மதிப்பீடு தயாரிக்கவோ அல்லது பட்டியலுக்காகவோ அணுகாமல் ஒரு விசைப்பம்புக்கான செலவினம் ஆண்டுக்கு ரூ.7,500-க்கு மிகாமல் மேற்கொள்ளலாம். தெரு விளக்கு உபகரணங்களைக் குறிப்பிட்ட தரத்துடன் ஊராட்சிகளே வாங்கிக்கொள்ளலாம்.

### 2.5.4. உத்தமர் காந்தி ஊராட்சி விருது

அரசாணை (நிலை) எண் 111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி2) துறை, நாள்: 5-9-2006-ன்படி உத்தமர் காந்தி ஊராட்சி விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும், ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும சிறந்த பூர்வாங்கப் பணிகள், புதுமையான முயற்சிகள போன்ற இனங்களில் கடந்த 5 ஆண்டுகளில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ள ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சிக்கும் நற்சான்றிதழ், கேடயம் மற்றும் ரூ.5 இலட்சத்துக்கான வெகுமதியும் பரிசாக வழங்கப்படும். ஊராட்சித் தலைவர்களுக்கு நற்சான்றிதழும் பதக்கமும் வழங்கப்படும். ஊராட்சித் தலைவர்களின் மறைவுக்குப் பின்னரும் இந்தப் பரிசுகள் வழங்கப்படும். 2006-07 ஆம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட 124 கருத்துருக்களில், 15 கருத்துருக்கள் இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தலைமையிலான குழுவின் தல ஆய்வுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் 15 கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்படும்.



2007-2008 ஆம் ஆண்டிறகு இந்த விருதுகள் வழங்குவதற்காக ரூ. 75 இலட்சம் அனுமதிக்கப்படும்.

## 2.6 ஊராட்சி ஒன்றியக் குழு

மாநிலத்தில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டாரங்கள்) உள்ளன. சராசரியாக ஒரு மாவட்டத்திற்கு 13 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் குறைந்த அளவு எண்ணிக்கையில் அதாவது (4) ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. விழுப்புரம் மாவட்டத்தில் அதிக அளவில் (22) ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

### 2.6.1. பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள்

**ஊராட்சி ஒன்றியக் குழுவின் சில முக்கியப் பொறுப்புகள்—**

(அ) ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என்று வகைப்படுத்தப்பட்ட அனைத்துப் பொதுச் சாலைகளையும் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

(ஆ) குடிப்பதற்கும், குளிப்பதற்கும் மற்றும் துணி துவைப்பதற்கும் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்துதல்.

(இ) ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

(ஈ) ஊராட்சி ஒன்றியத்தால் வகைப்படுத்தப்பட்ட பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களை நடத்துதல்.

(உ) ஊராட்சி ஒன்றியச் சந்தை என வகைப்படுத்தப்பட்ட பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.

(ஊ) மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(எ) தொற்றுநோய் அல்லது மலேரியா குறித்து தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.

### 2.6.2. நிதி ஆதாரங்கள்

ஊராட்சி ஒன்றியங்கள் வரிகள் ஏதும் விதிக்க இயலாது. ஊராட்சி ஒன்றியங்களின் வருவாய்கள்—

**(அ) வரி அல்லாத வருவாய்கள்**

உரிமக் கட்டணம், சந்தைக் கட்டணம், வாடகை மற்றும் சொத்துக்கள் மீது வருவாய், அபராதங்கள் மற்றும் தண்டத் தொகை

**(ஆ) ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்கள்**

தல வரி, மேல் வரி, கேளிக்கை வரி (30% பங்கு), சிறு கனிமங்கள் மீதான குத்தகைத் தொகை (50% பங்கு).

**(இ) மானியங்கள்**

மத்திய நிதிக் குழு மானியம், மாநில நிதிக் குழு மானியம், மத்திய, மாநில அரசுத் திட்டங்களுக்கான மானியங்கள், மகப்பேறு நிலையங்களுக்கு மானியம், ஊரக மருந்தகங்களுக்கான மானியம்.

ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு வெளி நிருவாக அனுமதி இல்லாமல், ரூ.5 இலட்சம் வரை அனுமதி அளிப்பதற்கும், பணிகளைச் செயல்படுத்துவதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனினும், மத்திய, மாநில அரசுத் திட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் நிருவாக அனுமதி தேவை.

**2.7 மாவட்ட ஊராட்சிகள்**

மாநிலத்தில் 29 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன.

**2.7.1 பொறுப்புகள்**

மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்புகள் பெரும்பாலும் ஆலோசனை வழங்குவதாகப் பின்வருமாறு உள்ளன—

(அ) மாவட்டத்திற்கான வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல்.

(ஆ) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுவின் நிருவாக அறிக்கையை ஒருங்கிணைத்து மாவட்டத்தின் ஆண்டு அறிக்கையைத் தயாரித்தல்.

(இ) விவசாயம், நில மேம்பாடு, கால்நடை, பால் உற்பத்தி, கோழிப் பண்ணை, மீன் வளம் மற்றும் ஊரகத் தொழில்கள் போன்றவற்றைத் திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.



(ஈ) ஊரகக் குடியிருப்புத் திட்டங்களை, குறிப்பாக, ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான குடியிருப்புகளுக்கான திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

(உ) பெரிய அளவிலான குடிநீர்த் திட்டங்களைக் கண்டறிதல்.

**2.7.2 நிதி ஆதாரங்கள்**

மாவட்ட ஊராட்சிக்கு வரி விதிக்கும் அதிகாரங்கள் இல்லை. சட்டப்படியான மாநில நிதிக் குழு மானியம் மற்றும் மத்திய திட்டங்களின்கீழ் வழங்கப்படும் வளர்ச்சி மானியம் மட்டுமே இதன் நிதி ஆதாரமாகும்.

மாவட்ட ஊராட்சிகள் அவற்றின் பொது நிதியிலிருந்து எடுக்கப்படும் பணிகளுக்கு வெளி நிருவாக அனுமதி இல்லாமல் ரூ.10 இலட்சம் வரை அனுமதி அளிக்கவும், பணிகளைச் செயல்படுத்தவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனினும், மத்திய அரசுத் திட்டங்களைச் செயல்படுத்த மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி தேவை.

**2.8 மாநில நிதி ஆணைய மானியம்**

உள்ளாட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி நிதிப் பங்கீடு செய்யப்படுகிறது. தற்போது மாநிலத்தின் சொந்த நிகர வரி வருவாய்களில், கேளிக்கை வரி நீங்கலாக 8 சதவீதம் நிதி, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு முறையே 58:42 என்ற விகிதத்தில் பங்கீடு செய்யப்படுகிறது. ஊரக உள்ளாட்சிகளுக்கான ஒதுக்கீட்டின் 87 சதவீதம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கிடையே முறையே 47:45:8 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இந்த மானியம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒவ்வொரு மாதமும் விடுவிக்கப்படுகிறது. எஞ்சிய 13 சதவீதம், சமன்பாடு நிதி (6%), ஊக்க நிதி (5%) மற்றும் சேம நிதி (2%) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

மூன்றாவது மாநில நிதி ஆணையப் பரிந்துரைகளின் அடிப்படையில், மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதிப் பங்கீடு 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக நடப்பு நிதியாண்டிலிருந்து

உயர்த்தப்படும். மூன்றாவது மாநில நிதி ஆணையப் பரிந்துரைக் காலத்திற்குள் இந்த நிதிப் பங்கீடு 10 சதவீத அளவிற்குப் படிப்படியாக மேலும் உயர்த்தப்படும். இந்த நிதிப் பங்கீட்டில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்மான விகிதாச்சாரம், 58:12 எனத் தொடரும். கிராமச் சாலைகள் மற்றும் தெருக்கள் மேம்பாடு, குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை போன்றவற்றை அமைத்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் கிராம ஊராட்சிகளுக்கே அதிகப் பொறுப்பு உள்ளதாலும், கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை 12,618 என அதிக அளவில் உள்ளதாலும், 2007-2008 ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகிய ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு விகிதம் 60:32:8 என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை மாற்றங்கள், அடித்தள அளவில் சேவைகளை, மேம்பட்ட வகையில் அளித்திட உதவும்.

2006-2007 ஆம் ஆண்டில் மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ. 1,224.76 கோடி அரசு ஒதுக்கீடு செய்தது. 2007-2008 ஆம் ஆண்டில் இந்த ஒதுக்கீடு ரூ. 1,585.72 கோடியாக இருக்கும். இது சுமார் 30 சதவீத உயர்வு ஆகும்.

### 2.9. மத்திய நிதி ஆணைய மானியம்

மத்திய அரசு, பன்னிரண்டாவது நிதி ஆணையப் பரிந்துரைகளின் அடிப்படையில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2005-2006 முதல் 2009-2010 ஆம் ஆண்டுகள் வரை மொத்தம் ரூ. 870 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில் பன்னிரண்டாவது நிதிக் குழு மானியம் முழுவதையும் மக்கள் தொகையின அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கே வழங்குவது என மாநில அரசால் அரசாணை எண் 19, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்: 26-02-2007-ன்படி முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மானியத்தை கிராம ஊராட்சிகள் குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றின் இயக்கம் மற்றும் பராமரிப்புக்காக முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

2007-2008 ஆம் ஆண்டுக்கு ரூ.174 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



### 2.10 ஒப்படைக்கப்பட்ட/பகிர்ந்துகொள்ளப்படும் வருவாய்கள்

தல வரி, தல வரி மேல் வரி, முத்திரைத் தாள் கட்டணம் மீதான மேல் வரி, கேளிக்கை வரி, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மீதான உரிமக் கட்டணம் மற்றும் குத்தகைத் தொகை மற்றும் சமூகக் காடுகளின்மூலம் கிடைக்கப் பெறும் விற்பனைத் தொகை ஆகியவையே ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்ட/பகிர்ந்து அளிக்கப்படும் முக்கிய வருவாய் ஆதாரங்களாகும். இந்த இனங்களின்கீழ் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.250 கோடி முதல் ரூ.300 கோடி வரை கிடைக்கிறது. நில வருவாய்க்குச் சமமாக தல வரி வசூலிக்கப்பட்டு, அவை கிராம ஊராட்சிகளுக்கு அளிக்கப்படுகின்றது. தலவரி மேல்வரியானது வசூலிக்கப்படும் நில வரி வருவாயில் 5 முதல் 10 மடங்கு வசூலிக்கப்பட்டு, அவை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படுகின்றன. முத்திரைத் தாள் கட்டண மேல்வரி ஊராட்சி ஒன்றிய அளவில் தொகுக்கப்பட்டு, அந்த வட்டாரத்திலுள்ள கிராம ஊராட்சிகளின் நில வருவாய் வசூல் அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. வசூலிக்கப்படும் கேளிக்கை வரியில், வசூல் செலவினமாக 10 சதவீதம் பிடித்தம் செய்தபின் எஞ்சியுள்ள தொகை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு 70:30 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்து அளிக்கப்படும். சிறு கனிமங்கள் மீதான உரிமக் கட்டணம் முழுவதும் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கும், குத்தகைத் தொகை 50 சதவீதம் ஊராட்சி ஒன்றியத்துக்கும், 50 சதவீதம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கும் வழங்கப்படும். சமூகக் காடுகளின் ஏலத் தொகையிலிருந்து 60 சதவீதம் ஊராட்சிக்கும், 40 சதவீதம் வனத துறைக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பல்வேறு ஒப்படைக்கப்பட்ட/பகிர்ந்தளிக்கப்படும் வருவாய் இனங்கள் ஈடு செய்யப்படுவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதும், மேலும், இது குறித்த அலுவலகப் பணிகள், தொகையினை ஒப்பிடும்போது அளவுக்கு அதிகமாக உள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது. அரசின் வரவினங்களைப் பகிர்ந்தளிபபதிலும் சமச்சீரற்ற நிலை உள்ளது. எனவே, ஒப்படைக்கப்பட்ட/பகிர்ந்தளிக்கப்படும் வருவாய்களைத் துரிதமாகவும், எளிதாகவும் மற்றும் சமச்சீராகவும் பகிர்ந்தளிக்க ஒரு முறையான மாற்றுப் பகிர்மான வகைப்பாட்டினை ஏற்படுத்த அரசு பரிசீலித்து வருகிறது.

[2007 ஏப்ரல் 11

### 3. பணியமைப்பு

முந்தைய அரசால் 31-05-2001 அன்று மக்கள் நலப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இந்த அரசு பதவியேற்றவுடன் 13,100 மக்கள் நலப் பணியாளர்கள் பணியிடங்கள் மீண்டும் தோற்றுவிக்கப்பட்டு, 31-03-2007 வரை 12,774 மக்கள் நலப் பணியாளர்கள் பணியில் சேர்ந்துள்ளனர். மக்கள் நலப் பணியாளர்கள் வரி வசூல், சொத்துக்கள் பராமரிப்பு, திட்டச் செயலாக்கம் போன்றவற்றில் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு உதவி செய்வர். இம்மாநிலத்தில், தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வருகைப் பட்டியல் தயார் செய்யவும் மக்கள் நலப் பணியாளர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் செயல்பாடுகளை செம்மைப்படுத்தும் வகையில், இதுவரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் இருந்த இத்திட்டம், அரசாணை நிலை எண் 80 (மா.அ.தி.-3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்: 20-07-2006-ன்படி சமூக நலத் துறை இயக்ககத்துக்கு மாற்றப்பட்டது.

தமிழ்நாடு பூமிதான வாரியம் நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் விநியோகம் செய்யும் பணியை மேற்கொள்வதால், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககக் கட்டுப்பாட்டிலிருந்து நில சீர்த்திருத்தத் துறை ஆணையகத்துக்கு, அரசாணை நிலை எண் 144 (மா.அ.தி.-3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்: 20-07-2006-ன்படி மாற்றப்பட்டது.

விரிவாக்க அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகப் பதவி உயர்வு பெறத் தேவையான தகுதிகள் குறித்த சிறப்பு விதிகளை அரசாணை நிலை எண் 154, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி-1) துறை, நாள்: 20-10-2006-ன் மூலம் இந்த அரசு தளர்த்தி ஆணை வெளியிட்டு, துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பதவி உயர்வு பெற ஒரு வருடத்திற்குக் குறையாமல் விரிவாக்க அலுவலர் (ஊராட்சி)யாகப் பணியாற்றியிருந்தால் போதுமானது எனவும் தெரிவிக்கபபட்டுள்ளது.



2007 ஏப்ரல் 11]

கிராம ஊராட்சிகளில் பணிபுரிகின்ற தொகுப்பூதியம் பெறும் பகுதிநேர எழுத்தர்கள், ஊராட்சி உதவியாளர்கள், 01-09-2006-லிருந்து காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் முழு நேர ஊராட்சி உதவியாளர்கள், முதல் நிலை ஊராட்சி உதவியாளர்கள் எனப் பெயர் மாற்றப்பட்டு, அவர்களுக்கு ரூ.1,300-20-1,500-25-2,000 என்ற காலமுறை ஊதியம் கொடுக்கப்பட்டுள்ளது. பகுதிநேர எழுத்தர்கள், இரண்டாம் நிலை ஊராட்சி உதவியாளர்கள் எனப் பெயர் மாற்றப்பட்டு, அவர்களுக்கு ரூ.625-10-725-20-925 என்ற காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரசு மே 2006-ல் பதவியேற்றபோது அனைத்துப் பிரிவுப் பணியிடங்களிலும் அதிக எண்ணிக்கையில் காலியிடங்கள் இருந்தன. இது திட்டச் செயலாக்கத்தை வெகுவாகப் பாதித்தது. இதனை இந்த அரசு ஒரு பிரச்சினையாகச் சந்திக்க நேர்ந்தது. துரிதமான நடவடிக்கையின்மூலம் உதவி இயக்குநர் முதலான அனைத்துக் காலியிடங்களையும் நிரப்புவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

(i) 30 உதவி இயக்குநர்கள், 187 உதவிப் பொறியாளர்கள், 1,001 இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம்மூலம் நிரப்புதல்.

(ii) 559 தட்டச்சர்கள், 71 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் பணியிடங்களைத் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் மூலம் நிரப்புதல்.

(iii) 407 பணிப் பார்வையாளர்கள், 51 இளநிலை வரைவு அலுவலர்கள், 657 சாலை ஆய்வாளர்கள், 63 அலுவலக உதவியாளர்கள் பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நிரப்புதல்.

(iv) 333 இளநிலை உதவியாளர்கள், 1 தட்டச்சர், 14 இரவுக் காவலர்கள், 50 அலுவலக உதவியாளர்கள், 4 ஊர்தி ஓட்டுநர்கள் பணியிடங்களைக் கருணை அடிப்படையில் நிரப்புதல்.

(v) 8 தட்டச்சர்கள், 37 இரவுக் காவலர்கள், 2 ஊர்தி ஓட்டுநர்கள் பணியிடங்களைத் தினக் கூலிப் பணியாளர்களைக் கொண்டு நிரப்புதல்.

(vi) 20 இரவுக் காவலர்கள், 182 ஊர்தி ஓட்டுநர் பணியிடங்களைத் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் (TEXCO) மூலம நிரப்புதல.

வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் செய்யப்படும் நியமனங்கள் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் இருக்க அனைத்து நியமனங்களிலும் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்புநிலை மற்றும் இனவாரி ஒதுக்கீட்டின்படியும் 1:1 என்ற விகிதத்தில் பெயர் பட்டியல் பெறப்பட வேண்டுமென ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தனது கடித எண் 31101/இ3/2006-4, நாள்: 28-12-2006-ன் மூலம் ஆணையிட்டுள்ளது.

கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த வட்டார அளவில் இரண்டு கணினி உதவியாளர்களும், இரண்டு தொழில்நுட்ப உதவியாளர்களும் மற்றும் 10 கிராம ஊராட்சிகளுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் வீதம் புதிய பணியிடங்களை அரசு அனுமதித்துள்ளது.

2004-ல் உருவாக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு, மாவட்ட அளவில் தனி பொறியியல் பிரிவு இல்லாததால், ஒரு செயற் பொறியாளர், ஒரு உதவி செயற் பொறியாளர், ஒரு முதுநிலை வரைவு அலுவலர், இரண்டு இளநிலை வரைவு அலுவலர்கள் மற்றும் ஒரு ஓட்டுனர் அடங்கிய ஒரு தனி தொழில்நுட்பப் பிரிவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் நிலையிலுள்ள அலுவலர்களின் பணித்திறனை மேம்படுத்தவும் மாறுபட்ட பணிச் சூழ்நிலைகளை உருவாக்கும் நோக்கத்துடனும் தேவைப்படும் இடங்களில் இணை இயக்குநர் நிலையில் உள்ள பதவியினைக் கூடுதல் இயக்குநர் நிலைக்கு உயர்த்திட, கூடுதல் இயக்குநர் பதவியிடங்களின் ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கைக்கு மிகாமல் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் அரசாணை (நிலை) எண் 17, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்: 21-02-2007-ன்படி, அரசு ஆணையிட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்கள் மற்றும் முன்னுரிமைகளைச் செயல்படுத்த தற்போதைய மாவட்ட ஊரக



வளர்ச்சி முகமையின் பணியாளர் அமைப்பு ஏதுவாக இல்லாததால் அரசு இதனை மறுசீரமைக்க உள்ளது. இதேபோன்ற மறுசீரமைப்பை மகளிர் திட்டத்திலுள்ள திட்டச் செயலாக்க அமைப்பிலும் அரசு செயல்படுத்தவுள்ளது. மகளிர் திட்டம் மற்றும் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில், தொண்டு நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளும் ஒருங்கிணைப்பாளராக வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) பொறுப்பாக்கப்படுவார்.

## 4. மத்திய அரசுத் திட்டங்கள்

### 4.1 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், தனித் திட்டமாக 1997-1998 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மேலும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஆதி திராவிடர், பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு வீடுகட்ட மானியம் வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். உடல் ஊனமுற்றோருக்கு 3 விழுக்காடு நிதி ஒதுக்கப்படுகிறது. கிராம சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் பட்டியலிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகளை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படும் பணிகளாகும். இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் நிதி வழங்குகின்றன.

#### 4.1.1 புதிய வீடுகள்

1-4-2005 முதல் சாதாரண நிலத்தில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றுக்கு ரூ.25,000/- எனவும், கடின வகை நிலப்பரப்பில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றுக்கு ரூ.27,500/- எனவும் அலகுத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தவிர, மாநில அரசு, தனது பங்களிப்புடன் சேர்த்து, ஒவ்வொரு புதிய வீட்டிற்கும் சிமெண்ட் கான்கிரிட் மேற்கூரை அமைக்க தலா ரூ. 9,000/- கூடுதல் நிதியாக வழங்குகிறது. கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கான இத்தொகை 2006-2007 முதல் ஒரு வீட்டுக்கு ரூ.9,000/-லிருந்து ரூ.12,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு வீட்டின் குறைந்தபட்ச பரப்பளவு 20 ச.மீ

ஆகும். புதிய வீடுகள் அனைத்தும் சுகாதாரக் கழிப்பிடம் மற்றும் புகையில்லா சூளா அடுப்புகளுடன் கட்டப்படுகின்றன. உள்ளூரில் கிடைக்கும் பொருட்கள்மூலம், செலவு குறைவான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயனாளிகள் கட்டுமானப் பணியினை மேற்கொள்கின்றனர். இந்த ஆண்டு, ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கழிவறை அமைக்க பயனாளிக்கு முழு சுகாதார இயக்க நிதியிலிருந்து ரூ.1,200 மானியமாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 4.1.2 கச்சா வீடுகளை மேம்படுத்துதல்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அதிகபட்சமாக 20 விழுக்காடு நிதியை, கச்சா வீடுகளை மேம்படுத்த பயன்படுத்தலாம். கச்சா வீடுகளை மேம்படுத்த ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.12,500/- ஆகும்.

2007-2008 ஆம் ஆண்டு 19,850 புதிய வீடுகள் கட்டவும், 11,077 கச்சா வீடுகளை மேம்பாடு செய்யவும் ரூ.198.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கு மாநில அரசு வழங்கும் கூடுதல் பங்குத் தொகையான ரூ.59.82 கோடியும் இதில் அடங்கும்.

### 4.1.3 வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியல் இறுதி செய்தல்

மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களைக் கண்டறிய தமிழ்நாட்டில் 2002-2003 ஆம் ஆண்டு சமூகப் பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. வறுமை நிலையை நிர்ணயம் செய்ய, முந்தைய கணக்கெடுப்புகளின்போது பின்பற்றப்பட்ட வருமான அடிப்படையோ அல்லது செலவின அடிப்படையோ இல்லாமல், 13 சமூகப் பொருளாதாரக் காரணிகள் கொண்ட ஒரு புதிய அணுகுமுறை பின்பற்றப்பட்டது. ஊரகக் குடும்பங்களைத் தரப்படுத்த "0" முதல் "4" மதிப்பெண்கள் கொண்ட காரணிகள் பயன்படுத்தப்பட்டன. ஒரு குடும்பம் பெறும் மொத்த மதிப்பெண்கள் "0" முதல் "52" வரை மாறுபடும். ஒரு குடும்பம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பம் எனக் கண்டறிய, குறியீட்டு மதிப்பெண்ணாக 17 நிர்ணயிக்கப்பட்டது. 2002-2003-ல் நடத்தப்பட்ட சமூகப் பொருளாதார அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியல்களில் தகுதிவாய்ந்த பல குடும்பங்கள் விடுபட்டுள்ளன எனவும், தகுதியில்லாத



குடும்பங்கள் இடம் பெற்றுள்ளன எனவும் பொதுமக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து அரசுக்குப் பல கோரிக்கைகள் வந்தன. எனவே, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களின் பட்டியல் ஒவ்வொரு கிராம ஊராட்சி அலுவலகத்திலும் 2006 ஆம் ஆண்டில் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கவும், இப்பட்டியல்களின் நகல்களைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்கள், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமெனவும் இந்த அரசு ஆணையிட்டது. சேர்த்தல் மற்றும் நீக்கம் குறித்துப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் வட்டார அலுவலர்களால் சரிபார்க்கப்பட்டன. இப்பட்டியல்கள் பெருவாரியாகத் திருத்தம் செய்யப்பட்டு, 14-11-2006-ல் நடைபெற்ற கிராம சபையில் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டன. இப்பட்டியல்மீது மேல்முறையீடு செய்ய விரும்புவோர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுக வழிவகை செய்யப்பட்டுள்ளது. தகுதியான குடும்பங்கள் மட்டுமே வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர்களின் பட்டியலில் இடம் பெறுவதை உறுதி செய்ய தொடர் சரிபார்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 4.2. சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

ஊரகப் பகுதிகளில் ஊதிய வேலைவாய்ப்பிற்கு வழிவகை செய்து, அதன்மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும ஊட்டச்சத்து அளவினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். ஊரகப் பகுதிகளில் நிலைத்திருக்கக்கூடிய சமூக மற்றும் பொருளாதார சொத்துகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் இத்திட்டத்தின் இரண்டாவது நோக்கமாகும. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி, மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு முறையே 20:30:50 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

கிராம ஊராட்சிகளுக்கான ஒதுக்கீட்டில், ஆதி திராவிடர்/பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க 50 சதவீதம் செலவிடப்பட வேண்டும். மாவட்ட ஊராட்சி மற்றும் வட்டார ஊராட்சிகளுக்கான ஒதுக்கீட்டில், ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வறுமைக்

கோட்டிற்குக்கீழ் உள்ள தனி நபர்/குழுக்களின் பணிகளுக்காக 22.5 விழுக்காடு செலவிடப்பட வேண்டும். 15 விழுக்காடு சிறுபான்மை இனத்தினருக்காகச் செலவிடப்பட வேண்டும்.

இத்திட்டப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு ஊதியத்தின் ஒரு பகுதி பணமாகவும், ஒரு பகுதி பொது விநியோகக் கடைகள் மூலம் அரிசியாகவும் வழங்கப்படுகிறது. தமிழக அரசு தொழிலாளர்களின் குறைந்தபட்ச தினக்கூலி ரூ.80/- என நிர்ணயித்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதித் தேவையை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் வழங்குகின்றன. உணவு தானியத்திற்கான மொத்த செலவினை மத்திய அரசும், உணவு தானியத்திற்கான போக்குவரத்துச் செலவினை மாநில அரசும் ஏற்கின்றன.

சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு, கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுவதாலும், மேலும், தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்படுவதாலும், இத்திட்டம் 19 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்படும்.

2007-2008 ஆம் ஆண்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பின்வரும் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்:

(அ) ஊராட்சி அலுவலகங்களை மேம்படுத்துதல்

(ஆ) நூலகக் கட்டடங்கள்

(இ) சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

(ஈ) மதிய உணவு மையங்கள்/சமையல் கூடங்கள்/அங்கன்வாடிகள்

(உ) பொது விநியோகக் கடைகள்

(ஊ) மயானச் சாலைகள்



இத்திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு, மாவட்ட மற்றும் வட்டார ஊராட்சிகளுக்கான 22.5% ஒதுக்கீட்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் கட்டப்படும் வீட்டின் மதிப்பீட்டில் வீடுகள் கட்டித் தர முன்னுரிமை அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 4.3 தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், 2005– தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம்

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம், 2-2-2006-ல் கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஆறு மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. 2007-2008-ல் இத்திட்டம் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படுகிறது.

### இத்திட்டத்தின் நோக்கங்கள்

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005, ஊரகப் பகுதிகளில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வருடத்தில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை அளிப்பதை உறுதி செய்கிறது. இச்சட்டம் வேலைக்கான உரிமையை நிலைநாட்டுவதற்கு எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாகும். இச்சட்டம் ஊரகப் பகுதி மக்களின் சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம் நிரந்தரமான வாழ்வாதாரத்தை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேலைக்கான அட்டையை கிராம ஊராட்சி வழங்கும். வேலைக்காக விண்ணப்பம் செய்த 15 நாட்களுக்குள் பணி வழங்கப்பட வேண்டும். தவறினால், சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாநில அரசு வேலையில்லாப் படியை வழங்கும். சட்டபூர்வமான குறைந்தபட்ச ஊதியம் மற்றும் ஆண், பெண் இருபாலருக்கும் சமமான ஊதியம் போன்றவை இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

## நிதி பங்கீடு

இத்திட்டத்திற்கு ஆகும் செலவினை மத்திய, மாநில அரசுகள் 90:10 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. மத்திய அரசு பின்வரும் இனங்களுக்கான செலவினத்தை ஏற்கும்:

(அ) திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான முழு ஊதியச் செலவு முழுவதும்.

(ஆ) கட்டுமானப் பொருட்களின் விலை, திறன் சார்ந்த மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் ஊதியச் செலவில் 75 விழுக்காடு.

(இ) வட்டார, திட்ட அலுவலர் மற்றும் அவருக்கான உதவிப் பணியாளர்கள் மேலும் பணியிட வசதிகள் உள்ளிட்ட நிருவாகச் செலவு.

(ஈ) மத்திய வேலை உறுதிக் குழுவின் நிருவாகச் செலவினங்கள்

மாநில அரசு பின்வரும் இனங்களுக்கான செலவினத்தை ஏற்கும்:

(அ) கட்டுமானப் பொருட்களின் விலை, திறன் சார்ந்த மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களுக்கான ஊதியச் செலவில் 25 விழுக்காடு.

(ஆ) தொழிலாளர்கள் விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் வேலை கொடுக்க இயலவில்லையெனில், வழங்கக்கூடிய வேலையில்லாப் படி முழுவதும்

(இ) மாநில வேலை உறுதிக் குழுவின் நிருவாகச் செலவினங்கள்.

தமிழக ஊரகச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பின்வரும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:

(அ) புதிய குளங்கள் உருவாக்குதல்

(ஆ) பாரம்பரிய நீர் ஆதார அமைப்புகளாக விளங்கும் குளங்கள், குட்டைகள், ஊருணிகள், கோவில் குளங்கள் மற்றும் பாசன குளங்களைப் புனரமைத்தல்

(இ) பாசனக் கால்வாய்களைத் தூர் வாருதல்

(ஈ) பாசனக் குளங்களைத் தூர் வாருதல் மற்றும் கரையினைப் பலப்படுத்துதல்

(உ) ·புதிய சாலைகள் அமைத்தல்

(ஊ) இதர நீர் வளப் பாதுகாப்பு, மண் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள்/வெள்ளத் தடுப்புப் பணிகள்



மே 2006-ல் பதவி ஏறறவுடன், இந்த அரசு இத்திட்டப் பணிகளின் முன்னேற்றம், சரியான முறையில் உரிய அளவு இல்லை எனக் கண்டறிந்தது. இத்திட்டத்தின்கீழ் 31-3-2006 வரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.3.00 கோடி மட்டுமே என்பதிலிருந்தும் மேலும் 6 மாவட்டங்களில் உள்ள 3,830 கிராம ஊராட்சிகளில், 924 கிராம ஊராட்சிகளில் மட்டுமே பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதிலிருந்தும இது தெரிய வந்தது.

இத்திட்டத்தின் குறைவான சாதனைக்குக் காரணங்களாக இருந்த பிரச்சினைகளையும் தடைகளையும் அடையாளம் கண்டு இந்த அரசு அவற்றைக் களைய தொடர் முயற்சிகளை மேற்கொண்டது.

இத்திட்டத்தினைச் செம்மைப்படுத்தவும், விரைவாகச் செயல்படுத்தவும் கீழ்க்கண்ட சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. அரசாணை நிலை எண் 77, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி-1) துறை, நாள் 14-7-2006 மூலம் இத்திட்டத்திற்கென தனியான ஊரக விலைப்பட்டியல் ஒப்புதளிக்கப்பட்டு, ஒரு நாளில் 7 மணி நேரம் வேலை செய்த பின்னரும், சட்டபூர்வமாக குறைந்தபட்ச தினக் கூலியாக நிர்ணயிக்கப்பட்ட ரூ.80/-ஐப் பெற இருந்த பணி அளவு தொடர்பான முக்கியத் தடையை நீக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் அதிக அளவில் சரளைக்கல் பகுதிகள் உள்ளதால், இப்பகுதிகளுக்கென தனி விலைப்பட்டியல் அரசாணை நிலை எண் 35, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்: 12-3-2007 மூலம் வெளியிடப்பட்டது.

2. இத்திட்டம் செயல்படுத்தப்படும் 6 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் செயலாக்கும் அலுவலர்களுக்கு தொடர் பயிற்சிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் குறைந்த அளவு 30 சதவீதம் பதிவுகள் மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டது. இந்த 6 மாவட்டங்களில் உள்ள 3,830 கிராம ஊராட்சிகளில் 5 ஊராட்சிகளைத் தவிர, மற்ற கிராம ஊராட்சிகளில் பதிவுகள் 30 சதவீதத்தை விட அதிகரித்துள்ளது. மேற்கண்ட 6 மாவட்டங்களில் 31-3-2007-ல், பதிவு செய்யப்பட்ட குடும்பங்கள் 50 சதவீதத்தை எட்டியுள்ளது. இது இத்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வு அதிக அளவில் உள்ளதை எடுத்துக்காட்டுகிறது.

4. இத்திட்டச் செயல்பாட்டினை ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் முனைப்போடு கண்காணிக்க, ஊராட்சி ஒன்றியங்களின் வாகனம் ஒவ்வொன்றுக்கும் மாதம் 50 லிட்டர் கூடுதலாக எரிபொருள் வழங்கி அரசு ஒப்புதலளித்துள்ளது.

5. கிராம ஊராட்சிகளில் இத்திட்டத்தை முறையாகச் செயல்படுத்துவதற்கு மக்கள் நலப் பணியாளர்களும் பொறுப்பாக்கப்பட்டுள்ளனர்.

6. இந்த ஆறு மாவட்டங்களுக்கு 563 தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் 180 கணினி இயக்குநர்கள் அரசாணை நிலை எண் 153, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி-1) துறை, நாள் 20-10-2006-ல் கூடுதலாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் பணிகளை முனைப்புடன் கண்காணிக்கவும், தொழிலாளர்களுக்கு விரைவாக ஊதியம் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

7. ஒப்பந்தக்காரர்களைப் பயன்படுத்துவது, திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் தடை செய்யப்பட்டுள்ளதால், இத்திட்டப் பணிகளில் ஒப்பந்தக்காரர்கள் மறைமுகமாக நுழைவதைத் தவிர்க்க 100 சதவீதம் முழுமையான மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

8. இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் பணிகள் ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டிற்குக் குறையாமல் இருக்க வேண்டுமென பின்வரும் காரணங்களுக்காக வலியுறுத்தப்படுகிறது:

(அ) ஒரே பணியிடத்தில் தொடர்ந்து 30 நாட்களுக்கு வேலைவாய்ப்பு

(ஆ) உருவாக்கப்படும் சொத்துக்கள் நிலைத்திருக்கக்கூடியதாகவும் சமுதாயத்திற்குப் பயன்தரத் தக்கதாகவும் இருத்தல்

(இ) அதிக அளவிலான சிறிய பணிகளுக்கு நிதி ஆதாரங்கள் பரவலாகச் சென்றடைவதைத் தவிர்த்தல்

(ஈ) பணிகளைத் தீவிரமாகக் கண்காணித்தல் மற்றும் முறைகேடான செலவினங்களைப் பெருமளவில் குறைத்தல்.

9. இத்திட்டத்தின்கீழ் பணிகளில் ஈடுபடும் வேலையாட்களுக்கு தினக் கூலி வெளிப்படையாகவும் நியாயமாகவும் வழங்க தினக் கூலியானது குழுவில் இடம் பெற்றுள்ள கீழ்க்கண்ட நபர்களில் குறைந்தபட்சம் 4 நபர்களின் முன்னிலையில் வழங்கப்படல் வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது:



1. ஊராட்சிமன்றத் தலைவர்—குழுத் தலைவர்
2. ஊராட்சித் துணைத் தலைவர்
3. வேலை நடைபெறும் பகுதியின் வார்டு உறுப்பினர்
4. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வார்டு உறுப்பினர் (வரிசை எண் 1, 2 மற்றும் 3-ல் குறிப்பிட்டுள்ள நபர்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த நபர் இல்லாதிருப்பின்)
5. தரம் பிரிக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களிலிருந்து, இரண்டு ஊக்குநர்கள்.
6. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி.

10. இத்திட்டத்தினைக் கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் அரசாணை நிலை எண் 117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சிஜிஎஸ்.1) துறை, நாள் 14-9-2006-ன்படி 25 நபர்கள் கொண்ட தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் முதல் கூட்டம் 25-11-2006-ல் நடைபெற்றது.

11. இத்திட்டச் செயல்பாடுகளில் வெளிப்படையான மற்றும் பொறுப்புள்ள நிர்வாகத்தை உறுதி செய்ய அனைத்து ஊராட்சிகளிலும் சமூகத் தணிக்கையினை மேற்கொள்ள ஒரு நிரந்தர அமைப்பினை உருவாக்க அரசு வழிவகுக்கும்.

இந்த அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் பலனாக இந்த 6 மாவட்டங்களில் 31-3-2007 வரை ரூ.152.11 கோடி பயன்படுத்தப்பட்டு 185 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களில் 82 சதவீதம் பெண்களும் 56 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களும் ஆவர். ஊரக ஊதிய அமைப்பு ஒரு நிரந்தரமான தன்மையைக் குறிப்பிடும்படியான உயர்வை எட்டியுள்ளது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

## 4.4. பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் வறுமை துயர் போக்கிடும் பொருட்டு செயல்படுத்தப்பட்டுவரும் முக்கியத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ்

வறுமை கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களைக் கொண்டு பல்வேறு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இந்தச் சுய உதவிக் குழுக்களுக்குத் திறன் வளர் பயிற்சி அளிப்பதுடன், பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்றுத் தரப்படுகிறது. மேலும், அடிப்படை கட்டுமான வசதிகளையும், இந்தச் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவான இதர உதவிகளையும் இத்திட்டம் வழங்குகிறது. சுய வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான செலவினத்தை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் ஏற்கின்றன.

இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில், பயிற்சிக்காக 10 சதவீதமும், உட்கட்டமைப்பு வசதிக்காக 20 சதவீதமும், சுழல்நிதி மற்றும் மானியத்திற்காக 70 சதவீதமும் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்கள், முதல்முறை தரம் பிரிக்கப்பட்ட பிறகு, சுழல்நிதியாக ரூ.25,000/- (வங்கிக் கடன் ரூ.15,000/- மற்றும் மானியம் ரூ.10,000/-) வழங்கப்படுகிறது இரண்டாவது முறை தரம் பிரிக்கப்பட்ட பிறகு, தகுதி வாய்ந்த குழுக்களுக்கு அதிகபட்சமாக திட்ட மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது ரூ.1.25 இலட்சத்திற்கு மிகாத மானியத்துடன் பொருளாதாரக் கடன் வழங்கப்படுகிறது.

2007-2008 ஆம் ஆண்டிற்காக இத்திட்டத்திற்கு ரூ.131.79 கோடி கடன் இலக்குடன், ரூ.69.39 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தை மேலும் பயனுள்ள வகையில் செயல்படுத்துவதற்காகக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

1. கட்டமைப்பு வசதிகள், பயிற்சியாளர்கள் திறன் மற்றும் களப் பணி அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ந்த பயிற்சி நிறுவனங்கள் தகுதி/தரம் அடிப்படையில் கண்டறியப் பட்டுள்ளன. இந்தப் பயிற்சி நிறுவனங்களின் தொகுப்பு, பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பல்வேறு பயிற்சிகள் அளிக்க வசதியாக இருக்கும்.

2. மாநிலம் முழுவதும் ஒரு விரிவான ஆய்வு நடத்தப்பட்டு "தொழில்கள் திட்ட வரைவு" (activity mapping) தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் 2 முக்கிய தொழில் தொகுப்பு (activity cluster) கண்டறியப்பட்டு, இத்தொழில்களுக்கு பொருளாதாரக் கடனுதவி வழங்கப்படும்.



## 4.5 முழு சுகாதார இயக்கம்

மத்திய அரசு 01-04-1999 முதல் ஒருங்கிணைந்த ஊரக சுகாதாரத் திட்டத்தை மாற்றியமைத்து முழு சுகாதார இயக்கமாகத் தொடங்கியது. தீவிர பிரச்சாரத்தின்மூலம் முழு சுகாதாரத்தின் அவசியத்தை உணர்த்தி, தேவையை ஏற்படுத்தி, மாற்று வழிமுறைகள்மூலமாக அத்தேவையை நிறைவு செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். 01-04-2006 முதல் மத்திய மாநில அரசுகளின் பங்களிப்பின் விவரம் பின்வருமாறு:

அ. தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள், நிருவாகச் செலவினங்கள் மற்றும் ஊரக சுகாதார விற்பனை அங்காடிகள்—80:20.

ஆ. தனிநபர் இல்லக் கழிப்பிடங்கள், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை மற்றும் சமுதாய சுகாதார வளாகங்கள், 20 சதவீதம் பயனாளிகள்/ஊராட்சிகளின் பங்களிப்புடன் 60:20:20.

இ. பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகள் கழிப்பறைகள் 70:30.

சுகாதார பழக்கவழக்கங்களின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்த, பல்ஊடக மக்கள் தொடர்பு சாதனங்கள் (Multi media campaign) மூலம் இந்த ஆண்டு மாநில அளவில் ஒரு விழிப்புணர்வு இயக்கம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 4.5.1 நிர்மல் கிராம புரஸ்கார்

முழு சுகாதாரத் திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையிலும முழு சுகாதாரம், தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்டங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் "நிர்மல் கிராம புரஸ்கார்" என்ற விருதினை 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசு வழங்கத் தொடங்கியது. இத்திட்டத்திற்கான ஊக்கத் தொகை அட்டவணை எண் 6-ல் உள்ளவாறு வழங்கப்படுகிறது.

## அட்டவணை-6

### நிர்மல் கிராம புரஸ்கார் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் ஊக்கத் தொகை விவரம்.

(தொகை ரூபாய் இலட்சத்தில்)

| விவரம் | மக்கள் தொகை | ஊக்கத் தொகை |
|---|---|---|
| கிராம ஊராட்சி | 1,000-க்கு கீழ் | 0.50 |
| | 1,000–1,999 | 1.00 |
| | 2,000–4,999 | 2.00 |
| | 5,000–9,999 | 4.00 |
| | 10,000 (ம) 10,000-க்கு மேல் | 5.00 |
| வட்டாரம் | 50,000 வரை | 10.00 |
| | 50,000 (ம) 50,000-க்கு மேல் | 20.00 |
| மாவட்டம் | 10 இலட்சம் வரை | 30.00 |
| | 10 இலட்சத்திற்கு மேல் | 50.00 |

இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் 180 கிராம ஊராட்சிகளும், 8 வட்டார ஊராட்சிகளும் நிர்மல் கிராம புரஸ்கார் விருதிற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சிகளுக்கு 2007-2008-ல் விருதுகள் வழங்கப்படும்.

### 4.6 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

மத்திய, மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப் பணிகள்மூலம் உருவாக்கப்படும் உள்கட்டமைப்பு வசதிகளில் ஏறபடும் இடைவெளிகளை நிறைவு செய்து, அதன்மூலம் முழுமையான வளர்ச்சிக்கு வித்திடுவது, இத்திட்டத்தின் நோக்கமாகும். நாடாளுமன்ற உறுப்பினரால் தேர்வு செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் (மக்களவை, மாநிலங்களவை) தலா ரூ.2.00 கோடி ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதிக்குட்பட்ட மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாநிலங்களவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்திற்குள் ஒன்று



அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பணிகளை பரிந்துரைக்கலாம். நியமன உறுப்பினர்களைப் பொறுத்தவரை இந்தியாவில் எந்தப் பகுதியிலும் பணிகளைச் செயல்படுத்த பரிந்துரைக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் அனைத்துப் பணிகளுக்கும் நிருவாக அனுமதி வழங்குவார். தனிப்பட்ட வேலையின் அதிகபட்ச மதிப்பீடு ரூ.25 இலட்சமாகும். இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் தடை செய்யப்பட்ட பணிகளுடைய பட்டியலும் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

2007-2008 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கென மத்திய அரசால் ரூ.114.00 கோடி ஒதுக்கப்படும்.

### 4.7 பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்

பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், இந்திய அரசால் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 25 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2003 ஆம் ஆண்டிற்குள் 1,000-க்கும் மேல் மக்கள் தொகை உள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கும் 2007 ஆம் ஆண்டிற்குள் 500-லிருந்து 1,000 வரை மக்கள் தொகை உள்ள குடியிருப்புகளுக்கும் அனைத்துப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகள் அமைக்கப்படும். இது 100 சதவீதம் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் முதல் மூன்று கட்டங்களுக்கான (2001-2002 முதல் 2003-2004 வரை) பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் இத்திட்டத்தின் நான்காம் கட்டப் பணிகள் அரசு ஆணை (நிலை) எண் 301, நெடுஞ்சாலைத் துறை, நாள் 22-12-2004-ன் படி நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இத்திட்டச் செயலாக்கத்தின் அனைத்து நிலைகளிலும் ஊராட்சி அமைப்புகளை ஈடுபடுத்த வேண்டியிருப்பதால், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அரசு ஆணை (நிலை) எண் 95, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 17-8-2006-ன்படி மீண்டும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு மாற்றப்பட்டது. ஆனால், தமிழ்நாடு ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், மத்திய அரசிலிருந்து நிதியைப் பெறுவதற்கான தொடர்பு நிறுவனமாகத் தொடர்ந்து செயல்பட்டது. இது, முதல் மூன்று மற்றும் ஐந்தாம் கட்டப் பணிகளைச் செயல்படுத்துவதோடு, இனிவரும் காலக்கட்டப்

பணிகளையும் நடைமுறைப்படுத்துவது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்ற நிலையில் சில நடைமுறைச் சிக்கல்களுக்கு வழிவகுத்தது. எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் நிருவாக வரம்பிற்குள் செயல்படும் தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தினை மாநிலத்தின் தொடர்பு நிறுவனமாக அரசு ஆணை (நிலை) எண் 15, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 14-2-2007-ன்படி நியமனம் செய்தது.

முதல் மூன்று கட்டங்களில் (2001-2002 முதல் 2003-2004 வரை) ரூ.434 கோடி மதிப்பீட்டில் 3,364.62 கி.மீ. சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதுவரை 3,244.55 கி.மீ. சாலைப் பணிகள் ரூ.378.70 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.117.91 கோடி மதிப்பீட்டில் 826 கி.மீ.க்கான நான்காம் கட்டப் பணிகள் நெடுஞ்சாலைத் துறையினால் நிறைவேற்றப்படுகிறது.

ஐந்தாம் கட்டப் (2005-2006) பணிகள ரூ.182.05 கோடி மதிப்பீட்டில் 849.13 கி.மீ. சாலைப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2007-2008-ம் ஆண்டிற்கு நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள ஆறாம் கட்டப் பணிகளில் 500 மற்றும் அதற்குமேல் மக்கள்தொகை கொண்ட இணைப்புச் சாலைகள் இல்லாத அனைத்துக் குடியிருப்புகளையும் சேர்க்க இத்துறையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**4.8 தேசிய கரிம வாயுத் திட்டம்**

இது 100 சதவீதம் மத்திய அரசு நிதியின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் பொதுப் பிரிவினருக்கு ரூ.2,100/-ம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் சிறு விவசாயிகளுக்கு ரூ.2,800/-ம் மற்றும் மலைப் பகுதியில் வாழ்வோர்க்கு ரூ.3,500/-ம் மானியமாக வழங்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் உத்தேசமாக ரூ.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**5. மாநிலத் திட்டங்கள்**

**5.1 அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் போதுமான அளவில் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தும் நோக்கில் ஒரு திருப்புமுனைத் திட்டமாக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எனும் புதிய திட்டத்தை அரசாணை எண் 115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.அ.தி.2) நாள்: 11-9-2006 மற்றும் அரசாணை எண் 189, ஊரக வளர்ச்சி மற்றும்



ஊராட்சித் துறை (மா.அ.தி.2) நாள்: 27-12-2006-ல் அறிவித்துள்ளது. நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்த மட்டில் தற்போது, செயலாக்கத்தில் உள்ள அனைத்து மத்திய, மாநிலத் திட்டங்களிலேயே இதுதான் மிகப் பெரிய திட்டமாகும். இந்தத் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 21-01-2007 அன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள திருமாதலம்பாக்கம் ஊராட்சியில் தொடங்கி வைக்கப்பட்டது.

அநேக கிராம ஊராட்சிகள் மிகவும் குறைந்த வருவாய் உள்ளவையாக இருப்பதாலும், சட்டபூர்வ கடமைகள் ஆற்றுவதற்கு அல்லது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குச் சிரமப்படுகின்ற காரணத்தாலும், இத்திட்டத்தின்கீழ் 'தனி நபர் வருமானம் மிகவும் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளை ஒவ்வொரு வருடமும் தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுததி, அதனடிப்படையில் ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளும் ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். 1997 முதல் 2002 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த முந்தைய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராம ஊராட்சிகள் ஐந்தாம் ஆண்டில் (2010-2011)-ல் எடுத்துக் கொள்ளப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 2006-2007-ம் ஆண்டு ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.20 இலட்சம் வீதம் 2,540 கிராம ஊராட்சிகளுக்கு அரசு மொத்தம் ரூ.508 கோடி ஒதுக்கீடு செய்தது. 2007-2008-ம் ஆண்டில் இத்திட்டம் ரூ.506.80 கோடியில் 2,534 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

மத்திய அரசுத் திட்டங்களின் வழிகாட்டும் நெறிமுறைகள் வழக்கமாக எவ்விதத் தளர்வும் இல்லாத விதிமுறைகளைக கொண்டுள்ளன. மேலும், மக்கள் விரும்புகின்ற பணிகளை எடுத்துச் செய்வதற்கான நெகிழ்வுத் தன்மையற்றதாகவும் உள்ளன. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன்படி சட்டபூர்வமான கடமைகளை நிறைவேற்றிட கிராம ஊராட்சிகளுக்கு போதிய நிதி வசதியும் அளிக்கப்படவில்லை. மத்திய அரசின் திட்டங்களில் உள்ள இந்த இரண்டு இடைவெளிகளையும் நிறைவு செய்யும் வகையில், ஒவ்வொரு ஊராட்சிக்கும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் மொத்த நிதியான ரூ.20 இலட்சத்தில் ரூ.5 இலட்சம் வரையறுக்கப்படாத நிதியாகவும் எஞ்சியுள்ள நிதி, வரையறுக்கப்பட்ட இனங்களுக்காகவும் செலவு செய்யலாம்.

[2007 ஏப்ரல் 11

முந்தைய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒவ்வோர் ஆண்டிலும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், ஒரு ஊராட்சியில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது. அதுபோல் அல்லாமல், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 12 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும். மேலும், மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளும் ஐந்தாண்டுக் காலத்தில் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். வறிய நிலையில் உளள கிராம ஊராட்சிகளுக்கு தனிக் கவனம் செலுத்தப்படும். மேலும், 2004 ஆம் ஆண்டு முதல் 2006 வரை செயல்படுத்தப்பட்ட நமது கிராமத் திட்டத்தின்கீழ் நிதி ஆதாரங்கள் மிகக் குறைந்த அளவில் மாநிலத்தில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. (ஊராட்சி ஒன்றுக்கு 2004-2005-ல் ரூ.1.10 இலட்சம்; 2005-2006-ல் ரூ. 1.25 இலட்சம்) இதன் விளைவாக, எந்தக் கிராம ஊராட்சியிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் காணப்படவில்லை. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் குறிப்பிடத்தக்க வகையில் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தி, ஒவ்வொரு ஊராட்சிக்கும ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், இதர துறைகளின், குறிபபாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை, சமூக நலத் துறை, சுகாதாரத் துறை, கல்வித் துறை மற்றும் வேளாண் பொறியியல் துறைகளின் திட்டங்களின் நிதி ஆதாரங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இதர திட்டங்களுடனும் இயன்ற அளவு ஒருங்கிணைத்து ஒவ்வொரு ஆண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ள கிராம ஊராட்சியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்திற்கும் குறைந்தபட்சம் ரூ.1 கோடி நிதியை, அனைத்து அரசுத் திட்டங்களின்மூலம் ஒருமுகப்படுத்துவதை உறுதிசெய்வது அரசின் நோக்கமாகும்.

இத்திட்ட முக்கியமான வழிகாட்டும் நெறிமுறைகளில் சில பின்வருமாறு:

1 வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), தொடர்புடைய வட்டாரத்தின் உதவிப் பொறியாளர்/ஒன்றியப் பொறியாளர் மற்றும் தொடர்புடைய கிராம ஊராட்சித் தலைவர் ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்று, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நிதிகளின்கீழ் மேற்கொள்ள வேண்டிய பணிகளைத் தேர்வு செய்யும்.



2007 ஏப்ரல் 11]

2 தேர்ந்தெடுக்கப்படும் பணிகளுக்குக் கிராம சபையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

3 ஒவ்வொரு கிராமத்திற்கும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்க ரூபாய் 3.00 இலட்சம் வரையறுக்கப்பட்டுள்ளது.

4 கிராமத்திற்கு ஒரு குளம்/ஊருணி ரூ.3.00 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் செலவில் வரையறுக்கப்பட்ட நிதிப் பிரிவிலிருந்து பணி மேற்கொள்ளப்பட வேண்டும். படித் துறைகள் அமைத்தல், குளங்களுக்குள் சிறு குளங்கள் அமைத்தல் மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல் ஆகியவை இதன்கீழ் உள்ள பணிகளாகும். கிராமத்தில் குளம் அல்லது ஊருணி ஏதும் இல்லாத நிலையில், கோயில் குளங்கள் மற்றும் சிறுபாசன ஏரிகளில் தூர் வாரும் பணியினை எடுத்துச் செய்யலாம். குளம் தூர் எடுத்தலில் குறைந்த பட்சம் 1 மீ. ஆழமும், குளத்திலுள்ள சிறு குளம் தூர் எடுத்தலில் மேலும் 1 மீ. ஆழமும் தூர் எடுத்தல் வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 வாய்ப்புள்ள இடங்களில் மீன் வளர்ப்புக் குளங்கள் சுய உதவிக் குழுக்களிடம் மீன்பிடி உரிமையுடன் ஒப்படைக்கப்பட வேண்டும்.

6 சுடுகாடு/இடுகாடுகளில் தொடர்புச் சாலைகள், சுற்றுச் சுவர், சுடுகாட்டுக் கொட்டகை, தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதி அமைக்கப்பட வேண்டும்.

7 அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராமங்களில் ரூ.15 இலட்சம் ஒதுக்கீட்டில் பள்ளி விளையாட்டு மையம் அல்லது ரூ.1 இலடசம் ஒதுக்கீட்டில் சமுதாய விளையாட்டு மையம் அமைக்கப்பட வேண்டும்.

8 இக்கிராமங்களில் நூலகக் கட்டடம் ரூ.2.00 இலட்சம் வரையிலும் கட்டப்படும் அல்லது ஏற்கெனவே உள்ள கட்டடம் நூலகமாக மாற்றியமைக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும். இந்நூலகத்திற்கு ரூ.35,000/-க்குக் குறையாமல் புத்தகங்கள் வாங்கப்படும்.

9 சாத்தியம் உள்ள இடங்களில் கிராமச் சந்தைகள் அமைக்கப்பட வேண்டும்.

10 மொத்த நிதி ஒதுக்கீட்டில் 1 சதவீதம் தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் உள்ள அனைத்து நூலகங்களையும் வருங்காலங்களில் நல்ல முறையில் பராமரிக்க, பொது நூலக இயக்குநரிடம் ஒப்படைக்க அரசு தீர்மானித்துள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மையங்களை, ஊராட்சிகள் பராமரிக்க ஆண்டொன்றுக்கு ரூ.10,000 வரை செலவு செய்ய, ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு அனுமதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

## 5.2. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், மாநில அரசால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். சட்டமன்றத் தொகுதிக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை நிரப்புவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தனது தொகுதியில் செய்யப்பட வேண்டிய மேம்பாட்டுப் பணிகளைத் தேர்ந்தெடுத்துப் பரிந்துரைப்பார். பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் நிருவாக அனுமதி வழங்குவார். அரசாணை நிலை எண் 134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.அ.தி.-2), நாள் 29-09-2006-ல் 2006-2007 ஆம் ஆண்டுக்கு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கான ஒதுக்கீட்டை தலா ரூ.1.00 கோடியிலிருந்து ரூ.1.20 கோடியாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 50 சதவீதம் (ரூ.60 இலட்சம்) நிதி, அரசு குறிப்பிட்டுள்ள முன்னுரிமை பணிகளை எடுத்துச் செய்வதற்கும், மீதமுள்ள 50 சதவீதம் (ரூ.60 இலட்சம்) தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம்பெறும் பணிகளைத் தவிர்த்து, சம்பந்தபபட்ட சட்டமன்ற உறுப்பினரின் விருப்பப் பணிகளை நிறைவேற்றவும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அவர்களது அன்றாடப் பணிக்காக, தலா ஒரு கணினி (Desktop or Laptop) மற்றும் பல்வகை வசதிகளுடன்கூடிய வண்ண லேசர் பிரிண்டர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில், வரையறுக்கப்பட்ட பணிகளில், கீழ்க்கண்ட பணிகள் முன்னுரிமைப் பணிகளாக அறிவிக்கப்பட்டிருந்தன. 1. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் (ரூ.25 இலட்சம்), 2. சோடியம் ஆவி விளக்குகள் (ரூ.15 இலட்சம்), 3. தற்போதுள்ள சாலைகளை





மேம்படுத்துதல் (ரூ.20 இலட்சம்). மாநகராட்சிப் பகுதிகளில் வரையறுக்கப்பட்ட நிதியினை, அடிப்படை வசதிகளுக்கான பணிகளை எடுத்துச் செய்யவும் பயன்படுத்தலாம். 2007-2008 ஆம் ஆண்டில் இந்த முன்னுரிமைப் பட்டியல் மாற்றியமைக்கப்படவுள்ளது.

ஊரகப் பகுதிகளில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் கட்டப்படும் தொகுப்பு வீடுகள்போல், பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்காகத் தனி வீடுகள் கட்டுவதற்கும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளைச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழுதுநீக்கம் செய்யவும் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு செயய அரசு அனுமதி அளித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் போன்று, குளங்கள், ஆறுகள், ஊருணிகள் மற்றும் கால்வாய்களைத் தூர் வாரும பணிகளைச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துச் செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு, சுமார் ரூ.282 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 5.3 நபார்டு–ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி–XII–2006–2007

மாநிலத்தில் உள்ள சாலைகளை நன்கு பராமரிக்கும் வகையில் 1,543.32 கி.மீ. நீளத்திற்கான 889 பேருந்து செல்லும் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை மேம்படுத்த நபார்டு வங்கியிலிருந்து ரூ.107.39 கோடி நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் முதலாவது தவணைத் தொகை ரூ.50.00 கோடி பெறப்பட்டு, மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 5.4. பன்னிரண்டாவது நிதிக் குழு மானியம்–சாலைப் பணிகள் 2006–2007

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் செல்லும் சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகளைப் பராமரிக்க பன்னிரண்டாவது நிதிக் குழு மானியம் நன்கு பயன்படுத்தப்பட்டது. சீரான தினசரி போக்குவரத்திற்குத் தடையாக உள்ள பழுதடைந்த மற்றும் குண்டும்

குழியுமாக உள்ள தார்ச் சாலைகள் இந்த மானியத்தில் புதுப்பிக்க எடுத்துக் கொள்ளப்பட்டன.

அரசாணை எண் 222 (எச்.வி.2) நெடுஞ்சாலைத் துறை, நாள் 01-11-2006-ன்படி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பழுதடைந்த 1,460 தார்ச் சாலைகளை ரூ.103.6 கோடி மதிப்பீட்டில் 1,895.45 கி.மீ. நீளத்திற்குப் புதுப்பிக்க 2006-2007 ஆம் ஆண்டில் 12-வது நிதிக் குழு மானிய உதவியுடன் புதுப்பிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட ரூ.103.6 கோடி, மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில 12-வது நிதிக் குழு மானியத்தில், 2007-2008-ம் ஆண்டில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில் பழுதடைந்துள்ள தார்ச் சாலைகளைப் புதுப்பிக்க ரூ.103.6 கோடி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**5.5 தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான முழுமையான மேம்பாட்டுத் திட்டம்**

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய பின்தங்கிய மாவட்டங்களில் நக்சலைட்டுகள் உருவாகும் சூழ்நிலையைத் தடுக்கும் பொருட்டு 2003-2004-லிருந்து சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.7.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6 பகுதி–2 திட்டங்கள்**

2007-2008 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

**6.1 பயிற்சி நிறுவனங்களை நவீனமயமாக்குதல்**

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களை மேலும் நவீனமயமாக்க இந்நிறுவனங்களுக்கு வகுப்பறைகள், வகுப்பறை உபகரணங்கள், கருத்தரங்க அறைகள், தங்கும் அறைகள், உணவு அறைகள், சமையலறைகள் மற்றும் இதர வசதிகளை உருவாக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. அதற்காக ரூ.3.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**6.2 உதவி இயக்குநர்கள் (தணிக்கை) அலுவலகங்கள்**

கடலூர், கன்னியாகுமரி, தஞ்சாவூர் மற்றும் தருமபுரி உதவி இயக்குநர்கள் (தணிக்கை) அலுவலகங்கள் தற்போது மாவட்ட தலைமையிடங்களில் இயங்காமல், வேறு இடங்களில் இயங்குகின்றன. மேற்கண்ட உதவி இயக்குநர்கள் (தணிக்கை) அலுவலகங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டத் தலைநகரங்களில் கட்ட, ரூ.60 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**6.3 ஊரக வளர்ச்சி அலுவலர்களுக்கு வாகனங்கள்**

ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகளைச் சிறந்த முறையிலும், திறம்படவும் கண்காணிப்பதற்காக, தற்போது வாகன வசதி இல்லாத உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்), உதவி இயக்குநர்கள் (தணிக்கை), செயற் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி), உதவி செயற் பொறியாளர்கள் (குடிநீர் வழங்கல்), உதவி செயற் பொறியாளர்கள் (பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்), வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககத்திற்கு ரூ.5.62 கோடியில் 123 வாகனங்கள் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

**6.4 அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கும் ஒளிநகல் மற்றும் நிகரி இயந்திரம் வழங்குதல்**

நிருவாகத் திறனை அதிகரிக்க ஏதுவாக, 385 வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கும், உதவி இயக்குநர்கள் (தணிக்கை) அலுவலகங்களுக்கும் ரூ.2.92 கோடியில் ஒளிநகல் மற்றும் நிகரி இயந்திரங்கள் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

**6.5 தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு அலுவலகக் கட்டடம்**

மாநிலத் தேர்தல் ஆணைய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் சென்னையில் கட்டுவதற்கு அரசு முடிவெடுத்து, ரூ.1.50 கோடியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

**7 தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்**

கிராமப்புற பெண்கள், சமூக, பொருளாதார வளர்ச்சியுடன் ஆற்றலும் பெற வேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நிறுவப்பட்டது. தொடங்கப்பட்டதிலிருந்து ஜூலை 2006 வரை, இந்த நிறுவனம் சமூக நலத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது.

ஜூலை 2000-லிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசாணை எண் 81, நாள் 20-7-2006-ன்படி இந்நிறுவனம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களுக்கான பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகவும், நல்ல ஒருங்கிணைப்புடனும் செயல்படுத்த இந்த மாற்றம் செய்யப்பட்டது.

இந்நிறுவனம் செம்மையாகச் செயல்பட வழிகாட்டும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அரசாணை எண் 148, நாள் 12-10-2006-ன்படி, தொழில் நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், வங்கிகளின் பிரதிநிதிகள் மற்றும் வல்லுநர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கி, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் குழுமம் மறுசீரமைக்கப்பட்டது.

தமிழக அரசு, இந்தியாவிலேயே முன்னோடியாக சுய உதவிக் குழுக்களை, செப்டம்பர், 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில், பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் அமைக்கத் தொடங்கியது. பின்பு இத்திட்டம், 1991-1992 ஆம் ஆண்டு சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. அதேபோன்று 1992-1993 ஆம் ஆண்டு, இத்திட்டம் மதுரை மற்றும இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

### 7.1 மகளிர் திட்டம்

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின் வெற்றியின் அடிப்படையில்தான், தற்சமயம் மிகவும் பிரசித்தி பெற்றுள்ள "மகளிர் திட்டம்" 1997-1998 ஆம் ஆண்டில், மாநில அரசு நிதியுதவியுடன் விழுப்புரம், தருமபுரி (கிருஷ்ணகிரி), நாமக்கல், கடலூர், இராமநாதபுரம், மதுரை, கரூர், திருவாரூர், தூத்துக்குடி, விருதுநகர், தேனி, திருவள்ளூர், வேலூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டது.

1998-1999 ஆம் ஆண்டில் இத்திட்டம் திருநெல்வேலி, திருவண்ணாமலை, ஈரோடு, புதுக்கோட்டை, சிவகங்கை, நீலகிரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.





மேலும், 1999-2000 ஆம் ஆண்டில், இத்திட்டம் கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், பெரம்பலூர் (அரியலூர்), தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டில், இத்திட்டம் சென்னைக்கும் விரிவுபடுத்தப்பட்டதன்மூலம், மாநிலம் முழுவதும் மகளிர் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாடு நிறுவனத்தின்மூலம் அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து இத்திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு பயிற்சிகள் அளித்து மேம்படுத்தப்படுகின்றன.

### 7.2 சுய உதவிக் குழுக்கள்

ஒத்த கருத்துடைய ஏழை மகளிர் தாமாகவே முன்வந்து ஒன்று சேர்ந்து ஒரு சிறு குழு அமைப்பதே சுய உதவிக் குழுவாகும். இக்குழுவில் 12-லிருந்து 20 மகளிர் உறுப்பினராக இருக்கலாம். குழு உறுப்பினர்கள் 18 முதல் 60 வயதுடையவர்களாக இருக்க வேண்டும். குழுவினர் அனைவரும் ஏகமனதாக ஏற்று ஒரு குறிப்பிட்ட தொகையினை வாரம் அல்லது மாதந்தோறும் சேமிக்கின்றனர்.

குழு உறுப்பினர்களிடையே, சிக்கனத்தையும், வங்கியில் சேமிக்கும் பழக்கத்தையும் உருவாக்குவதே சுய உதவிக் குழுக்களின் சிறப்பு அம்சமாகும். கந்து வட்டிக்காரர்களின் கோரப்பிடியிலிருந்து விடுபடவும், தனி நபராகச் செயல்படும்போது வங்கிகளிலிருந்து கிடைக்க இயலாத நிதி உதவியைப் பெறுவதற்கும் சுய உதவிக் குழுக்கள் சிறந்த அமைப்புகள் என்று பெயர் பெற்றுள்ளன.

காலம் தவறாமல் கூட்டங்கள் நடத்துதல், அதில் உறுப்பினர்கள் கட்டாயமாகக் கலந்துகொண்டு, தங்கள் சேமிப்பினை வழங்குதல் மற்றும் முறையான பயிற்சிகள் ஆகியவையே சுய உதவிக் குழுக் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களாகும். பொதுவாக, ஒவ்வொரு சுய உதவிக் குழு உறுப்பினரும் ஒரு மாதத்திற்கு ரூ.100/- வரை சேமிக்கிறார்கள். குழுவை வழி நடத்த, உறுப்பினர்கள், அவர்களிடையே ஒரு ஊக்குநர் மற்றும இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஊக்குநரின் தலையாயப் பணி, குழுவை வழி நடத்திச் செல்வதும், குழுப் பதிவேடுகளைப் பராமரித்தலும் ஆகும். ஊக்குநருக்கு உதவியாக குழுவின் கணக்குகளைப் பராமரிப்பது மற்றும் வங்கிக்குச் செல்வது ஆகிய பணிகளை இரு பிரதிநிதிகளும் மேற்கொள்கின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், தாம் பெறுகின்ற கடனை சரியான முறையில் தவணை தவறாமல் திரும்பச் செலுத்துவதுதான், தமிழகத்தில் இக்குழுக்கள் பெற்றுள்ள மாபெரும் வெற்றிக்குக் காரணம். சுய உதவிக் குழுக் கடன்கள் 98 விழுக்காடு வரை திருப்பிச் செலுத்தப்படுகின்றன. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஒற்றுமை உணர்வோடு, விவேகத்துடன் தாங்கள் பெற்ற கடனைச் சிறந்த முறையில் பயன்படுத்துகின்றனர்.

## 7.3 திறன் வளர்த்தல்

சுய உதவிக் குழுக்கள் ஒற்றுமையுடன் திறம்படச் செயல்படுவதற்கு, அக்குழுக்களின் திறன்கள மேம்படுத்தப்பட வேண்டும். ஆகையால், குழு ஆரம்பித்து 6 மாத காலத்திற்குள் குழுக்களின் அடிப்படைப் பயிற்சிகளான, குழு உறுப்பினர் பயிற்சி மற்றும் ஊக்குநர் பிரதிநிதி பயிற்சி ஆகியவை முறையாக அளிக்கப்படுகின்றன.

### 7.3.1 குழு உறுப்பினர் பயிற்சி

குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும், இப்பயிற்சி 4 நாட்களில் 4 பாடத் திட்டங்களாக அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியின் முக்கிய நோக்கம், சுய உதவிக் குழுவின் கோட்பாடுகளை அனைத்து உறுப்பினர்களும் அறிந்து கொள்வதோடு அவர்களிடையே மறைந்துள்ள திறன்களை வெளிக் கொணர்வதும் ஆகும். 2006-2007 ஆம் ஆண்டில், பயிற்சிக்கு வருகை தரும் குழு உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித் தொகை ரூ.7.50-லிருந்து ரூ.45/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.2 ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி

ஒவ்வொரு குழு ஊக்குநருக்கும் மற்றும் குழுவிலுள்ள ஒரு பிரதிநிதிக்கும் இப்பயிற்சி 6 நாட்களில் 3 பாடத் திட்டங்களாக அளிக்கப்படுகிறது. குழுவை வழி நடத்திச் செல்லும் தலைமைப் பண்பு, குழுவாகச் செயல்படும் திறன், பதிவேடுகளைப் பராமரிக்கும் திறன் ஆகிய திறன்களை மேம்படுத்துவதே இப்பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். 2006-2007 ஆம் ஆண்டு முதல், பயிற்சிக்கு வருகை தரும் பயிற்சியாளர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித் தொகை ரூ.20/-லிருந்து ரூ.45/- ஆக உயர்த்தி வழங்கப்படுகின்றது.





### 7.3.3 சமுதாயப் பயிற்றுநர்கள்

2007-2008 ஆம் ஆண்டில், சிறந்த குழு உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களைத் தேர்வு செய்து, அவர்களைச் சமுதாயப் பயிற்றுநர்களாக உருவாக்கி, அவர்கள் மூலமாகவே குழு உறுப்பினர் பயிற்சி மற்றும் ஊக்குநர், பிரதிநிதி பயிற்சிகளை அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது. வரும் இரண்டு ஆண்டுகளுக்குள், ஏறத்தாழ 5,000 சமுதாயப் பயிற்றுநர்கள் உருவாக்கப்பட உள்ளனர்.

## 7.4. தர மதிப்பீடு

சுய உதவிக் குழுக்கள் ஆரம்பித்த 6 மாதங்களுக்குப் பிறகு, தர மதிப்பீட்டில் பங்கேற்க தகுதி பெறுகின்றன. தர மதிப்பீடு என்பது சுய உதவிக் குழுக்களின் கடன் பெறும் தகுதியை நிர்ணயம் செய்ய உதவும் அளவுகோல் ஆகும். தர மதிப்பீட்டுக் குழுவில் இடம்பெறும் உறுப்பினர்கள்:

1. உதவித் திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்)
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து ஒரு பிரதிநிதி
3. வங்கியாளர்
4. அரசு சாரா நிறுவனப் பிரதிநிதி

சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கத்துடன், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்தும் ஒரு பிரதிநிதி தர மதிப்பீட்டுக் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்து சேமித்தல், குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை, பதிவேடுகளை நல்ல முறையில் பராமரித்தல், உட்கடன் வாங்குதல், கடனைத் திருப்பிச் செலுத்துதல் ஆகியவை தர மதிப்பீட்டில் கருத்தில் கொள்ளப்படும் முக்கிய அம்சங்களாகும்.

தர மதிப்பீட்டில் தேர்வு பெற்ற குழுக்கள், கடன் இணைப்பு பெற தகுதி அடைகிறார்கள். இவர்களுக்குப் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம், தாட்கோ ஆகிய திட்டங்களின்கீழ் சுழல் நிதி அல்லது வங்கிகள் மூலம் நேரடிக் கடன் வழங்கப்படுகிறது.

ஆறு மாதங்களுக்குப் பின்னர், பொருளாதாரக் கடன் பெற விரும்பும் குழுக்கள், தொழில் தொடங்குவதற்குத் தகுதி உடையவர்களா என்பதை உறுதி செய்யும் பொருட்டு இரண்டாவது தர மதிப்பீடு செய்யப்படுகிறது. இரண்டாவது தர மதிப்பீட்டில் தேர்வு பெற்ற குழுக்களுக்கு, தொழில் தொடங்க பொருளாதாரக் கடன், எஸ்.ஜி.எஸ்.ஒய். தாட்கோ ஆகிய திட்டங்களின்கீழ் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் சேர்ந்து வழங்கப்படுகிறது.

## 7.5 அரசு சாரா நிறுவனங்கள்

மகளிர் திட்டமானது அரசு சாரா நிறுவனங்களின் மூலமாகச் செயல்படுத்தப்படுகிறது. சுய உதவிக் குழுக்களை அமைத்தல், அவர்களுக்குப் பயிற்சி அளித்துப் பராமரித்தல் ஆகியவை இந்நிறுவனங்களின் பணி ஆகும். இதற்கென இந்நிறுவனங்களுக்கு மகளிர் திட்டம்மூலம் குழு அமைப்புத் தொகை மற்றும் பராமரிப்புத் தொகை வழங்கப்படுகிறது. மகளிர் திட்டத்தில் இணைந்து செயல்பட விரும்பும் அரசு சாரா நிறுவனங்கள் கீழ்க்கண்ட விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் தேர்வு செய்யப்படுகின்றனர்:

- குழு அமைத்தலில் முந்தைய அனுபவம்
- மூன்று வருடங்களுக்கு அப்பழுக்கில்லாத தொடர் செயல்பாடு
- போதுமான உட்கட்டமைப்பு வசதிகள்.

தற்சமயம் மகளிர் திட்டத்தின்கீழ் 628 அரசு சாரா நிறுவனங்கள் அங்கீகாரம் பெற்றுள்ளன.

2002 ஆம் வருடத்தில், மகளிர் திட்டம் அரசு சாரா நிறுவனங்களுடன் செய்துகொண்ட ஐந்து வருட ஒப்பந்தம் மார்ச 2007-உடன் முடிவடைந்துள்ளது. நடப்பாண்டில் அமல்படுத்துவதற்கான, புதிய ஒப்பந்த வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் புதிய ஒப்பந்தம், வாழ்வாதார மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கி, சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலும். அரசு சாரா நிறுவனங்களை அங்கீகாரம் செய்வதற்கென, தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகள், இப்புதிய அணுகுமுறை அடிப்படையில் மறு ஆய்வு செய்யப்படும்.



## 7.6 சுய உதவிக் குழுக்களின் தற்போதைய நிலை

1989 ஆம் ஆண்டில், மகளிர் மேம்பாட்டிற்கென உருவாக்கப்பட்ட இந்தச் சுய உதவிக் குழு இயக்கமானது, இன்று தமிழகமெங்கும் உள்ள ஏழை எளிய மகளிரின் வாழ்வில் ஒளி ஏற்றும் மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது. இந்த ஆண்டில், மார்ச் 2007 வரை, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள 12,564 சுய உதவிக் குழுக்கள் உட்பட, 22,020 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 3,37,744 சுய உதவிக் குழுக்கள் மகளிர் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

2006-2007 ஆம் ஆண்டில், 5,000 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு ரூ.10,000 வீதம், ரூ.5.00 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

31-03-2007 வரையிலான சுய உதவிக் குழுக்களின் விவரங்கள் அட்டவணை-7-ல் கொடுககப்பட்டுள்ளன.

**அட்டவணை–7**

**சுய உதவிக் குழுக்களின் விவரம்**

| | |
|---|---|
| மொத்த சுய உதவிக் குழுக்கள் | 3,37,744 |
| மொத்த குழு உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 54.32 |
| கிராமப்புற குழுக்கள் எண்ணிக்கை | 2,73,255 |
| கிராமப்புற குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை | 44,26,731 |
| நகர்ப்புற குழுக்கள் எண்ணிக்கை | 64,489 |
| நகர்ப்புற குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை | 10,06,028 |
| மொத்த சேமிப்பு (ரூ. கோடியில்) | 1,382 |
| தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற குழுக்கள் | 3,04,051 |
| கடனுதவி பெற்ற குழுக்கள் | 2,73,098 |
| வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ. கோடியில்) | 2,337,79 |

[2007 ஏப்ரல் 11

### 7.7 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

மகளிர் திட்டத்தின்கீழ், ஊராட்சி அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள் அமைக்கப்படுகின்றன. ஒரு ஊராட்சியில் இயங்கிவரும் அனைத்துச் சுய உதவிக் குழுக்களிலிருந்தும் தலா 2 பிரதிநிதிகள், கூட்டமைப்பின் உறுப்பினர்களாக அங்கம் வகிப்பர். சுய உதவிக் குழுக்களுக்கு, அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், குறைகளை வெளிப்படுத்துவதற்கும் ஒரு களமாக இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு செயல்படும். ஒரு சுய உதவிக் குழு, தனியாக சாதிக்க முடியாததை ஒரு கூட்டமைப்பில் இணைந்து ஆற்றல்களையும், வளங்களையும் ஒருங்கிணைப்பதன்மூலம் சாதிக்கலாம். பொருட்களைக் கொள்முதல் செய்வதிலும் மற்றும் உறபத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதிலும் கூட்டமைப்புகள் பயனுள்ள முறையில் செயலாற்றலாம். கூட்டமைப்புகள், தங்களது ஊராட்சியில் புதிய சுய உதவிக் குழுக்களை அமைத்து, பயிற்சிகள் வழங்கலாம். மேலும், அவற்றைப் பராமரிக்கும் பணியையும் மேற்கொள்ளலாம். கூட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம்தான், சுய உதவிக் குழுக்கள் வருங்காலங்களில் நிலைத்த தன்மையினை அடைய இயலும்.

அரசாணை எண் 116, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள்: 31-07-2002-ன்படி 2002 ஆம் ஆண்டிலேயே ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்க ஆணை வழங்கப்பட்டிருந்தும், இக்கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு அவர்களது பொறுப்புகள் மற்றும் கடமைகளைப் பற்றி முறையான பயிற்சி அளிக்கப்படாமையால், கூட்டமைப்புகள் செயலற்ற நிலையில் இருந்து வந்தன. 2006-2007 ஆம் ஆண்டில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

- மொத்தமுள்ள 12,618 ஊராட்சிகளில், இதுவரை 12,405 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.
- 11,971 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிருவாகிகளுக்கு அவர்களுடைய பணிப் பொறுப்புகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 3,202 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியாக தலா ரூ. 10,000/- வீதம் அளிக்கப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 11]

- சுய உதவிக் குழு கட்டடங்களை நிருவகிக்கும் பொறுப்பு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- ஊராட்சி அளவிலுள்ள அனைத்துக் குழுக்களையும் கூட்டமைப்பில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி ஒருவர், தர மதிப்பீட்டுக் குழுவில் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளார்.
- சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், அரசு சாரா நிறுவனங்களுக்கு இணையாக, மகளிர் திட்டத்தில் அங்கீகாரம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இக்கூட்டமைப்புகள் புதிய குழுக்களை அமைத்தல் மற்றும் கண்காணித்தல் போன்ற பணிகளைச் செய்ய இயலும்.
- மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறப்பாகச் செயல்படும் கூட்டமைப்புகளுக்கு "மணிமேகலை விருதுகள்" வழங்கப்படும்.

மேற்கூறிய நடவடிக்கைகள் ஊராடசி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் புத்துயிர் அளித்துள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில், கூட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்துவதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன:

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிருவாகிகளுக்கு, ஆளுமை மற்றும் நிதி நிருவாகம் குறித்த சிறப்புப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.
- சுய உதவிக் குழு வாழ்வாதாரத் திட்டங்களின்மூலம் வழங்கப்படும் சமுதாய மற்றும் வணிக மேம்பாட்டிற்கான உட்கட்டமைப்புகளை நிருவகிக்கும் பொறுப்பு இக்கூட்டமைப்புகளுக்கு அளிக்கப்படவுள்ளது.
- குழு அமைத்தல், கண்காணித்தல் மற்றும் பயிற்சிகளுக்கு அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் பட்டியல்களை, சான்று அளிக்கும் பொறுப்பு, கூட்டமைப்புகளுக்கு அளிக்கப்படவுள்ளது.

[2007 ஏப்ரல் 1]

- அரசு சாரா நிறுவனங்களுடனான புதிய ஒப்பந்தத்தில் ஒரு பிரிவாக ஊராட்சி அளவில் அமைக்கப்படும் அனைத்து குழுக்களும், கூட்டமைப்பில பதிவு செய்யப்பட வேண்டும் என்று புதிய நிபந்தனை சேர்க்கப்படவுள்ளது.

## 7.8 மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் தொழில் பயிற்சி

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, தொழில் முனைவோர் பயிற்சி 7 நாட்களுக்கு அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில், தொழில் முனைதலுக்கான அடிப்படைத் தகவல்கள் மற்றும் இலாபகரமான சிறுதொழில்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகளைக் கண்டறிய, பயிற்சி அளிக்கப்படுகிறது. 2006-07 ஆம் ஆண்டில், 22,000 மகளிருக்கு, ரூபாய் 88 இலட்சம் செலவில் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுபோலவே, சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அவர்கள் மேற்கொள்ள விரும்பும் தொழிலுக்குத் தேவையான அடிப்படைத் திறன், தொழில் பயிற்சி மூலம் அளிக்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில், 22,327 மகளிருக்கு, தொழில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது, சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் தொழில் பயிற்சிகள் ஒரு மாதத்திறகுக் குறைவான கால அளவில் அளிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அளிக்கப்படும் குறுகிய கால பயிறசிகள் மூலம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், வெற்றிகரமாக தொழிலில் ஈடுபடத் தேவையான அளவு திறன்களைப் பெற இயலாத நிலை உள்ளது. தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியும், தொழில் பயிற்சியும் தனித்தனியே தற்போது அளிக்கப்பட்டு வருவதைத் தவிர்த்து இவை இரண்டுமே ஒருங்கிணைந்து அளிக்கப்படுமாயின், மிகுந்த பயனுள்ளதாக இப்பயிற்சி விளங்கும்.

எனவே, 2007-2008 ஆம் ஆண்டில், தொழில் பயிற்சியினை, ஒரு மாதத்திற்கு மேற்பட்ட நீண்ட காலப் பயிற்சியாக அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியினை 5 நாட்களாகச் சுருக்கி, தொழில் பயிற்சியின் ஓர் அங்கமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி, பிரசித்தி பெற்ற நிறுவனங்கள்மூலம் அளிக்கப்படவுள்ளது.



2007 ஏபரல் 11]

## 7.9 இளைஞர் சுய உதவிக் குழுக்கள்

மகளிர் சுய உதவிக் குழுக்களின் மகத்தான வெற்றி, நன்கு வடிவமைக்கப்பட்ட அரசுத் திட்டங்கள்மூலம் சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் ஆற்றலை, ஆக்கபூர்வமாக, சமுதாய மேம்பாட்டிற்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை எடுத்துக்காட்டியுள்ளது. இக்கண்ணோட்டத்துடன், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கக்கூடிய வகையில், இளைஞர் சுய உதவிக் குழு திட்டத்தினை 2006-2007 நிதியாண்டில் இந்த அரசு அறிவித்தது.

31-3-2007 வரை, 9,397 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1,396 இளைஞர் சுய உதவிக் குழுக்களுக்குத் தலா ரூ. 10,000/- வீதம் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. இளைஞர்களின் வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு, பிரசித்தி பெற்ற தொழில் நிறுவனங்களான, எல் & டி (L&T), எம்.ஆர்.எப். (MRF) மற்றும் டி.வி.எஸ். (TVS) ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் போன்ற நிறுவனங்கள்மூலம் 4,098 இளைஞர்களுக்குத் தொழில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 7.10 மகளிர் திட்டத்தின் தாக்கம்

மகளிர் திட்டம், சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்திட, பல்வேறு பயிற்சிகளை முறையாகத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறது. இதன் விளைவாக மகளிரின், குறிப்பாக ஊரக மகளிரின் சமூக நிலை உயர்ந்துள்ளதைக் கண்கூடாக அறிய முடிகிறது. சுய உதவிக் குழு இயக்கம் கீழ்க்கண்ட மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது:—

- சுய உதவிக் குழு உறுப்பினரிடையே தன்னம்பிக்கையும், பேச்சுத் திறனும் மேம்பட்டுள்ளது.
- அரசின் நலத் திட்டங்களில் ஏழை மகளிருடைய பங்கேற்பும், அவற்றைப் பற்றிய விழிப்புணர்வும் உயர்ந்துள்ளது.
- பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதன்மூலம் சுய உதவிக் குழு மகளிரின் பொருளாதார நிலை உயர்ந்துள்ளது.
- சாதி, சமய தடைகளைத் தகர்த்தெறிந்து மகளிர் ஒன்றுபட்டுள்ளனர்.
- கிராம சபா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மகளிரின் பங்கேற்பு

- 2006 உள்ளாட்சித் தேர்தலில், 6,800க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.
- வங்கிகளின் பார்வையில் சுய உதவிக் குழுக்களின் நம்பகத் தன்மை உயர்ந்துள்ளதால், சுலபமாக வங்கிகளிலிருந்து கடன பெறும் நிலை.
- கந்து வட்டிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.
- மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றியின் அடிப்படையில் இளைஞர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கம்.

### 7.11. பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதார திட்டம்

இத்திட்டத்தை மாநில அளவில் செயல்படுத்தும் பொறுப்பை தமிழ்நாடு சுய உதவிக் குழுக்களின் நலச் சங்கத்திற்கும் (TNWS), மாவட்ட அளவில், மாவட்ட வழங்கல் விற்பனைச் சங்கங்களுக்கும் (DSMSs) வழங்கி, அரசாணை எண் 136, ஊரக வளர்ச்சித் துறை நாள்: 19-10-2005-ல் உத்திரவிடப்பட்டது. இவ்வமைப்புகளுக்கு, இத்திட்டத்தைச் செயல்படுத்த போதுமான அளவு அனுபவம் மற்றும் பணியாளர்கள் இல்லாத காரணத்தால், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் செயல்படுத்த அரசு முடிவு செய்தது.

இம்மாற்றத்திற்கு ரோம் நகரில் அமைந்துள்ள பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் ஒப்புதல் கோரி, தமிழக அரசு, மத்திய அரசின் நிதி அமைச்சகத்துக்கு 10-8-2006-ல் கடிதம் எழுதியது. இக்கருத்துருக்கு பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியம் 28-02-2007-ல் ஒப்புதல் அளித்துள்ளது. 68.591 மில்லியன் அமெரிக்கன் டாலர்கள் (இன்றைய மதிப்பில் ரூ.308.66 கோடி) நிதி ஒதுக்கீட்டுடன் 8 வருடங்களில் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டம், தற்போது தொடங்கும் தறுவாயில் உள்ளது. நடப்பாண்டில், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 கடலோர மாவட்டங்களில் இத்திட்டப் பணிகள் தொடங்கப்படும்.

### 7.12 தமிழ்நாடு மாநில தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் தன்னார்வலர்கள் ஆதார மையம் (டி.என்.வி.ஆர்.சி)

2001 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும்



தன்னார்வலர்கள் வள ஆதார மையத்தினை, அரசு சார்ந்த, அரசு சாரா மற்றும் மக்கள் அமைப்புகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கியது. 2006-2007 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான எச்.ஐ.வி./ எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பயிற்சித் திட்டத்தினை கடலூர், தருமபுரி, மதுரை, நாமக்கல், நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் வேலூர் ஆகிய 7 மாவட்டங்களில் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், தமிழகமெங்கும் அமைந்துள்ள சுய உதவிக் குழுக்கள்மூலம் எச்ஐவி/ எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வினைக் குறைந்த செலவினத்தில் நிறைவான முறையில் கிராமப்புற மக்களுக்கு அளிப்பதே ஆகும்.

ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு, தலைமைப் பயிற்றுநர் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள்மூலமாக, சுய உதவிக் குழு ஊக்குநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அந்த ஊக்குநர்கள், அனைத்துச் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் பயிற்சி அளித்து வருகின்றனர். இந்த 7 மாவட்டங்களிலுள்ள 52,228 சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 8,35,648 உறுப்பினர்களுக்கு, எய்ட்ஸ் நோயைத் தடுத்தல் மற்றும் தற்காப்பு சம்பந்தமான விழிப்புணர்வுப் பயிற்சி, பயனளிக்கும் வகையில் கொடுக்கப்பட்டு வருகிறது. 2007-08 ஆம் ஆண்டில், இத்திட்டம் மேலும் 11 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

### 7.13 சுய உதவிக் குழுக்களின்மூலம் விழிப்புணர்வு மற்றும் நலத் திட்டங்கள் செயலாக்கம்

2007-08 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், பல்வேறு அரசுத் திட்டங்கள் குறித்து, உதாரணமாக நல்வாழ்வு, சுகாதாரம், குழந்தை தொழில் ஒழிப்பு, வளர்கல்வி பற்றிய விழிப்புணர்வைச் சுய உதவிக் குழுக்களின் வாயிலாக ஏற்படுத்தி, அத்திட்ட பயன்கள் ஊரக மக்களைச் சென்றடைய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசு நலத் திட்டங்களை ஒருங்கிணைக்கும் தளமாக சுய உதவிக் குழுக்கள் விளங்கும். அரசுத் திட்டங்களில், விழிப்புணர்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் பயன்பாட்டினை மேம்படுத்துவதும், இத்திட்டங்களின்மூலம் பயன் பெறக்கூடியவர்களைக் கொண்ட சுய உதவிக் குழுக்கள்மூலமாகவே திட்டப் பணிகளை மேற்கொள்வதும், இம்முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

[2007 ஏப்ரல் 11

## 7.14. 2007–2008 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் 2007-2008 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்படவுள்ள பணிகள்:

- மகளிர் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் ஆகிய திட்டங்களின்கீழ் 25,000 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்தும் பொருட்டு அதன் நிருவாகிகளுக்கு ஆளுமை மற்றும் நிதி நிருவாகம் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள், தமிழகத்திலும் மற்றும் இதர மாநிலங்களிலும் சிறப்பாகச் செயல்படும் கூட்டமைப்புகளைப் பார்வையிட, பட்டறிவுப் பயணங்கள் மேற்கொள்ள உள்ளனர்.
- சுய உதவிக் குழு வாழ்வாதார திட்டங்களின்மூலம் வழங்கப்படும் சமுதாய மற்றும் வணிக மேம்பாட்டிற்கான உட்கட்டமைப்புகளை நிருவகிக்கும் பொறுப்பு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அளிக்கப்படும்.
- குழு அமைத்தல், கண்காணித்தல் மற்றும் பயிற்சிகளுக்கு அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் பட்டியல்களைச் சான்று அளிக்கும் பொறுப்பு, கூட்டமைப்புகளுக்கு அளிக்கப்படும்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்களிலிருந்து, குழுக்களின் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றிட 2,500 சமுதாயப் பயிற்றுநர்கள் உருவாக்கப்பட உள்ளனர்.
- நடப்பாண்டில், புதிய சுய உதவிக் குழுக்களுக்கான கடன் இணைப்பு மற்றும் வாழ்வாதார செயல்பாடுகளை உயர்த்தக் கூடிய வகையிலும், செயல்பாட்டின் அடிப்படையிலும், அரசு சாரா நிறுவனங்களுடன் புதிய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும்.
- பிரசித்தி பெற்ற நிறுவனங்களின்மூலம், மகளிருக்குத் தரமான நீண்டகாலத் தொழில் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. இப்பயிற்சிகள் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில்களைத் தொடங்குவதற்கு வழிவகுக்கும்.



2007 ஏப்ரல் 11]

- ஒரு மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதத்தில், ஒரே பகுதியில் சுய உதவிக் குழுக்கள் பெருவாரியாக ஈடுபட்டிருக்கும் தொழில் கண்டறியப்படும். இக்குழுக்களுக்கு வடிவமைத்தல், பொருட்களைக் கொள்முதல் செய்தல், சந்தைப்படுத்துதல் போன்றவற்றில் தேவையான தொழில்நுட்ப உதவிகள் அளிக்கப்படும்.
- இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்க அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். இளைஞர்களுடைய வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் வகையில், 5,000 இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சி அளிக்கப்படும்.
- பல்வேறு அரசுத் திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வை, சுய உதவிக் குழுக்களின் வாயிலாக ஏற்படுத்தி, அத்திட்டப் பயன்கள் ஊரக மக்களைச் சென்றடைய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 8. உலக வங்கி உதவி பெறும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

தமிழக அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் வறுமையை ஒழிக்கவும் சமூக ஏற்றத் தாழ்வுகளை மாற்றவும் உறுதி பூண்டுள்ளது. மகளிர் திட்டம் மற்றும் பிற திட்டங்கள், ஏழைகளை ஒருங்கிணைத்து சுய உதவிக் குழுக்களாக அமைப்பதில் வெற்றி பெற்றிருப்பினும் பின்வரும் இலக்குகளை எய்துவதற்கு அதிக அளவில் முயற்சிகள் தேவைப்படுகின்றன:—

- மிகவும் ஏழைகளை சுய உதவிக் குழுக்களில் இணைத்தல்.
- தற்போதுள்ள சுய உதவிக் குழுக்களைப் பயன்படுத்தி, திறன் மற்றும் வளங்களை வலுப்படுத்துவதன்மூலம் அவற்றை தன்னிறைவு மற்றும் நிலைத்த தன்மையுடைய அமைப்புகளாக ஆக்குதல்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்களையும், வர்த்தக தொடர்புகளையும் ஏற்படுத்தி, வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார வளத்தினை மேம்படுத்துவதன்மூலம் அவர்களின் வருமானத்தை உயர்த்துதல்.

○ சுய உதவிக் குழுக்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் இடையே வலுவான தொடர்புகளை ஏற்படுத்துதல்.

மேற்கண்ட நோக்கங்களை மனதில் கொண்டு, "தமிழ்நாடு வறுமை ஒழிப்புத் திட்ட வரைவு" ஒன்று தமிழக அரசால் 2000-2001 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் "வாழ்ந்து காட்டுவோம்" திட்டம் வடிவமைக்கப்பட்டு, உலக வங்கியின் நிதி உதவிக்காக அனுப்பப்பட்டது. இத்திட்டம், உலக வங்கியால் ஜூலை 2005-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, நவம்பர் 2005-ல் தொடங்கப்பட்டது. ஆறு ஆண்டுக் காலம் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 717 கோடியாகும்.

மக்களே செயல்படுத்தும் வண்ணம் அமைந்துள்ள இத்திட்டம், மகளிர் திட்டத்தின்கீழ் குழுக்கள் உருவாக்குதல் மற்றும் சமூக ஆற்றலளிப்பு போன்ற குறிக்கோள்களிலிருந்து சற்று மாறுபட்டு, ஏழை எளிய மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், வாழ்வாதார மேம்பாட்டிற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. இத்திட்டத்தின் இலக்கு, ஏழை எளிய குடும்பங்கள், மிகவும் நலிவுற்றோர், ஒதுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் ஊனமுற்றோர் ஆவர். இத்திட்டத்தில் பயன்பெறுவோர், மக்கள் பங்கேற்புடன்கூடிய ஆய்வுமூலம் கண்டறியப்படுகின்றனர்.

### 8.1 திட்ட செயலாக்கப் பகுதிகள்

இத்திட்டம் மிகவும் பின்தங்கிய 70 வட்டாரங்களை உள்ளடக்கிய 15 மாவட்டங்களில் உள்ள 2,432 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ள மாவட்டங்களும், வட்டாரங்களும் கீழ்க்கண்ட அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:—

❖ வட்டாரங்களில் வசிக்கும் ஆதி திராவிட மற்றும் பழங்குடி மக்களின் எண்ணிக்கைக்கு 50 விழுக்காடு மதிப்பு.

❖ அவ்வட்டாரங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் எண்ணிக்கைக்கு 50 விழுக்காடு மதிப்பு.





### 8.2 திட்டக் கூறுகள்

இத்திட்டத்தின் முக்கியக் கூறுகள் மற்றும் அவற்றிற்கான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:

**அட்டவணை–8**

**திட்டக் கூறுகள் வாரியாக நிதி ஒதுக்கீடு**

| வ.எண் | திட்டக் கூறு | நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) | % |
|---|---|---|---|
| அ.1 | மக்கள் அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்தல் | 69.90 | 9.75 |
| அ.2 | கிராம நிதி | | |
| | (1) கிராம வறுமை ஒழிப்புச் சங்க நிதி | 200.10 | 27.00 |
| | (2) வாழ்வாதார நிதி | 299.00 | 41.70 |
| | (3) கிராம ஊராட்சி ஊக்க நிதி | 48.00 | 6.70 |
| | (4) சார்பு தொழில் வல்லுநர்கள் மற்றும் கூட்டமைப்பு மேம்பாட்டு நிதி | 20.00 | 2.80 |
| ஆ | கிராம வாழ்வாதார, மேம்பாட்டிற்கு மாநில மற்றும் மாவட்ட அலகுகளின் உதவி | 31.54 | 4.40 |
| இ | திட்ட மேலாண்மை | 48.56 | 6.75 |
| | மொத்தம் | 717.10 | 100.00 |

[2007 ஏப்ரல் 11

### அ1. மக்கள் அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல்

ஆரம்ப கட்ட நடவடிக்கைகளான செய்தித் தொடர்பு முகாம்கள், மக்களின் பங்கேற்புமூலம் ஏழை மக்களைக் கண்டறிதல், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தினை உருவாக்குதல் மற்றும் விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் ஆகியவை இந்நிதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

### அ2. கிராம நிதி

#### (1) கிராம வறுமை ஒழிப்புச் சங்க நிதி

இந்த நிதி, நேரடியாக கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு வழங்கப்பட்டு, அச்சங்கத்தின்மூலமே நிர்வகிக்கப்படுகிறது. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் திறன்களை வளர்த்தல், சுய உதவிக் குழுக்களுக்கு ஆரம்ப நிதி வழங்குதல், இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சி அளித்தல் மற்றும் ஊனமுற்றோர், நலிவுற்றோர் ஆகியோரின் மறுவாழ்வுக்கு உதவிகள் அளித்தல் ஆகிய நடவடிக்கைகள் இந்நிதியில் மேற்கொள்ளப்படுகிறது.

#### (2) வாழ்வாதார நிதி

சுய உதவிக் குழு/தொழில் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மானியம் வழங்குதல்மூலம் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெறக்கூடிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தான் இந்நிதியின் முக்கியக் குறிக்கோள்.

#### (3) கிராம ஊராட்சி ஊக்க நிதி

இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட உறுதுணையாக இருந்து, ஏழை மக்களின் நலனுக்காகப் பணியாற்றும் கிராம ஊராட்சிகளுக்கு, கிராம ஊராட்சி ஊக்க நிதி வழங்கப்படுகிறது. ஊக்க நிதி பெறத் தகுதி பெறும் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தலா ரூ. 6 இலட்சம் வழங்கப்படும்.

#### (4) சார்பு தொழில் வல்லுநர்கள் மற்றும் கூட்டமைப்பு மேம்பாட்டு நிதி

கிராம அளவில் வல்லுநர்களை உருவாக்கவும், சுய உதவிக் குழு கூட்டமைப்புகள் மற்றும் தொழில் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கூட்டமைப்புகளுக்கு உதவி புரிவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.



2007 ஏப்ரல் 11]

### ஆ. கிராம வாழ்வாதார மேம்பாட்டிற்கு மாவட்ட மற்றும் மாநில அலகுகளின் உதவி

இந்நிதியில் மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கைகள்

- மாநில மற்றும் மாவட்டப் பணியாளர்களின் திறன் வளர்த்தல்.
- இலக்கு மக்களுக்கு நிதி மற்றும் வணிகத் தொடர்புகள் ஏற்படுத்தும் பொருட்டு, வங்கிகள், கல்வி நிறுவனங்கள், வணிக அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து செயலாற்றுதல்.
- தகவல் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைகளை உருவாக்குதல்.

### இ. திட்ட மேலாண்மை

மாநில மற்றும் மாவட்ட அளவில், இத்திட்டத்தினைச் செயல்படுத்த திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் மேலாண்மை ஆகியவற்றிற்கு இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

### 8.3 திட்டச் செயலாக்க அமைப்புகள்

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான திட்டச் செயலாக்க அமைப்புகள் பின்வருமாறு:

- மாநில அளவிலான சங்கம்.
- மாவட்ட அளவிலான சங்கங்கள்.
- 10-15 ஊராட்சிகளுக்கு, ஒன்று என்ற விகிதத்தில் திட்ட ஒருங்கிணைப்பு அணிகள்.
- ஊராட்சி அளவில், பெருவாரியான இலக்கு மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், இத்திட்டத்தினைச் செயல்படுத்தும். கிராம சபையால் நியமிக்கப்பட்ட ஒரு சமூக தணிக்கைக் குழு, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கோட்பாடுகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்யும்.

#### 8.3.1 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

இத்திட்டத்தின் இலக்காக உள்ள மக்களிடமிருந்து பெருவாரியான பிரதிநிதிகள்ளக் கொண்ட ஒரு சமூக அமைப்பே, கிராம வறுடை

[2007 ஏப்ரல் 11

ஒழிப்புச் சங்கமாகும். இதன் அலுவல் சாரா தலைவராக, கிராம ஊராட்சித் தலைவர் இருப்பார். இச்சங்கத்தில், ஊராட்சியிலுள்ள ஒவ்வொரு குடியிருப்பிலிருந்தும் பயன் பெறக்கூடிய மக்களிலிருந்து ஒரு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் பிரதிநிதியாக இருப்பார். மேலும் ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பின் செயலர், ஒரு ஊனமுற்றோர் பிரதிநிதி, கிராம அளவில் செயல்படும் குழுக்களிலிருந்து (குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு, கல்விக் குழு போன்ற குழுக்கள்) இரண்டு பிரதிநிதிகள் ஆகியோர் கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களாக கிராம சபை மூலம் நியமிக்கப்படுவர். கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் 10-20 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். இச்சங்கம், கிராம சபைக்குப் பொறுப்பானதாக இருக்கும்.

**8.3.2 சமூக தணிக்கைக் குழு**

சமூக தணிக்கைக் குழு, கிராம சபை மூலம் நியமனம் செய்யப்பட்ட 5 உறுப்பினர்களைக் கொண்டு, திட்டச் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்து, இத்திட்டத்தின் பயன்கள் திட்டக் கோட்பாடுகளின் வரையறைகளுக்கு இணங்க, இலக்கு மக்களைச் சென்றடைவதை உறுதி செய்யும். சமூக தணிக்கைக் குழு, மக்களின் வளர்ச்சிக்கு அவர்களையே பொறுப்பாக்கும் ஓர் அமைப்பாகும். இது கிராம சபையின்கீழ் இயங்கும்.

**8.4 திட்ட செயல்பாட்டின் பல்வேறு நிலைகள்**

வாழ்ந்து காட்டுவோம் திட்டம், அனைத்து நடவடிக்கைகளிலும் மக்கள் பங்கேற்பிற்கு முக்கியத்துவம் அளித்து, கீழ்க்கண்ட நிலைகளாக செயல்படுத்தப்படுகிறது:

**அ. தொடக்க நிலை**

- ❖ திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த, செய்தித் தொடர்பு முகாம்கள்.
- ❖ திட்டத்தில் சேருவதற்கான கிராம சபையின் ஒப்புதல்.
- ❖ கிராம ஊராட்சிகளுக்குத் தொடக்க நிதி வழங்குதல்.
- ❖ மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிதல்.
- ❖ கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சமூக தணிக்கைக் குழுக்களை உருவாக்குதல்.



2007 ஏப்ரல் 11]

**ஆ. திறன் வளர்ப்பு நிலை**

- ❖ விடுபட்ட ஏழை மக்கள், ஊனமுற்றோர் ஆகியோரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்கிப் பயிற்சி அளித்தல்.
- ❖ கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு, தவணை முறையில் கிராம வறுமை ஒழிப்புச் சங்க நிதி வழங்குதல்.
- ❖ கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சமூக தணிக்கைக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்புகளின் அலுவலர்களின் திறனை மேம்படுத்தல்.
- ❖ தொழில் பயிற்சி மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்குதல்.

**இ. வாழ்வாதார நிலை**

- ❖ தொழில் குழுக்களை உருவாக்குதல் மற்றும் தொழில் திட்டங்கள் தயாரித்தல்.
- ❖ தொழில் திட்டங்களை மதிப்பாய்வு செய்து வங்கிகளிலிருந்து கடன் வசதி பெற்றுத் தருதல்.
- ❖ சுய உதவிக் குழு/தொழில் குழுக்களுக்கு வாழ்வாதார நிதி வழங்குதல்.
- ❖ தொழில் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

**ஈ. வலுப்பெறும் நிலை**

- ❖ தொழில் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல்.
- ❖ வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன் இணைப்பினை ஏற்படுத்துதல்.

**8.5 ஜப்பான் சமூக மேம்பாட்டு நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் முன்னோடித் திட்டங்கள்**

வாழ்ந்து காட்டுவோம் திட்டம், 2005 ஆம் ஆண்டு முதல் 10 கிராம ஊராட்சிகளில் முன்னோடியாகச் செயல்படுத்தப்படுகிறது. கீழ்க்கண்ட இரண்டு மாதிரிகள், பரிசோதனை செய்யப்படுகின்றன:

(அ) கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

(ஆ) கிராம ஊராட்சி

**அ. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்--மாதிரி**

"வாழ்ந்து காட்டுவோம்" திட்டத்தின் மாதிரி, கீழ்க்கண்ட ஆறு ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின்மூலம் செயல்படுத்தப்படுகிறது:

**அட்டவணை—9**

**கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்—மாதிரி கிராம ஊராட்சிகள்**

| வ.எண் | கிராம ஊராட்சி | மாவட்டம் |
|---|---|---|
| 1 | கடுவஞ்சேரி | காஞ்சிபுரம் |
| 2 | இடையஞ்சாத்து | வேலூர் |
| 3 | ஒடந்துறை | கோயம்புத்தூர் |
| 4 | ம.கொளக்குடி | கடலூர் |
| 5 | ஜி.உசிலம்பட்டி | தேனி |
| 6 | கடம்பூர் | விழுப்புரம் |

**ஆ. கிராம ஊராட்சி--மாதிரி**

இம்மாதிரியில், திட்டச் செயல்பாட்டிற்குக் கிராம ஊராட்சியே பொறுப்பேற்கிறது. இதற்கான நிதி ஆதாரங்கள் நேரடியாக கிராம ஊராட்சிக்கே வழங்கப்படுகின்றன. ஏழைகள், ஊனமுற்றோர், நலிவுற்றோர் ஆகியோரின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கிராம வளர்ச்சி குழு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத்திற்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாகச் செயல்படுகிறது. கிராம வறுமை ஒழிப்புச் சங்க மாதிரியில், திட்ட நிதி, மக்கள் அமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. ஆனால், கிராம ஊராட்சி மாதிரியில் திட்ட நிதியினை, அடிப்படை வசதி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் செலவிடலாம்.



**அட்டவணை—10**

**கிராம ஊராட்சி மாதிரி செயல்படுத்தப்படும் ஊராட்சிகள்:**

| வ.எண் | கிராம ஊராட்சி | மாவட்டம் |
|---|---|---|
| 1 | துத்திப்பட்டு | வேலூர் |
| 2 | கீரப்பாளையம் | கடலூர் |
| 3 | ஆராய்ச்சி | திருச்சி |
| 4 | மேலாத்தூர் | புதுக்கோட்டை |

**8.5.1 முன்னோடிக் கிராமத்தின் சாதனைகள்**

- 3,390 விடுபட்ட ஏழை மக்கள் மற்றும் 936 ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோர் ஆகியோரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 172 புதிய சுய உதவிக் குழுக்கள், தர மதிப்பீடு செய்யப்பட்டு வங்கிகள்மூலம் நிதியுதவி பெற்றுள்ளன.
- 195 ஊனமுற்றோர் மற்றும் 214 நலிவுற்றோர்களுக்கு (விதவைகள், ஆதரவற்றோர்) தனிநபர் வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது.
- கால்நடைகளுக்குச் செயற்கைமுறை கருவூட்டல், கட்டடக் கலை, பட்டறைத் தொழில் போன்ற துறைகளில் 19 சார்புத் தொழில் வல்லுநர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.
- ஆறு தொழில் குழுக்களுக்கு, தொழில் திட்டங்களுக்காக ரூ.20,00,000/- வழங்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள், சணல் உற்பத்தி, பாய் பின்னுதல், பால் பொருள் உற்பத்தி, விழாக்களுக்குப் பொருட்களை வாடகைக்கு விடுதல், சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளன.

**8.5.2 முன்னோடி ஊராட்சிகளிலிருந்து பெறப்பட்ட படிப்பினைகள்**

முன்னோடித் திட்டத்தின் செயலாக்கம், கடந்த ஓராண்டில் கீழ்க்கண்ட முக்கியமான படிப்பினைகளைத் தந்துள்ளது:

[2007 ஏப்ரல் 11

- மக்கள் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிவதன்மூலம், இலக்கு மக்களைச் சரியாக இனங்காணவும், அதற்கு மக்களே பொறுப்பேற்கும் நிலையும் உருவாகிறது.
- கிராம சபைகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின்மூலம் மக்களே முடிவெடுப்பதால், திட்டச் செயலாக்கத்தில் வெளிப்படைத் தன்மையும், பொறுப்புணர்வும் உறுதி செய்யப்படுகிறது.
- மக்கள் அமைப்புகளான, கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்குத் தகுந்த திறன் வளர்ப்புப் பயிற்சி அளிப்பதன் மூலம் கிராமத்தின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தவும், முன்னேற்றத்திற்கு திட்டமிடவும், நிதி ஆதாரங்களை முறையாகப் பயன்படுத்தவும் இயலுகிறது.
- அறிவிப்புப் பலகைகள் மற்றும் சமூக தணிக்கைக் குழுக்கள் போன்ற சமூகப் பொறுப்பு முறைகள், இத்திட்டத்தின் பயன்கள், இலக்கு மக்களைச் சென்றடைவதைக் கண்காணித்து உறுதி செய்கின்றன.
- ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோர் ஆகியோரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு, தனி நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய சிறப்புக் கவனம் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது.
- இலக்கு மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு, திட்டப் பணியாளர்களின் தொடர் வழிகாட்டுதலும், உறுதுணையும் இன்றியமையாதவை.

## 8.6 "வாழ்ந்து காட்டுவோம்" திட்டத்திற்கும், மகளிர் திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

- மகளிர் திட்டம் அரசு சாரா நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்ற மக்கள் அமைப்புகள்மூலம் நிறைவேற்றப்படுகிறது.
- வாழ்ந்து காட்டுவோம் திட்டம், ஏழை மகளிர் மட்டுமின்றி, உடல் ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோர்மீது சிறப்புக் கவனம் செலுத்துகிறது. இதற்காக, சிறப்பு நிதி ஒதுக்கீடும் செய்யப்படுகிறது.



2007 ஏப்ரல் 11]

- வாழ்ந்து காட்டுவோம் திட்டம், ஏழை, எளிய மக்களைத் தொழில் குழுக்களாக அமைத்து, வாழ்வாதார மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.
- மகளிர் திட்டத்தில், கிராம ஊராட்சிகளுக்கு நேரடித் தொடர்பு இல்லை. இதற்கு மாறாக, வாழ்ந்து காட்டுவோம் திட்டச் செயல்பாட்டில் கிராம ஊராட்சிகளுக்கு முக்கியப் பங்கு உள்ளது.

## 8.7 திட்டத்தின் தற்போதைய நிலை

இத்திட்டம், 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் முதற்கட்டமாக பின்வரும் 15 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

அட்டவணை–11

முதற்கட்ட திட்ட வட்டாரங்கள்

| வ.எண். | மாவட்டம் | வட்டாரம் | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | குடிமங்கலம் | 23 |
| 2 | கடலூர் | நல்லூர் | 64 |
| 3 | காஞ்சிபுரம் | குன்றத்தூர் | 44 |
| 4 | நாகப்பட்டினம் | கீழ்வேளூர் | 38 |
| 5 | நாமக்கல் | எருமைப்பட்டி | 24 |
| 6 | இராமநாதபுரம் | போகலூர் | 26 |
| 7 | சேலம் | அயோத்தியாபட்டினம் | 32 |
| 8 | தேனி | போடிநாயக்கனூர் | 15 |
| 9 | திருவள்ளூர் | எல்லாபுரம் | 53 |
| 10 | திருவாரூர் | கொரடாச்சேரி | 44 |
| 11 | திருநெல்வேலி | மானூர் | 41 |
| 12 | திருவண்ணாமலை | செங்கம் | 44 |
| 13 | தூத்துக்குடி | புதூர் | 44 |
| 14 | வேலூர் | குடியாத்தம் | 44 |
| 15 | விழுப்புரம் | கண்டமங்கலம் | 45 |
| | | மொத்தம் | 581 |

[2007 ஏப்ரல் 11

இரண்டாம் கட்டமாக, 14 வட்டாரங்களில் உள்ள 518 கிராம ஊராட்சிகளில் இத்திட்டச் செயல்பாடு தொடங்கப்பட்டுள்ளது. திட்டச் செயலாக்கப் பகுதிகளில் பின்வரும் பணிகள் நிறைவடைந்துள்ளன:

- திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில், மாவட்ட அளவிலும் பகுதி அளவிலும் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- அனைத்துப் பணியாளர்களுக்கும் திட்ட அறிமுகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- முதல் கட்டமாக, திட்டம் செயல்படுத்தப்படும் 581 கிராம ஊராட்சிகளுக்கும் தொடக்க நிதியாக தலா ரூ. 35,000/- வழங்கப்பட்டுள்ளது.
- திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, 581 ஊராட்சிகளிலும் செய்தித் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.
- மக்கள் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது.
- 31-3-2007 வரை 495 கிராம ஊராட்சிகளில் இலக்கு மக்கள் கண்டறியப்பட்டு, அந்தப் பட்டியலுக்குக் கிராம சபையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 411 கிராம ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- 31-3-2007 வரை இரண்டாம் கட்ட திட்டச் செயலாக்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 14 வட்டாரங்களில், 443 ஊராட்சிகளில் மக்களுக்குத் திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் செய்தித் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

2007-2008 ஆம் ஆண்டில் மூன்று மற்றும் நான்காம் கட்ட, திட்டச் செயல்பாடுகள் முறையே ஆகஸ்ட் 2007 மற்றும் டிசம்பர் 2007 ஆகிய மாதங்களில் தொடங்கப்பட்டு, 70 வட்டாரங்களில் உள்ள 2,432 ஊராட்சிகளிலும் இந்தத் திட்டம் செயலாக்கப்படும்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்காக, 2007-2008 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டில் ரூ. 132 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 11]

### 8.8 மகளிர் திட்டமும், வாழ்ந்து காட்டுவோம் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுதல்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்படுத்தப்படும் 70 வட்டாரங்களில், மகளிர் திட்டத்தினை, வாழ்ந்து காட்டுவோம் திட்டப் பணியாளர்கள் மூலமும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் போன்ற மக்கள் அமைப்புகள் மூலமாகவும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இரு வேறு நிறுவனங்கள், ஒத்த பணியினை மேற்கொள்வதைத் தவிர்க்கவும், நல்ல ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் புதிய சுய உதவிக் குழுக்களை அமைத்து அவற்றிற்கான பயிற்சி மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு இணையாக கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களும் மேற்கொள்ள மகளிர் திட்டத்தின்கீழ் அங்கீகாரம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 9. சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்

கடந்த 26-12-2004-ல் தமிழகக் கடற்கரைப் பகுதிகளை, சுனாமி தாக்கியதால் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு மனித உயிர்கள்; வாழ்வாதாரம் மற்றும் உடைமைகளுக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டது. மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து வள ஆதாரங்களையும் தமிழ்நாடு அரசு ஒருமுகப்படுத்தியது. பாதிக்கப்பட்ட வாழ்வாதாரங்களை முந்தைய நிலைக்குக் கொண்டுவரவும், பாதுகாப்பான குடியிருப்புகளை மீண்டும் உருவாக்கிக் கொடுக்கவும், சேதமடைந்த பொதுச் சொத்துக்கள் மற்றும் உள் கட்டமைப்புகளை புனரமைத்திடவும், மாநில அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு, மத்திய அரசு, ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் கீழ்க்கண்ட திட்டங்கள் இணைந்து வலுசேர்த்து வருகின்றன:

(i) ரூ.300.62 கோடி நிதியில் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் மற்றும் மானியத்துடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர கால உதவித் திட்டம் (Tsunami Emergency Assistance Project)

(ii) ரூ.1,350 கோடி நிதியில் உலக வங்கிக் கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் (Emergency Tsunami Reconstruction Project)

(iii) ரூ.497.95 கோடி மத்திய அரசின் மானியத்துடன் செயல்படுத்தப்படும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம்.

[2007 ஏப்ரல் 11

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு மாற்றப்படுகிறது.

சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உட்பட தமிழக அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்தி வருகின்றன. இதனை வருவாய்த் துறையில் உள்ள திட்ட மேலாண்மை அலகு ஒருங்கிணைப்பு செய்து வருகின்றது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு அதிகமான ஒதுக்கீடு (ரூ.2,148.57 கோடி) செய்யப்பட்டதனால், இத்திட்டத்தின் செயலாக்கத்தை மேற்பார்வையிட, ஒரு திட்டச் செயலாக்க அலகு தனியே ஏற்படுத்தப்பட்டு, 01-8-2005 முதல் செயல்பட்டு வருகின்றது.

சுனாமி அவசர கால உதவித் திட்டம் மற்றும் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 13-5-2006 வரை ரூ.4.95 கோடி மட்டும் செலவிடப்பட்டிருந்தது. திட்ட செயலாக்கத்தினை விரைவுபடுத்திடவும், வாழ்வாதார மேம்பாடு மற்றும் உள் கட்டமைப்புகளைப் புனரமைப்பதற்கும் மிகவும் தேவையான உந்துகை தரும் விதம், 2006-2007 ஆம் ஆண்டில் இந்த அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த உந்துகை நல்ல பலனைத் தந்ததினால் 31-3-2007-ல் இத்திட்டங்களின்கீழ் செலவு ரூ.155.41 கோடி ஆகியது. சுனாமி புனரமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும் அனைத்துத் துறைகளின் மொத்த செலவில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பங்கு மட்டும் 73 சதவீதம் என்பது கவனத்திற்குரியது.

சுனாமி திட்டங்களின் செயலாக்கத்தினை விரைவுபடுத்தும் பொருட்டு, சுனாமி திட்டச் செயலாக்க அலகு மற்றும் மாவட்ட செயலாக்க அலகுகளுக்கென 237 பணியிடங்கள் இத்துறையில் தோற்றுவிக்கப்பட்டன. எனினும், 13-5-2006 வரை 61 பணியிடங்கள் மட்டும் நிரப்பப்பட்டிருந்த நிலையில், தற்போது 216 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

**9.1. ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர கால உதவித் திட்டம் (TEAP)**

இத்திட்டம் ரூ. 300.62 கோடி நிதி ஒதுக்கீட்டில், 06-4-2005 முதல் மூன்று ஆண்டுகள் வரையிலான காலத்திற்குச் செயல்படுத்தப்படும்.



2007 ஏப்ரல் 11]

இத்திட்டத்தினால் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்கள் பயன்பெறும். வாழ்வாதாரம், சுகாதாரம் மற்றும் நிர்வாகச் செலவு ஆகியவற்றிற்கான நிதியை ஆசிய வளர்ச்சி வங்கி 100 சதவீதம் மானியமாக அனுமதித்துள்ளது.

13-5-2006 வரை இத்திட்டத்தின்கீழ் செலவு ரூ. 4.95 கோடி மட்டும் ஆகும். கடந்த 10 மாதங்களில் இந்த அரசு இத்திட்டத்தில் ரூ. 142.35 கோடி செலவினம் மேற்கொண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்புப் பணிகளின் செயலாக்கத்தினைக் குறிப்பிடத்தக்க அளவில் விரைவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின் உட்கூறுகளில், 31-3-2007 வரையிலான நிதிநிலை முன்னேற்றம் அட்டவணை 12-ல் காணலாம்.

**அட்டவணை—12**

**சுனாமி அவசர கால உதவித் திட்டக் கூறுகள்**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்ட உட்கூறுகள் | நிதி ஒதுக்கீடு | 6.4.05 முதல் 13.5.06 வரை செலவு | 14.5.06 முதல் 31.3.07 வரை செலவு |
|---|---|---|---|---|
| 1. | வாழ்வாதாரம் | 190.10 | 2.88 | 112.07 |
| 2. | சுகாதாரம் | 5.86 | 0.92 | 0.01 |
| 3. | ஊரக உள்கட்டமைப்பு | • | | |
| | அ. சாலைகள் மற்றும் வடிகால்கள் | 77.06 | 1.15 | 26.26 |
| | ஆ. பொதுக் கட்டடங்கள் | 22.19 | 0 | 0.02 |
| 4. | நிருவாகச் செலவினங்கள் | 5.41 | 0 | 3.99 |
| | மொத்தம் | 300.62 | 4.95 | 142.35 |

[2007 ஏப்ரல் 11

### 9.1.1 வாழ்வாதார உட்கூறு

வாழ்வாதார திட்ட உட்கூறுக்கென உள்ள ரூ.190.10 கோடி, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், சிறு கடன் அளித்தல், சிறு தொழில்கள் தொடங்கல், திறன் வளர்த்தல் மற்றும் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினருக்குச் சிறப்பு உதவி வழங்குதல் ஆகியவற்றிற்கு வழிவகை செய்கிறது. வாழ்வாதாரத்திற்கான ரூ.190.10 கோடி நிதி ஒதுக்கீட்டில், 80 சதவீதம் சுழல் நிதி, பொருளாதார உதவி, உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைகள் ஆகியோருக்குச் சிறப்பு உதவி மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கான நிதி உதவி ஆகியவற்றை அளிப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், மீதம் உள்ள 20 சதவீதம் வாழ்வாதாரத்திற்குத் தொடர்புடைய சமுதாய உள் கட்டமைப்பு மற்றும் திறனாக்க மேம்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

#### சுழல் நிதி

25,955 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 67.26 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. இந்த எளிய நம்பகமான மற்றும் உடனே கிடைக்கக்கூடிய சிறு கடன் உதவியை அன்றாடப் பயன்பாட்டிற்கும், தேவையான தொழில் முதலீட்டிற்கும் ஏழைப் பெண்கள் பயன்படுத்துவதால், அவர்களின் வாழ்க்கை நிலை மாறியுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள, வருவாய் தரக்கூடிய சொத்துக்களை உருவாக்கவும் அல்லது ஏற்கெனவே உள்ள வருவாய் ஈட்டக்கூடிய சொத்துக்களை மேம்படுத்திக் கொள்ளவும் இந்நிதியைப் பயன்படுத்தியுள்ளனர்.

#### பொருளாதார உதவி

சிறு தொழில்களைத் திறம்பட நடத்திட விரும்பும் நிலைத்துச் செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்குப் பொருளாதார உதவி வழங்கப்படுகிறது. கால்நடைகளை வளர்த்தல், பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், மீன் ஊறுகாய் தயாரித்தல், செங்கல் உற்பத்தி செய்தல் போன்ற பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் வகையில் 1,341 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15.71 கோடி பொருளாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1,200 சுய உதவிக் குழுக்களுக்கு நடப்பாண்டில் இத்திட்டத்தின்கீழ் பொருளாதார உதவி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2007 ஏப்ரல் 11]

#### உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு உதவிகள்

உடல் ஊனமுற்றோர், விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் இந்தச் சமுதாயத்தில், அதுவும் பேரிடரால் பாதிக்கப்படும் பகுதிகளில், மிகவும் பாதிப்புக்குள்ளாகும் பிரிவினராவர். இவர்களின் சமுதாய உடைமைகள் மிகவும் குறைவாக உள்ளதால், பொது மக்களுக்கென உள்ள திட்டங்களின் பயன்களை இவர்கள் பெறுவது கடினமாக உள்ளது. மேலும், இப்பிரிவினர் வங்கிக் கடன் பெறுவதும் கடினமாக உள்ளது. கடந்த பத்து மாதங்களில், இந்த அரசு உடல் ஊனமுற்றோர் வாழ்வாதார மேம்பாட்டிற்கென பெருந்திட்டம் ஒன்றைத் தொடங்கியது. 26,954 ஊனமுற்ற நபர்களுக்கு மானியமாக தலா ரூ.10,000/- வீதம் ரூ.26.95 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது இவ்வுதவி, கடலோர ஊராட்சி ஒன்றிய/கிராம ஊராட்சிகளுக்கு மட்டுமென வரையறுக்கப்படாமல், கடலோர மாவட்டம் முழுவதும் உள்ள, தகுதிவாய்ந்த உடல் ஊனமுற்றோருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுதவியைப் பெற்ற பின்னர், இவர்களது வாழ்க்கைத்தரம் கணிசமாக உயர்ந்துள்ளது. இது உடல் ஊனமுற்றோர் நலனுக்காக இந்த அரசால் எடுக்கப்பட்ட முன் முயற்சிகளில் மிகப் பெரிய ஒன்றாகும்.

#### சமுதாய உள் கட்டமைப்புகள்

#### தற்போதுள்ள முக்கிய உத்தேசத் திட்டங்கள்

- மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருட்களுக்கான விற்பனை மற்றும் கண்காட்சி மையம் ரூ.5 கோடி உத்தேச மதிப்பீட்டில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் கட்டுதல், நாளிதழ்களில் கொடுக்கப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில், ஏழு கட்டட வடிவமைப்பு வல்லுநர்களிடமிருந்து வடிவமைப்பு செய்ய விருப்பம் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன.

- கடலோரப் பகுதியில் உள்ள விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களுக்கு வருமானம் ஈட்டக்கூடிய விலை கிடைக்கும் வகையில், 15 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் கட்டுதல்.

- இந்திய அரசின் கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்திக் குழுமம், மாநில கைத்தறித் துறை மற்றும் ஆடை ஏற்றுமதித் தொழில் அமைப்புடன் கலந்து ஆலோசித்து, ஏற்றுமதி உற்பத்தியை மேம்படுத்தும் வகையில், ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் நாகர்கோவிலில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் தொகுதியின் தரத்தை உயர்த்துதல்.
- கடலோரப் பகுதிகளில் ஏற்கெனவே உள்ள சங்கங்களின் பால் சேகரிக்கும் திறனை மேம்படுத்துவதற்காக, தினசரி 2,500 லிட்டருக்கு மேல் பால் கொள்முதல் செய்யும் 19 சங்கங்களுக்கு ரூ.3.09 கோடி மதிப்பீட்டில் பால் குளிரூட்டும் பெரிய கலன்கள் வாங்கித் தரப்படும். மேலும், சுய உதவிக் குழுக்கள், ஆவின் பால் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக, 45 பாலகங்கள் (Milk Parlours) ரூ.2.01 கோடி மதிப்பீட்டில் அமைத்துத் தரப்படும்.
- பாரம்பரியமிக்க நமது பண்பாட்டின் சின்னமாக விளங்கும் கிராம கைவினைஞர்கள் தொழில் மேம்பாட்டிற்காக, ரூ.10 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டத்தில் கைவினைஞர் கிராமம் மற்றும் மாமல்லபுரத்தில் சிறப்புப் பூங்கா அமைத்தல்.

### திறனாக்க மேம்பாடு

சுய உதவிக் குழுக்கள் செயல்திறன் மிக்க குழுக்களாக இயங்கும் வண்ணம், குழுக்களின் உறுப்பினர்களுக்கு, அடிப்படைப் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சுய உதவிக் குழுக்களுக்கு, தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சிகளுக்காக ரூ.1.47 கோடி செலவிடப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளில் தகுதிவாய்ந்த தின ஊதியம் பெறும் பணியாளர்களின் தேவை வளர்ந்து வருகிறது. இந்தப் பிரிவு மக்களின் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, தனிநபர்களுக்குத் தொழில் முறைப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காகப் பணியமர்த்தலில் பெயர்பெற்ற நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பயிற்சி முடிந்தபிறகு பயனாளிகளைப் பணியில் அமர்த்துவது பயிற்சி நிறுவனத்தின் பொறுப்பாகும். இந்தச் ஆண்டில், இந்தச் செயல் முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும்.





### 9.1.2 சுகாதாரம்

இத்திட்ட உட்கூறின்கீழ், கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களிடையே பாதுகாப்பான சுகாதார பழக்க வழக்கங்களை மேம்படுத்துவதற்காக, விழிப்புணர்வு முகாம்கள் நடத்த ரூ.5.86 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9.1.3 சாலைப் பணிகள்

திட்ட உட்கூறான ஊரக உள்கட்டமைப்பின்கீழ், சுனாமி பாதித்த பகுதிகளில் சாலை மற்றும் வடிகால் பணிகளுக்காக ரூ.77.06 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 564 கிலோ மீட்டர் நீளமுள்ள 501 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. 220 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளும் விரைவில் முடிக்கப்படும். இதுவரை இப்பணிகளுக்காக ரூ.27.41 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 9.1.4 பொதுக் கட்டடங்கள்

பொதுக் கட்டடங்கள் என்ற உட்கூறின்கீழ், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பழைய கட்டடங்களைப் புனரமைத்தல் மற்றும் தரம் உயர்த்தும் பணிகள் ரூ.22.19 கோடி மதிப்பீட்டில் எடுத்து செய்யப்படும். இப்பணிகள் 2007-08 ஆம் நிதியாண்டில் முடிக்கப்படும்.

### 9.2 உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர கால சுனாமி மறு கட்டமைப்புத் திட்டம் (ETRP)

இத்திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய எட்டு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கால அளவு 9-8-2005 முதல் மூன்று ஆண்டுகள் ஆகும். இத்திட்டத்தின் தொடக்கத்தில் தெரிவிக்கப்பட்ட முக்கியக் கூறுகள்:

### பழுதடைந்த வீடுகளைத் திரும்பக் கட்டுதல்

### அடிப்படை வசதிகளை அமைத்தல்

உலக வங்கி திட்டத்தின்கீழ் புதிய வீடுகள் கட்ட ரூ.1,080 கோடியும், குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திட ரூ.270 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் கட்டித் தரும் பணியை, அரசு சாரா நிறுவனங்கள் மேற்கொண்டதால் (வருவாய் நிர்வாக சிறப்பு ஆணையர் மற்றும் நிவாரண ஆணையரின் கண்காணிப்பில்) அவசர கால சுனாமி மறு

கட்டமைப்பு திட்ட நிதியினைப் பழுதடைந்த வீடுகளை மீண்டும் கட்டுவதற்காகப் பயன்படுத்த இயலவில்லை. எனவே, அவசரகால சுனாமி மறு கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் அரசு சாரா நிறுவனங்களால் மீண்டும் கட்டப்படும் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது. உலக வங்கியின் நிதி உதவி, மிகப் பெரிய திட்டங்களுக்கு உகந்ததாகும். சிமெண்ட் கான்கிரீட் தெருக்கள், தெருவோர வடிகால் வசதி, மின் வசதி போன்ற சிறிய அளவிலான . பணிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு உலக வங்கியின் கொள்முதல் நடைமுறைகள் மிகவும் சிக்கலானதாக இருப்பதால், தாமதங்களுக்கு வழி வகுத்தது. இந்த இடையூறைத் தவிர்க்க, அவசர கால மறு கட்டமைப்பு திட்ட நிதிக்குப் பதிலாக ராஜீவ் காந்தி மறுவாழ்வு திட்ட நிதியினைப் பயன்படுத்தி அடிப்படை வசதிகள் செய்து தர அரசாணை நிலை எண் 34, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி 2) துறை, நாள் 12-3-2007-ல் ஆணையிட்டுள்ளது. அடிப்படை வசதிகளுக்காக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பரிசிலனையில் உள்ளன.

இந்த மாற்றங்களின் விளைவாக, அவசர கால சுனாமி மறு கட்டமைப்புத் திட்டத்தின் இலக்கு மறு ஆய்வு செய்யப்பட்டு, இத்திட்ட நிதியினைக் கொண்டு, கடல் ஏற்றத்திலிருந்து 200 மீட்டரிலிருந்து 1000 மீட்டருக்குள் உள்ள இயற்கை இடர்பாடுகளுக்கு உள்ளாகும் பகுதிகளில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய வீடுகளை மீண்டும் கட்டித் தர அரசு முடிவு செய்தது. இத்திட்டச் செயற்குறிப்பு அரசின் வருவாய்த் துறை மூலமாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டு, இது குறித்து உலக வங்கி அலுவலர்களுடன் விவாதிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டச் செயற்குறிப்பிற்கு உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வீடுகளை மீண்டும் கட்டும் பணியினைத் தொடங்கும்.

## 9.3 ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம்

கடல் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டருக்குள் உள்ள ஊரகப் பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் 1000 மீட்டருக்குள் உள்ள இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் போன்ற வேறு பல அரசு நிதி உதவியுடனான திட்டங்களின்கீழ் கட்டப்பட்டு, 01-01-2006 ஆம் தேதியில் 10 ஆண்டுகள் பழமையான வீடுகள் ஆகியவற்றை சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்ட நிதியினைப் பயன்படுத்தி மீண்டும் கட்டித் தர அரசாணை நிலை



எண் 60 வருவாய் (இ.இ.4-2)த் துறை, நாள்: 29-1-2007-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த வீடுகளைக் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும்.

சுனாமி ஏற்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்த பிறகும், சில அரசு சாரா நிறுவனங்கள் வீடு கட்டும் பணியைத் தொடங்க வேண்டிய நிலையிலேயே உள்ளன. அரசு ஆணை நிலை எண் 625, வருவாய் (இ.இ.4-2)த் துறை, நாள்: 20-9-2006-ல் அரசு சாரா நிறுவனங்களால் கட்டப்படாமல் விடுபட்ட 2,920 வீடுகளை, ராஜீவ் காந்தி மறுவாழ்வு திட்டத்தின்கீழ், ஒவ்வொன்றும் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டவும், அவற்றிற்கு வீட்டிற்கு ரூ.40,000/- வீதம் அடிப்படை வசதிகளைச் செய்து தரவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நடத்தப்பட்ட விரிவான கணக்கெடுப்பிற்குப் பின்னர், வீடுகள் இருந்த அதே இடத்தில் மற்றும் கையகப்படுத்தப்பட்ட நிலங்களில், மீண்டும் கட்டப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை 1,860 என கண்டறியப்பட்டது. இவ்வீடுகளை மீண்டும். கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, வீடுகள் கட்டும் பணிகளுக்கான வேலை உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 10. வரவு-செலவுத் திட்டம் 2007–2008

2007-2008 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.3,470.37 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் எதிர்பார்க்கப்படும் வருவாய் செலவினம் ரூ.2,664.26 கோடி மற்றும் மூலதன செலவினம் ரூ.806.10 கோடி ஆகும்.

## 11. முடிவுரை

இந்த அரசு கடந்த 10 மாத கால அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல்பாட்டில் முழு அளவிலான மேம்பாட்டை ஏற்படுத்தி உள்ளது. ஊராட்சி உதவியாளர் நிலையில் இருந்து உதவி இயக்குநர் நிலை பணியிடங்கள் வரை இருந்த காலிப் பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பிட ஆணையிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியான நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பின் மூலம், பெரும் எண்ணிக்கையில் இருந்த நிலுவைப் பணிகள் முடிக்கப்பட்டன. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்ற பெரிய


[2007 ஏப்ரல் 11

திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட ஊக்கமானது இத்திட்டங்களின் செயலாக்கத்தில் மிகுந்த முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. ஊரகப் பகுதிகளில் நகரத்தில் உள்ள வசதிகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ள திருப்புமுனை திட்டமான அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மத்திய, மாநில அரசுகள் ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தும் மற்ற திட்டங்கள் அனைத்தையும் விட நிதி ஒதுக்கீட்டில் பெரிய திட்டமாகும். சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், இளைஞர் சுய உதவிக் குழுக்களை அமைத்து தொழில் பயிற்சிகள் அளித்தல், கடலோர மாவட்டங்களிலுள்ள உடல் ஊனமுற்றோர் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவிகள் வழங்குதல் போன்ற முன்னோடி நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது. அக்டோபர் 2006-ல் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூன்றாவது சாதாரண தேர்தல் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் ஆகிய கிராம ஊராட்சிகளில் நெடுங்காலமாக இட ஒதுக்கீட்டின் காரணமாகத் தேர்தல் நடத்தப்படாமல் இருந்த பிரச்சினை தீர்க்கப்பட்டது. ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரப் பரவலாக்கம், பொறுப்புகள் மற்றும் கடமைகளை மேலும் வழங்குவது குறித்து பரிந்துரை செய்திட, ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநில மூன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்மீது உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு குறித்து, பெரும் கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது அடித்தள அளவில் மேம்பட்ட சேவைகள் உள்ளாட்சிகள் அளித்திட உதவும். தமிழக மக்கள் எங்களுக்கு அளித்துள்ள பெரும் பொறுப்பை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஊக்கமூட்டும் தலைமையின்கீழ், சிறந்த முறையில் நிறைவேற்றுவோம் என்று நம்பிக்கை கொண்டுள்ளோம்.




பிற்சேர்க்கை - I

மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை



பிற்சேர்க்கை - 2


மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை







பிற்சேர்க்கை - 3

2003-04 முதல் 2005-06 வரையிலான சராசரி வரவினங்களின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு



பிற்சேர்க்கை - 4

## 2007-08 மத்திய மற்றும் மாநில திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு






பிற்சேர்க்கை_5

## அரசு சாரா நிறுவனங்களில் சுய உதவிக் குழுக்களின் பரவல்

